காளியின் கண்க



து. ராமமூர்த்தி

RAYAVARAM

S.NM.



S.N.M.

காளியின் கண்கள்

[சிறு கதைகள்]

து. ராமமூர்த்தி
எழுதியது

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை
பதிப்புரிமை] செப்டெம்பர், 1943 [விலை ரூ. 2.

பொருளடக்கம்

PRINTED AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS,
AT TIRUBHUVANAM, TIRUVADAMARUDUR POST.

முன்னுரை

நேற்றுத்தான் போலிருக்கிறது. 1935-ஆம் வருஷம். சிறு கதை ஒன்று எழுதவேண்டும் என்ற தீர்மானத்துடன், பள்ளிக்கூடப் புஸ்தகங்களைக் கட்டி வைத்துவிட்டு உட்கார்ந்தேன். தமிழில் எழுதும் பழக்கம் ஏற்கனவே சிறிது உண்டு. நான்கு வருஷங்களுக்கு முன்பே என் முதல் 'கட்டுரை' பத்திரிகையில் வெளியாகிவிட்டது. (அப்பொழுது எனக்கு வயசு பதினைந்து. அந்தக் 'கட்டுரை'யைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்; கிடைக்கவில்லை.) ஆனால், சிறு கதை எதுவும் அதுவரையில் நான் எழுதியதில்லை.

அன்று எழுதிய 'காளியின் கண்கள்' என் முதல் கதையாய் அமைந்தது. அதைப் படித்த நண்பர்கள், நன்றாயிருக்கிறது என்று புகழ்ந்து என்னை மேலும் எழுதத் தூண்டினார்கள். அப்பொழுது தீர்மானித்தேன், இனிமேல் சிறு கதைகள் எழுதுவது என்று. அன்று மனசில் ஊன்றிய வித்தின் விளைவுதான் இச்சிறுகதை மலர்கள்.

இம்மலர்களின் வாசனையை நான் அறியேன். (எழுத்தாளனுக்கு ஏற்படும் நஷ்டங்களில் இதுவும் ஒன்று.) எழுத வேண்டும் என்று தோன்றிய பொழுதெல்லாம் சிருஷ்டிக்கப் பட்ட கற்பனை மலர்கள் இவை. பூமியைப் பண்படுத்தி, உரம் போட்டு, நாற்று விட்டுப் புஷ்பித்தவை அல்ல. அழகையோ, வாசனையையோ இம்மலர்களில் வாசகர்கள் கண்டு அநுபவித்தார்களானால், நான் எழுதியதை வியர்த்தமென்று கருதுவதற்கில்லை.

இக்கதைகளைக் குறித்து ஒரே ஒரு விஷயம் கூற விரும்புகிறேன்—சிறுகதை எப்படியிருக்கவேண்டும் என்ற விஷயம் சம்பந்தமாக.

சிறுகதை சிறியதாக இருக்கவேண்டும். அதனுடன் அது கதையாகவும் இருக்கவேண்டும் என்பது ஒரு கட்சி. அதாவது, கதாஸ்வாரஸ்யந்தான் பிரதானம், கருத்து அடுத்தபடிதான் என்பது. இல்லே, சிறு கதையில் கருத்துத் தான் முக்கியம் என்பது வேருெரு கட்சி. இவர்கள் கதையே இல்லாமல் சிறு கதை எழுதிவிடுவார்கள்.

கதாஸ்வாரஸ்யம் எவ்வளவு அவசியமோ அப்படியே கருத்தும் அவசியம் என்று நான் கருதுகிறேன், மலருக்கு அழகும் மணமும் போலே. வாசனே இல்லாத மலரும், அழகினுல் கண்ணேக் கவருகிறது. அத்துடன் மணமும் சேர்ந்தால் இன்னும் விசேஷமல்லவா? இவ்விதமே, சிறு கதையின் சிறப்பு கதையின் ரஸத்தையும், கருத்தின் விசேஷத்தையும் சார்ந்தே நிற்கிறது. கதையும் கருத்தும் ஒன்றுக்கொன்று ஒத்தாசையாய் இழைந்து அமையும் முயற்சியில் உருவானவையே, இத்தொகுதியில் உள்ள கதைகள். எவ்வளவு தூரம் இதில் வெற்றியடைந்திருக்கிறேன் என்பதை வாசகர்கள் நிர்ணயிக்கவேண்டும்.

கதைகள் வெளியான பத்திரிகைகளுக்கும், புத்தகம் வெளியாவதற்கு முற்றும் காரணமான நண்பர் கி. வா. ஜ. அவர்களுக்கும் என் நன்றி உரியது.

23-8-'43 து. ரா.

காளியின் கண்கள்

1

கிருஷ்ணகிரி அரசன் வீரமார்த்தாண்டன் மைசூர் ராஜ வம்சத்தில் பிறந்த ஒரு சிற்றரசன்; அமோகமான ஐசுவரியத்துக்குத் தலைவன். புகழ் பெற்ற கோமதி வைரங்கள் இரண்டும் அவனிடத்தில் இருந்தன. வைரமொன்று ஓர் எலுமிச்சம்பழம் அவ்வளவு பெரியது. விலை மதிக்க முடியாத இவ் வைரங்கள் ஒரு காலத்தில் ஸோமநாத் கோயிலுக்குச் சொந்தமாயிருந்தன என்றும் அவை எப்படியோ வீரமார்த்தாண்டன் வசம் வந்தனவென்றும் ஜனங்கள் சொல்லிக் கொண்டார்கள். கோமதி வைரங்கள் அவற்றை வைத்திருப்பவருக்குத் தீங்கு தரும் என்ற நம்பிக்கையும் வழக்கத்தில் இருந்தது. ஆனால் இதைப் 'பாட்டிக் கதை' என்று எண்ணி வீரமார்த்தாண்டன் பொருட்படுத்தவில்லை. கோமதி வைரங்கள் தன்னிடம் இருந்ததைக் குறித்து அவன் அடைந்திருந்த மகிழ்ச்சியும் பெருமையும் சொல்லி முடியாது.

*　　*　　*　　*

கடுமையான கோடைக் காலம். அனல்காற்று வீசிக்கொண்டிருந்தது. வீரமார்த்தாண்டனுடைய அரண்மனையைச் சுற்றியிருந்த தோட்டத்தின் ஒரு கோடியில் ஓர் அழகிய பங்களா இருந்தது. அதற்குள் ஒரு மஞ்சத்தின் மேல் சாய்ந்துகொண்டு ஹேமாவதி உஷ்ணம் தாங்கமாட்டாமல் அவஸ்தைப் பட்டுக்

கொண்டிருந்தாள். ஹேமாவதி அரசனுடைய இளைய சகோதரி. எங்கராயனுடைய மனைவி. தமையனும் தங்கையும் வெகு அந்நியோந்நியமானவர்கள்.

"ஹேமா" என்று கூப்பிட்டுக்கொண்டே எங்கராயன் உள்ளே வந்தான். எங்கராயன் அவ்வளவு நல்லவனல்ல. பேராசையும் பொறாமையும் அவனிடம் குடிகொண்டிருந்தன. ஆனால், ஹேமாவுக்காக எங்கராயன் தன் உயிரையும் விடக்கூடியவன்; அவளிடம் அவ்வளவு அன்பு கொண்டிருந்தான். வீரமார்த்தாண்டன் ஹேமாவிடம் அதிகப் பிரியமாக இருக்கிறான் என்று அவன் சில சமயம் பொறாமைப்பட்டது கூட உண்டு.

எங்கராயனைக் கண்டதும் ஹேமாவதி எழுந்திருந்து அவனைக் கையைப் பிடித்திழுத்து மஞ்சத்தில் உட்கார வைத்தாள்.

"எங்கே போயிருந்தீர்கள்? வெயில் வீணாய்ப் போகிறது என்று எண்ணமோ?" என்றாள். எங்கராயன் அடைந்த சந்தோஷத்திற்கு அளவில்லை.

"ஹேமா, நீதான் சொல்லேன். நான் வேறு எங்கே போயிருக்கப் போகிறேன்; எல்லாம் உன் தமையனைப் பார்க்கத்தான். அரண்மனையில் கொஞ்சம் வேலை இருந்தது. அத்துடன் ஒரு வைர வியாபாரி கோமதி வைரங்களைப் பார்க்க வந்திருந்தான். வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேன்" என்று கூறிச் சிரித்தான்.

ஹேமா தன் மருண்டவிழிகளைச் சுழற்றிக் கொண்டே, "அண்ணாவுக்கு வேறு என்ன வேலை? எப்போது பார்த்தாலும் கோமதி வைரங்கள்தாம்; விற்றுவிடு என்றால் கேட்கிறானா? கோமதி வைரங்கள் கெடுதி விளைக்கும் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். அதென்னவோ, எனக்கு எப்போதும்

பயமாகவே இருக்கிறது!" என்று கொஞ்சலாகக் கூறினாள்.

"அடி அசடே! நீ ஏன் இதற்கெல்லாம் பயப் படுகிறாய்? நாங்கள் இல்லையா, ஆண்பிள்ளைகள்? உனக்கு ஒரு கெடுதியும் வராமல் நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா?" என்று சொல்லிவிட்டு எங்க ராயன், "அது இருக்கட்டும், ஹேமா; வீரமார்த் தாண்டன் அந்த வைரங்களை எங்கே பத்திரப்படுத்தி வைத்திருக்கிறான்? ஒரு வேளை, உனக்குக்கூடத் தெரியாதோ?" என்றான்.

ஹேமா ஏதோ பெரிய வெற்றியடைந்துவிட்ட வள்போல் தன் தலையை உயர்த்திக்கொண்டு, "ஓ, அதுவா! அண்ணாவுக்கும் எனக்கும் மட்டுந்தான் தெரியும். உங்களுக்குச் சொல்லுவேன் என்று நினைத்துக் கொண்டீர்களோ? நான் சொல்லு வேனா!" என்றாள்.

"சொல்லாவிட்டால் போயேன்" என்று கோப மடைந்தவன்போல் எங்கராயன் தலையைத் திருப்பிக் கொண்டான். ஹேமாவதி அவன் மோவாய்க்கட் டையைப் பிடித்து அவன் முகத்தைத் தன் பக்கம் திருப்பினாள்.

"சொல்லட்டுமா, சொல்லிவிடட்டுமா, சொல் லியே விடட்டுமா?" என்று கேட்டுவிட்டு, "கோமதி வைரங்கள் அண்ணாவின் படுக்கையறையில் கட்டி லுக்குக் கீழே இருக்கும் இரும்புப் பெட்டியில் இருக் கின்றன. ஐயையோ! ரகசியத்தைச் சொல்லிவிட் டேனே! யாரிடத்திலும் சொல்லப்படாது, தெரியுமா?" என்று எங்கராயன் வாயைப்பொத்தினாள்.

* * * *

பத்து நாட்களுக்குப் பிறகு அரண்மனையில் பெரிய கலவரம் ஏற்பட்டது. கோமதி வைரங்கள்

திருட்டுப் போய்விட்டன. வீரமார்த்தாண்டன் அடிக்கடி அவற்றைப் பெட்டியிலிருந்து எடுத்துப் பார்த்துப் பார்த்துச் சந்தோஷிப்பது வழக்கம். அப்படியே அன்றும் பெட்டியைத் திறந்து பார்த்தான். வைரங்களைக் காணவில்லை. திருட்டுப்போய் விட்டதென்று முதலில் அவனால் நம்ப முடியவில்லை.

அரண்மனையில் களவு நடந்த செய்தி ஊரெங்கும் காட்டுத் தீயைப்போல் பரவிற்று. ஹேமாவதியின் காதுகளுக்கு இச்செய்தி எட்டியதும் அவள் அப்படியே இடி விழுந்தவள்போல் உட்கார்ந்துவிட்டாள். "திருட்டுப் போய்விட்டதா? கோமதி வைரங்களா? அரண்மனைக்குள் எப்படித் திருடன் வந்தான்? வைரங்கள் இருந்த இடம் எப்படித் திருடனுக்குத் தெரிந்தது? எனக்கும் அண்ணாவுக்கும் மட்டுந்தானே -" என்று சொல்லிக்கொண்டு வந்தவள் திடுக்கென்று நிறுத்தினாள். பத்து நாட்களுக்குமுன் தான் எங்கராயனிடம் சொன்னது நினைவிற்கு வந்தது. மார்பு படார் படார் என்று அடித்துக்கொண்டது; அவள் மனசில் பல சந்தேகங்கள் எழுந்தன.

அரண்மனையிலிருந்து எங்கராயன் வந்தவுடன் ஹேமா நேராக அவனிடம் சென்று, "கோமதி வைரங்கள் போய் விட்டது உண்மைதானா?" என்றாள்.

"உண்மைதான்" என்று அவன் தலையசைத்தான்.

"அன்று நான் உங்களிடம் சொன்னேனே, அதை யாரிடமாவது சொன்னீர்களா என்ன?"

"என்ன, ஹேமா, என்னிடம் உனக்கு நம்பிக்கை இல்லையா? எனக்குப் புத்தி இல்லையா?......" என்று ஆரம்பித்த எங்கராயனைப் பேசவிடாமல் தடுத்து அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள் ஹேமா.

"அண்ணு இந்தத் துரதிருஷ்டத்தை எப்படிப் பொறுத்துக்கொள்ளப் போகிருன்? பாவம்! என்னை எப்படி நேசித்தானே, அப்படி அந்த வைரங்களை நேசித்தானே! எனக்கென்னவோ இது சாதாரணத் திருடன் செய்த வேலையாகத் தோன்றவில்லை. அரண்மனையைச் சேர்ந்தவர்களே யாரோ செய்திருக்கிருர்கள். எப்படியாவது இந்தத் திருட்டைக் கண்டு பிடிக்க வேண்டும்" என்ருள்.

எங்கராயன் ஒரு விதமாகச் சிரித்துக்கொண்டு, "ஹேமா, நீ பேசாமல் இரு; நாங்கள் ஆண்பிள்ளைகள் எதற்காக இருக்கிருேம்? என்ன செய்யவேண்டுமென்பது எங்களுக்குத் தெரியாதா?" என்று கூறினுன். அவன் பேசிய விதம் ஹேமாவதிக்குப் பிடிக்கவில்லை.

2

நடு நிசி. அமாவாசை கழிந்த ஆரும் நாள். இளம் பிறைச்சந்திரன் வெண்மையான மேகங்களின் நடுவில் மங்கலாகப் பிரகாசித்துக்கொண் டிருந்தான். இடையிடையே 'க்ரீச்' என்று கத்திக்கொண் டிருந்த ஆந்தையின் குரலொலியைத் தவிர இரவு சந்தடியற்று இருந்தது. எங்கராயன் படுக்கையை விட்டு எழுந்து அடிமேல் அடி வைத்துச் சப்தம் செய்யாமல் பங்களாவை விட்டு வெளியே வந்தான். கனவு கண்டு விழித்தவள்போல் விழித்துக்கொண்ட ஹேமாவதி, எங்கராயன் சத்தப் படாமல் கதவைச் சாத்திக்கொண்டு போவதைப் பார்த்தாள். அவள் மனசில் ஏதோ சந்தேகம் தோற்றியது. சந்தடி செய்யாமல் தானும் எழுந்து எங்கராயன் அறியாமல் அவனைப் பின் தொடர்ந்தாள்.

ஓங்கி வளர்ந்த மரங்களின் அடர்த்தியான இலைகள் சந்திர கிரணங்களை மறைத்துக்கொண்

டிருந்ததால் தோட்டம் அந்தகாரத்தில் மூழ்கி யிருந்தது. அந்தக் கும்மிருட்டில் தோட்டத்தின் ஒரு கோடியை நோக்கி எங்கராயன் வேகமாக நடக்க, அவனைப் பின் தொடர்ந்து ஹேமாவதி தட்டுத் தடு மாறிக்கொண்டு சென்றாள். பயத்தினாலும் குளிரினா லும் அவள் தேகம் வெடவெடவென்று உதறிற்று.

சிறிது நேரத்தில் இருவரும் மரங்களடர்ந்த நந்தவனத்தை விட்டு வெட்ட வெளியாக இருந்த இடத்துக்கு வந்தார்கள். எதிரில் இருட்டுடன் கலந்து பயங்கரமான பிசாசுபோல் நின்றிருந்த இடிந்த கட்டிடமொன்று தென்பட்டது. இந்த நள்ளிரவில் மனிதசஞ்சாரமற்ற பாழடைந்த காளி கோயிலுக்கு எங்கராயன் ஏன் வரவேண்டும்?

எங்கராயன் கோயிலுக்குள் நுழைந்ததும் அவன் வரவை எதிர்பார்த்திருந்த இரண்டு உரு வங்கள் தாங்கள் இருந்த இடத்தை விட்டு எழுந்து முன் வந்தன. ஒன்றும் விளங்காதவளாய் ஹேமாவதி பிராகாரத்தின் முன்னிருந்த ஒரு பெரிய கல் தூண் மறைவில் நின்று கவனித்தாள்.

"என்ன, ஏமாங்கதா, வஸந்தா! ஏற்பாடுகள் எவ் வளவு மட்டில் இருக்கின்றன?" என்று எங்கராயன் கேட்கும் குரல் கேட்டது. கோயிலில் காத்துக்கொண் டிருந்தவர்கள் ஏமாங்கதன், வஸந்தன் என்ற சகோத ரர்கள் என்று தெரிந்ததும் ஹேமாவதி, "இவ்விரு வரும் அரண்மனை வேலைக்காரர்கள். இவ்வளவு கீழ்த்தர அந்தஸ்து உடையவர்களுடன் நம் கணவர் என்ன விஷயத்தைப்பற்றிப் பேசப் போகிறார்?' என்று ஆச்சரியத்துடன் பேச்சைக் கவனமாகக் கேட்டாள்.

"ஸ்வாமி, ஏற்பாடெல்லாம் முக்கால் வாசி ஆகி விட்டது. வைரங்களை எங்கே ஒளித்து வைப்ப தென்றுதான் தெரியவில்லை."

பேசினது ஏமாங்கதன் குரல். ஹேமாவதியின் உடம்பு நடுக்கமெடுத்தது; "ஐயோ, நாம் சந்தேகித்தது சரியாய் விட்டதே!" என்று வருத்தமும், பயமும், கோபமும் ஒருங்கே அடைந்தாள். எங்கராயன் பேசலானான்:

"அரண்மனைக்குள் இருப்பவர்களே இந்த வேலையைச் செய்திருக்க வேண்டுமென்று சந்தேகம் ஏற்பட்டிருக்கிறபடியால் வைரங்களை அரண்மனைக்குள் ஒளித்து வைப்பதென்பது முடியாத காரியம். கொண்டுபோய் இப்போதே விற்று விடலாம் என்று பார்த்தால் முழு ஏற்பாடுகளும் முடியவில்லை என்கிறாய். அதுவரையில் வைரங்களை இந்தக் கோயிலிலேயே ஒளித்து வைப்பதுதான் உசிதமென்று தோன்றுகிறது. என்ன சொல்கிறீர்கள்?"

சிறிது நேரம் ஒருவரும் பேசவில்லை. ஏமாங்கதனும் அவன் சகோதரனும் எங்கராயன் வார்த்தைகளை ஆராய்வதாகத் தெரிந்தது. கடைசியில் வஸந்தன், "ஸ்வாமி, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது" என்றான்.

"என்ன யோசனை?"

"அதோ அங்கே காளியின் சிலை இருக்கிறதல்லவா? அதற்கு இரண்டு ஆழமான கண்கள் இருப்பதைப் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு கண்ணிலும் ஒரு வைரக்கல்லை வைத்துக் கருமையான மெழுகை மேலே அப்பிவிட்டால் ஒரு விதமான அடையாளமும் தெரியாது. காளி விக்கிரகத்தை நெருங்க எவரும் துணியமாட்டார்கள். அப்படிக் கிட்டச் சென்று பார்த்தாலும் ஒன்றும் கண்டுபிடிக்க முடியாது. சோதனை நடந்தாலும் நாம் பயப்பட வேண்டியதில்லை; என்ன நான் சொல்வது?"

"நல்ல யோசனைதான்" என்று ஏமாங்கதனும் எங்கராயனும் ஒப்புக்கொண்டார்கள்.

"வஸந்தா, வேலை செய்வதற்கு வேண்டிய சாமான்களெல்லாம் வைத்திருக்கிறாயா?" என்று எங்கராயன் கேட்க, வஸந்தன், "முன்னால் யோசனை செய்து எல்லாம் தயாராய்க் கொண்டுவந்திருக்கிறேன்" என்றான்.

"வேலை நடக்க வேண்டியதுதானே?" என்று கேட்டுக்கொண்டே காளியின் சிலையை அணுகினான் எங்கராயன்.

நக்ஷத்திரம்போல் ஜ்வலித்துக்கொண் டிருந்த இரண்டு பெரிய வைரக் கற்கள் அவன் உள்ளங் கையில் தோன்றி மறுநிமிஷம் காளியின் குழி விழுந்த கண்களுக்குள் சென்று கல்லோடு கல்லாய் மறைந்தன.

"அது என்ன?"

"எது என்ன?"

"காலடிச் சத்தம் கேட்டதுபோல் இருந்ததே?"

"ஒன்றும் இல்லை. காற்று அடித்தது. அவ்வளவு தான்."

மூவரும் கோயிலை விட்டு வெளியே வந்தார்கள். ஹேமாவதி அவர்களுக்கு முன் வெகு வேகமாக நடந்து பங்களாவை அடைந்து தூங்குவதுபோல் படுக்கையில் கிடந்தாள். அவள் மனம் பட்ட பாட்டைச் சொல்ல முடியாது.

3

எங்கராயன் உண்மையில் கோழையாக இருந்தாலும் பேராசையும் பொறாமையும் அதிகமாக உடையவன். வைரங்களைத் திருடுவதற்காக அவன் சிருஷ்டித்த சதியாலோசனைக் கூட்டத்தில் அவனே

தலைவன். ஆனால் உண்மையில் திருட்டை நடத்திய வர்கள் ஏமாங்கதனும் வஸந்தனுமே. எங்கராயன் அவர்களுக்கு லாபத்தில் பங்கு கொடுப்பதாக வாக் களித்திருந்தான். ஆனால் காரியம் வெற்றிகரமாக நிறைவேறிவிட்டது என்று தோன்றிய பிறகு அவனுக்குச் சபலம் தட்ட ஆரம்பித்தது. 'இந்தப் பயல்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டுமே. சே! இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்தவனுக்கு இவர்களை ஏமாற்றுவதுதானா கஷ்டம்?' என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான். எப்போது இரவு வரும் என்று காத்துக்கொண் டிருந்துவிட்டு நடுநிசியில் பங்களாவை விட்டுப் புறப்பட்டான்.

எங்கராயன் செய்கைகளைக் கண்கொட்டாமல் கவனித்துக்கொண்டிருந்த ஹேமாவதி முன் செய்தது போலவே இன்றும் அவனைத் தொடர்ந்து சென்றாள். காற்று ஜில்லென்று வீசிக்கொண் டிருந்தது. தென் மேற்கு அடிவானத்திலிருந்து கறுத்த மேகங்கள் கிளம்பி மேலே வந்துகொண் டிருந்தன. இடையே 'பளிச்', 'பளிச்'சென்று மின்னல் தோன்றிமறைந்தது.

காளி கோயிலில் இன்று ஒருவரும் காணப்பட வில்லை. அந்த நள்ளிரவின் நிச்சப்தத்திலிடையே, எங்கராயன் கதவைத் திறந்தபோது ஏற்பட்ட 'கிரீச்' என்ற சப்தம் மனத்திற்கு அச்சத்தைக் கொடுத்தது. எங்கராயன் உள்ளே நுழைந்தான். இருட்டில் தட்டுத் தடுமாறிக்கொண்டே காளியின் சிலையை அடைந்தான். அவன் கைகள் விக்கிரகத்தின் ஒவ் வொரு பாகத்தையும் தடவித் தடவிப் பார்த்து விட்டுக் கடைசியில் அதன் கண்களைக் கண்டுபிடித்து நின்றன. எங்கராயன் தன் உடைவாளை உருவி, காளியின் கண்களின்மேல் பூசியிருந்த மெழுகைக் கீற ஆரம்பித்தான்.

திடீரென்று அவன் பின்னால் சப்தம் கேட்டது. அவன் தோள்மேல் ஒரு கை விழுந்தது. எங்கராயன் திடுக்கிட்டுத் திரும்பினான். அவன் மார்பு படபட வென்று அடித்துக் கொண்டது. உரோமங்கள் குத்திட்டு நின்றன. தனக்கு எதிரில் மங்கலாகக் காணப்பட்ட உருவத்தைப் பீதியுடன் நோக்கினான். அந்தக் காடாந்தகாரத்தில் அந்த உருவம் யாருடைய தென்று கண்டுபிடிக்க முடியவில்லை. மறுகணம் அவன் கையிலிருந்த உடைவாள் மேலெழுந்து எதிரி லிருந்த உருவத்தின் மார்பில் பாய்ந்தது. ரத்தம் பீரிட்டடித்து அவன் முகத்தை நனைத்தது. குத்துண்ட ஹேமாவதி சப்தம் செய்யாமல் சாய்ந்து காளியைக் கட்டிக்கொண்டாள். கால்கள் உடைந்திருந்த கற்சிலை இடம் பெயர்ந்து கீழே சாய்ந்தது. அத்துடன் ஹேமாவதியின் உயிரற்ற உடலும் உருண்டு விழுந்தது. பாழடைந்த கோயிற் சுவர்களிலிருந்து 'ஹாய்' என்று எதிரொலி கிளம்பிற்று.

எங்கராயன் உடம்பெல்லாம் நடுங்கிற்று. அவன் வைரத்தை மறந்தான். கோயிலை விட்டு வெளியே வந்து பங்களாவை நோக்கி ஓட்டம் பிடித்தான்.

பெருமூச்சு வாங்கத் தன் படுக்கை யறையை அடைந்த பின்னரே நின்றான் எங்கராயன். ஹேமாவதி எங்கே விழித்துக்கொள்ளப் போகி றாளோ என்று பயந்து படுக்கையைப் பார்த்தான். படுக்கை காலியாக இருந்தது. திடுக்கிட்டான். "ஹேமா! ஹேமா!" என்று கூப்பிட்டான். பதில் இல்லை. விளக்கை ஏற்றிப் பங்களா முழுதும் அறை அறையாகப் புகுந்து தேடப் புறப்பட்டான். ஹேமா இருந்தால்தானே? 'இந்நேரத்தில் எங்கே போயிருப் பாள்?' என்று யோசித்துத் திடீரென்று திகிலடைந் தான். 'ஒரு வேளை நான் காளி கோயிலில் பார்த்தது ......சே, அது எப்படி இருக்க முடியும்?' என்று

சொல்லிக் கொண்டான். அவன் மனசில் எழுந்த சந்தேகத்தைப் போக்க எவ்வளவு முயன்றும் முடிய வில்லை 'ஹேமா...தா...ளே...?' என்று அவன் மனம் துடித்தது. முகத்தில் படிந்திருந்த ரத்தம் காய்ந்து வறவறவென்று இழுக்க ஆரம்பித்தது. பைத்தியம் பிடித்தவன்போல் மறுபடியும் காளி கோயிலை நோக்கிக் கல்லென்றும் முள்ளென்றும் பாராமல் ஓடினன்.

4

பிறரை வஞ்சித்துத் திருடுவதையே தொழி லாகக் கொண்டவர்களுடைய பழக்கம் பொல்லாதது. கடைசியில் அவர்கள் தங்கள் கூட்டத்திற்குள்ளேயே ஒருவரை யொருவர் ஏமாற்றப் பார்ப்பார்கள். இத ஞலேயே இவர்களுக்கு அழிவு ஏற்படும். எங்க ராயன் தன் தோழர்களைத் துரோகம் செய்து, தானே முழு லாபத்தையும் அடைய எண்ணிய அதே இரவு ஏமாங்கதன், வஸந்தன் என்ற இருவருக்குங்கூட அதே மாதிரியான துரோக சிந்தை எழுந்ததில் ஆச்சரியமில்லை யல்லவா?

"அண்ணு, தன் சொந்த மைத்துனனை வஞ்சித்த இந்த எங்கராயன் நம்மை ஏமாற்றமாட்டானென்பது என்ன நிச்சயம்?" என்று வஸந்தன் தன் கருத்தை வெளியிட ஆரம்பித்தான்.

"ஒன்றும் பயப்படாதே. நம்மிடம் வாலை ஆட்ட மாட்டான்" என்று ஏமாங்கதன் சொன்ன பின்பும் வஸந்தன் திருப்தியடையவில்லை.

"நம்மை அவன் ஏமாற்றுவதற்குள் நாம் அவனை ஏமாற்றிவிடுவோம்" என்று கூறித் தன் தமையனை யும் தன் இஷ்டத்திற்கு இணங்கச் செய்தான்.

எங்கராயன் ஹேமாவதியைக் குத்திக் கொன்று விட்டு ஓடின மறு நிமிஷமே ஏமாங்கதனும் வஸந்தனும் காளி கோயிலுக்குள் பிரவேசித்தார்கள். இருட்டில் தடவிக்கொண்டே இருவரும் மூல ஸ்தானத்தை அடைந்தார்கள். வஸந்தன் வலது கையில் ஆணியொன்றைப் பிடித்துக்கொண்டு காளியின் சிலையைத் தடவிக் கண்டுபிடிக்க ஆரம்பித்தான். ஆனல் சிலை, இருக்கவேண்டிய இடத்தில் இல்லாமல் போகவே, துணுக்குற்றுன். நாலுபுறமும் தடவு கையில், கீழே கிடந்த சிலை தட்டுப்பட, அதனுடைய கண்களைத் தேடினுன்.

அன்றிரவு காளி கோயிலில் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கினவர்களை அந்தக் காரியத்தை இடையூறின்றிச் செய்து முடிக்கும்படிவிடக் காளிகா தேவிக்கு இஷ்டமில்லை போலும்! ஏனெனில் வஸந்தன் காளியின் கண்களைத் தேடத் துவக்கின அதே சமயத்தில் கோயில் வாசற் கதவின்மேல் திடீரென்று விளக்கு வெளிச்சம் விழுந்தது. யாரோ வரும் சத்தம் கேட்டது. கையில் விளக்குடன் ஓர் உருவம் கோயிலுக்குள் வந்தது. ஏமாங்கதன் திடுக்கிட்டு, "ஆ, மகாராஜா!" என்று கூவினுன். வஸந்தன் கையில் பிடித்திருந்த ஆணி கீழே விழுந்தது. உள்ளே வந்தவன் அரசன் மார்த்தாண்டனே!

வீரமார்த்தாண்டன் ஒரு கணம் அசைவற்று நின்று, பின், "யாரது, ஏமாங்கதனும் வஸந்தனுமா? இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே காளியை அணுகினுன்.

வஸந்தனும் ஏமாங்கதனும் பேசவில்லை. அரசன் காளி சிலையை அதன் பீடத்தில் காணுமல், கீழே விளக்கைத் தாழ்த்திப் பிடித்தான். மூவரும் ஒரே சமயத்தில் "ஆ!" என்ற கூச்சலுடன் பின் வாங்கினுர்கள். கீழே கிடந்த காளி விக்கிரகத்தையும் அத

னருகிலிருந்த ஹேமாவதியின் சவத்தையும் அவர்கள் ஏககாலத்தில் பார்த்தார்கள்.

வீரமார்த்தாண்டன் உடல் பதறத் தன் பக்கத்தில் நின்றிருந்த இருவரையும் மாறி மாறிப் பார்த்தான். அவன் மூச்சு, சப்தத்துடன் வெளி வந்தது. "கொலைகாரர்களா!" என்று அவன் பற்களைக் கடித்துக்கொண்டு சொன்ன வார்த்தை சரியாகவே காதில் விழவில்லை. பளிச்சென்று உறையிலிருந்து வெளிவந்த அவன் உடைவாள் வஸந்தனை உடல் வேறு தலை வேறாகச் செய்தது. மறுபடியும் வாளை ஓங்கின அரசன் ஏனோ அதைத் தாழ்த்தி விட்டுக் கீழே கிடந்த தன் சகோதரியின் உடலைப் பார்த்துக் கதறினான்; "ஐயோ, ஹேமா! 'காளி கோயிலுக்குப் போய் விக்கிரகத்தைச் சோதித்தால் கோமதி வைரங்கள் அகப்படும்' என்று இன்று மத்தியான்னந்தானே என்னிடம் சொன்னாய்! அதற்குள் இந்தக் கதிக்கு வந்துவிட்டாயே!" என்று பிரலாபித்துவிட்டுத் தன் கையிலிருந்த உடைவாளை ஏமாங்கதனிடம் நீட்டி, "பாதகா, என் ஹேமாவை மட்டும் ஏன் கொன்றாய்? என்னையும் கொன்றுவிடு" என்று கதறிக்கொண்டே தூணைக் கட்டிக் கொண்டான்.

தன் தம்பியைக் கொன்ற அரசன் மேல் ஏமாங்கதனுக்கு ஏற்பட்ட கோபமெல்லாம் உடனே இரக்கமாக மாறியது; "மகாராஜா, வருத்தப்பட வேண்டாம். நாங்கள் குற்றமற்றவர்கள். கருணைக்கு இருப்பிடமான ஹேமாவதி தேவியை நாங்களா இந்தக் கதிக்கு ஆளாக்குவோம்? ஆராயாமல் நீர் என் தம்பியைக் கொன்றுவிட்டீர். இங்கேயே இரும். நான் போய் எங்கராயரை அழைத்து வருகிறேன்" என்று சொல்லி விட்டு இரண்டடி நடந்தான். அந்தச் சமயத்தில் யாரோ "ஹேமா! ஹேமா!" என்று கத்திக்கொண்டு

தடதட என்று ஓடிவரும் சப்தம் கேட்டது. மறுகணம் தன் முன் தோன்றிய காட்சியைக் கண்டு வீரமார்த் தாண்டன் மூர்ச்சையானான். பைத்தியம் பிடித்தவன் போல் தலைவிரி கோலமாய் ஓடிவந்த எங்கராய னுடைய ரத்தம் தோய்ந்த முகம் பார்க்கப் பயங் கரமாக இருந்தது.

காளி கோயிலில் நடந்த கொலைகளுக்கும் கோமதி வைரங்களுக்கும் இருந்த சம்பந்தத்தை உலகம் சந்தேகிக்கவில்லை. பைத்தியம் பிடித்த எங்க ராயனை யார் என்ன கேட்டாலும் ஒரே பதில்தான் கிடைத்தது :

"காளியின் கண்கள் !" "காளியின் கண்கள் !"

கப்பல் தலைவன் காதலி

1

பயங்கரமான பெரிய சப்தத்துடன் சுழற் காற்று வீச ஆரம்பித்தது. அன்று கடலுக்குக் கொம்மாளந்தான். அலைகள் மலைபோல் உயர்ந்து கரையில் திட்டுத் திட்டாக இருந்த பாறைகளின் மேல் மோத ஆரம்பித்தன. கண்ணைப் பறிக்கும் மின்னலும் காதைத் துளைக்கும் இடி முழக்கமும் மனத்திற்கு நடுக்கத்தைத் தந்தன.

இப்படிப்பட்ட இரவில் அச்சத்தைக் கொடுக்கும் இந்தக் கடற்கரைக்கு அருகிலுள்ள கற்பாறைகளுள் ஒன்றின்மேல் நின்று கடலைப் பார்த்துக்கொண்டிருக்கும் பெண்மணிக்கு என்ன மனோதைரியம் இருக்கவேண்டும்! இந்த வேளையில் நிர்மானுஷ்யமான அந்தக் கடற்கரையில் இந்தப் பெண்மணிக்கு என்ன வேலை இருக்கும்?

உண்மையில் சுந்தரிக்கு இப்போது தன் நினைவே இல்லை. இந்த இருட்டில் கடற்கரையில் தனியாக இருக்கிறோமே, புயலடிக்க ஆரம்பித்துவிட்டால் என்ன செய்கிறது என்ற பயம் அவள் மனத்தில் இல்லை. அவள் கண்பார்வையும் மனமும் நடுக்கடலில் அகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருந்த கப்பலின்மேல் இருந்தன.

ஆம்; கடலில் ஒரு கப்பலின் விளக்குகள் தெரிகின்றன. காற்றில் கப்பல் இங்கும் அங்கும் அசைந்தாடுவதையும் அவ்விளக்குகள் காட்டுகின்றன.

கப்பல் கவிழ்ந்தால் அதில் உள்ளவர்கள் கதி என்ன ஆகும் என்ற எண்ணமே சுந்தரியின் மனசில் நிறைந்திருந்தது. சமுத்திரத்தில் எப்படிக் கப்பல் தத்தளித்துக்கொண் டிருந்ததோ அப்படியே அவள் மனமும் தத்தளித்தது.

சுந்தரி அந்தக் கிராமத்திலேயே பிறந்து வளர்ந்தவள். குழந்தைப் பருவத்தில் தாயை இழந்தவள். அவள் தகப்பன் விஷ்ணுதத்தன் தன் ஒரே மகளை அருமையுடன் வளர்த்துவந்தான்.

சுந்தரிக்கு இப்போது பத்தொன்பது வயசு ஆகிறது. மின்னற்கொடி ஒன்று ஆகாயத்திலிருந்து இறங்கிப் பெண்ணுருவம் கொண்டு வந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது அவளது அழகிய உருவம்.

பொழுது போகாவிட்டால் சுந்தரி கடற்கரைக்குப் போய்விடுவாள். கடலின் அழகைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தால் போதும்; அவளுக்கு அன்ன ஆகாரம் வேண்டியதில்லை. அப்படி அவள் கடற்கரைக்குப் பொழுது போக்குக்காகப் போகும் நாட்களில் ஒரு தினந்தான் முன் சொன்னபடி புயற்காற்று அடிக்க ஆரம்பித்தது.

துடிக்கின்ற மனத்துடன் சுந்தரி கப்பலையே பார்த்துக்கொண் டிருந்தாள். திடீரென்று கண்ணைப் பறிக்கும் மின்னல் ஒன்று தோன்றிற்று; இடி இடித்தது; தடதட என்று மழை கொட்டத் தொடங்கிற்று. மறுநிமிஷம் கடலில் கப்பலைக் காணவில்லை.

சுந்தரி திடுக்கிட்டு எழுந்தாள். சிறிது நேரம் கப்பல் இருந்த இடத்தையே பார்த்துக்கொண்டிருந்து விட்டு, “ஐயையோ, முழுகிவிட்டது!” என்று

தனக்குள் சொல்லிக்கொண்டு ஊரை நோக்கி ஓடினாள்.

சிறிது நேரத்தில் கிராம ஜனங்கள், கையில் விளக்குகளையும் பனை ஓலைக் குடைகளையும் பிடித்துக் கொண்டு கடற்கரையில் கூடிவிட்டார்கள். தெய்வச் செயலாய்க் கரையேறுகிறவர்களைக் காப்பாற்றலாம் என்பதே அவர்கள் நோக்கம். வெகு நேரம் வரையில் அவர்கள் முயற்சி பயனளிக்கவில்லை. இந்தப் புயற் காற்றில் சமுத்திரத்தில் அகப்பட்டுக்கொண்ட எவன் தப்பி உயிருடன் கரையேறப் போகிறான்?

குளிரினால் உடல் நடுங்க, ஜலம் சொட்டச் சொட்ட, சுந்தரி ஒரு கற்பாறையின்மேல் நின்று கொண்டிருந்தாள். ஒரு பெரிய அலை "ஹோ" என்ற சத்தத்துடன் புரண்டு வந்து அவள் பாதங்களை நனைத்துவிட்டுத் திரும்பிச் செல்ல ஆரம்பித்தது. சட்டென்று கீழே பார்த்த சுந்தரியின் கண்களுக்கு ஒரு வெள்ளை உருவம் தெரிந்தது. மனம் பதைபதைக்கக் கீழே குனிந்து கையை நீட்டி அதைப் பிடித்துக் கொண்டாள். அந்த உருவமும் அலையுடன் திரும்பிப் போகாமல் நின்றது. சுந்தரி, "ஓடி வாருங்கள்! காப்பாற்றுங்கள்!" என்று தன்னையும் அறியாமல் கூவினாள். பிரம்மாண்டமான அலையொன்று அவளை நோக்கி வந்துகொண் டிருந்தது. வாய் விட்டுக் கத்தவும் அவளுக்குச் சக்தியில்லை.

"சுந்தரி! சுந்தரி!" என்று கத்திக்கொண்டு அவள் தந்தையும் இன்னும் சிலரும் ஓடி வருவதை அறிந்தாள். அதற்குமேல் என்ன நடந்தது என்று அவளுக்குத் தெரியாது.

2

மறுநாள் காலை எட்டு மணி இருக்கும். கிராம சபைத் தலைவர் திருச்சிற்றம்பலனார் கையில் கம்பை

ஊன்றிக்கொண்டு மெள்ள நடந்து வைத்தியர் தணிகாசலம் வீட்டை அடைந்தார்.

வைத்தியர் வரவேற்கத் திருச்சிற்றம்பலனார் இருமிக்கொண்டே சுந்தரியால் கடலிலிருந்து காப்பாற்றப்பட்ட இளைஞனைப்பற்றி விசாரித்தார். ஏனென்றால் அவனை வைத்தியர் வீட்டில்தான் விட்டிருந்தார்கள். இருவரும் உள்ளே சென்றார்கள்.

வந்தவர்களைக் கண்டதும் படுத்துக்கொண் டிருந்த அவ்விளைஞன் எழுந்து உட்கார்ந்தான். அவனைப்போல் அழகும், திடகாத்திரமான தேகமும் உடைய இளைஞனைப் பார்த்ததில்லை என்று தமக்குள் சொல்லிக்கொண்டு திருச்சிற்றம்பலனார், "உன் பெயர் என்ன, அப்பா?" என்று கேட்டார்.

"மஹேந்திரன்" என்று பதில் கிடைத்தது.

"முழுகிப்போனது எந்தக் கப்பல்?"

"அரசருக்குச் சொந்தமான 'கரிகாலன்' என்ற கப்பல்; அரசருடைய கப்பற் படையைச் சேர்ந்தது. இலங்கைத் தீவை அரசர் வென்றுவிட்டார். நான் முழுகிப்போன கப்பலின் தலைவன். நாங்கள் மட்டுமே முதலில் புறப்பட்டு வந்தோம். மற்றக் கப்பல்கள் நல்ல காலமாகத் தப்பித்துக் கொண்டன. அவை இப்பொழுதுதான் இலங்கையை விட்டுப் புறப்பட் டிருக்கும். என்னைப்போல் பிழைத்தவர்கள் எத்தனை பேர்?"

"நீ ஒருவன்தான் பிழைத்தாய்."

"அடடா! நாங்கள் மொத்தம் தொண்ணூறு பேர் இருந்தோமே; எல்லாருமா போய்விட்டார் கள்?" என்று வருத்தத்துடன் கூறிவிட்டு மஹேந் திரன், "நான் எப்படி உங்களுக்கு நன்றி செலுத்தப் போகிறேன்?" என்றான்.

"எங்களுக்கு நீ நன்றி செலுத்த வேண்டிய நியாயமே இல்லை. ஆண்பிள்ளைகள் அத்தனை பேரும் பேந்தப் பேந்த விழித்துக்கொண் டிருந்தபோது உன்னை ஒரு பெண் காப்பாற்றினாள். அவள் பிராணன் கூடப் பாதி போய்விட்டது. அவளைப் போய்ப் பார்க்கவேண்டும்" என்று திருச்சிற்றம் பலனார் எழுந்தார்.

"அப்படியா! ஒரு பெண்பிள்ளையா என்னைக் காப்பாற்றினாள்?" என்று மஹேந்திரன் ஆச்சரியப் பட்டுவிட்டு, திருச்சிற்றம்பலனாரைப் பார்த்து, "இலங்கையை வென்றபின் அரசர் எனக்கு வைரங்கள் பதித்த பதக்கம் ஒன்று பரிசளித்தார். அதை ஒரு தங்கச் சங்கிலியில் கோத்துக் கழுத்தில் அணிந்திருந்தேன். கப்பல் கவிழ்ந்தபோதுகூட அது என் கழுத்திலேதான் இருந்தது. சங்கிலி யிலிருந்த திருகைக் கழற்றினாலொழிய அதைக் கழுத்திலிருந்து அகற்ற முடியாது. அது எங்கேயோ போய்விட்டது. யார் கையிலாவது அகப்பட்டதா?" என்று கேட்டான்.

திருச்சிற்றம்பலனார் தமக்கு ஒன்றும் தெரியா தென்றும், விசாரித்துப் பார்ப்பதாகவும் கூறிவிட்டு வெளியே சென்றார்.

'அந்தப் பெண்ணை விசாரித்தால் அகப்பட்டு விடும்' என்று மஹேந்திரனுக்குத் தோன்றிற்று. ஆனால் வெளியே சொல்லவில்லை.

மறுநாள் சாயங்காலம் உடம்பு சற்றுக் குணமானபின் மஹேந்திரன், வைத்தியர் தணிகா சலத்துடன் வெளியே காற்று வாங்குவதற்காகப் புறப்பட்டான்.

"என்னைக் காப்பாற்றின பெண்மணியைப் பார்க்க வேண்டும்" என்று வைத்தியரிடம் வீட்டை விட்டுப் புறப்படும்போதே கூறினான்.

"அதற்கென்ன, பார்த்தால் போகிறது" என்று சொல்லிவிட்டுத் தணிகாசலம் அவனைச் சுந்தரி வீட்டுப்பக்கம் அழைத்துச் சென்றார்.

சுந்தரி வீட்டில் இல்லை. "சரி, நாளைக்குப் பார்த்துக் கொள்வோம்" என்று இருவரும் கடற் கரைப் பக்கம் சென்றார்கள்.

கடற்கரையில் ஒரு பாறையின் மேல் உட் கார்ந்துகொண்டு கடலைப் பார்த்துக்கொண் டிருந்த ஓர் உருவம் மஹேந்திரன் கண்களைக் கவர்ந்தது. அவள் அழகு அவனைப் பிரமிக்கச் செய்தது. மஹேந் திரன் எதை அவ்வளவு ஆவலுடன் பார்க்கிறான் என்று அவன் பார்வை சென்ற இடத்தை நோக்கிய வைத்தியரும் திடுக்கிட்டு, "ஆ, அதோ இருக்கிறாளே சுந்தரி!" என்று சொல்லிவிட்டு மஹேந்திரனிடம், "இவள்தான் உன்னைக் காப்பாற்றியவள்" என்று கூறினார்.

மஹேந்திரன் மனசில் ஆச்சரியமும் சந்தோ ஷமும் எழுந்தன.

சுந்தரி இவர்களைக் கண்டதும் எழுந்து நின்றாள்.

"ஏனம்மா, சுந்தரி, சௌக்கியமா? நீ கடலி லிருந்து காப்பாற்றினாயே அவர்தாம் இவர்!" என்று தணிகாசலம் அவனை அறிமுகம் செய்வித்தார். மஹேந்திரனுக்கு என்ன பேசுவது என்று முதலில் தெரியவில்லை.

"உன் உயிரையும் பொருட்படுத்தாமல் என்னைக் காப்பாற்றினாயாமே! உனக்கு நான் எப்படி என்

நன்றியறிதலைக் காட்டப் போகிறேன்?" என்று சமாளித்துக்கொண்டு கூறினான்.

சுந்தரி வெட்கத்துடன் நின்றாள். அவளுக்கு ஒன்றும் பேசத் தெரியவில்லை.

மஹேந்திரன் மறுபடியும், "ஏனம்மா, நீ என்னைக் கடலிலிருந்து எடுத்தபோது என் கழுத்தி லிருந்த சங்கிலியையும் வைரப் பதக்கத்தையும் பார்த் தாயா?" என்று கேட்டான்.

சுந்தரிக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"என் பதக்கத்தை நீதான் எடுத்துக் கொண் டாய்" என்று அவன் தன்மேல் குற்றம் சாட்டுவது போல் இருந்தது.

"வைரப் பதக்கமா? சங்கிலியா? எனக்கு நினைவில்லையே! நான் ஒரு பாவத்தையும் அறி யேனே?" என்று தலையை அசைத்தாள்.

3

மறுநாள் காலையில் மஹேந்திரன் சுந்தரியின் வீட்டை அடைந்தான். அவனால் அவளைப்பற்றி நினைக்காமல் இருக்க முடியவில்லை. எவ்வளவு முயன்றாலும் சுந்தரியின் உருவம் அவன் மனக் கண்முன் இருந்து போகமாட்டேன் என்றது.

வீட்டு வாசலில் கோலம் போட்டுக்கொண் டிருந்த சுந்தரி இவனைப் பார்த்ததும் பயந்துபோனாள். இருந்தாலும் அவளையும் அறியாமல் அவள் மனம் ஒருவிதச் சந்தோஷத்தை அடைந்தது.

"நான் நாளைக்கு ஊருக்குப் புறப்படப்போகி றேன்" என்றான் மஹேந்திரன். 'நாம் ஊருக்குப் போனால் இவளுக்கு என்ன வந்தது?' என்று அவன் நினைக்கவில்லை.

"இதற்குள் போகிறீர்களே!"

"ஆமாம், வேலை இருக்கிறது; என்ன செய்கிறது? உங்களை யெல்லாம் விட்டுப் போகவேண்டுமே என்று இருக்கிறது..."

சுந்தரி ஒன்றும் பேசவில்லை. அதனால் துணிந்து, "......அதிலும் உன்னை விட்டுப்போக வேண்டுமே!" என்று முடித்தான்.

சுந்தரி ஒருமுறை அவனை உற்றுப் பார்த்து விட்டுத் தலையைத் திருப்பிக்கொண்டாள். ஆனால் அந்தப் பார்வை ஒன்றே மஹேந்திரனுக்குப் போது மானதாக இருந்தது. சுந்தரி அன்று முழுவதும் அவனுடன் பேசியிருந்தாலும் அவனுக்கு அவ்வளவு திருப்தி ஏற்பட்டிருக்காது.

"சுந்தரி! சுந்தரி!! நான் எங்கே போனாலும் உன்னைமட்டும் மறக்க மாட்டேன்" என்று தன் காதலை வெளியிட்டான். சுந்தரியும் அவன் கருத்தை அறிந்து கொண்டாள். அவள் கண்களில் நீர் நிறைந்தது. எங்கே மஹேந்திரன் பார்த்துவிடுவானோ என்று தலையைக் குனிந்துகொண்டாள்.

மஹேந்திரன் ஆத்திரத்துடன், "சுந்தரி, வாய் திறந்து ஒரு வார்த்தையும் பேசமாட்டாயா?" என்றான்.

"உங்கள் - பதக்கத்தை - நான் - எடுக்கவில்லை" என்று நாக் குழறக் கூறினாள் சுந்தரி.

மஹேந்திரன அவளருகில் நெருங்கினான். "நான் உன்னைச் சந்தேகிக்கவில்லை. முதலில் சந்தேகித்தது உண்மைதான். என்னை மன்னித்துவிடு. நான் போய் வருகிறேன். சீக்கிரம் திரும்பி வருவேன்" என்று காதல் நிறைந்த கண்களுடன் கூறினான்.

4

அவன் திரும்பி வருவதற்குள் சுந்தரியின் வீடு பாழடைந்ததுபோல் ஆகிவிட்டது. விஷ்ணுதத்தன் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறான்.

விஷ்ணுதத்தனுக்கு வயசாகி விட்டது. அவன் தலைவலி, கால்வலி என்று இதுவரையில் கீழே படுத்த தில்லை. இப்போது திடீரென்று கடுமை யான நோய் வந்ததும் இனிப் பிழைக்க மாட்டோம் என்று தெரிந்துகொண்டான். தாயற்ற தன் மகள், தானும் போனபின் என்ன கதியாவாள் என்ற கவலை அவன் வியாதியை அதிகப்படுத்திவிட்டது.

சாகும் தறுவாயில் தன் மகளைப் பக்கத்தில் கூப் பிட்டான். அவள் வந்ததும், "சுந்தரி, என் கண்ணே, நான் உன்னைத் தன்னந்தனியாக விட்டுப் போகி றேனே!" என்று அழுதுவிட்டு, "நான் உனக்குப் பணம் காசு ஒன்றும் வைக்கவில்லை. ஒரு விலை உயர்ந்த வஸ்து மட்டும் வைத்திருக்கிறேன். அதோ, பார், அந்த மூலையில் தரையைத் தோண்டிப் பார்த்தால் அகப்படும். அதை எங்காவது கொண்டுபோய் விற்றுப் பணமாக்கிக்கொள். அது உனக்கு எப்படிக் கிடைத்தது என்பதை மட்டும் ஒருவருக்கும் சொல் லாதே" என்று கூறிக் கண்களை மூடிக்கொண்டான். பிறகு திறக்கவே இல்லை.

தந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளை யெல்லாம் சுந்தரி செய்தாள். பிறகு தன் தகப்பன் இறக்கும் தறுவாயில் கூறிய வார்த்தைகள் நினை விற்கு வந்தன; கதவை மூடிக்கொண்டு விஷ்ணு தத்தன் குறிப்பிட்ட இடத்தில் தோண்டிப் பார்த்தாள். ஒரு கலயம் அகப்பட்டது; அதன் வாயைச் சுற்றிக் கட்டியிருந்த துணியை எடுத்துவிட்டுக் கலயத்துக்குள் கையைவிட்டு அதில் இருந்ததை எடுத்தாள். பாம்பு,

தேள் - ஏதாவது இருந்திருந்தால்கூடச் சுந்தரி அவ்வளவு பயந்து போயிருக்கமாட்டாள். அதற்குள்ளிருந்து வெளியே வந்த தங்கச் சங்கிலியும் வைரப் பதக்கமும் அவள் உயிரையே வாட்டிவிட்டன ! வாய் விட்டுப் புலம்பினுள்; தலைமயிரைப் பிய்த்துக் கொண்டாள்.

மறுநாள் விடியற்காலையில் சூரியன் உதிக்குமுன் சுந்தரி தன் ஊரை விட்டுத் தலைநகரை நோக்கிப் பயணமானுள். மஹேந்திரனிடம் அவன் நகைகளைச் சேர்க்காத வரையில் அவள் மனசிற்கு நிம்மதி ஏது ?

5

"ஹா, சுந்தரியா ?" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு மஹேந்திரன் சுந்தரியை வரவேற்ருன். விசாலமான அறைகளையும் அலங்காரங்களையும் பார்த்துச் சுந்தரி மயங்கி நின்ருள். மஹேந்திரன் வீடு பெரிய அரண்மனைபோல் காணப்பட்டது ; மஹேந்திரன், அவள் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு மூச்சு விடாமல் பேசினுன்; "ஆ, என் கண்ணே, என்னைத் தேடிக்கொண்டு வந்துவிட்டாயா ? உன் தந்தை சௌக்கியமா ?"

சுந்தரி தன் தந்தை இறந்து விட்டதைக் கூறினுள். மஹேந்திரனும் துக்கித்தான்.

"உங்கள் நகைகள் அகப்பட்டுவிட்டன !" என்று சுந்தரி கூறினுள்.

"அகப்பட்டுவிட்டனவா ? யார் எடுத்து வைத்திருந்தது ? எப்போது அகப்பட்டன ?"

"சொன்னுல் எடுத்தவரை மன்னிப்பீர்களா ?"

"சுந்தரி, அரசன் கொடுத்த பதக்கத்தைத் திருடினது சாதாரணக் குற்றமல்ல. இருந்தாலும் உனக்

காக மன்னித்துவிடுகிறேன். யார் செய்த வேலை இது?"

அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் சுந்தரியின் மார்பில் ஓர் ஈட்டிபோல் பாய்ந்தது. என்ன பதில் சொல்வது? தன் தந்தையைக் காட்டிக் கொடுப்பதா? சாகும் தறுவாயில் அவர் கூறிய வார்த்தைகள் நினைவிற்கு வந்தன. குற்றமற்ற யார் மேலாவது பழி போடலாமா? சே, பாவம்! மகா பாவம்! கடைசியில் விம்மி விம்மி அழுதுகொண்டு, "நான் தான் திருடினவள். என்னை மன்னிக்க வேண்டாம். தண்டியுங்கள்" என்ருள்.

மஹேந்திரன் திடுக்கிட்டு எழுந்து நின்ருன். பிறகு தன் காலடியில் உட்கார்ந்து அழும் பெண் மணியைத் தூக்கி நிறுத்தினுன்.

"சுந்தரி, என் கண்ணே! ஏன் வருந்துகிருய்? நான்தான் அப்போதே உன்னை மன்னித்துவிட்டேனே! என் உயிரையே காப்பாற்றின நீ, என் நகைகளை எடுத்துக் கொண்டதற்காகக் கோபிப் பேனு? வருந்தாதே; இதென்ன அசட்டுத்தனம்?" என்று தேற்றினுன்.

அப்போது, "எஜமான்!" என்று வணக்கத் துடன் கூப்பிட்டுக்கொண்டே அரண்மனைச் சேவகன் உள்ளே வந்தான்.

"என்ன விசேஷம்?" என்ருன் மஹேந்திரன்.

"அரசரிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறது. லக்ஷத்தீவுகளைப் பிடிப்பதற்காகப் படை திரட்ட வேண்டுமாம். தங்களைக் கையோடு அழைத்து வர வேண்டுமென்று உத்தரவு" என்று கூறிவிட்டுச் சேவகன் வெளியே போனுன். அவன் வெளியே போனவுடன் கதவைத் திறந்துகொண்டு அழகுள்ள ஒரு யௌவன மங்கை உள்ளே வந்தாள். அவளைக்

கண்டதும் மஹேந்திரன், "கமலினி, நான் லக்ஷத்தீவு களுக்குப் போகவேண்டும். இதோ உனக்கு ஒரு சகோதரி வந்திருக்கிறாள். நான் வரும் வரையில் அவளை நீதான் சரியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். எங்கே, அவளுக்கு ஓர் அறை தயார் செய் பார்ப்போம்" என்றான். கமலினி சுந்தரியைப் பார்த்துப் புன்னகை செய்துவிட்டு வெளியே போனாள்.

"நான் போய் வருகிறேன். உத்தரவு கொடு" என்று மஹேந்திரன் சுந்தரியைக் கேட்டான்.

"போய் வெற்றியுடன் திரும்பி வாருங்கள்" என்றாள் சுந்தரி.

மஹேந்திரன் உடைவாளை எடுத்து இடுப்பில் செருகிக்கொண்டு அரண்மனைக்குப் புறப்பட்டான்.

6

சுந்தரி தனியாக உட்கார்ந்துகொண் டிருக்கை யில் ஒரு தோழி உள்ளே ஏதோ வேலையாக வந்தாள். சுந்தரி அவளைக் கூப்பிட்டாள்.

"இங்கே கமலினி என்று ஓர் அம்மாள் இருக் கிறாளே, அவள் யார்?"

"அவர்கள் தாம் எஜமானியம்மாள்!" என்று கூறி விட்டுத் தோழி போய்விட்டாள். சுந்தரி இடிவிழுந் தவள் போலானாள்.

"அவர் எஜமானர்! அவள் எஜமானியம்மாள்! ஓ, ஈசா! இதென்ன உலகம்! கல்யாணமானவர் இப்படி என்னை வஞ்சித்தாரே! இதுவும் உன் சம் மதமோ!" என்று அவள் மனம் புழுவாகத் துடித்தது.

கமலினி மறுபடியும் சுந்தரி இருந்த இடத்திற்கு வந்தபோது அங்கே சுந்தரி காணப்படவில்லை.

தோழிகளை விசாரித்தாள். ஒருவராலும் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவர்களுக்குத் தெரிந்தால் தானே ?

நான்கு மாசங்கள் ஆகிவிட்டன. ராஜராஜ சோழன் வெற்றியுடன் லக்ஷத் தீவுகளிலிருந்து திரும்பிவந்தான். அவனுடன் மஹேந்திரனும் வந்து சேர்ந்தான்.

மஹேந்திரன் வீட்டுக்கு வந்தவுடன் கமலினி வருத்தம் நிறைந்த முகத்துடன் அவனை வரவேற்றாள். மஹேந்திரன் முதல் முதலாகக் கேட்ட கேள்வி சுந்தரியைப் பற்றியதே.

"சுந்தரி எங்கே?"

"ஐயோ, அண்ணா! அதை என்னவென்று சொல்லுவேன்! நீ போனவுடன் மறுபடியும் வந்து பார்த்தேன். அவளைக் காணவில்லை. திரும்பி வரவே இல்லை" என்றாள் கமலினி.

"நான் இல்லாத இடத்தில் தனக்கு மட்டும் என்ன வேலை என்று எங்கேயாவது போயிருப்பாள். நான் வந்து விட்டேனென்று தெரிந்தால் உடனே வந்துவிடுவாள். "ஆ, சுந்தரி! வருவாயல்லவா?" என்று மஹேந்திரன் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு கூறினான். ஆனால் அவன் மனசில் மட்டும் நம்பிக்கை இல்லை.

"ஆம்; மதனி திரும்பி வருவாள். இன்றைக்கு வராவிட்டால் என்றைக்காவது வருவாள்" என்றாள் கமலினி.

அவள் மனசில் துக்கம் நிறைந்திருந்தது. கண்களிலிருந்து முத்துப்போல் இரண்டு நீர்த்துளிகள் சிந்தின.

மனக்கோட்டை

1

ஸ்ரீ பராங்குசம் பிள்ளையின் மனம் அன்று என்ன காரணத்தினாலோ ஒரு நிலையில் இராமல் தத்தளித்துக்கொண் டிருந்தது.

அன்று மாலை இருட்டுகிற சமயத்தில், ஆபீஸி லிருந்து வீட்டை நோக்கி நடந்துகொண் டிருந்த பிள்ளையவர்கள், "சீ! இதென்ன உலகம்? மனசிலே துளிச் சந்தோஷம் உண்டா இந்த ஜன்மத்துக்கு?" என்று முணுமுணுத்துக் கொண்டே ஸாரட்டி பஜாரில் ஒரு மருந்து ஷாப்புக்குள் நுழைந்தார். கடை யில் ஒரே கூட்டம். வெகு நேரம் 'கௌண்டரு'க்கு எதிரில் அவர் நின்றிருந்த பின்பு ஒரு பையன் வந்து, "என்ன வேண்டும்?" என்று கூட அவரைக் கேளாமல் நரை மயிர் கறுக்கும் தைலப் புட்டிகள் இரண்டைக் கொண்டுவந்து அவர் முன்பு வைத்தான்.

பிள்ளை முதலில் திடுக்கிட்டுப் போனார். பின்பு, தாம் ஏற்கனவே ஒரு தடவை அங்கு மருந்து வாங்கிய ஞாபகம் வந்ததும் சமாளித்துக் கொண்டு இரண்டு புட்டிகளையும் திருப்பித் திருப்பிப் பார்த்து விட்டு, "சின்ன சைஸ் புட்டி என்ன விலை?" என்று கேட்டார். ஆனால் அதற்குள் அந்தப் பையன் வேறு யாரையோ கவனிக்கப் போய்விட்டதால் பதில் சொல்ல ஒருவரும் இல்லை. பத்து நிமிஷம் நின்று பார்த்தார் பிள்ளை. பேசாமல் புட்டியைப் பைக்குள்

போட்டுக்கொண்டு போய்விடலாமா என்று தோன்றிற்று. அடுத்தாற்போல், "இன்றைக் கெல்லாம் இருந்தால் மூன்று ரூபாய் இருக்கும். இதற்காகவா இந்தக் கெட்ட எண்ணம்?" என்றும் தோன்றின படியால், சின்னப் புட்டியை வைத்துவிட்டுப் பெரியதை எடுத்துக் கோட்டுப் பைக்குள் போட்டுக் கொண்டு மறுபடியும், "சீச்சீ, என்ன உலகம்!" என்று முணுமுணுத்துக்கொண்டே கடையை விட்டு வெளியே வந்தார்.

அப்போது சூரியன் அஸ்தமிக்கும் சமயம்; ட்ராம் வண்டியின் கணகண என்ற ஓசையும், ட்ராலி பஸ்களின் சப்தமும், காலில் அணிந்திருந்த பன்னுக் கட்டைகளைத் தரையில் தேய்த்துக் கொண்டே பர்மாக்காரர்கள் பேசிக்கொண்டு போகும் இரைச்சலும் சேர்ந்து காதைத் துளைத்தன.

சிறிது நேரம் இந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த பிள்ளையவர்கள், பிறகு மெதுவாய் நடந்து ஒரு டீக்கடைக்குள் நுழைந்து உட்கார்ந்தார். மேஜைமேல் தம் எதிரில் வைக்கப்பட்ட பிஸ்கோத்து களைத் தின்னத் தொடங்கியபோது அவர் மனம் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தது.

2

பிள்ளையவர்களுக்கு இப்போது வயசு கிட்டத் தட்ட நாற்பத்தைந்து ஆகிறது. ரங்கூனில் ரெயில்வே ஆபீஸில் முந்நூறு ரூபாய் சம்பளத்தில் அவருக்கு வேலை. சொந்தப் பங்களா ஒன்று வாங்கி யிருந்த துடன் ரொக்கத்திலும் இருபதாயிரம் வரையில் சேர்த்துவிட்டார். தேகமும் நோய் நொடி இல்லாமல் திடமாய்த்தான் இருந்தது. குழந்தைகள் இல்லாதது, அப்படிப் பெரிய குறையாக அவருக்குப் படவில்லை. இப்படி வாழ்க்கையில் யாதொரு

குறையும் இல்லாதவருக்கு மனசில் சிறிது காலமாகத் தவிர்க்க முடியாத ஓர் ஏக்கம் நிறைந்து வாட்டிக் கொண் டிருந்தது.

"எல்லாம் அந்த மனுஷனால் வந்ததுதான்!" என்று பிள்ளை தமக்குள் சொல்லிக்கொண்டார். "அந்த மனுஷன்" என்று அவர் குறிப்பிட்ட செல்வ ரத்தினம், அவர் நணபர்களில் ஒருவன்; எப்படி அவன் நட்பு தமக்கு ஏற்பட்டது என்பது அவருக்கு இப்போது ஞாபகம் இல்லை. 'ஆட்டை எடுத்து மாட்டில் போடுவது, மாட்டை எடுத்து ஆட்டில் போடுவது' என்று சொல்வார்களே, அந்த மாதிரி அந்தச் செல்வரத்தினம் பிள்ளையும் எப்படியோ தகல் பாஜித்தனம் பண்ணிக்கொண்டு காலக்ஷேபம் செய்து வந்தான்.

நான்கு மாசங்களுக்கு முன் ஒரு தினம் இப்படித் தான் பராங்குசம் பிள்ளை ஆபீஸிலிருந்து வீட்டை நோக்கிப் போய்க்கொண் டிருந்தபோது செல்வரத் தினம் எதிரே வந்தான். தன் வீட்டுக்கு வந்து போகும்படி அவன் அவரை வற்புறுத்தினதால் அவனுடன் சென்றார். வீட்டில் நுழைந்து மாடிப் படிகளில் ஏறிக்கொண் டிருக்கையில் கீழே இருந்த ஹால் பக்கம் தற்செயலாக அவர் பார்வை சென்ற போது பிள்ளைக்குத் தூக்கிவாரிப் போட்டது. அங்கே ஒரு ஸோபாவில் வெகு சொகுசாய்ச் சாய்ந்து கொண்டிருந்த பர்மியப் பெண் ஒருத்தி அவரைப் பார்த்து நீண்ட நாட்கள் பழக்கமானவளைப்போல் புன்னகை செய்ததுதான் அதற்குக் காரணம்.

பிள்ளைக்கு அன்று வேறு எதிலும் கவனம் செல்லவில்லை. அவள் யார் என்று செல்வரத்தி னத்தைக் கேட்டதற்கு அவன், தனக்குத் தெரியா தென்றும், அவள் அங்கே குடி வந்து பத்து நாட் களே ஆகின்றனவென்றும் தெரிவித்தான். அந்தப்

பர்மாக்காரி உண்மையில் நம்மைப் பார்த்துத்தான் புன்னகை செய்தாளா அல்லது நாமே நினைத்துக் கொண்டோமா என்ற கேள்வியைத் திரும்பத் திரும்ப அவர் மனம் கேட்டுக்கொண்டே இருந்தது. ஆனால் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அவர் மறுபடியும் கீழே இறங்கி வந்தபோது சந்தேகம் எல்லாம் பறந்தது. அவர் வரவுக்காகக் காத்துக்கொண் டிருப்பதுபோல் அங்கேயே உட்கார்ந்துகொண் டிருந்த அந்தப் பெண்ணின் முகத்தில் மறுபடியும் அதே புன்னகை தோற்றியது.

வீட்டை நோக்கி அன்று வெகு வேகமாய் நடக்கையில் பராங்குசம் பிள்ளையின் இருதயம் திக்குத் திக்கென்று அடித்துக்கொண் டிருந்தது.

மறுநாள் முதல் பராங்குசம் பிள்ளை தினந் தோறும் மாலையில் ஆபீஸ் விட்டதும் செல்வரத்தினத்தின் வீட்டுக்குப் போகத் தொடங்கினார்.

இப்படி மூன்று மாசங்கள் சென்றன. ஒரு நாள், பிள்ளைக்கு எங்கிருந்துதான் அவ்வளவு தைரியம் வந்ததோ தெரியவில்லை. அந்தப் பர்மியப் பெண்ணைப் பார்த்து, "என்னைக் கல்யாணம் செய்துகொள்கிறாயா?" என்று கேட்டே விட்டார்.

இதைக் கேட்டதும் அந்தப் பெண்ணின் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. ஆனால் உடனே, "உங்களுக்கு மனைவி இல்லையா?" என்று பதிலுக்குக் கேட்டாள் அவள்.

"இருக்கிறாள்—" என்று பிள்ளை இழுத்தாற் போல் சொன்னார்.

"பின்னே?"

"இருந்தால் என்ன?" என்றார் அசட்டுச் சிரிப்போடு.

பர்மாக்காரி கோபத்தினுல் முகம் சிவக்க, வேறு பக்கம் திரும்பிக்கொண்டாள்.

3

பராங்குசம் பிள்ளை மறுபடியும் பெருமூச்சு விட்டார். நான்கு மாசங்களாக அவர் மனசிலே புழுங்கிக்கொண் டிருந்த ஏக்கம் இப்படி வெளிப் பட்டது. இதற்குள் எதிரில் இருந்த டீயும் ஆறிப் போய்விட்டது. அதைக் குடிக்கலாமா வேண்டாமா என்று யோசித்துக்கொண் டிருக்கையில், "என்ன பராங்குசம்? ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டுக்கொண்டே செல்வரத்தினம் அவர் எதிரில் வந்து உட்கார்ந்தான்.

"விசேஷம் இருக்கிறது; அதனுல்தான் உன் வீட்டுக்கு நான் வராமல் உன்னை இங்கே வரச் சொன் னேன். ஏய், இங்கே ஒரு டீ கொண்டாப்பா" என்ருர் பிள்ளை.

செல்வரத்தினம் சற்று நேரம் அவர் முகத்தைக் கவனித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். பிறகு சிரித்துக்கொண்டே, "என்ன விஷயம்? மிம்மியைப் பற்றித்தானே?" என்று கேட்டான்.

பிள்ளைக்குச் சட்டென்று உடல் சிலிர்த்தது. சமாளித்துக்கொண்டு, "ஆமாம் அப்பா; அந்தப் பெண்ணிடம் ஆசை வைத்துவிட்டேன். ஆனுல் எனக்கு ஏற்கனவே ஒருத்தி இருக்கிருளே, என்ன செய்யலாம்?" என்ருர்.

"ஆமாம்; மிம்மியை மறக்க வேண்டியதுதான். வேறு வழி இல்லை" என்ருன் செல்வரத்தினம்.

வெளியே நன்ருய் இருட்டிவிட்டது. தூரத்தில் 'பையா' கோவிலின் (புத்ததேவன் கோயில்) கோபுரத் தின்மேல் விளக்குகள் தெரிந்தன.

பக்கத்திலிருந்த 'காக்கா' கடையில் சுருட்டு வாங்கிப் பற்ற வைத்துக்கொண்டு இருவரும் மொகல் தெருவை நோக்கி நடந்தார்கள்.

திடீரென்று செல்வரத்தினம், "ஒரு யோசனை தோன்றுகிறது" என்று சொல்லிக்கொண்டு நின்றான்.

பிள்ளை, "என்ன ?" என்று கேட்டார் ஆவலுடன்.

"இப்போது தான் ஒரே யுத்த பீதியாய் இருக்கிறதே ! ரொம்பப் பேர் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் சென்னைக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள் அல்லவா ? உன் சம்சாரத்தையும் காப்ரா பண்ணி அனுப்பிவிடேன்" என்றான்.

"அனுப்பிவிட்டு ?"

"தெரியவில்லையா ? அப்புறம் இங்கே உன் ராஜ்யந்தானே ? யுத்தம் எப்படி முடிகிறதோ, எப்போது முடிகிறதோ, யார் கண்டார்கள் ?"

4

பத்து நாட்களுக்குப் பிறகு, ரங்கூன் துறைமுகத்திலிருந்து 'டலம்பா' என்ற கப்பல், 'ஹூம்' என்று யானை பிளிறுவதுபோல் ஒரு பயங்கரச் சப்தம் போட்டுவிட்டுக் கிளம்பியபோது, கப்பலின் மேல் தளத்தில் மற்றப் பிரயாணிகளுடன் இரும்புக் கிராதியைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்த சிவகாமி அம்மாளின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. கரையில், கூட்டத்தில் ஒருவராக இருந்த பராங்குசம் பிள்ளை கைக் குட்டையை உயரத் தூக்கிப் பலமாக ஆட்டினார். பாவம், அப்போது அவர் மனசில் சந்தோஷமும் துக்கமும் கலந்து போராடிக்கொண்டிருந்தன. என்னவென்று புரியாத ஒரு பாரம் அவர் இருதயத்தின் மேலிருந்து அமுக்கியது.

பிள்ளை, மூக்கைச் சிந்திவிட்டு நேராகச் செல்வ ரத்தினத்தின் வீட்டுக்குப் போனார். அங்கே மிம்மியைப் பார்த்துத் தாம் மனைவியை ஊருக்கு அனுப்பி விட்ட செய்தியைத் தெரிவித்து, "இனிமேல் நீ இங்கே இருக்கவேண்டாம். என் பங்களாவுக்கு வந்துவிடு. நான் விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்கிறேன்" என்று கூறி அவளையும் தம்முடன் அழைத்துச் சென்றார்.

இரண்டு தினங்கள் சென்றன.

அலை ஓய்ந்த நடுக்கடலில் 'டலம்பா' அன்னப் பறவைபோல் மெதுவாக அசைந்துகொண்டே பாரத பூமியை நோக்கிச் சென்றுகொண் டிருந்தது.

அதே நேரத்தில் ரங்கூன் நகரத்தில் விமானத் தாக்குதலை அறிவிக்கும் சங்கு வயிற்றைக் கலக்கும் கர்ண கடோரமான சப்தத்தோடு அலறத் தொடங் கியது. வீதிகளில் அங்கங்கே வண்டிகள் அப்படி அப் படியே நின்றன. தெருவில் இருந்தவர்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு மறைவிடத்தை நோக்கிப் பதுங்கிக்கொள்ள ஓடினார்கள். மரணத்துக்குப் பயப் படாமல், தமாஷ் பார்ப்பதற்காக ஆகாயத்தையே அண்ணாந்து பார்த்துக்கொண்டு தெருவிலேயே சில மேதாவிகள் நின்றார்கள்.

ஆபீஸில் வேலை செய்துகொண் டிருந்த பராங் குசம் பிள்ளை அலறி அடித்துக்கொண்டு எழுந்து போய் மேஜை அடியில் பதுங்கிக் கொண்டார். இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் வானத்தில் 'உர்ர்' என்று விமானங்களின் ஓசை கேட்டது. அடுத்தாற் போல், பூமியைக் கிடுகிடுக்கச் செய்து, காதைச் செவிடாக்கும் வெடிச் சத்தங்கள் கேட்டன. பிள்ளை, கண்களையும் காதையும் கெட்டியாக மூடிக் கொண்டு, 'இன்று செத்தோம்' என்று நினைத்துப்

பகவானைப் பிரார்த்தித்தார். சிவகாமியின் ஞாபகம் வந்தது. அவளைக் கப்பலேற்றி அனுப்பிவிட்டதைக் குறித்து அவர் மனசில் இப்போது அடக்க முடியாத ஆனந்தம் ஏற்பட்டது; 'அவளாவது பிழைத்துக் கொண்டாளே' என்று தோன்றிற்று. உடனே, 'இங்கே குண்டு போட்டான் என்று கேள்விப்பட்டால் அவள் நமக்காக எவ்வளவு கவலைப் படுவாள்?' என்றும் நினைத்தார். அடுத்தாற்போல், தம் வீட்டில் மிம்மி என்ன செய்துகொண் டிருக் கிறளோ என்ற பயம் உண்டாயிற்று.

5

அன்று மாலையில் தம் வீட்டை நோக்கிச் சென்ற பராங்குசம் பிள்ளையின் உடலில் பாதிப் பிராணன்கூட இல்லை.

இடிந்து தரை மட்டமாய்ப் போன கட்டிடங் களையும், கால் போனதும், கை போனதுமாய் உருத் தெரியாமல் அங்கங்கே தெருவில் கிடந்த பிணங் களையும் காணச் சகியாமல் பைத்தியம் பிடித்தவர் போல் தம் பங்களாவை நோக்கி ஓடியவர் தம் எதிரில் தோன்றிய காட்சியைக் கண்டதும் "மிம்மி!" என்று கத்திக்கொண்டு அப்படியே மூர்ச்சித்து விழுந்துவிட்டார்: அவர் வீடும், பக்கத்தில் இன்னும் சில வீடுகளும் இடிந்தும் எரிந்தும் போயிருந்தன. இன்னும் சில இடங்களில் புகைந்து கொண்டே இருந்தது.

* * * *

அடுத்த வாரம் ரங்கூனிலிருந்து புறப்பட்ட கப்பல் பிரயாணிகளில் ஸ்ரீ பராங்குசம் பிள்ளையும் ஒருவர். "மனைவியை முன்பே அனுப்பிவிட்டேன். நான் மட்டும் எதற்காக இங்கே இருந்து சாக

வேண்டும்?" என்று நண்பர்களிடம் கூறி விட்டு அவர் விடைபெற்றுக்கொண்டார்.

தக தக என்று பொன்மயமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த 'பையா' கோவிலின் சிகரம் கொஞ்சம் கொஞ்சமாய்க் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து வந்தது.

மாடி வீடு

1

எங்கள் வீட்டுக்கு எதிரே ஒரு மாடி வீடு: இரண்டு அடுக்கு மெத்தையுடன் பார்ப்பதற்குக் கம்பீரமாக இருக்கும். நாங்கள், எங்கள் வீட்டுக்கு வந்தபோது அந்த மாடிவீடு காலியாய்த்தான் இருந்தது. நாங்கள் முதலில் வீடு பார்க்க வந்த போது வீட்டின் சொந்தக்காரர், "எதிரே இருக்கிறதே மாடி வீடு, அதுவும் என்னுடையதுதான்; பதினைந்து ரூபாய் வாடகை. இந்த வீட்டில் காற்றே வராது. அங்கே மாடிமேல் படுத்துக் கொண்டால் ஜிலு ஜிலு என்று பிய்த்துக்கொண்டு போகும். வேண்டுமானால் அதையும் பாருங்கள்" என்றார். 'அவ்வளவு பெரிய வீட்டுக்குப் பதினைந்து ரூபாய் வாடகைதானா!' என்ற ஆச்சரியத்துடன், "ஆகட்டும், பார்ப்போம்" என்று அவரிடம் சொன்னேன். ஆனால், பக்கத்து வீட்டிலிருந்த கிழவியொருத்தி என்னிடம் ரகசியமாய், "சாமி! பத்து ரூபாய்க்கு விட்டாலும் அந்த வீட்டுக்கு வராதே அதிலே இருந்தவங்க யாரும் உருப்படலே. அதான் காலியாய்க் கிடக்கு" என்றாள்.

இது மூன்று வருஷங்களுக்கு முந்திய செய்தி; இந்த மூன்று வருஷ காலமாய் - நடுவில் இரண்டரை மாசம் யாரோ குஜராத்திகள் இருந்த காலம் நீங்கலாக - அந்த வீடு காலியாய்த்தான் கிடந்தது. எனவே, அன்று ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்த

போது, அந்த மாடி வீட்டில் விளக்கு வெளிச்சம் தெரிவதைப் பார்த்து அதிசயித்தேன். என் அறையில் ஜன்னலருகில் உட்கார்ந்தால், எதிர் வீட்டு மாடி ஜன்னல் கண்ணெதிரே உயரத்தில் தெரியும். அன்று அந்த ஜன்னல் வழியாகப் 'பெட்ரோமாக்ஸ்' விளக்கு வெளிச்சம் பளிச்சென்று தெரிந்தது. சாப்பிடும் பொழுது, "எதிர் வீட்டில் யாராவது வந்திருக்கிறார்களா என்ன? விளக்கேற்றி இருக்கிறதே?" என்று ராஜத்தைக் கேட்டேன்.

"ஆமாம், யாரோ வந்திருக்கிறார்களாம். பால்காரி சொன்னாள். என்னவோ பாவம், இந்தப் பாழடைந்த வீட்டுக்கா வரணும்?" என்றாள்.

"ஆமாம்; வீடும் வாசலும் என்ன செய்யும்? என்னவோ இதெல்லாம் ஒரு நம்பிக்கை. நம் தலையில் எழுதி யிருப்பதை வீடு ஒன்றும் அழித்து எழுதப் போகிறதில்லை" என்றேன்.

2

யார் அந்த வீட்டுக்கு வந்திருப்பது என்று அறிந்துகொள்ள என் மனசில் குறுகுறு என்று ஓர் ஆவல் உறுத்திக்கொண் டிருந்தது. ஆனால் அந்த வீட்டுக்காரர்கள் ஒருவரும் கண்ணிலே படவில்லை. ஒரு நாள் மாலை ஜன்னலருகில் உட்கார்ந்து கொண்டு என்னவோ யோசனையாய் எதிர்வீட்டு ஜன்னலைப் பார்த்துக்கொண் டிருக்கையில், திடீரென்று ஒரு புடைவைத் தலைப்பு அந்த ஜன்னல் வழியாய்த் தெரிந்தது. அடுத்த விநாடி ஒரு பெண்ணின் தலையும் முதுகும் தெரிந்தன. குட்டையான கை வைத்துத் தைத்த வெள்ளை ரவிக்கை; ஆகாச வர்ணப் புடைவை; தலையை நன்றாகப் பின்னிப் பாம்புபோல் வட்டமாகச் சுருட்டி முடிந்துகொண்டு அதன் மேல் கதம்ப மாலையை வளைவாக வைத்துக்கொண் டிருந்தாள்.

இதெல்லாம் ஸினிமா வந்த பிறகு ஏற்பட்ட 'பாஷன்'கள். இருந்தாலும், இளம் பெண்களுக்கு ஒரு புது அழகை அவை கொடுக்கத்தான் செய்கின்றன. ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கும்படி நம்மைத் தூண்டுகின்றன என்பதிலும் சந்தேகமில்லை.

கண் கொட்டாமல் அப்படியே இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண் டிருந்தேன் போலிருக்கிறது. "என்ன அங்கே அவ்வளவு சுவாரஸ்யமான விஷயம்?" என்று கேட்டுக் கொண்டே பின்னால் வந்து நின்ற ராஜம், தானும் நிமிர்ந்து பார்த்தாள். அப்பொழுதுதான் அந்தப் பெண்ணின் உருவம் மறைந்தது.

ராஜம் குறும்புச் சிரிப்புடன் என் பக்கம் திரும்பி, "ஓஹோ! ரொம்ப ஸ்வாரஸ்யமான விஷயந்தான்; என்ன என்று பார்த்தேன். அப்படியே கண்ணினாலேயே விழுங்கி விடுவீர்கள்போல் இருந்தது!' என்றாள்.

"பார்த்தால் என்ன தப்பு?" என்றேன்.

"தப்பொன்றும் இல்லை; - ஆனாலும், இப்படித் தானா பொம்மனாட்டிகளை முறைத்துப் பார்ப்பது? யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?"

"யாரும் பார்க்கவில்லை - உன்னைத் தவிர. உனக்குத்தான் ஏன் இவ்வளவு பொறாமை? கண்ணுக்கு அழகாயிருந்தால் எதுவானாலும் பார்க்கத்தான் தோன்றுகிறது. மனித சுபாவந்தானே?" என்றேன்.

ராஜம், "ஊம்,—" என்று இழுத்துவிட்டு மறுபடியும் அந்த ஜன்னலை நோக்கினாள். ஆனால் இப்போது அங்கே ஒருவரும் இல்லை; 'கண்ணுக்கு அழகாய் இருக்கிறதாமே! எது கண்ணுக்கு அழகாய் இருந்

தாலும் பார்ப்பாராம் இவர்!' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள்.

அன்று மாலையில் ஆபீஸிலிருந்து வந்தபொழுது, என் அறையின் ஜன்னலுக்கு ஒரு திரை போடப்பட்டிருந்தது; மனசுக்குள் சிரித்துக்கொண்டு அதைக் கவனிக்காததுபோல் இருக்கையில், "இந்த ஸ்கிரீனைப் பாருங்களேன். கண்ணுக்கு அழகாய் இல்லையா இது?" என்றாள் ராஜம்.

"அழகாய்த்தான் இருக்கிறது. ஆனால் இதையே எத்தனை நேரம் பார்த்துக்கொண் டிருக்க முடியும்? கொஞ்சநேரம் பார்த்துக்கொண் டிருந்தால் அலுத்துப் போய்விடும். அப்போது இதை இப்படி ஒதுக்கி விட்டு வேறு எதையாவது பார்க்கலாம்" என்று சொல்லிக்கொண்டே நிமிர்ந்து பார்த்தேன்.

"உளறுதேங்கோ; யார் காதிலாவது விழப் போகிறது!" என்று ராஜம் என் கையைப் பிடித்து என்னை ஜன்னலெதிரிலிருந்து தூர இழுத்தாள். அவள் குரலும் பார்வையும் ஒரு மாதிரியாக இருந்த தால், "ஓஹோ! இனிமேல் விளையாடக் கூடாது ஆபத்துத்தான்" என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் ஏற்கனவே நான் விளையாட்டாகப் பேசி விட்ட பேச்சு அவள் மனசில் எவ்வளவு விபரீதமான கிளர்ச்சிகளை உண்டு பண்ணப் போகிறது என்பதை நான் அப்போது உணரவில்லை.

3

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு காலையில் பத்திரிகை படித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில், எதிர்வீட்டு மாடி ஜன்னற் கதவைத் திறக்கும் சப்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தபோது, அந்தப் பெண் அங்கே நின்றுகொண் டிருந்தாள். அவளை நான் பார்த்

ததை அவள் கண்டுகொள்ளக் கூடாது என்று மறுபடி யும் பத்திரிகையில் கவனத்தைச் செலுத்தினேன். 'அவள் அந்த ஜன்னலை விட்டுப் போகிற வரையில் நாம் அந்தப் பக்கம் பார்க்கக்கூடாது. நாம் பார்ப்பதை அவள் அறிந்தால் ஏதாவது நினைத்துக் கொள்வாள். ஆனாலும், இப்படி எதிரும் புதிருமாக ஜன்னல் வைத்து வீடு கட்டக்கூடாது. மடையன்கள்!' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டேன். அப் போது யாரோ, 'அவள் இன்னும் அங்கேயே நின்று கொண்டுதான் இருக்கிறாள். உன்னையேதான் பார்த்துக்கொண் டிருக்கிறாள்' என்று மனசில் சொல்லுவதுபோல் இருந்தது. எந்தக் காரியம் செய்யக் கூடாது என்று தீர்மானிக்கிறோமோ, அதையே செய்யும்படி இந்தப் பொல்லாத மனம் தூண்டுகிறது. ஆகையால் மறுபடியும் திரும்பிப் பார்த்தேன். நான் நினைத்தபடியே அவள் என்னையேதான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'என்ன இது? நாம் அவளைப் பார்க்கச் சங்கோ சப்படுகிறோம்; அவளோ கொஞ்சமும் பயமில்லாமல் நம்மையே பார்க்கிறாள். ஒரு பெண்ணுக்கு நாம் பயந்துவிடுவதா? நாமுந்தான் பார்ப்போமே; அவள் தான் வேண்டுமென்றால், அந்த இடத்தை விட்டுப் போகட்டுமே!' என்று மனம் தூண்டியது.

இப்படி ஒருவரை யொருவர் பார்த்துக்கொண் டிருக்கையில் ராஜம் வந்துவிட்டாள். "சிலு சிலு என்று இருக்கிறது. இன்றைக்குப் பச்சைத் தண்ணீரில் குளிக்க வேண்டாம். வெந்நீர் போடு கிறேன்" என்று சொல்லிக்கொண்டு வந்தவள், திடீரென்று நின்று ஒரு கணம் என்னை முறைத்துப் பார்த்துவிட்டு வெளியே போய்விட்டாள். அப்புறம் அவள் அன்று என்னுடன் சரியாக ஒரு வார்த்தையும் பேசவில்லை. 'ஏது, இந்தப் பாழடைந்த வீட்டுக்கு

இவர்கள் குடி வந்ததில் கஷ்டகாலம் நம்மைப் பிடித்துக்கொள்ளும்போல் இருக்கிறதே!' என்று தோன்றிற்று. அப்படி வருகிற கஷ்டகாலம் தாம்பத்தியத் தகராறு ரூபமாக வந்தால், ஸினிமாப் பேச்சை எடுத்ததும் ஓடிப் போவதை முன்பு பல தடவை பார்த்திருந்தேன். ஆகையால், ஆபீஸுக்குப் புறப்படுகையில், "இன்று சீக்கிரம் வந்து விடுகிறேன்; ஸினிமாவுக்குப் போகலாம்; 'ட்ரெஸ்' பண்ணிக் கொண்டு தயாராய் இரு" என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டுப் போனேன்.

சொன்னபடி அன்று செய்திருந்தால் அப்புறம் ஒரு ரகளேயும் நடந்திராதோ என்னவோ? ஆனல் அன்று ஆபீஸிலிருந்து வீட்டிற்கு வரும்போதே மணி ஏழாகிவிட்டது. ராஜமோ ஸினிமாவைப் பற்றி ஒரு வார்த்தையும் பேசாமல் மௌனம் சாதித்தாள். சண்டை போட்டாலும் தேவலே; பதிலுக்கு ஏதாவது சொல்லிச் சமாதானப்படுத்தலாம். அல்லது, ஆறு வருஷங்களுக்கு முன் அவள் அப்பா எனக்கு வெள்ளித் தட்டு செய்து தருகிறேன் என்று சொல்லி ஏமாற்றி விட்டதையாவது ஞாபக மூட்டலாம். இந்த மௌனமோ சகிக்க முடியவில்லே. 'இயற்கைக்கு மாருன இந்த அமைதி நீடித்திருக்கக் கூடியதல்ல. சீக்கிரம் புயல் வீசப் போகிறது' என்று நினைத்துக் கொண்டேன்.

மறுநாள் ஆபீஸிலிருந்து வந்ததுமே வீட்டில் புயலின் அறிகுறிகள் காணப்பட்டன. ராஜத்தைப் பார்த்தால் ஜுரத்தில் அடிபட்டவள் போலிருந்தாள். ஒரு பழைய புடைவையைக் கட்டிக்கொண் டிருந்தாள். முகம் அலம்பிக் கொள்ளவில்லே; தலே வாரிப் பின்னிக் கொள்ளவில்லே.

"ராஜம்!" என்று கூப்பிட்டேன்.

"ஏன்" என்று உள்ளே யிருந்து பதில் வந்தது.

"இந்தா !"

ராஜம் வந்து எதிரில் நின்ருள். என் முகத்தை நேருக்கு நேர் பார்க்கப் பயப்படுகிறவள்போல் தோன்றிற்று. முதலில் காலண்டரைப் பார்த்தாள் ; அப்புறம் கடிகாரத்தை - அப்புறம் என்னை - மறுபடியும் காலண்டர் !

மெள்ள அவள் கையை எட்டிப் பிடித்தேன். "நேற்று ஸினிமாவுக்குப் போகலாமென்று சொன்னேனே இல்லையோ ? ஆபீஸில் ரொம்ப நாழிகையாகி விட்டது. இன்றைக்குப் போகலாமா ? எங்கே, 'ட்ரெஸ்' பண்ணிக்கொண்டு கிளம்பு, பார்ப்போம்" என்றேன்.

அரை நிமிஷம் தயக்கம். அப்புறம் மேஜைமேல் விரலினுல் கோடு கிழித்துக்கொண்டே, "நீங்கள் போங்கள். நான் வரவில்லை" என்ருள்.

"ஏன் ? உனக்கு என்ன உடம்பு ? ஒரு மாதிரி இருக்கிருயே ?" என்றேன்.

சிறிது நேரம் பதில் வரவில்லை. உதடுகள் துடித்தன.

"உடம்பு ஒன்றும் இல்லை."

"பின் ஏன் வரமாட்டேன் என்கிருய் ?"

நான் எதிர்பார்த்தபடி நேர்ந்துவிட்டது. ராஜம் விசித்துக்கொண்டே, "நான் பார்ப்பதற்கு அழகாய் இருக்கிறேஞ என்ன ?" என்று சொல்லிவிட்டு, சட்டென்று சமையல் கட்டுக்குப் போய்விட்டாள்.

எப்படி அவளைச் சமாதானப்படுத்துவது என்று எனக்குப் புரியவில்லை. எழுந்துபோய், "இதோ

பார் ராஜம்; என்ன இப்படி அசடாக இருக்கிறாய்?'' என்று கேட்டேன். கீழே உட்கார்ந்து அழுது கொண்டே, ''நான் ஒன்றும் அசடு இல்லை. நீங்கள் என்ன பண்ணிக்கொண் டிருக்கிறீர்கள் என்பது தெரிந்துதான் இருக்கிறது'' என்றாள்.

''சீ, பைத்தியமே!'' என்றேன்.

''அவள் கூடத்தான் சொன்னாள். அந்த வீட்டுக்கு மத்தியான்னம் போயிருந்தேன். 'அந்த ஜன்னலெதிரில் உட்கார்ந்துகொண்டு ஒருவர் சதா என்னையே பார்க்கிறாரே, அவர் யார்?' என்று கேட்டாள். எனக்கு அவமானமா யிருந்தது'' என்றாள் ராஜம்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஆபீஸில் அன்று நண்பரொருவர் சொன்ன செய்தியும் ஞாபகம் வந்தது.

''அந்த வீட்டுக்கு நீ போனாயா என்ன? ஐயையோ! அவள் குடித்தனக்காரி இல்லையாமே?'' என்றேன்.

ராஜம் ஒரு கணம் திகைத்தாள்; பிறகு, ''அது எனக்கு எப்படித் தெரியும்? நீங்கள் எல்லாம் விசாரித்து வைத்துக்கொண் டிருக்கிறீர்கள்'' என்றாள்.

''சீச்சீ! எனக்கும் இன்றுதான் தெரியும். ஆபீஸில் ஒருவர் சொன்னார்'' என்றேன்.

''ஆபீஸிலே கூட உங்களுக்கு அவளைப்பற்றித் தானே பேச்சு! எனக்குத் தெரியுமே! நீங்கள் சதா அவள் ஞாபகமாகவே...'' - ஒரு பெரிய தேம்பலில் மற்ற வார்த்தைகள் அமுங்கிப் போயின.

மேலே பேசுவதில் பிரயோஜனம் இல்லை என்று மறுபடியும் போய் உட்கார்ந்து கொண்டேன்.

மனமோ சமாதானம் அடையவில்லை. எப்போதுமே பெண்களிடம் இரக்கம் அதிகம் எனக்கு. அவர்கள் கண்ணீர் விட்டால் என் மனம் கேட்காது. யாராவது ஸ்திரீகளைக் கோபமாக ஒரு வார்த்தை சொன்னால், 'என்ன மிருகத்தனம்?' என்று நினைப்பேன். இப்போது ராஜமே இப்படி அழுகிறது என்றால் சொல்லவேண்டுமா?

4

அன்று குடை வைத்துக்கொண் டிருந்தேனே பிழைத்தேன். ஆபீஸிலிருந்து கிளம்புவதற்கு ஒரு மணிக்கு முன்னிருந்தே மழை இருட்டிக்கொண்டு வந்துவிட்டது. அதனுடன் ஒரே மின்னலும், இடியும். மழை மிகுதியாவதற்குள் வீடுபோய்ச் சேரலாம் என்று அவசரமாக நடந்தேன். ஏற்கனவே, இந்த இருட்டடிப்புக்காகப் பாதி விளக்குகளை அணைத்து விட்டார்களா? இந்தக் காற்றிலும் மழையிலும், மிஞ்சி யிருந்த வெளிச்சமும் மறைந்துவிட்டது. குடையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தட்டுத் தடுமாறி நடந்தேன். அன்றெல்லாம் என் மனம் சரியாக இல்லை. ராஜத்தை எப்படிச் சமாதானப் படுத்துவது என்ற கவலையாகவே இருந்தவனுக்கு இந்த மழை சிறிதும் உத்ஸாகம் உண்டுபண்ண வில்லை. கண் தெரியாமல், ஜலம் தேங்கியிருந்த இடங் களில் சொதக்கென்று காலை வைக்கும்போ தெல்லாம் எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

ஒரு வழியாய் வீடு வந்து சேர்ந்தேன். கதவு மூடப்பட்டு உள்ளே தாழ்ப்பாள் போட்டிருந்தது. குடையை மடக்கிவிட்டுக் கதவை இடித்தால், ஹோ என்ற மழை இரைச்சலில் நான் கதவைத் தட்டினது எனக்கே கேட்கவில்லை. ராஜம் வந்து கதவைத்

திறப்பாள் என்று நினைத்துக்கொண்டு வெளித் திண்ணைமேல் உட்கார்ந்து மாடி வீட்டைப் பார்த் தேன்.

அந்த வீட்டெதிரே ஒரு விளக்குக் கம்பம். மூடி போட்டிருந்த அந்த விளக்கின் வெளிச்சம் வீட்டின் எதிரே தரையில் பெரிய வட்டமாக விழுந்திருந்தது. காற்றில் அந்த மூடி ஆடும்போது அந்த வட்டமும் தரையில் ஆடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கையில் மாடி ஜன்னல் வழியாக மங்கலான விளக்கு வெளிச்சம் தெரிந்து சட்டென்று மறைந்தது. யாரோ ஜன்னல் கதவுகளை மூடினுர்கள். அடுத்த நிமிஷம், இன்னொரு கோடியில் இருந்த ஜன்னலில் வெளிச்சம் தெரிந்து உடனே கதவுகளும் மூடப் பட்டன. உட்கார்ந்து கொண்டிருந்தவன் திடீரென்று எழுந்து நின்றேன். மறுபடியும் கதவை இடிக்கவேண் டும் என்று தோன்றவில்லை. எதற்காக உள்ளே போக வேண்டும்? சிரித்த முகத்துடன் என்னை வரவேற்க உள்ளே யார் காத்துக்கொண்டு இருக்கிறுர்கள்? எண்ணெய் வழியும் முகத்துடன், அழுக்குப் புடைவை கட்டிக்கொண்டு ராஜம் கோபத்துடன் உட்கார்ந் திருக்கப் போகிறுள்......

அந்த மாடி வீட்டுப் பெண்ணின் உருவம், அன்று ஜன்னல் எதிரில் வந்து நின்ற கோலத்தில் என் மனக்கண் முன் தோன்றிற்று.

என்ன காரியம் செய்கிறேம் என்றே எனக்குப் புரியவில்லை. என்னவென்று விளங்காத ஒரு சக்தி அந்த மாடி வீட்டை நோக்கி என்னை இழுப்பது போன்றிருந்தது.

மடித்த குடையைப் பிரிக்காமலே அந்த மழை யில் விடு விடென்று எதிர் வீட்டை நோக்கி நடந் தேன். படிகளின் மேல் காலை வைத்து ஏறின

வேகத்தில், வீட்டுக்குள்ளிருந்து கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த ஓர் உருவத்தின் மேல் மோதிக்கொண்டேன். புகைந்துகொண் டிருந்த ஹரிக்கேன் விளக்குடன் வெளியே வந்த அந்த மனிதர், கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டே, "என்ன ஸ்வாமி, சௌக்கியமா?" என்றார்.

மாடி வீட்டின் சொந்தக்காரர்தான் அவர் என்று தெரிந்ததும் எனக்குத் திடுக்கிட்டது.

"என்ன ரெட்டியாரே, மறுபடியும் வீட்டைச் சாத்திப் பூட்டுகிறீர்?"

"ஆமாம் ஸ்வாமி, ஒரு குடித்தனம் வந்தது என்று வைத்தேன். அவர்கள் ஒரு மாச வாடகை யுடன் அட்வான்ஸும் கொடுத்துவிட்டு, திடீரென்று வீட்டைக் காலி பண்ணிக்கொண்டு போய்விட் டார்கள்! எதிர் வீட்டில் ஒரு தடியன் உட்கார்ந்து கொண்டு சதா முறைத்துப் பார்க்கிறான் என்று காரணம் சொன்னார்கள். என்னவோ என்று பார்த் தேனே ஐயா உம்மை! பலே பேர்வழியா யிருக் கிறீரே?" என்றார்.

அந்தக் காற்றிலும் மழையிலும் எனக்குக் குபீ ரென்று உடல் வியர்த்துவிட்டது. மறுபடியும் என் வீட்டுக்கு வந்து ஓங்கிக் கதவை இடித்தேன். "யார்? நீங்களா?" என்று கேட்டுக்கொண்டே, கையில் விளக்குடன் வந்து கதவைத் திறந்த ராஜம், என்னைப் பார்த்ததும், "ஐயையோ! என்ன இப்படித் தெப்ப மாய் நனைந்து விட்டீர்கள்! தலையைத் துடைத்துக் கொள்ளுங்கள். சாம்பிராணி கொண்டு வரட்டுமா? என் அதிருஷ்டத்தைப் பாருங்கள். இன்றைக்கு நீங்கள் சீக்கிரம் வந்தால் ஸினிமாவுக்குப் போகலாம் என்று நினைத்தேன்; மூன்று மணியே பிடித்து ட்ரெஸ் பண்ணிண்டேன். இப்படி மழை பிடித்துக்

கொண்டது—" என்று பேசிக்கொண்டே போனாள்.

"சாம்பிராணியும் வேண்டாம், ஒன்றும் வேண் டாம்! இந்தா!" என்று அவள் முகத்தைப் பிடித்து நிமிர்த்தினேன்.

ராஜம் என் பிடியிலிருந்து திமிறிக்கொண்டு, "எதிர் வீட்டிலே அவள் காலி பண்ணிக்கொண்டு போய்விட்டாள்!" என்றாள் குறும்புச் சிரிப்புடன்.

வெளியில் மழை பெய்தால் என்ன, புயல்தான் அடித்தால் என்ன? அன்று என் வீட்டில் அமைதி நிலவியது.

காதலும் ஊதலும்

1

இதோ வீராசாமியின் ஊதல் சத்தம் கேட்கிறது. கிருஷ்ணன் குழல் ஊதினால், பசு பக்ஷிகள் எல்லாம் தம்மை மறந்து அவன் குழல் ஓசையில் ஈடுபட்டிருக்குமாம். அப்போது அந்தக் கள்ளக் கிருஷ்ணனுங்கூடத் தன் வேணுகானத்திலேயே லயித்திருப்பானோ என்னவோ நாம் அறியோம். ஆனால், நம் வீராசாமி தன் ஊதலை எடுத்து ஊதும்போது அவன் அடையும் தற்பெருமை சொல்லி முடியாது. வீராசாமிக்கு எங்கள் ஊர் ஸினிமாக் கம்பெனியில் வேலை. ஸினிமா நோட்டீஸ் கொடுக்கும் வண்டியில் உட்கார்ந்து வாத்தியம் வாசிக்கும் கோஷ்டிக்கு அவனே தலைவன்.

ஒரு பழைய இரட்டை மாட்டு வண்டிதான். மாடுகளும் தொத்தல் மாடுகள். வண்டியின்மேல், வெயில் அடிக்காமல் இருப்பதற்குக் கீற்றினால் பந்தல் மாதிரி போட்டிருக்கும். வண்டியின் இரண்டு பக்கங்களிலும் படங்கள் ஒட்டின நோட்டீஸ் போர்டுகள். இவற்றிற்கு நடுவில், வண்டிக்குமேல் உயரமாகப் பெஞ்சி போட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பான் வீராசாமி. அவனுக்குப் பக்கத்தில் வரிசையாய் இன்னோர் ஊதல்காரனும், ஒரு மேளகாரனும், ஒரு தாளக்காரனும் அமர்ந்திருப்பார்கள். ஐந்தாறு நாட்களாக ஓடிக்கொண்டிருக்கும் பழைய படமானால் வீராசாமியின் வாசிப்பில் அவ்வளவு சுவாரஸ்யம் இராது. 'இந்தப் பழசுக்கு எத்தனை நாள் ஊது

இறது?' என்று அவன் நினைப்பதுபோல் தோன்றும். அன்றுதான் புதிதாக ஆரம்பிக்கும் படமானால், தலை கால் புரியாமல் ஜமாய்த்துவிடுவான்.

ஒவ்வொரு சமயம் ஸினிமா வண்டி தெருவிலே போகையில் நான் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருப்பேன். இந்த ஊதல்காரனைப் பார்த்தால் எனக்குப் பொறாமை உண்டாகும்; 'உயர்ந்த ஆஸனத்தில், தனக்கு நிகரில்லை என்று அமர்ந்துகொண்டு ஸினிமாப் பாட்டுக்களை ஊதிக்கொண்டு போகும் இவன் ஒய்யாரந்தான் என்ன?' என்று நினைப்பேன்.

2

ஒரு நாள் வெயில் மிகவும் கடுமையாக இருந்ததால் இளைப்பாறுவதற்காக ஸினிமா வண்டி எங்கள் வீட்டெதிரில் இருந்த மரத்து நிழலில் சற்று நேரம் நின்றது. "கொஞ்சம் ஜலம் கொடுங்கோ, சாமி!" என்று கேட்டுக்கொண்டு வீராசாமி வண்டியை விட்டு இறங்கி வந்து திண்ணையில் உட்கார்ந்தான். சற்று நேரம் அவனுடன் பேச்சுக் கொடுத்ததில் பின் வரும் ரஸமான கதையை அவன் கூறினான்.

வீராசாமிக்கு இப்போது வயசு இருபத்தெட்டு. ("நாலு வருஷத்துக்கு முந்தி எனக்கு வயசு இருபத்தி நாலு சாமி! சரிதானே?" என்று அவன் கேட்ட போது, "நூற்றுக்கு நூறு மார்க்" என்றேன்.) அந்தக் காலத்தில் வீராசாமி ஒரு டூரிங் ஸினிமா கம்பெனியில் இருந்தான். ஊர் ஊராக அந்தக் கம்பெனி சுற்றிக் கொண்டிருக்கும். இந்த நாடோடி வாழ்க்கை வீராசாமிக்கு மிகவும் பிடித்திருந்தது. மாச மாசம் தன் சம்பளத்தில் கொஞ்சம் தாய்க்கும் தம்பிக்கும் அனுப்புவான். வருஷத்தில் எப்போதாவது நாலைந்து நாட்கள் சொந்த ஊருக்கு வந்து அவர்களைப் பார்த்துவிட்டுப் போவதும் உண்டு. அப்படி ஒரு

தடவை வந்தபோது அவன் தாய் சேலத்தில் தனக்கு ஒன்று விட்ட தம்பி ஒருவன் இருப்பதாகத் தெரிவித்தாள். வீராசாமியின் ஸினிமாக் கம்பெனியும் அப்போது சேலத்தில்தான் இருந்தது. "முடிந்தால் அவர்களைப் போய்ப் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு வீராசாமி ஊர் போய்ச் சேர்ந்தான்.

சேர்ந்த அன்று மத்தியான்னம், ஸினிமா வண்டியில் உட்கார்ந்து அவன் வாத்தியம் வாசித்துக் கொண்டு போகையில் தாய் சொன்ன தெரு வந்ததும், அவள் சொன்ன அடையாளம் உள்ள வீடு எது என்று இரண்டு பக்கங்களிலும் பார்த்துக் கொண்டே போனுன். ஒரு வீட்டருகில் வண்டி சென்றபோது அவன் நெஞ்சு திக்கென்றது. வீட்டுத் திண்ணைகளுக்கு மேலே உள்ள சுவரில் ஒரு பக்கம் ஹனுமார் உருவமும் இன்னொரு பக்கம் கிருஷ்ணன் உருவமும் - எந்தக் காலத்திலோ எழுதினவை - அழிந்தும் அழியாமலும் காணப்பட்டன. இவைகளே, அவன் தாய் சொன்ன அடையாளங்கள். ஆனுல் அவன் நெஞ்சிலே அந்த உணர்ச்சி ஏற்பட்டதற்குக் காரணம் அவை அல்ல. அந்தக் காரணம் சுமார் பதினாறு பதினேழு வயசு சொல்லக்கூடியவளாய், பாவாடையும் தாவணியும் அணிந்துகொண்டு, இடுப்பை ஒய்யாரமாய் ஒரு பக்கம் சாய்த்துக் கொண்டு, ஒருபெண் திண்ணையின் தூணைப் பிடித்துக் கொண்டு நின்றதுதான். ஸினிமா வண்டி தினம் வாசலோடு போகும்போது தவருமல் அவள் அங்கே வந்து நிற்பாள். ஒவ்வொரு சமயம் ஒருசின்னப் பையன் ஓடி வந்து நோட்டீஸை வாங்கிக்கொண்டு போய் அவளிடம் கொடுப்பான். சாதாரணமாக இந்த வாண்டுப் பயல்களுக்கெல்லாம் நோட்டீஸ் தர மாட்டார்கள். கொடுத்தாலும் அவர்கள் அதை வாங்கிப் பின்னுல் மறைத்துக்கொண்டு, "ஐயா, ஐயா" என்று கத்திக் கொண்டே தெருக் கோடி வரையில் வண்டியைத்

துரத்திக்கொண்டு ஓடுகிற வழக்கம். இந்த வீட்டுப் பையன் வந்தால் மட்டும், வீராசாமியே கீழே குனிந்து ஒன்றுக்கு இரண்டாக நோட்டீஸ்களை எடுத்து அவனிடம் கொடுத்துவிட்டு அந்தப் பெண் அதை வாங்கிக்கொண்டு உள்ளே போகும் வரையில் பார்த்துக்கொண் டிருப்பான். இன்று, அந்த வீடு தான் தன் ஒன்று விட்ட மாமன் வீடு என்று தெரிந்து கொண்டதும் அவன் நெஞ்சு அப்படி அடித்துக் கொண்டது.

அடுத்த நிமிஷம் ஊதலை வைத்துவிட்டு வண்டியிலிருந்து கீழே குதித்தான். "வரேன்; போயிண்டே இருங்க" என்று சொல்லிவிட்டு அந்த வீட்டை நோக்கிச் சென்றான். அவன் வருவதைக் கண்டதும் அந்தப் பெண் சட்டென்று உள்ளே போய்த் தன் தாயை வெளியே அனுப்பிவிட்டு, தான் ரேழியில் கதவருகில் ஒதுங்கி நின்றாள். வீராசாமி தான் யாரென்பதைத் தெரிவித்ததும் அந்த ஸ்திரீ ஆச்சரியத்துடன் மோவாய்க்கட்டையைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் நின்றுவிட்டு, "அட! வீராசாமியா நீ? உன்னைக் குழந்தையிலே பார்த்தது! ஸினிமா வண்டியிலே தினம் ஊதல் ஊதிண்டு வாசலோடு போறயே! போயும் போயும் இந்த வேலைதானா உனக்குக் கிடைச்சுது? ஐயையே!" என்றாள்.

வீராசாமியின் மனசில் வெட்கமும் கோபமும் கலந்து போராடின. அவனோ தன் வாத்தியத் திறமையைப் பற்றி அபாரமாக நினைத்திருந்தான். வீட்டுக்கு வீடு எவ்வளவு பேர் தன் பாட்டைக் கேட்பதற்காக வெளியே வந்து நிற்கிறார்கள்? இதோ நிற்கிறாளே - தன் மாமன் மகள் - அவள்கூடத் தினம் வந்து வெளியே நிற்பது எதற்காக? தன் ஊதலைக் கேட்கத்தானே? அந்தத் தொழிலைக் கேவலமாக யாராவது கருதக்கூடும் என்று அதுவரையில் அவன் நினைக்கவேயில்லை. ஆனால், இதோ கல்லுப் பிள்ளையார்

மாதிரி ஒருத்தி எதிரே நின்றுகொண்டு, "வேறு வேலை உனக்குக் கிடைக்க வில்லையா?" என்று கேட்கிறளே? அட ஈசுவரா!

சிறிது நேரம் அவளுடன் பேசிக்கொண்டிருந்து விட்டு வீராசாமி எழுந்து போய்விட்டான். தன் மாமா பெரிய பணக்காரர் என்றும், ஜவுளிக் கடை வைத்து வியாபாரம் செய்கிருர் என்றும், அந்தப் பெண்ணும் பையனுமே அவருக்குக் குழந்தைகள் என்றும் சம்பாஷணையில் தெரிந்துகொண்டான்.

நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு தினம் மாலையில் அவர்கள் வீட்டுக்கு நாலு இலவச ஸினிமா டிக்கட்டுகள் எடுத்துக்கொண்டு அவன் போனபோது அவனுடைய மாமா திடுக்கிடச் செய்யும் விஷயம் ஒன்றைக் கூறினர்: "நம்ப வீட்டுக்கு வந்துடப்பா. எனக்கும் கடைக்கு நம்பிக்கையான ஆள் வேண்டியிருக்கு. தை பிறந்தால் கல்யாணியையும் உனக்குக் கட்டிக் கொடுத்துவிடறேன்" என்ருர். வீராசாமி கல்யாணி பக்கம் பார்த்தான். அந்தப் பெண் விழிகளை நிமிர்த்தி ஒரு சுழற்றுச் சுழற்றிவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள். வீராசாமி மறு நாளே ஸினிமாக் கம்பெனியில் தன் சம்பளப் பாக்கியை வாங்கிக்கொண்டு மாமன் வீட்டுக்கு வந்துவிட்டான்.

ஸினிமாக் கம்பெனியும் வேறு ஊருக்குப் போய் விட்டது.

3

பத்து நாளில் வீராசாமிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது போல் ஆகிவிட்டது. ஜம்மென்று வண்டியில் உட்கார்ந்துகொண்டு தமாஷாய் ஊதிக் கொண்டே தெருத் தெருவாய்ப் போகிறவனை ஒரு கடையிலே உட்கார்ந்துகிட என்ருல் அவன் தேகம் அங்கே நிலைத்திருக்குமா? தேகம் இருந்

தாலும் மனம் கேட்கிறதா? ஊதல் ஊதிக் கொண்டு வண்டியில் போவதுபோலவே அடிக்கடி அவனுக்குப் பிரமை உண்டாகும். வாயை உப்பலாக வைத்துக்கொண்டு கைகளினுல் ஊதல் வாசிப்பது போல் அபிநயம் செய்வான். உடனே திடுக்கிட்டு யாராவது தன்னைக் கவனிக்கிருர்களோ என்று சுற்றிலும் பார்ப்பான். சில சமயம் அவன் பாட்டுக் களை வாயினுல் சீட்டி அடித்துப் பாடும்போது மாமா பக்கத்தில் இருந்தால், அவர் முறைத்துப் பார்ப்பார். உடனே பாட்டை நிறுத்திவிடுவான். அப்படி அவர் முறைத்துப் பார்க்கும்போது கன்னத்தில் அறையலாமா என்று ஒவ்வொரு சமயம் அவனுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வரும். அப்போதெல்லாம் கல்யாணியின் உருவமும் கண்ணெதிரில் வந்து நிற்குமாதலால் கோபத்தை அடக்கிக்கொண்டு பேசாமல் இருப்பான்; "தை பிறக்கட்டும்; கல்யாணியின் கழுத்திலே இரண்டு முடிச்சுப் போட்டு விட்டேனுல் அப்புறம் சொல்லுகிறேன்" என்று மனசுக்குள் சொல்லிக்கொள்வான்.

ஆனுல் தை பிறப்பதற்குள் அந்த ஊருக்கு இன்னொரு ஸிலிமாக் கம்பெனி வந்துசேர்ந்தது. ஒரு நாள் மத்தியான்னம் இப்படித்தான் வீராசாமி கடையில் உட்கார்ந்து தன் பூர்வாசிரம வாழ்க்கையைப் பற்றிய கனவில் ஆழ்ந்திருந்த போது திடீரென்று பாண்டு வாத்தியத்தின் சப்தம் அவனைக் கனவு லோகத்திலிருந்து தலை குப்புறத் தள்ளியது. மோப்பம் பிடித்துவிட்ட வேட்டை நாய் போல் வீராசாமி நிமிர்ந்து உட்கார்ந்து கவனித்தான். அவ்வளவுதான்; அவன் உடல் பதறிற்று. காதைக் கெட்டியாகப் பொத்திக்கொண்டான். இது என்ன கர்ண கடோரமான வாசிப்பு?

வீராசாமி கோபத்துடன் துள்ளிக் குதித்துக் கொண்டு வெளியே வந்து அந்த வண்டியிலிருந்த

வாத்தியக்காரனைச் சுட்டு எரித்துவிடுவதுபோல் பார்த்தான்.

"ஏண்டா! ஊதத் தெரிஞ்சா ஊத வரணும்; இல்லாவிட்டால் கத்தியைத் தூக்கிக்கொண்டு க்ஷவரம் செய்யப் போகணும்."

இவ்வளவுதான் அவன் சொன்னது. இதற்கு என்னவோ அந்த வாத்தியக்காரர்கள் பிரமாத மாகக் கோபித்துக்கொண்டு சண்டைக்கு வந்து விட்டார்கள். கடையில் இருந்தவர்கள் எல்லாரும் ஓடி வந்து சமாதானம் செய்ததன் பேரில் ஒரு வழி யாய்ச் சண்டை ஓய்ந்தது. கடைசியில் வீராசாமி எவனுடைய கச்சேரியைப்பற்றி விமரிசனம் செய் தானே அவனுடனே ரொம்ப ஸ்நேகமாய்ப் போய் அவன் பக்கத்தில் வண்டியில் உட்கார்ந்துகொண்டு அவன் ஊதலை வாங்கித் தான் வாசிக்க ஆரம் பித்தான்.

அப்போது அவன் மாமா, சாப்பிட்டுவிட்டு வெற்றிலை மென்றுகொண்டே கடையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தவர், திடீரென்று அப்படியே திகைத்து நின்றார். அவருடைய எதிரில் தோன்றிய காட்சி அப்படி அவரை உணர்வு கலங்கச் செய்தது. ஸினிமா வண்டியில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்து தன்னை மறந்தவனாய் ஊதிக் கொண்டிருந்த வீராசாமியைப் பார்த்து "ஏ!" என்று ஏக வசனத்தில் கூப்பிட்டார். வீராசாமி ஊதலைக் கொடுத்துவிட்டு இறங்கிவந்து, "என் வாசிப்பு எப்படி மாமா? அவன் ஒரு கத்துக்குட்டி; சங்கீ தத்தைக் கொலை செய்கிறான், பாருங்கள் -" என்று பேசிக்கொண்டே போனான்.

மாமா அப்படியே இடத்தை விட்டு அசையாமல் நின்றவராய், "உனக்கு வெட்கமாய் இல்லையா?" என்று கேட்டார்.

வீராசாமி பதில் பேசவில்லை. நேரே வீட்டுக்குப் போய், "ஏ கல்யாணி!" என்று இரைந்து கூப்பிட்டான். எல்லாரும் திடுக்கிட்டுப் போனார்கள். இதுவரையில் அவன் இப்படிப் பெயர் சொல்லிக் கூப்பிட்டதில்லை. கல்யாணி அறைக்குள்ளிருந்து எட்டிப் பார்த்தாள்.

"என் ஊதல் எங்கே?"

"பீரோவில் இருக்கிறாப்போல் இருக்கிறது."

"கொண்டா இப்படி."

ஊதலைக் கொண்டுவந்து ஒன்றும் புரியாமல் கல்யாணி அவனிடம் நீட்டினாள்.

"இதோ பார்" என்றான்.

கல்யாணி குனிந்த தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"உனக்குத் தகுந்த புருஷன் நான் அல்ல. சாப்பிட்டுச் சாப்பிட்டுக் கடையில் போய் உட்கார்ந்து கொண்டு கொட்டாவி விடக்கூடிய மன்னனைப் பார்த்து உன் அப்பா உன்னைக் கட்டிக்கொடுப்பார். நீ சந்தோஷமாய் இரு. நான் போகிறேன்" என்றான்.

மறுபடியும் அவள் தலை நிமிர்ந்து பார்த்தபோது கண்களில் நீர் ததும்புவது போலிருந்தது. துண்டை உதறிப் போட்டுக்கொண்டு கையில் ஊதலுடன் வீராசாமி வெளியே சென்றான்.

* * * *

மேற்படி கதையைச் சொல்லி முடித்துவிட்டு வீராசாமி மறுபடியும் வண்டியில் ஏறிக்கொண்டான். "ஈன ஜன்மம் எடுத்தேன் என் ஐயனே—" என்று வாசித்துக்கொண்டு போய்விட்டான்.

நான் சிந்தனையில் ஆழ்ந்தவனாய்ச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தேன். "காதல் காதல் காதல் - காதல் போயிற் சாதல்" என்றல்லவா கவி பாடியிருக்கிறார்? இந்த வாத்தியக்காரனின் ஊதலுக்கு முன்னால் அந்தக் காதலின் சக்திகூடத் தோற்றுப் போய்விட்டதே? "இவன் ஊதலே ஊதல்!" என்று அதிசயித்தேன்.

ரிக்ஷா வண்டி மர்மம்

முன்னுரை

எனக்குச் சில சமயங்களில் வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படுவது உண்டு. ஒரு முறை சைனு பஜார் ரோட் வழியாய்ப் போய்க்கொண் டிருந்தேன். ஒரு காப்பி ஹோட்டலுக்கு எதிரில் வந்ததும் வயிறு 'கொடுக்கா கொடுக்கா' என்றது. காப்பி சாப்பிட லாம் என்று ஹோட்டலுக்குள் நுழையப் படிக் கட்டின்மேல் காலை வைத்தேன். 'முதலில் பொரு ளாதார நிலைமை எப்படி இருக்கிறது பார்ப்போம்' என்று தோன்றவே சட்டைப் பைக்குள் கையை விட்டு வெளியில் எடுத்தேன். வெறுங்கை வெளி வந்தது. "தூ! தரித்திரம்! எப்போதும் இப்படித் தான்; நம் தரித்திரம் விடியாது" என்று முணு முணுத்துக்கொண்டு மேலே நடந்தேன். ஒரு ரிக்ஷா வண்டிக்காரன் வெறும் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு எனக்கு எதிர்ப்புறமாக வந்துகொண் டிருந்தான். அவன் ரிக்ஷாவை நிறுத்தி, "வண்டி ஓணுமா, சாமி?" என்றான்.

"என்ன விலை?" என்று கேட்டேன்.

"விலைக்கு விக்கிறது இல்லிங்க, சாமி. நீங்க எங்கேயானும் போகணுமானு, இதில் உக்காந் துண்டா நான் இழுத்துண்டு போவேன்" என்றான் அவன். அவன் பேச்சிலிருந்தும் புன்னகையி லிருந்தும் அவன் என்னை ஏதோ நாட்டுப்புறம் என்று நினைத்துக்கொண்டது நன்றாகத் தெரிந்தது.

'நம்மைவிட இந்த ரிக்ஷா வாலாவின் பாடு தேவலையே!' என்று நினைத்துக்கொண்டு நான் ரிக்ஷாவில் ஏறிப் பேசாமல் உட்கார்ந்தேன்.

"எங்கே போகணும்?" என்றான் ரிக்ஷாக்காரன்.

"உனக்கு எங்கே இஷ்டமோ அங்கே போ" என்றேன்.

ரிக்ஷாவாலா என்னைக் கீழே இறக்கிவிட்டான். கொஞ்சநேரம் என்னை முறைத்துப் பார்த்தான். பிறகு வெகு வேகமாக ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு போய்விட்டான்.

'நல்ல காலம், அந்தப் பைத்தியத்தினிட மிருந்து தப்பினேன்!' என்று அவன் மனசுக்குள் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

அந்த ரிக்ஷாக்காரனை ஏழெட்டு நாளைக்கு அப்புறம் மறுபடியும் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

ஒரு நாள் ராத்திரி ஸினிமாப் பார்த்துவிட்டுக் கொட்டகையை விட்டு வெளியில் வந்தபோது "சாமி, ரிக்ஷா ஓணுமா?" என்று கேட்டுக்கொண்டு அந்த ஆள் என் முன் வந்து நின்றான். மறு விநாடியில் என்னை அடையாளம் கண்டுகொண்டு அவசர அவசரமாக நடந்தான். நானும் அவன் பின்னாலேயே போய், "ரிக்ஷா வேண்டும். பார்க் ஸ்டேஷனுக்கு எவ்வளவு சத்தம்?" என்றேன்.

"இல்லிங்க. ஒத்தர் கூலி பேசிவிட்டுப் போயிருக்காரு. அவருக்காகக் காத்துண்டு இருக்கேன். இப்போ வர முடியாது" என்று பதில் சொன்னான்.

நான் வேறு வண்டி ஏதாவது அகப்படுமா என்று சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகையில், "ரிக்ஷா ஓணுங்களா?" என்று அந்த ரிக்ஷா வண்டிக்காரன் போகிறவர் வருகிறவர் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொண்டு அலைந்தது என் காதில் விழுந்தது.

"சரிதான், அவன் நம்மிடம் சொன்னது பொய். நம்மை இழுத்துக்கொண்டு போக அவனுக்கு இஷ்டமில்லை போலிருக்கிறது" என்று எனக்குள் சொல்லிக் கொண்டு, அவன் ரிக்ஷாவிடம் போய் அதில் ஏறி உட்கார்ந்துகொண்டேன்.

"சாமி, சாமி, என்னால் இப்போ பார்க் ஸ்டேஷனுக்கு வர மாளாதுங்க" என்று ரிக்ஷா வண்டிக்காரன் பல்லைக் காட்டினன்.

"என்ன அப்பா, வலுவில் வருகிற கிராக்கியை வேண்டாம் என்கிருயே? இந்தா அரை ரூபாய்" என்று அரை ரூபாயை எடுத்துக் கொடுத்தேன். வேண்டா வெறுப்பாய் அதை வாங்கிக்கொண்டு ரிக்ஷாவை இழுக்க ஆரம்பித்தான்.

என் கைக் கடிகாரத்தில் மணி 12-30 ஆயிற்று. ஜனநடமாட்டம் இல்லாத வீதிகளின் வழியாக ரிக்ஷா வண்டி ஓடிற்று. 'ஓடிற்று' என்று சொல்வது முற்றும் சரியல்ல. ஒரு சமயம் நடந்தது; ஒரு சமயம் ஊர்ந்தது; ஒரு சமயம் நின்று தூங்கிப்போய் விட்டது; மற்றச் சமயங்களில் ஓடிற்று. இந்த அநுபவங்கள் எல்லாம் ஆன பிறகுதான் ரிக்ஷா இழுப்பவன் சுய அறிவுடன் இல்லை என்று எனக்குத் தெரிய வந்தது. "ரிக்ஷாவாலா குடித்திருக்கிருன்" என்றேன். நல்ல காலமாக என் மனசுக்குள் சொல்லிக்கொண்டேன்.

"உங்களுக்கு எந்த ஊருங்க?" என்று முத்தையன் (இதுதான் அந்த ரிக்ஷாவாலாவின் பெயர்) கேட்டான். நான் பதில் சொல்லாமல் இருக்கவே பேச்சை மாற்றினன். "இந்த மாதிரி ஜனங்கள் இல்லாத இடத்திலே வண்டி இசுக்க எனக்கு எப்பவும் பயங்க" என்ருன்.

"ஏன், விளக்கு வெளிச்சம் இருக்கிறபோது என்ன பயம்?"

"என்னுங்க? விளக்கு வெளிச்சமா? நீங்க ரிக்ஷா இஸ்துக்கினு போறச்சே மூணு தடியங்க சேத்து மடக்கி அடிச்சா இந்த விளக்கு என்னுங்க பண்ணும்?" என்று கேட்டான் முத்தையன்.

"பகவானே! நான் ரிக்ஷா வண்டிக்காரனைப் பார்த்துப் பொறுமைப் பட்டது வாஸ்தவந்தான். இருந்தாலும் எனக்கு எந்த விதமான கஷ்டத்தை வேண்டுமானாலும் கொடு; என்னை ரிக்ஷா இழுக்க மாத்திரம் செய்யாதே. அப்படிச் செய்தாலும் நான் தனியாக ரிக்ஷா இழுத்துக்கொண்டு போகும்போது மூன்று தடியர்களை விட்டு மடக்கி அடிக்கச் சொல்லாதே" என்று பிரார்த்தித்தேன்.

ரிக்ஷாவாலா மேலும் சொன்னான்:

"ஆமாங்க. ஒத்தனை மூணு பேர் சேந்து அடிச்சா அவன் என்னத்தெப் பண்ணுவான்? ஆனால் நான் அவங்களைச் சும்மா விட்டேனா? மூணு பேருக்கும் நல்லா செலவுக்குக் கொடுத்தேங்க. ஆமாங்க, கொடுத்தேங்க."

"உன்னை ஏன் மூன்று பேர் அடிக்கவேணும்? நீ விரோதியா அவர்களுக்கு?"

"நன்னாச் சொன்னீங்களே! முன்னே பின்னே நான் அவங்களைப் பார்த்தது கூடக் கிடையாது, சாமி."

"பின் ஏன் உன்னை அடிக்கவேணும்? ஆள் மாருட்டமா?"

"அது பெரிய கதெங்க" என்றான் முத்தையன். அவன் இப்படிச் சொல்லிவிட்டு நிறுத்தினதிலிருந்து "அது என்ன கதை?" என்று நான் கேட்கவேண்டும் என்று அவன் எதிர் பார்த்ததாகத் தெரிந்தது. உடனே, "அது என்ன கதை? சொல் பார்க்கலாம்!" என்று நான் அவனை வேண்டிக்கொண்டேன். அவன்

ஐந்து நிமிஷம் கிராக்கி செய்துவிட்டுப் பிறகு தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

அவன் சொன்ன கதையை இங்கே என் சொந்த நடையில் எழுதுகிறேன்.

1

முத்தைய ரெட்டிக்கு வண்ணாரப் பேட்டையில் ஒரு சின்ன வீடு இருந்தது. அந்த வீட்டில் தன் மனைவி குழந்தைகளுடன் அவன் ஏகபோகமாக வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரு மோட்டார் கம்பெனியில் 'கேட் கீப்பர்' வேலை. கையில் ஒரு தடிக் கம்புடன் கேட் அருகில் நின்றுகொண்டிருக்க வேண்டும். கம்பெனியின் சொந்தக்காரர் வரும் போதும் போகும்போதும் 'அடென்ஷ'னில் நின்று ஸலாம் செய்யவேண்டும். நாள் முழுவதும் இதேதான் வேலை. மாசம் பதினைந்து ரூபாய் சம்பளம். இப்படி ஐந்து வருஷமாய் வேலையில் இருந்தான். திடீரென்று அந்த வேலைக்குச் சனியன் பிடித்தது. ஒரு நிமிஷ நோட்டீஸ்கூடக் கொடாமல் ஒரு மாசம் முதல் தேதியன்று அவன் கையில் சம்பளத்தைக் கொடுத்து, "முத்தைய ரெட்டியார்வாள், வீட்டுக்குப் போம். திரும்பி வராதேயும்!" என்று சொல்லிவிட்டார்கள். அவனுக்குப் பதில், பத்து ரூபாய் சம்பளத்தில் வடக்கேயிருந்து வந்த குள்ளன் ஒருவனை வைத்து விட்டார்கள். முத்தையன் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

"என்ன? இன்னிக்கிக்கூட லீவா?" என்று விசாரித்தாள் ஸ்ரீமதி செங்கமலம் முத்தையன்.

முத்தையன் உதட்டைப் பிதுக்கினான். "வேலை காலி. ஊட்டுக்குப் போகச் சொல்லிட்டானுங்க" என்றான்.

அவன் சொன்னதற்கு அர்த்தம் தெரியாமல் செங்கமலம் சிறிது நேரம் இடுப்பில் கைகளை ஊன்றிக் கொண்டு நின்றாள். பிறகு விஷயம் புரிந்ததும், "வேலை பூட்டுதா? வாயிலே மண்ணை வாரிப் போட்டுக் கினியா?" என்று கேட்டாள்.

"ஏ! நான் என்ன செய்யறது? கெஞ்சிக் கூத்தாடித்தான் பார்த்தேன். முடியாதுன்னு ஒரே அடியாச் சொல்லிட்டாங்க. என்னை என்ன செய்யச் சொல்றே?"

செங்கமலம் ஒன்றும் தோன்றாமல் வெகு நேரம் யோசித்தாள். பிறகு, "பொன்னுசாமி மகன் முனி சாமி இருக்கான் பாரு. அவன் ரிக்ஷா பழசாப் போச்சாம். புச்சா ஒண்ணு வாங்கணும்னு சொன்னான். அஞ்சோ பத்தோ கொடுத்தால் பழசை வித்துடுவான். போய்க் கேளு, ஓடு!" என்றாள்.

"என்ன? ரிக்ஷா இஸுக்கறதா! நன்னாச் சொன்னயே! பொறுக்கிப் பயன்னு பாத்தியா என்னை?" என்று முத்தையன் கோபத்துடன் கேட்டான்.

"இல்லாட்டா ஈரத் துணியை நனைச்சு உன் பிள்ளை குட்டி வவுத்திலே போட்டுட்டு, நீயும் ஒண்ணு போட்டுண்டு குந்திக்கினு இரேன். நான் என் அப்பன் வீட்டுக்குப் போறேன். உனக்குக் 'கவுணர்' வேலை கிடைக்கும்னு பாத்துக்கிட்டு இருக்கியோ?" என்று சொல்லிவிட்டு, ஜக் என்று தலையை ஒருபுறம் அசைத்துவிட்டு, செங்கமலம் அழுகிற குழந்தையை எடுக்கப் போய்த் தன் கோபத்தில் அதற்கு இரண்டு அறை விட்டு இன்னும் அழ வைத்தாள்.

முத்தையன் வெகு நேரம் ஒன்றும் புரியாமல் உட்கார்ந்திருந்தான். கடைசியில் பிழைப்புக்கு ஒரு வழியும் தெரியாமல் போகவே ரிக்ஷா இழுத்து வயிறு வளர்ப்பதைத் தவிர வேறு விதியில்லை என்று

முனிசாமியின் பழைய ரிக்ஷா வண்டியை வாங்கத் தீர்மானித்தான். செங்கமலம் புடைவை வாங்குவதற்காகச் சேர்த்து வைத்திருந்த பத்து ரூபாயை அவளிடம் கேட்டு வாங்கிக்கொண்டு முனிசாமியின் வீட்டுக்குப் புறப்பட்டான்.

அப்போது முனிசாமி வீட்டில் இல்லை. அவன் ரிக்ஷா மட்டும் வீட்டுக்கு வெளியில் கிடந்தது.

"முனிசாமி பூந்தமல்லிக்குப் போயிருக்கான். நாளைக்குத்தான் வருவான். என்ன சமாசாரம்?" என்று முனிசாமியின் தகப்பன் பொன்னுசாமி கேட்டான்.

"ஒண்ணுமில்லே; அவன் ரிக்ஷாவை வித்துடப் போறேன்னு சொன்னனும். அதை விலைபேசி வாங்கலாம்னு நான் வந்தேன்" என்று முத்தையன் சொன்னன்.

"சரி; அதோ பாரு, அதுதான் ரிக்ஷா. வேணுமானு விலை கேளு. ரூவா கொடுத்துட்டேன்னு இப்போ வேண்ணலும் ரிக்ஷாவை இழுத்துண்டு போகலாம்."

"முனிசாமி இல்லாமே விலை பேசலாமா?"

"அதுக்கென்ன? முனிசாமி வேறே? நான் வேறேயா? அதுவும் நான் வாங்கிக் கொடுக்காமே முனிசாமிக்கு ரிக்ஷா ஆகாசத்திலே யிருந்தா குதிச்சுது? நீ சும்மா விலை கேளப்பா!"

முத்தையன் ரிக்ஷாவை நன்ருக ஆராய்ந்தான். கொஞ்ச தூரம் இழுத்தும் பார்த்தான். பிறகு, "என்ன விலை வந்தால் கொடுப்பே?" என்று கேட்டான். பொன்னுசாமி பதினைந்து ரூபாய் சொல்ல, முத்தையன் ஏழு ரூபாய் கேட்கக் கடைசியில் பத்து ரூபாயில் பேரம் முடிந்தது.

முத்தையனுக்குச் சொற்ப விலையில் ரிக்ஷாவை வாங்கிவிட்டதாக எண்ணம். அவசர அவசரமாகத் தான் கொண்டுவந்திருந்த பத்து ரூபாய் நோட்டைப்

பொன்னுசாமியிடம் கொடுத்தான்; பிறகு, முனிசாமி வந்தபின் எங்கே அதிகம் கேட்பானே என்று பயந்து பொன்னுசாமியிடம், "இனிமே வார்த்தை தவறப் படாது; ஆமாம்! முனிசாமி வந்து ஏதாவது சொன்னு என்னைக் கேட்காதே" என்று சொல்லிவிட்டு, ரிக்ஷாவைத் தன் வீட்டுக்கு இழுத்துக்கொண்டு போனுன்.

2

மறு நாள் காலை ஒன்பது மணி இருக்கும். முத்தையன் பல் தேய்த்து, தோசை இட்லி சாப்பிட்டுக் 'காப்பித்தண்ணி'யும் குடித்தானபின், "இப்போ அஞ்சு ரூபாய் கொடுத்தால்தான் ஆச்சு" என்று தன் மனைவியிடம் ஆட்டம் போட்டுக்கொண் டிருந்தான். ரிக்ஷா பழையதாகையால் வர்ணம் எல்லாம் உதிர்ந்து போயிருந்தது. அதற்கு வர்ணம் வாங்கி அடித்தான பின்புதான் அதை வெளியில் கொண்டுபோக வேண்டும் என்பது முத்தையன் உத்தேசம். இதற்குத்தான் பணம் வேண்டி யிருந்தது. ஆனல் செங்கமலம் லேசில் சம்மதப்படுகிறவளாய் இல்லை. "வர்ணமும் வாணும், கிர்ணமும் வாணும். முனிசாமி இத்தனை நாள் இழுக்கவில்லையா?" என்ருள்.

இப்படித் தம்பதிகள் தர்க்கித்துக்கொண் டிருக்கையில் வாசலில், "முத்தையா!" என்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. முத்தையன் வெளியே வந்தான். வாசலில் பொன்னுசாமியும் முனிசாமியும் நின்றுகொண் டிருந்தார்கள். முத்தையன் மனம் திக் என்றது. தன் சந்தேகத்தை வெளிக்குக் காட்டக் கூடாது என்று சிரித்துக்கொண்டே, "என்ன சமாசாரம்?" என்று கேட்டான்.

பொன்னுசாமி தலையைச் சொறிந்துகொண்டு அசட்டுச் சிரிப்புடன், "நேத்து உனக்கு ரிக்ஷா

வித்தேன் பாரு, அதுதான். முனிசாமி இப்போதான் பூந்தமல்லிலேருந்து வந்தான். ரிக்ஷாவை ஏன் வித்தேன்னு என்னைத் திட்ருன். அவன் இத்தனை நாளா வச்சுண்டிருந்தான் பாரு, அந்தப் பாசம், வித்துட மனசு வல்லே. நீ ரூபாயை வாங்கிண்டு ரிக்ஷாவைக் கொடுத்துடு'' என்ருன்.

முத்தையன் சிரிப்பை அடக்கிக்கொண்டு முகத்தைக் கோபமாய் வைத்துக் கொண்டு, "பார்த்தயா? உங்கள் புத்தியைத்தானே காண்பிச்சுட்டீங்க? எனக்குத் தெரியும் உங்கள் சேதி! இதுக்குத்தானே நேற்றுத் தொளாயிரம் தரம் கேட்டேன்? இனிமே வார்த்தை தவறப்படாதுன்னு சொல்லலையா நான்? போங்க போங்க! புது ரிக்ஷா வாங்கிக்குங்க!'' என்று கூறினன்.

"பதினைந்து ரூபாய் வாங்கிண்டு கொடுத்துடையா'' என்று முனிசாமி சொன்னன்.

"ஆமாம். அதுதான் நானும் சொல்றேன்'' என்று பொன்னுசாமி ஒத்து ஊதினன்.

முத்தையன் யோசனை செய்தான். எவ்வளவு அதிக ரூபாய் வந்தாலும் ரிக்ஷாவை விட அவனுக்கு மனம் இல்லை; "அதெல்லாம் ஏனையா! வேறே ரிக்ஷா வாங்கிக்கிங்க, போங்க!'' என்ருன்.

முனிசாமியும் பொன்னுசாமியும் ஏதோ ரகஸ்யமாய்ப் பேசிவிட்டு, "இருபது ரூபாய் வாங்கிண்டு கொடுத்துடு'' என்ருர்கள்.

முத்தையனுக்கு அந்தப் பழைய ரிக்ஷாவில் ஏதோ அதிருஷ்டம் இருக்கவேண்டும் என்று தோன்றிற்று. ஒன்றும் இல்லாவிட்டால் அந்தப் பழைய வண்டிக்காக அவர்கள் ஏன் அவ்வளவு ரூபாய் நஷ்டப்படவேண்டும்?

பொன்னுசாமியையும் முனிசாமியையும் பார்த்து, "லக்ஷ ரூபாய் கொடுத்தாலும் இனிமேல் ரிக்ஷாவைத்

தரமாட்டேன். அடிக்க வர்ணங்கூட வாங்கியாச்சு. நீங்க போங்க!" என்று சொல்லிவிட்டான். அந்த இரண்டு பேரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு போனார்கள்.

3

முத்தையன் ரிக்ஷா இழுக்க ஆரம்பித்துப் பத்து நாட்களுக்குப் பிறகு ஒரு புதன்கிழமை. இன்று தான் நம் கதையில் மிகவும் ருசிகரமான சம்பவம் நடக்கப் போகிறது. மத்தியான்னம் சுமார் மூன்று மணி இருக்கும். வெயிலின் கொடுமை இன்னும் குறைந்த பாடில்லை. அனற்காற்று இரக்கமில்லாமல் அடித்துக்கொண் டிருந்தது. முத்தையன் காலி ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு இரும்பு வாராவதிக்கு அருகில் போய்க்கொண் டிருந்தான். பருத்த செட்டியார் ஒருவரை ஏற்றிக்கொண்டு போனதில் அவனுக்கு ஆறணுக் காசு கிடைத்தது. நாள் முழுவதும் அலைந்த அலைச்சலும் கடுமையான வெயிலும் சேர்ந்து அவன் உடம்பில் சோர்வை உண்டாக்கின.

அப்போது திடீரென்று எங்கிருந்தோ முளைத்தவர்கள் போல மூன்று தடியர்கள் தோன்றி அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். முத்தையனுக்கு முதுகிலும் மார்பிலும் இரண்டு குத்துகள் விழுந்தன. முதலில் அவனுக்கு ஏற்பட்ட திகைப்பும் பயமும் குத்து விழுந்ததும் எங்கோ பறந்தன. தன்னை மார்பில் குத்தினவனை எட்டி இரண்டு உதை விட்டான். மற்ற இரண்டு பேரிடமும் நாலைந்து குத்துகள் வாங்கிக்கொண்டான். கோபத்துடன் தன் இடுப்பில் இருந்த 'பெல்டை' அவிழ்த்து 'விர் விர்' என்று சுழற்றினான். அந்த முரடர்கள் முகத்திலும் உடம்பிலும் பளார் பளார் என்று அடிகள் விழுந்தன. முத்தையன் ஒருவனுக்கு ஜவாப் சொல்ல முடியாமல் அந்த மூன்று பேரும் பின் வாங்கி

ஞர்கள். இரண்டு பேர் முதுகைக் காட்டாமல் பின் பக்கமாகவே அடி எடுத்து வைத்துக் கொஞ்ச தூரம் போனதும் ஓட்டம் பிடித்தார்கள். அவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்ததும் மூன்ருவது தடியன் என்ன ஆனுன் என்று திரும்பித் தன் ரிக்ஷா இருந்த இடத்தைப் பார்த்தான். அங்கு ரிக்ஷா இல்லை! முத்தையனிடம் உதை வாங்கிக்கொண்டவன் அதை இழுத்துக்கொண்டு வேருெரு பக்கமாக ஓடிக் கொண்டிருந்தான். "டோய்! டோய்!" என்று கத்திக் கொண்டு முத்தையன் அவனைத் துரத்தவே, அவன் பயந்து ரிக்ஷாவை விட்டுவிட்டுத் தலைகால் தெரியாமல் ஓடினுன்.

முத்தையன் ரிக்ஷாவண்டை போய் நின்ருன். அந்த மூன்று பேரும் தன்னை மடக்கி அடிக்கக் காரணம் என்ன என்று யோசித்தான். ஒன்றும் தோன்றவில்லை. பிறகு, "நல்ல காலம்! இதோடே தப்பினேன்!" என்று முணுமுணுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு வீட்டை நோக்கிப் போனுன்.

4

அதற்கு அடுத்த சனிக்கிழமை காலை ஏழு மணி. முத்தையன் தினமும்போல் இட்டிலியும் காப்பியும் சாப்பிட்டுக்கொண் டிருந்தான். செங்கமலம், "சரி தான், ஜல்தி ஆவட்டும். பொன்னுசாமியும் அவன் மவனும் வாசலில் வந்து காத்துண்டு இருக்கிருங்க. போய் என்னுன்னு கேளு" என்று சொன்னுள்.

"அவன்களுக்கு என்ன வேலை?" என்று முணு முணுத்துக்கொண்டு முத்தையன் தெருவுக்கு வந்தான். திண்ணையில் பொன்னுசாமியும் முனி சாமியும் உட்கார்ந்திருந்தார்கள்.

"என்ன விசேஷங்க? ரிக்ஷா விலை பேச வந்துட்டீங்களா?" என்று முத்தையன் எரிச்சலுடன் கேட்டான்.

"இல்லை. உன்னுடன் ஒரு விஷயம் பேசணும்" என்றான் பொன்னுசாமி.

"சீக்கிரம் பேசிவிடு. எனக்கு நாழி ஆவுது. வேலைக்குப் போவணும். அப்புறம் அவள் பார்த்தால் திட்டுவா."

முனிசாமி இரண்டுதரம் கனைத்துத் தன் தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு, "இல்லை, எங்கிட்டே ஒரு காயிதம் இருந்தது. அதைப் பத்திரமா வைக்கணும்னு, ரிக்ஷாவிலே மெத்தை போட்டிருக்கு பாரு, அதுக்கு அடியிலே வெச்சேன். அது எங்க நாயனுவுக்குத் தெரியாது. அதனாலே அதை எடுத்துக்காமல் ரிக்ஷாவை உன்னிடம் வித்துட்டாரு. அந்தக் கடுதாசை எடுத்துக் கொடுத்துடு' என்றான்.

'அட. இதுக்குத்தானா இவ்வளவு? முன்னையே கேட்டிருக்கப்படாதா? இப்போதான் ஞாபகம் வந்ததா?"

முனிசாமி, "இல்லை, அந்தக் காயிதத்திலே ஒரு ரகசியம் எழுதியிருந்தது. உனக்குத் தெரியக்கூடாதுன்னு நினைச்சோம் -" என்று முப்பத்திரண்டு பல்லையும் காட்டினான்.

முனிசாமி அதற்குமேல் ஒன்றும் பேசாமல் இருந்ததைப் பார்த்த பொன்னுசாமி பேசத் தொடங்கி, "ஆமாம்; அதில் ஒரு ரகசியம் இருக்கு. அதை முதலில உங்கிட்டே சொல்லப் படாதுன்னு நினைச்சோம். அதற்காகத்தான் ரிக்ஷாவை மறுபடியும் வாங்கிக்கலாம்னு விலை கேட்டது" என்று சொன்னான்.

முத்தையன் ஆச்சரியத்துடன் சிறிது நேரம் யோசனை செய்தான். பிறகு திடீரென்று ஞானோதயம் ஆனவன்போல, "ஓஹோ! அப்படியானா ஆளை

விட்டு என்னை அடிக்கச் சொன்னதுகூட நீங்க தான்னு சொல்லுங்க" என்று கோபத்துடன் கூறினன்.

"ஐயையோ! மூணுபேரை உட்டு உன்னை இரும்பு வாராவதிக் கிட்டே மடக்கி அடிக்கச் சொன்னது நாங்க இல்லியே!" என்று உளறினன் முனிசாமி.

முத்தையன் கோபாவேசத்துடன் எழுந்து, "நிஜத்தைச் சொல்றீங்களா, போலீசுக்குப் போவட்டுமா?" என்று அதட்டினன். அவன் மீசை துடித்தது. முத்தையன் மீசையிடம் பொன்னு சாமிக்கும் முனிசாமிக்கும் ஏற்கனவே கொஞ்சம் பயபக்தி உண்டு. இப்போது அது கோபத்தில் துடிக்கும்போது கேட்பானேன்? பொன்னுசாமி நடுக்கத்துடன் இடத்தை விட்டு எழுந்து முத்தையன் கையைப் பிடித்துக்கொண்டான். "ஆமாம், ஆமாம். நாங்கதான் செஞ்சோம். தப்புத்தான்; மன்னிச்சுக்கோ. நாங்கள் உன்னை அடிக்கச் சொல்லலை. அந்தக் கடுதாசியைத்தான் எடுத்துண்டு வரச் சொன்னோம்" என்று கெஞ்சிக் கூத்தாடி முத்தையனை மறுபடியும் திண்ணைமேல் உட்கார வைத்தான்.

"ஐயோ! உனக்கு ரொம்ப அடி பட்டதா! அடிச்சா கையை முறிச்சுடுவேன்னு சொல்லியனுப்பினேனே! சோதாப் பசங்கள்!" என்று துக்கம் விசாரித்தான் முனிசாமி.

அந்தக் காகிதத்தில் அவ்வளவு முக்கியமான விஷயம் என்ன இருக்கும் என்று முத்தையன் மூளை யோசித்துக்கொண்டிருந்தது. பிறகு அவன், "சரி, அந்தக் காயிதத்தை எடுத்துத் தரேன். அதிலே என்ன ரகசியம் இருக்குன்னு முதலில் என் கிட்டே சொல்லணும்" என்ருன்.

"அதுதான் ரகசியம்னு சொன்னேனே. உனக்கு அது உபயோகமில்லே; கொடுத்துடு, நாயனு" என்ருன் பொன்னுசாமி. இது முத்தையனுடைய ஆவலை அதிகமாக்கிவிட்டது; "சரி, நீங்க சொல்லாமப் போனு நானே காயிதத்தை எடுத்துப் பார்த்துக் கறேன்" என்று அவன் சொல்ல, அப்பனும் பிள்ளேயும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு விழித்தார்கள்.

கடைசியில் முனிசாமி, "சொல்லிடு நாயனு; முத்தையனுக்கும் ஒரு பங்கு கொடுக்கலாம்" என்று தன் தகப்பனைத் தூண்ட, பொன்னுசாமி பின் வருமாறு கூறினன்:

"மூனு மாசத்துக்கு முன் எங்கள் வீட்டுக்கு ஒரு சாமியார் வந்தாரு. அவருக்குப் பழையது போட்டோம். சாப்பிட்டதும் அவர் 'ரெண்டு ரூபாய் கொடுத்தீங்களானல் உங்களுக்கு ஒரு புதையல் இருக்கிற இடம் சொல்றேன்'னு சொன்ருரு. அப்படியே கொடுத்தோம். புதையல் இருக்கிற இடத்தைக் கடுதாசிலே எழுதித் தந்தாரு. அந்தக் கடுதாசிதான் இப்ப ரிக்ஷா வண்டி மெத்தைக்கு அடியில் இருக்கு."

"புதையல் எங்கே இருக்கிறதாகச் சாமியார் சொன்னர்?" என்று முத்தையன் கேட்டான். பொன்னுசாமி கொஞ்சம் தயங்கிவிட்டுப் பிறகு முத்தையன் காதோடு காதாய் ஏதோ கூறினன்; "ரொம்ப ரகசியமாய் இருக்கணும். வெளிக்குத் தெரிந்தால் ஆபத்து" என்று முடித்தான்.

புதையலே என்றைக்குப் போய் எடுப்பது என்ற கேள்வியை முத்தையன் கிளப்ப, பொன்னுசாமி, "சாமியார் மூனு மாசம் கழிச்சுப் போய்ப்பார்த்தால் அகப்படும்னு சொன்னர். போன புதன்கிழமையோடே மூனு மாசம் ஆயிடுத்து; இனிமேல் என்னிக்கு வேணுமானலும் போவலாம். முதல்லே நீ அந்தக் காயிதத்தை எடுத்துக்கொடு. கிழித்துப்

போடலாம். யார் கையிலாவது அகப்பட்டா ஆபத்து'' என்றான்.

சிறிது நேரத்துக்கு முன் துடி துடியென்று துடித்த முத்தையன் மீசைக்கு அடியில் இப்போது புன்னகை அரும்பியது; "ரிக்ஷாவை வாங்கின உடனே அதுக்கு வர்ணம் அடிச்சேன் பாரு, அப்போ மெத்தைக்கு அடியில் இருந்த குப்பையை எல்லாம் தட்டிச் சுத்தம் பண்ணினேன். அந்தக் காயிதம் குப்பையோடு போயிருக்கும். எந்தக் குப்பைத் தொட்டிக்குப் போச்சோ !'' என்றான் அவன். தங்களை முத்தையன் ஏமாற்றிவிட்டது தெரிந்ததும் பொன்னு சாமிக்கும் முனிசாமிக்கும் முகத்தில் அசடு வழிந்து ஓடிற்று.

பொன்னுசாமியையும் முனிசாமியையும் தான் ஏமாற்றினதைப் பற்றிச் சொன்னபின் முத்தையன் ரிக்ஷாவை நிறுத்திவிட்டு என் பக்கம் திரும்பி ஒரு கம்பீரமான பார்வை பார்த்தான். பிறகு பேசாமல் திரும்பிமறுபடியும் ரிக்ஷாவை இழுக்க ஆரம்பித்தான்.

"என்ன, கதையைப் பாதியில் நிறுத்தி விட்டாயே? அப்புறம் என்ன நடந்தது என்று சொல்லவில்லையே ?'' என்று கேட்டேன்.

முத்தையன் தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டான். "அப்படிக் கேளுங்க. சுவாரச்யமாக் கதை கேட்க ஒருத்தர் இருந்தால்தான் நான் சொல்றது வழக்கம். கதையை எங்கே நிறுத்தி னேங்க ?'' என்றான்.

"கடிதம் உன்னிடம் இல்லையென்று சொன்னதும் அவர்கள் என்ன செய்தார்கள் ?''

"ஓ! அவங்க என்ன செய்யக் கிடக்கிறது? பேசாமே குரங்குக் கணக்காக முழிச்சாங்க. அப்புறம் நாங்க மூணுபேரும் ஒரு நாள் ராத்திரி அந்த இடத் துக்குப் போய்ப் புதையலை எடுத்தோம்.''

"நிஜமாகவே புதையல் இருந்ததா, என்ன?"

"சொல்றத்துக்குள்ளே அவசரப் படறீங்களே! பத்தடி ஆழம் மண்ணை வெட்டினதும் ஒரு பெரிய பானை ஆப்புட்டுதுங்க. அது நிறையத் தங்க நகையும் வைர நகையுந்தானுங்க. அப்பப்பா, எவ்வளவு நகை போங்க! வைர ஒட்டியாணம், கிட்டியாணம், செயின், கியின்; அது, இது, லொட்டு லொஸ்கு -"

என்னால் என் காதுகளையே நம்ப முடியவில்லை. "அடேயப்பா! நீ ரொம்பப் பணக்காரன் என்று சொல்லு. இந்த ரிக்ஷா வண்டியைக் கட்டிக்கொண்டு ஏன் இன்னும் மாரடிக்கிறாய்?" என்று கேட்டேன்.

"பணக்காரனும் இல்லே, ஒண்ணும் இல்லேங்க" என்றான் அவன்.

"அதென்ன அப்படிச் சொல்கிறாய்? வைர நகை என்றால் சும்மாத்தானா?"

"ஆமாங்க, வைர நகைதாங்க. ஆனால் நிஜ வைரம் இல்லிங்க. தங்கமெல்லாம் கில்டுங்க."

"த்ஸொ, த்ஸொ! இவ்வளவுதானா?"

முத்தையன் மௌனமாக இருந்தான். அவனைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது. "அந்தக் கில்டு நகைகளை எல்லாம் என்ன செய்தாய்? அதை விற்றால் கூட இருபது முப்பது கிடைக்குமே!" என்றேன்.

"பிரயோஜனம் இல்லிங்க; எப்போ பண்ணினதோ? எல்லாம் துருப் புடிச்சுப் போயிடிச்சு. பேரீச்சம்பழக்காரனுக்குக்கூட உபயோகப்படலீங்க."

இதற்குள் ரிக்ஷா வண்டி பார்க் ஸ்டேஷனை அடைந்தது. வண்டியிலிருந்து கீழே இறங்கினேன். அப்பொழுது விளக்கு வெளிச்சத்தில் ரிக்ஷா வண்டியின் வர்ணம் பளிச்சென்று கண்ணில் படவே, "அந்தப் பழைய ரிக்ஷாவா இது?" என்று அதிசயத்துடன் முத்தையனைக் கேட்டேன்.

"இது பழசு இல்லிங்க; புச்சுங்க. வாங்கி ஒரு வருஷங்கூட ஆகலிங்க" என்று அவன் கூறினான்.

"அந்தப் பழைய வண்டி என்ன ஆயிற்று? உடைந்து போயிற்று?"

"எந்தப் பழைய வண்டிங்க?"

"நீ முனிசாமியிடமிருந்து வாங்கினாயே, அது தான்."

முத்தையன் என்னைச் சந்தேகத்தோடு முறைத்துப் பார்த்தான். பிறகு, "என்னாங்க சாமி, இப்படிக் கேக்கறீங்களே? கதைக்குக் கால் ஏதுங்க?" என்றான். பின்பு தலையை வருத்தத்துடன் பலமாக ஆட்டிவிட்டு ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு, நான் பதில் பேசுமுன் ஓடி மறைந்தான்.

பசுபதியின் கனவு

1

பசுபதியின் ஹ்ருதயம் வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

பசுபதியைப் பற்றி ஒரு வார்த்தையும் சொல்லாமல், ஆரம்பிக்கும்போதே அவன் ஹ்ருதயத்தைப் பற்றிக் கூறத் தொடங்கினதற்காக வாசகர்கள் கோபிக்கவேண்டாம். ஏனென்ருல் சந்தர்ப்பம் அப்படிப்பட்டது. அந்தச் சமயத்தில் பசுபதியே தன்னை முற்றிலும் மறந்துபோய்விட்டானென்ருல், நாம் அவனை மறப்பதில் பிசகு என்ன?

அந்த ஆற்றங்கரையில், அந்திப் பொழுதில், வெண் மணலின் இடையே ஒரு பாறையின் மேல் பசுபதி உட்கார்ந்திருந்தான். எதிர்க் கரையில் சவுக்கு மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. குளு குளு என்று காற்றடித்தபோது, அந்தச் சவுக்குத் தோப்பிலிருந்து "உய்ய் !" என்று ஓர் இனிமையான சப்தம் வரும். அந்தச் சப்தத்திலேயே அது வரையில் லயித்துப் போயிருந்தான் பசுபதி.

இப்படி அவன் தன்னந் தனியாய் உட்கார்ந்திருந்தபோதுதான், அவன் ஹ்ருதய ஓட்டத்தின் வேகத்தை அதிகப்படுத்தின சம்பவம் திடீரென்று நடந்தது. அவனுக்குப் பின்னுல் சற்றுத் தூரத்தில் யாரோ சிரிக்கும் சப்தம் கேட்டதும் பசுபதி திடுக்கிட்டான். அது என்ன? - வீணையின் இசையா, வேய்ங்குழலின் நாதமா, கிண்கிணியின் ஓசையா?

அவன் திரும்பிப் பார்த்தபோது, பின்னால் இருப தடி தூரத்தில் ஒரு கிழவரும் ஓர் இளம் பெண்ணும் பேசிக்கொண்டு வருவதைப் பார்த்தான். கிழவர் தலையில் 'மப்ளர்' கட்டிக்கொண்டு, கையில் ஒரு தடிக் கம்புடன் மெல்ல நடந்து வந்தார். அவர் பக்கத்திலிருந்த பெண்ணின்மேல் பார்வையைத் திருப்பின பிறகு சுமார் இரண்டு நிமிஷநேரம் வரையில் பசுபதியின் இமைகள் மூடவில்லை. அவன் ஹ்ருதயம் பக்பக் என்று அடித்துக்கொண்டது. 'ரதி என்றும், ஊர்வசி, மேனகை, திலோத்தமை என்றும் தேவ கன்னிகைகளின் பெயர்கள் நம் கதைகளில் வருகின்றனவே! அவர்கள் ஒவ்வொருவரும் இப்படித்தான் இருப்பார்களோ?' என்று அவன் மனம் நினைத்தது.

கிழவரும் அந்தப் பெண்ணும், பேச்சு ஸ்வாரஸ்யத்தில் அங்கே பசுபதி உட்கார்ந்திருந்ததைக் கவனிக்காமல் அருகே வந்துவிட்டார்கள். பிறகு சட்டென்று திரும்பிச் சற்று விலகிப் போய் உட்கார்ந்துகொண்டார்கள்.

பசுபதி, எதிரே ஆற்றைப் பார்ப்பதும், இடையே அவர்கள் உட்கார்ந்திருந்த பக்கம் திரும்பிப் பார்ப்பதுமாய் இருந்தான். 'அடடா! இந்தக் கிழவர் என்ன அதிருஷ்டசாலியா யிருக்கவேண்டும் இப்படிப்பட்ட பெண்ணைப் பெறுவதற்கு!' என்று இடைவிடாமல் அவன் மனம் எண்ணமிட்டது. 'பெண்ணுக்குப் பதினெட்டு வயசு இருக்கும்போல் இருக்கிறதே! ஒரு வேளை கல்யாணம் ஆகியிருக்குமோ' என்று நினைத்தபோது அவன் நெஞ்சு திக் என்றது.

இருட்டும் சமயத்தில் கிழவரும் அந்தப் பெண்ணும் எழுந்து ஊரை நோக்கி நடந்தார்கள். பசுபதியும் எழுந்திருந்து, அவர்கள் எந்த வீட்டுக்குப் போகிறார்கள் என்று பார்ப்பதற்காக அவர்கள் பின்னாலேயே நடந்தான்.

2

இங்கே பசுபதியின் பூர்விக வரலாற்றைப் பற்றிக் கொஞ்சம் சொல்லவேண்டும். பசுபதிக்குத் தன் தாயைப் பற்றிய ஞாபகமே இல்லை. அவனுக்குத் தன் நினைவு தெரிவதற்கு முன்பே அந்தப் புண்ணியவதி இந்த உலகை விட்டுப் போய்விட்டாள். மனைவி இறந்த பின், பசுபதியின் தகப்பனார் சங்கர தீக்ஷிதர் தாம் இறக்குமுன் தம் ஒரே பிள்ளைக்கு ஒரு கல்யாணம் கார்த்திகை என்று பண்ணிப் பார்த்து விடவேண்டும் என்று தீர்மானித்து, பசுபதி மெட்ரிகுலேஷன் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போதே நல்ல இடத்தில் பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்தார். பாவம்! அந்தப் பெண், அவர் மேல் பழி தீர்த்துக் கொள்வதற்காகத்தானோ என்னவோ, கல்யாணம் ஆன மறுவருஷம் இறந்து போய்விட்டாள். பசுபதி அப்போது பதினறு வயசுப் பையன்தான். இருந்தாலும், தன் குழந்தை மனைவியிடம் அவன் அதிக ஆசைகொண் டிருந்தான். அவள் இறந்த செய்தி வந்ததும் அவள் போட்டோவை எடுத்து வைத்துக்கொண்டு விசித்து விசித்து அழுதான்.

இது நடந்து ஒரு வருஷத்துக்கெல்லாம் அவன் தந்தை மறுபடியும் அவனுக்குக் கல்யாணம் செய்ய முயன்றார். ஆனல் பசுபதியோ தனக்குக் கல்யாணமே வேண்டாம் என்றும், தகப்பனர் பலவந்தம் செய்தால் தான் வீட்டை விட்டு ஓடிப்போய் விடுவதாகவும் கண்டிப்பாய்த் தெரிவித்துவிட்டான்.

தீக்ஷிதர் தம் வீட்டுக்கு வருகிறவர் போகிறவர் களிடமெல்லாம் அதைச் சொல்லிக் குறைப்பட்டுக் கொண்டார்; "எனக்கு இருந்து இருந்து ஒரு குழந்தை. அவனும் என் பேச்சைக் கேட்க மாட்டேன் என்கிறன். அவனுக்கு வகையாய்ப் பெண்

டாட்டி வாய்த்து, அவன் குடியும் குடித்தனமுமாய் இருப்பதை நான் பார்க்கமாட்டேன், இந்த ஜன்மத்தில்'' என்பார். இப்படி, "செத்துப் போயிடுவேன், செத்துப் போயிடுவேன்'' என்று வெறுமனே பயமுறுத்திக்கொண்டிருந்தாரே ஒழிய, அப்புறம் ஐந்து வருஷத்துக்கு அவர் தாம் சொன்னபடி செய்து காண்பிக்கவில்லை.

இதற்குள் பசுபதி மேற்படிப்புக்காகச் சென்னைக்கு வந்துவிட்டான். ஐந்தாவது வருஷக் கடைசியில் அவன் தகப்பனாரும் உண்மையிலேயே வியாதியாய்ப் படுத்துக்கொண்டார். பிழைப்பது கடினம் என்று டாக்டர்கள் தெரிவிக்கவே, பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருந்த பசுபதிக்குக் கடிதத்தின் மேல் கடிதமாக வந்தது. ஒவ்வொன்றிலும் அவன் கல்யாண விஷயந்தான். "கிருஷ்ணசாமி பெண்ணைக் கொடுக்கிறேன் என்கிறான். கையில் குறைந்தது ஐயாயிரம் தருவான். அதற்குமேல் சீர் சிறப்புகள் செய்வான். இரண்டாந்தாரத்துக்கு இதற்குமேல் யார் செய்வார்கள் இந்தக் காலத்தில்?'' என்று ஒரு கடிதத்தில் இருக்கும். "வாசு பெண்ணுக்குப் பதினைந்து வயசு நிரம்பப் போகிறது. இந்த வருஷம் கண்டிப்பாய்க் கல்யாணம் பண்ணி ஆகணும். வாசு, வரன் எங்கே அகப்படும் என்று பறக்கிறான். நீ கல்யாணத்துக்குச் சம்மதித்துவிட்டாய் என்று நான் ஒரு வார்த்தை சொன்னால் போதும்; எவ்வளவு கேட்டாலும் அவனுக்கு லக்ஷ்யமில்லை'' என்று இன்னொன்று. இப்படிப் பல கடிதங்கள் வந்தன. எல்லாவற்றையும் படித்துக் கிழித்துப் போட்டான் பசுபதி. "என்ன அப்பா, நமக்கு இருக்கிற பணம் போதாதா? ஏன் இன்னும் பணத்தாசை பிடித்து அலைகிறாய்?'' என்று கோபமாகத் தகப்பனாருக்குப் பதில் எழுதி விட்டான். இதற்குப் பிறகு அவர் எழுதின இரண்டு கடிதங்களும் முற்றும் வேறுவிதமாக இருந்தன;

“ராஜம்பேட்டையில் ஒரு பெண் இருக்கிறது. தாய் தகப்பனார் பரம ஏழைகள். கையில் தம்படி தர மாட்டார்கள். பெண்ணுக்குப் பதினேழு வயசு. கண்ணுக்குக் கிளி மாதிரி இருக்கிறது. பண்ணிக் கிறாயா?” என்று ஒரு கடிதத்தில் கேட்டார். பசுபதி, அந்த வருஷம் கல்யாணம் செய்துகொள்வதாய்த் தனக்கு உத்தேசம் இல்லை என்று எழுதினான். அடுத்த கடிதத்தில் தீக்ஷிதர், “நீ பெண்ணை வந்து பார். பார்த்தால் விடமாட்டாய்” என்று ஆசை காட்டினார். இதற்குப் பசுபதி பதிலே போடவில்லை.

இரண்டு மாசங்களுக்குப் பிறகு பசுபதி தன் சொந்த ஊரை நோக்கிப் பிரயாணப் படவேண்டிய அவசியம் நேரிட்டது. அவன் தகப்பனார் காலமாகி விட்டார்.

3

இதெல்லாம் பழங் கதை; ஒன்றரை வருஷத்துக்கு முன்பு நடந்தவை. பசுபதி வெகு பிரயாசைப் பட்டு இதையெல்லாம் அடியோடு மறந்து போயிருந்தான். அதற்காகவே அவன் அது வரையில் ஓர் இடத்திலும் நிரந்தரமாகத் தங்காமல் ஊர் ஊராய்ச் சுற்றிக் கொண்டிருந்தான். மறுபடியும் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்ற ஆசையே அவனுக்கு இல்லை. தகப்பனார் இறந்த புதிதில், அந்த ராஜம் பேட்டைப் பெண்ணைப்பற்றி அவர் கொடுத்திருந்த வர்ணனைகளின் ஞாபகம் எப்போதாவது வரும்போது, அவனுக்குச் சபலம் தட்டும்; “அந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டுத்தான் வரலாமா?” என்று நினைப் பான். உடனே, ‘சட், அப்பா அவ்வளவு கேட்டுக் கொண்டும் கல்யாணம் வேண்டாமென்று உறுதியாய் இருந்துவிட்டு, இப்போது இந்தச் சபலத்துக்கு இடங் கொடுக்கலாமா?’ என்று மனசைக் கடினப்படுத்திக்

கொள்வான். கடைசியில், "இந்த ஊரில் இருந்தால் இந்த ஞாபகமாய்த்தான் இருப்போம். கொஞ்ச நாள் நாலு இடங்களுக்குப் போய்ச் சுற்றிவிட்டு வரலாம்" என்று தீர்மானித்துக்கொண்டு புறப்பட்டான்.

அவன் ஆசை நிறைவேறியது. பழைய ஞாபகங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் அவன் மனசிலிருந்து மறைந்து போயின. இந்தச் சமயத்தில்தான், அன்று ஆற்றங் கரையில் அவன் கண்ட காட்சி அவன் மன அமைதியை மறுபடியும் குலைத்துவிட்டது.

அந்தக் கிழவரும் அவருடன் வந்த பெண்ணும் எழுந்து சென்றபோது அவர்கள் பின்னாலேயே போய், அவர்கள் எந்த வீட்டுக்குள் போகிறார்கள் என்று பார்த்துக்கொண்டு, தான் தங்கியிருந்த ஹோட்டலுக்குப் பசுபதி போனான். அங்கே ஹோட்டல்கார ஐயரிடம் பேச்சுக் கொடுத்து நடுவில், "அங்கே ஒரு பங்களா இருக்கே, சுப்பராம ஐயர்னு பேர் போட்டது. அதிலே இருக்கிறது யார்?" என்று கேட்டான்.

"சுப்பராமையர்னு பேர் போட்டிருக்கிற பங்களாவில் சுப்பராமையர்தான் இருக்கார்" என்றார் ஹோட்டல்காரர் சிரித்துக்கொண்டே.

"அதற்கில்லே; அவர் யார், என்ன சமாசாரம்னு கேட்டேன்."

"அப்படின்னா உட்காருங்கோ சொல்றேன்" என்று அந்தப் பிராமணர் ஆரம்பித்து, மேலே தொடர்ந்து கூறினார்: "அந்தச் சுப்பராமையர் பெரிய உத்தியோகம் பார்த்துவிட்டு இப்போதான் ஆறு மாசத்துக்கு முந்தி ரிடயர் ஆகி அந்த வீட்டையும் வாங்கினார். அவருக்கு ஒரு பெண் இருக்கிறாள். ஆமாம் ஸார். இருக்கிறாள்! என்ன சிரிக்கிறேள்? சரி

தான்; அந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டுத்தான் சமாசாரம் விசாரிக்கிறேள் போலிருக்கு. சரி, கேளுங்கோ. அவருக்கு ஒரு பெண் இருக்கிறுள். ஒரே பெண்! வயசு பதினெட்டு இருக்கும். ட்ரெயினிங் ஸ்கூலிலே படிச்சுண்டு இருந்தாள். லீவுக்கு இங்கே வந்திருக்காப்போல் இருக்கு. இந்த வருஷம் கல்யாணம் பண்ணிவிடணும்னுதான் யோசனையாம். உங்களுக்கு ஈடுதான்னு!"

இவ்வளவையும் ஆவலோடு கேட்டு விட்டுப் பசுபதி, "சே சே, அதெல்லாம் ஒன்றுமில்லே. வெறுமனே, வர போது வீட்டைப் பார்த்தேன். அதிலே யார் இருக்கான்னு தெரிஞ்சுக்கணும்னு கேட்டேன். அவ்வளவுதான்" என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டான்.

மறுநாள் பொழுது விடிந்ததும் விடியாததுமாய் இருக்கையில் பசுபதி எழுந்திருந்து, தன்னை நாஸூக்காய் அலங்கரித்துக்கொண்டு, சுப்பராமையர் வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினன்.

கிழவரே வந்து கதவைத் திறந்து, அவனை உட்காரச்செய்து, யார், என்ன சமாசாரம் என்று விசாரித்தார். பசுபதி, முதல்நாள் இரவே தொடங்கி யோசனை செய்து முடிவுக்கு வந்திருந்த பிரகாரம், சுற்றி வளைத்துப் பேசாமல் தான் யார் என்று சொல்லி அவர் பெண்ணைத் தமக்குக் கொடுக்க முடியுமா என்றும் கேட்டான்.

கிழவர் அவனை ஏற இறங்கப் பார்த்தார். சற்று நேரம் யோசனை செய்தார். பிறகு அவர் முகத்தில் புன்னகை தோன்றிற்று.

"சரிதான்! எங்கள் ருக்குவுக்குத் தகுந்த வரன் தான் நீர்! அவளும் உங்களைப் போல்தான் சங்கோஜம் இல்லாத பிராணி. உங்களை எனக்குப் பிடிச்சிருக்கு. அதிருக்கட்டும்; நீங்கள் பெண்ணைப் பார்க்காமலே

இவ்வளவு தூரம் தீர்மானம் செய்துவிட்டீரே?" என்று கேட்டார்.

பசுபதி, பெண்ணைத் தான் ஏற்கனவே பார்த்தாய் விட்டதென்று தெரிவித்தான்.

"அப்படியா! அதுதானே பார்த்தேன். என்னடா முன் பின் தெரியாத மனுஷன் இப்படி வந்து பளிச்சுன்னு பெண்ணைக் கொடுன்னு கேட்கிறானேன்னு பார்த்தேன். அவளைப் பார்த்துட்டுத்தான் ஓடி வந்திருக்கிறீரா?" என்று கிழவர் சிரித்தார். பிறகு, "சரி, உங்களுக்குப் பெண்ணைப் பிடித்திருக்கிறது. அவளுக்கு உங்களைப் பிடிக்கிறதான்னு கேட்கணுமோ இல்லையோ? இருங்கோ, கேட்கிறேன்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றார்.

பசுபதி, தான் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் பின்னாலிருந்த ஜன்னல் பக்கத்திலிருந்து பேச்சின் சப்தமும், கை வளைகள் குலுங்கும் சப்தமும் வந்து கொண்டிருந்ததைக் கவனித்தான். இப்போது கிழவரும் அந்த இடத்துக்கே போய்ப் பேசிவிட்டு மறுபடியும் அவனிடம் வந்து, "பேஷாய்ப் போச்சு! ருக்மிணிக்கும் உங்களைப் பிடிக்கிறதாம். நீங்கள் ஊருக்குப் போய் உங்கள் ஜாதகத்தை அனுப்புங்கோ. நான் ருக்குவின் ஜாதகமும் எழுதித் தரேன்" என்றார்.

அப்புறம் சிறிது நேரம் பல விஷயங்களைப் பற்றிப் பேச்சு நடந்தது. கடைசியில் பசுபதி அங்கிருந்து புறப்பட்டபோது கிழவர் மஞ்சள் தடவின காகிதத்தில் பெண்ணின் ஜாதகத்தை எழுதி அவனிடம் கொடுத்தார்.

பூமியின்மேல்தான் நடக்கிறோமா அல்லது ஆகாசத்தில் பறக்கிறோமா என்ற சந்தேகத்தோடு பசுபதி ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தான்.

4

அன்றிரவு ஏழரை மணிக்கு அந்த ஊர் ரயில்வே ஸ்டேஷனில் பாஸஞ்சர் வண்டி வந்து நின்றது. பசுபதி, கையில் தோல் பெட்டியுடன் வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு, ஜன்னல் வழியாய்த் தலையை வெளியே நீட்டி, வண்டியில் ஏறினவர்களையும் இறங்கினவர்களையும் பார்த்தான். அவன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து இருபது அடி தூரத்தில் ப்ளாட் பாரத்தில் நின்றவர்களைப் பார்த்ததும் அவன் மனம் திக் என்றது. "ருக்கு!" என்று அவன் வாய் முணுமுணுத்தது.

சுப்பராமையர், ருக்குவையும் இன்னொரு வயசான அம்மாளையும் இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏற்றிவிட்டுக் கதவை மூடினார்.

வண்டியும் கிளம்பியது.

"சே, என்ன துரதிருஷ்டம்! நாமும் ஓர் இரண்டாவது வகுப்பு டிக்கெட் வாங்கிக்கொண்டு அங்கே ஏறி இருக்கப்படாதா?" என்று தன்னை நொந்தவாறே பசுபதி நரக வேதனை அநுபவித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அடுத்த ஜங்ஷனில் வண்டி நின்றதும் பசுபதி பெட்டியுடன் கீழே குதித்து, புக்கிங் ஆபீஸுக்கு ஓடி, ஓர் இரண்டாவது வகுப்பு டிக்கெட் வாங்கிக்கொண்டு மறுபடியும் ரயிலில் ஏறினான்.

கதவைச் சாத்திக்கொண்டு அவன் உள்ளே வந்ததைப் பார்த்ததும் ருக்மிணி பரபரப்போடு எழுந்து நின்று, அவன் உட்கார்ந்த பிறகுதான் உட்கார்ந்துகொண்டாள்.

ரயில் புறப்பட்டுக் கொஞ்ச நேரம் ஆனபின், "இதே வண்டியில் நீங்களும் வந்தது எனக்கு

ஆச்சரியமாயிருக்கிறது! எங்கே போகிறீர்கள்? இந்த அம்மாள் யார்?" என்று பசுபதி கேட்டான்.

"இந்த அம்மாள் என் அத்தை. நான் ராஜம் பேட்டைக்குப் போகிறேன்" என்று அவள் கூச்சத்துடன் பதில் சொன்னாள்.

"ராஜம் பேட்டையில் என்ன விசேஷம்?" என்றான்.

"எங்க அப்பாவுக்கு அங்கேதான் வேலை."

"ரிடயர் ஆயிட்டார்னு கேள்விப்பட்டேனே?"

"இல்லையே! யார் சொன்னா?"

"அந்த ஹோட்டல்காரன் சொன்னான்" என்றான்.

அப்புறம் இரண்டு நிமிஷம் நிச்சப்தம். பிறகு பசுபதி, "ராஜம்பேட்டைக்குச் சுப்பராமையர் எப்போ போவார்?" என்று கேட்டான்.

"அவரும் கூட வரணும்னுதான் பார்த்தார். ஆனால் ருக்கு வர மாட்டேன்னுட்டாள், அதனாலே நான் மட்டும் தனியாய்ப் போறேன்" என்றாள்.

பசுபதிக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'ருக்கு வரமாட்டேன் என்றாளா? என்ன இது ஆச்சரியம்! அப்படி யென்றால் இதோ நம் எதிரில் உட்கார்ந்திருப்பது யார்? ஒரு வேளை இவர்கள் இரட்டைக் குழந்தைகளா, என்ன?' என்று இப்படி நினைத்துக் கொண்டு அவன், கண்ணில் தூசி விழுந்த பாவனையாகக் கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தான். சந்தேகமில்லை; அன்று அவன் ஆற்றங் கரையில் பார்த்த அந்தப் பெண்ணேதான் இவள்!

'ஒரு வேளை, கிழவர் சொன்னது வாஸ்தவமாக இருக்குமோ? இவள் பெரிய கிண்டல்காரி போலே இருக்கிறது. நம்மைப் பரிகாசம் பண்ணி இவள் விளையாடுகிறாளோ?' என்று தோன்றவே, "இப்போது ருக்கு எங்கே இருக்காள்?" என்றுகேட்டான்.

"ஆத்திலேதான் இருக்காள். இன்னும் ஒரு மாசம் அவளுக்கு லீவு இருக்கு. அடுத்த மாசந்தான் பள்ளிக்கூடம் திறக்கறு" என்ருள்.

பசுபதியின் குழப்பம் அதிகரித்தது. "நீங்கள் ருக்குவுக்கு என்ன ஆக வேண்டும்?" என்று கேட்டான்.

"இளேய தாயார்" என்று, தலேயைக் குனிந்து கொண்டே அவள் பதில் சொன்னுள்.

பசுபதிக்கு மூச்சை அடைத்தது; தேகம் பத றிற்று. அவள் சொன்னதை நம்ப முடியாமல் அவளே விழித்துப் பார்த்தான். அவளும் தலேயை நிமிர்ந்து அவன் பார்வையைக் கவனித்துவிட்டு, அவன் மனசில் தோன்றிய எண்ணத்தை அறிந்து கொண்டாள்.

"ஆமாம், நிஜந்தான், நான் சொல்லுகிறது. அவ ருக்கு நான் மூன்ருவது தாரம். என் அப்பாவுக்குச் சின்ன வேலே. முப்பது ரூபாய் சம்பளம். வரதக்ஷிணே கொடுத்து என்னே வகையாய்க் கல்யாணம் பண்ணிக் கொடுக்க அவரால் முடியவில்லே. அதற்காக இவருக்கு கொடுத்துட்டார். அவர் மேலே தப்பில்லே. நீங்களே சொல்லுங்கோ; வரதக்ஷிணே இல்லாமே யார்தான் ஒரு பெண்ணேப் பண்ணிப்பா? அதனுலேதான் போன வருஷம் வரையில் என்னேக் கல்யாணம் பண் ணுமலே இருந்தார். கடைசியில் சங்கர தீக்ஷிதர்னு ஒருத்தர்; அவர் பிள்ளேக்கு என்னேப் பண்ணிக் கிறேன்னு சொல்லிவிட்டுக் கடைசியிலே பிள்ளே இஷ்டப் படவில்லேன்னுட்டார். அவர் ஒருத்தர் தானு?......" என்று ஆத்திரத்தோடு மேலே பேசிக் கொண்டே போனுள்.

அதற்கு மேல் அவள் சொன்னது ஒன்றும் பசுபதியின் காதில் விழவில்லே. "எந்தச் சங்கர

தீக்ஷிதர்? ஆனந்தபுரம் சங்கர தீக்ஷிதரா?" என்று கம்மிய குரலில் கேட்டான்.

"எல்லாம் அந்த மிராசுதார்தான்!"

பசுபதிக்குத் தலை கிறுகிறு என்று சுற்றியது. இடத்தை விட்டு எழுந்து, சரியாக நிற்க முடியாமல் மறுபடியும் மெத்தையில் பொத்தென்று சாய்ந்தான்.

ரயில் வண்டி "டங் டங், டங் டங்......" என்று சப்தம் செய்துகொண்டே ஓடியது. பசுபதி ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிக் கொண்டான். காற்று, சிலு சிலு என்று பிய்த்துக்கொண்டு போயிற்று.

அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றதும், பசுபதி பெட்டியை எடுத்துக்கொண்டு எழுந்ததைப் பார்த்து அவள், "என்ன, இங்கே இறங்குகிறீர்கள்?" என்றாள்.

"இல்லை, இந்த ஊர் ஸ்டேஷன் மாஸ்டர் என்னோடு படித்த நண்பர். அவரைப் பார்த்து விட்டு அடுத்த ரயிலில் போவேன்" என்று சொல்லி விட்டுப் பசுபதி இறங்கினான்.

அவன் 'நண்ப'ராகிய அந்த ஸ்டேஷன் மாஸ்டர் அவனை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை.

பத்து நாட்களுக்குப் பிறகு, பசுபதி தன் ஊர் போய்ச் சேர்ந்து சுப்பராமையருக்கு ஒரு கடிதம் போட்டான். "ஜாதகப் பொருத்தம் சரியாயில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்றுதான் அதில் எழுதியிருந்தான்.

சாம்பு

1

"தொப்! தொப்!!" என்று அவள் கதவை இடித்தாள்; பதில் இல்லை. இன்னும் பலமாக இடித்தாள்; அப்போதும் நிச்சப்தம். கதவைத் தட்டின கை நடுங்கிற்று. அவள் தேகம் முழுவதும் குளிரினால் நடுங்குவதுபோல் உதறிற்று. தெருவில் அதிக ஜன நடமாட்டம் இல்லை. அந்தத் தெரு பாதி அந்தகாரத்தில் மூழ்கி இருந்தது. எதிரே இருந்த முனிஸிபல் ராந்தல் மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தபடியால் வீட்டு வாசலிலும், வாசற் படியில் நின்ற உருவத்தின் மேலும் சிறிது வெளிச்சம் விழுந்தது.

மறுபடியும் அவள் பலங்கொண்ட மட்டும் கதவை இடித்தாள். அப்போது உள்ளே இருந்து, "யாரது?" என்று யாரோ கோபத்துடன் எரிந்து விழும் குரல் கேட்டது. அவள் பேசாமல் திக் திக் கென்று அடித்துக் கொண்ட ஹ்ருதயத்துடன் நின்றாள். உள்ளே இருந்து யாரோ கதவை நோக்கி வந்த சப்தம் கேட்டது. மறு விநாடியில் தாழ்ப்பாள் பட் என்று சப்தித்தது; கதவு திறந்தது.

கதவைத் திறந்த மனிதன் "யாரது?" என்று மறுபடியும் கேட்டுக் கொண்டே அவளை உற்றுப் பார்த்தான். அவளும் தலையை நிமிர்ந்து அவனை நோக்கினாள்.

"நீயா?" என்று பல்லைக் கடித்துக் கொண்டு அவன் கேட்டான்.

அவள் மௌனம் சாதித்தாள்.

"ஏன் இங்கே வந்தாய்?"

"சாம்புவைப் பார்க்க."

"சாம்புவைப் பார்க்கவா? சாம்புவுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? சனியனே! எதிரே நிற்காதே! ஓடிப்போ!"

அவள் தேகம் குலுங்கிற்று; "அவனுக்கு ஜுரமாமே?" என்றாள் தழுதழுத்த குரலில்.

"ஜுரமாவது, சுண்டைக்காயாவது? உன்னை யார் கேட்டது? உனக்குத்தான் தலை முழுகியாச்சே? போ; என் கண் எதிரில் வராதே" என்று அவன் கதவை மூடப்போனான்.

அவள் கதவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்; "மூடாதேயுங்கள்! மூட வேண்டாம். ஒரு நிமிஷம் விடுங்கள். குழந்தையைப் பார்த்து விட்டு வந்துவிடுகிறேன்" என்றாள்.

"சீ, நாயே! போ என்றால் மன்றாடுகிறாயா? சுரணை இல்லை? எந்த மூஞ்சியுடன் இங்கே வருகிறாய்? சாம்புவைப் பார்க்க வந்தாளாம், சாம்புவை!" என்று இரைச்சல் போட்டுவிட்டு அவன் அவளை வெளியே தள்ளிக் கதவை மூடினான்.

மதுரம் ரங்கனின் மனைவி. அவர்களுக்குக் கல்யாணம் ஆகி ஆறு வருஷ காலம் ஆகிறது. கல்யாணம் ஆன ஒரு வருஷத்தில் சாம்பு பிறந்தான். அது வரையில் அவர்கள் இல்வாழ்க்கை சந்தோஷமாகத் தான் இருந்தது. அதன் பிறகு ரங்கனிடம் பல மாறுதல்கள் ஏற்பட்டன. நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு குடிக்கவும் தாசி வீட்டுக்குப் போகவும் பழக்கம் செய்துகொண்டான். அதிலிருந்து வீட்டில் எப்போது பார்த்தாலும் மனைவியுடன் சச்சரவுதான். அவள் நகைகளை எல்லாம் பிடுங்கிக் கொண்டான். அவள் வாய் திறவாமல் கொடுத்துவிட்டாள்.

ஆனால், அவனிடம் திட்டுக் கேட்கவும் உதை படவும் அவளால் முடியவில்லை. தன்னால் முடிந்த வரையில் பொறுத்துப் பார்த்தாள். தன்னையும் மிஞ்சிப் போகவே தன் தகப்பனாருக்குக் கடிதம் எழுதினாள். அவர் வந்து, மகளிருந்த கோலத்தைப் பார்த்து, "இப் படிப்பட்ட புருஷனுடன் வாழ்ந்தால் என்ன? வாழா விட்டால் என்ன?" என்று அவளைத் தம்முடன் அழைத்துப் போனார். அப்பொழுது குழந்தை சாம்பு வுக்கு நான்கு வயசு. ரங்கன் குழந்தையை அவர்க ளுடன் அனுப்பவில்லை. மனைவியைத் தன் வீட் டுக்குத் திரும்பி வரவேண்டியதில்லை என்று சொல்லி விட்டான். மதுரத்தை ஊரார் 'வாழாவெட்டி' என்றார்கள். அதை யெல்லாம் அவள் பொருட் படுத்த வில்லை. சாம்புவை நினைத்து அவள் உருகினாள். அவனுக்கு ஜுரம் வந்துவிட்டது என்று தெரிந்த பிறகு பெற்ற தாயின் மனம் கேட்குமா?

2

"அப்பா!"

"ஏண்டாப்பா, இன்னும் தூங்கலியா நீ?"

"தூக்கம் வரல்லேப்பா. குளிராய் இருக்கு: போத்தி விடு; அம்மா எங்கே?"

"அம்மா தானே? பேசாமே தூங்கு. அம்மா வருவாள்!"

"அப்போ தூங்கி எழுந்தேனே; அம்மா வரல்லியே?"

"பேசாமே தூங்குடாப்பா. அம்மாவை அழைச் சுண்டு வர ஆளை அனுப்பி இருக்கேன். வருவாள்."

"ஏம்பா, அம்மா வந்தா என் ஜுரம் சரியாயிடு மோல்லியோ? அம்மா எனக்குக் கஷாயம் தந்தா சமத்தா குடிக்கிறேம்பா. அம்மாவை வரச்சொல் லுப்பா!"

மதுரம் அந்த வீட்டை விட்டுப்போன புதிதில் குழந்தை, 'அம்மா எங்கே?' என்று கேட்டபோது, ரங்கன் ஒரு பொய் சொல்லி வைத்தான். "நீ ரொம்பப் படுத்தறயாம். அதான் அம்மா உன்னை விட்டு விட்டுப் போய்விட்டாள்" என்று கூறி யிருந்தான்.

"அப்பா !..."

"ஏண்டா கண்ணே ?"

"நான் இன்னமே சமத்தா யிருக்கேம்பா ! விஷமம் பண்ணலேப்பா. அம்மாவை வரச் சொல்லு !"

"இதோ வந்துடுவாள். இந்தா, இந்த மருந்தைக் குடித்துவிட்டுத் தூங்கு."

தகப்பனாரின் வார்த்தையை நம்பி, தூங்கினால் அம்மா வருவாள் என்று குழந்தை கண்ணயர்ந்தான். கனவில் சாம்பு தாயைக் கண்டான்.

"அம்மா !"

"ஏண்டா கண்ணே, இப்படி இளைச்சுப் போயிட்டியேடாப்பா ?"

"ஆமாம்மா ; ஏன் என்னை விட்டுட்டுப் போனே ? நான் இப்போவெல்லாம் விஷமமே பண்றதில்லையே ! சமத்தா இருக்கேன், அம்மா."

அம்மா சிரித்தாள் ; "என் செல்லம் சமத்துத் தான் ; அதுதான் நான் திரும்பி உங்கிட்டே வந்துட்டேன் !" என்று வாரி எடுத்து முத்தமிட்டாள்.

சாம்பு விழித்துக்கொண்டான். மேஜைமேல் விளக்கு எரிந்துகொண் டிருந்தது. ஜன்னலுக்கு வெளியே மையிருள். இருண்ட வானத்திலிருந்த நக்ஷத் திரங்கள் கண்ணைச் சிமிட்டி அவனைக் கூப்பிடுவது போல் பிரகாசித்தன. எங்கிருந்தோ, "சாம்பு, சாம்பு !" என்று கூப்பிடும் குரல் கேட்டது. அவன் தாயின் குரல் ! குழந்தை படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தான். "அம்மா !" என்று கூப்பிட்டான்.

ரங்கன் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே வந்தான்.

"சாம்பு! ஏன் உட்கார்ந்துண்டு இருக்கே? உட்காரப்படாது; படுத்துக்கோ. ஜுரம் அடிக்கிறது."

"அம்மா வந்துட்டாளா?"

"இல்லே. இந்த இருட்டிலே எப்படி வருவாள்? போது விடிந்தால்தான் வருவாள்: நீ தூங்குன்னு தூங்கலியே?"

"இப்போ என்னே அம்மா கூப்பிட்டாளே, சாம்பு சாம்புன்னு?"

"இந்தா, வெந்நீர் சாப்பிடு. பால் தரட்டுமா?"

ரங்கன் குழந்தையின் மார்பில் கை வைத்துப் பார்த்தான். உடம்பு நெருப்பாய் இருந்தது. கம்பளியைப் போர்த்திவிட்டு விளக்கைத் தாழ்த்தினான்.

* * * *

"என்ன காரியம் செய்துவிட்டாய்? வீட்டைத் தேடி வந்த மனைவியைத் துரத்திவிட்டாயே!" என்று அவன் மனச்சாட்சி கேட்டது.

"பின் அவளை வீட்டிலே சேர்ப்பதா? வாழா வெட்டி என்று பெயர் எடுத்தவளையா?"

"உன்னால்தானே அவளுக்கு அந்தப் பெயர் வந்தது?"

"என்னால் எப்படி? என்னிடமிருந்து கோபித்துக் கொண்டு போனாள். 'இனிமேல் திரும்பி வராதே' என்று சொல்லி விட்டேன். புருஷனிடமிருந்து கோபித்துக் கொண்டு போகலாமா?"

"கோபம் வரும்படி நீதானே செய்தாய்? நீ நடந்து கொண்ட விதம் எப்படி? அது ரொம்ப ஒழுங்கானதா? நீ குடியன், தாசி லோலன். பிறர்

நடத்தையில் குற்றங் கண்டு பிடிக்க உனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?”

“நான் எப்படி இருந்தால் என்ன? நான் ஆண் பிள்ளை. புருஷனிடம் கோபித்துக் கொண்டு மனைவி போய் விடலாமா? போனால் ஏன் திரும்பி வர வேண்டும்?”

“ஓஹோ! நீ ஆண் பிள்ளை. அதனால் உனக்கு முறை தவறிப்போக உரிமை உண்டு. அவள் பேதைப் பெண். அவளுக்குக் கோபித்துக் கொள்ளவும் உரிமை இல்லை. அப்படித்தானே?”

பதில் இல்லை.

3

சாம்புவின் ஜுரம் அதிகமாய் விட்டது. “அம்மா, அம்மா” என்று அவன் வாய் ஓயாமல் பிதற்றிக்கொண்டே இருந்தான். “அம்மா வருவாள், வருவாள்” என்று சொல்லிச் சொல்லி ரங்கனுக்கும் அலுத்துப் போய்விட்டது. மதுரத்தின் மேலிருந்த கோபமும் அதிகமாய் விட்டது. குழந்தையை வைத்துக்கொண்டு அவன் தன்னந் தனியாய்த் தவிக்க வேண்டி யிருக்கிறதே என்று கடைசியில், ஒரு சமயம், “அம்மா எங்கே?” என்று குழந்தை கேட்டபோது கோபத்துடன், “அம்மா இல்லை; போய்விட்டாள்” என்றான்.

“அம்மா இல்லியா?”

“இல்லை.”

“எங்கே அப்பா போயிட்டா, அம்மா?”

ரங்கன் ஜன்னலுக்கு வெளியே ஆகாயத்தைச் சுட்டிக் காண்பித்தான்.

“மானத்து மேலேயா?”

“ஆமாம்.”

"எப்போ திரும்பி வருவா?"

"வரமாட்டாள்!"

"வர மாட்டாளா? அப்படின்னு, மானத்து மேலே இருந்தா நன்னு இருக்குமா, அப்பா?"

"இருக்கும். பேசாமே படுத்துண்டு இரு. பேசினு ஜுரம் அதிகமாயிடும்."

"மானத்து மேலே இன்னும் யார் அப்பா இருக்கா அம்மாவோடே?"

"......"

"ஏம்பா; அம்மா மட்டும் ஒண்டியாவா இருப்பா? பயமாய் இருக்காது?"

"பேசப் படாதுன்னு சொன்னேனே! பேசாமே இருந்தாத்தான் உடம்பு சொஸ்தமாகும்."

"ஏம்பா, மானத்திலே சாமி கூட இருக்காரோல் லியோ?"

"ஆமாம். நீ தூங்கு! விசிறட்டுமா?"

4

அன்றிரவு சாம்புவுக்கு ஜன்னி கண்டுவிட்டது. திடீரென்று ஜன்னலுக்கு வெளியே பார்த்து, "அப்பா! அதோ இருக்கா பாரு, அம்மா" என்று வானத்தைச் சுட்டிக் காட்டினுன். ரங்கன் குழந்தையின் முகத்தை விழித்துப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

வானத்திலிருந்து நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்ருக மறைந்தன. சிலு சிலு என்று காற்று அடித்தது. வானத்தில் மேகங்கள் பரவின. மின்னல் வெட்டியது.

"என்ன அப்பா அது வெளிச்சம்? பளிச் பளிச்சுங்கறதே!"

"ஒண்ணும் இல்லேம்மா, மின்னல்தான்; பயப் படாதே. மழை வரும்போலே இருக்கு."

கடபுடா என்று இடி இடித்தது.

"என்ன அப்பா அது ?"

"இடி !"

"ஏம்பா ! அம்மா மானத்திலே இருக்காளே, மழை பேஞ்சா நனைஞ்சுட மாட்டா ?"

ரங்கன் பதில் சொல்லவில்லை. குழந்தை, "அம்மா, அம்மா" என்று கத்தினன். திடீரென்று, "அப்பா, நானும் அம்மா கிட்டே போறேன்" என்ருன்.

"வேண்டாம், அப்படிச் சொல்லாதே."

"இல்லே, போறேம்பா. அம்மா கிட்டத்தான் போகணும். மானத்து மேலே நன்ன இருக்கும்னு சொன்னயே !"

"அங்கே நன்ன இருக்காது. எங்கிட்டயே இரம்மா. நான் அப்பா இல்லேயா உனக்கு ?"

"பின்னே அம்மாவை ஏன் அங்கே அனுப்பிச்சுட்டே ? நானும் அங்கே போறேனே ? என்னேயும் அனுப்பிச்சுடு ; அப்பா...அம்மா ! அம்மா ! நானும் வரேன்."

ரங்கன் குழந்தையைத் தழுவிக் கொண்டான். "சாம்பு ! நீ அங்கே போக வேண்டாண்டா. இங்கேயே இருடா. உன் அம்மாவை இங்கேயே வரச் சொல்லுகிறேண்டா" என்ருன்.

'ஜோ' என்று மழை பெய்தது. வாசல் கதவை யாரோ தடால் தடால் என்று இடித்தார்கள். ரங்கன் கதவைத் திறந்தான். மழையில் தெப்பமாய் நனைந்தபடி மதுரம் வெளியே நின்றுகொண்டிருந்தாள். "குழந்தை.........சாம்பு.........எப்படி இருக்கான் ?..." என்று குழறினுள்.

ரங்கன் பேசாமல் திரும்பி உள்ளே நடந்தான். அவளும் அவன் பின்னலேயே சென்ருள். அறைக்குள்

இருட்டாக இருந்தது. ரங்கன் விளக்கைப் பெரிதாக்கினான். அவள் கட்டிலின் அருகில் போய் உட்கார்ந்து, "சாம்பு! என் கண்ணே! உன் அம்மா இதோ வந்திருக்கிறேனே. என்னைப் பாரடா!" என்றாள்.

பதில் இல்லாமல் போகவே மதுரம் திரும்பி ரங்கன் முகத்தை நோக்கினாள்.

"மதுரம்! நம் செல்லக் கிளி உன்னைத் தேடிக் கொண்டு போய் விட்டதடி!" என்று கணவன் மனைவியைக் கட்டிக்கொண்டு தேம்பினான்.

குயவன் நல்லண்ணன்

தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு சோழ மன்னர்கள் நம் செந்தமிழ் நாட்டை ஆண்டு வந்த அந்த மிகப் பழைய காலம். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கட்டை வண்டியில் சென்றால் பத்து மணி நேரப் பிரயாணத்தில் அவிநாசிக் கிராமத்தை அடையலாம். குடியானவர்களால் நிறைந்து, காவிரியாற்றின் கிளை நதி யொன்றால் வளம் பெற்று நான்கு பக்கங்களிலும் வயல்களால் சூழப்பெற்ற கிராமம்.

அக்கிரகாரத்தை விட்டு இரண்டு மூன்று வீதிகள் கடந்து சென்றால் அதோ சூளைகளிலிருந்து எழும் புகையால் மூடப்பட்டு இருட்டாகக் காணப்படுகிறதே, அதுதான் குயவர் வாழும் வீதி. பனை ஓலை வேய்ந்த ஒரு சிறு குடிசைக்கு முன்னால் வேப்ப மரத்து நிழலில் தன் சக்கரத்துக்கெதிரில் உட்கார்ந்து வேலை செய்யும் குயவனின் உருவம் அந்த வீதியின் வழியாகச் செல்லுகிறவர் ஒவ்வொருவர் கண்ணிலும் படாமல் போகாது. உருவமற்ற களிமண்ணை இந்திர ஜாலம்போல் பலவிதமான பாத்திரங்களாகச் செய்து அடுக்கிக் கொண்டே போகிற அவன் கைத்திறமையைக் கண்டு மயங்கத்தான் நேரிடும். இவ்விதமான கைத்திறமை படைத்தவன்தான் நல்லண்ணன் என்ற குயவன். புழுதி படிந்திருந்த அவனது உடம்பையும் சடை போட்டிருந்த தலையையும் பார்த்தவர்கள் முதலில் அவனிடம் அருவருப்புக் கொள்வார்கள். ஆனால் அவிநாசிக் கிராமத்திலேயே நல்லண்ணனைப் போன்ற உத்தம குணமுடைய வேறொருவரைக் காண முடியாது.

அவிநாசிக் கிராமவாசிகள் நல்லண்ணனின் தாய் தந்தையரைப்பற்றி ஒன்றும் அறியார். பதினைந்து வருஷங்களுக்கு முன் அவன் சிறு பையனுய்த் தன்னந் தனியனுக அவிநாசிக் கிராமத்திற்கு வந்தான். குயவன் பொன்னனிடத்தில் ஏரிகரையிலிருந்து களிமண் கொண்டுவந்து கொட்டும் வேலையில் அமர்ந்தான். பொன்னன் காலமானபின், தான் சேர்த்துவைத்திருந்த பணத்தைக் கொண்டு தானே குசத்தொழில் செய்ய ஆரம்பித்தான்.

இப்போது நல்லண்ணனுக்கு இருபத்தைந்து வயசாகிறது. இன்னும் கல்யாணம் ஆகவில்லை. சூரிய வெளிச்சம் சிறிது தெரிந்தவுடனேயே நல்லண்ணனின் குடிசைவாசலில் சக்கரம் சுற்ற ஆரம்பிக்கும். பானை பானையாகச் செய்து குடிசை முழுவதும் நிரப்பி விடுவான். சாப்பாட்டு நேரம் தவிர மற்ற நேரம் முழுவதும் அவன் சுறுசுறுப்புடன் உழைப்பதைப் பார்க்கலாம்.

"தினம் கூழே குடிக்கிருன்; ஒருவருக்கும் ஒரு பைசாக்கூடக் கொடுப்பதில்லை; வருகிற பணத்தையெல்லாம் என்னதான் செய்வானே?" என்று அவனிடம் பொருமை கொண்டவர்கள் பேசலானுர்கள்.

நல்லண்ணனுக்கு அவிநாசிக் கிராமத்தில் நண்பர்களே இல்லாமலும் போகவில்லை. அவனும் அடுத்த வீட்டுக் கந்தசாமி என்ற கொல்லனும் நீண்ட நாள் நண்பர்கள். கந்தசாமிக்கும், நல்லண்ணன் வயசுதான் இருக்கும்; இரண்டு மூன்று வருஷங்கள் சிறியவனுகவே இருப்பான். கிராமவாசிகளிடையில் கந்தசாமியைப் பற்றி அவ்வளவு நல்ல அபிப்பிராயம் இல்லை என்பது வாஸ்தவந்தான். இருந்தாலும் நல்லண்ணனைப் பொறுத்த வரையில் கந்தசாமியின் நடத்தை குற்றங்கூற இடமில்லாததாகவே இருந்தது.

நாளடைவில் நல்லண்ண்ன் வேருெர் இடத்தில் வைத்த அன்பு அவனுக்கும் கந்தசாமிக்கும்

இடையிலிருந்த நட்பைச் சிறிதும் குறைவுபடுத்த வில்லை. இந்தப் புது அன்புக்குப் பாத்திரமானவள் பார்வதி என்ற பெண் தெய்வம். அவள் குப்பன் என்ற கிழக் குயவனின் மூத்த மகள். அவளுக்குப் பதினெட்டு வயசு இருக்கும். உத்தம குணங்களுக்கு உறைவிடமானவள் என்று அவளை அறிந்தவர்கள் சொல்லுவார்கள்.

* * * *

என்றைக்கும் வெளியே வராத பார்வதி ஒரு நாள் வீட்டில் வேறு யாரும் இல்லாததால் தானே பானை வாங்க நல்லண்ணனிடம் வந்தாள். அவளைப் பார்த்ததுமே நல்லண்ணன் மனம் பூரித்தது. நல்ல பானையாகத் தட்டிப் பார்த்துக்கொண்டே, "கண்ணாலம் ஆயிடுத்தா, அம்மா?" என்று கேட்டான்.

"இல்லை" என்று பார்வதி சிரித்துக்கொண்டே கூறினாள்.

"எனக்குக் கூடத்தான் ஆகல்லே; ஆனால் நீங்களெல்லாம் என்னைக் கட்டிப்பீங்களா?" என்று நல்லண்ணன் ஒரு போடு போட்டான்.

பார்வதி பதில் கூறாமல் வெட்கத்துடன் தலையைக் குனிந்துகொண்டே பானையை வாங்கிக்கொண்டு போய்விட்டாள்.

'குப்பன் பானை செய்வதையே விட்டு விட்டானே, எப்படி ஜீவனம் பண்ணுகிறான்?' என்று நல்லண்ணன் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

ஒரு மாசத்திற்குப் பிறகு நல்லண்ணன் குப்பன் வீட்டிற்குப் போய் அவன் பெண்ணைத் தனக்குக் கட்டிக் கொடுக்கும்படிக் கேட்டான். குப்பனுக்கு முதலில் இஷ்டமில்லை. ஆனால் நல்லண்ணன் அதிகப் பணம் சேர்த்து வைத்திருந்ததாக அவன் கேள்விப்

பட்டிருந்தது அவனைக் கடைசியில் இசையச் செய்தது.

"பார்வதிக்கு எது இஷ்டமோ அதுவே எனக்கும் இஷ்டம். அவளைக் கேட்காமல் ஒண்ணும் செய்ய மாட்டேன்" என்றான்.

"என்னெதிரிலேயே கூப்பிட்டுக் கேட்டு விடுங்கள்" என்று நல்லண்ணன் கூறினான்.

பார்வதி வந்ததும், "இவனைக் கல்யாணம் பண்ணிக்கிறயா ?" என்று குப்பன் கேட்டான். பார்வதியின் முகம் வெட்கத்தால் சிவந்துவிட்டது.

"ஒனக்குப் புடிச்சாப் போதும்" என்று சொல்லிக்கொண்டு உள்ளே ஓடிவிட்டாள்.

நல்லண்ணனுக்கு உடனே கல்யாணத்தை முடித்துக்கொள்ள வேண்டுமென்று ஆசைதான். ஆனால் அவன் சேர்த்து வைத்திருந்த பணம் ஊரார் சொல்லிக் கொண்டதுபோல் அவ்வளவு அதிகமாக இல்லை. ஆகவே, 'இன்னும் கொஞ்சம் காசு சேரட்டும். இரண்டு மூன்று மாசங்கள் கழித்துப் பண்ணிக் கொள்ளலாம்' என்று எண்ணிக்கொண்டு சுறுசுறுப்புடன் உழைத்துப் பணம் சேர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தான்.

* * * *

அவிநாசிக் கிராமத்திலிருந்த சிவன் கோவிலில் பிரம்மோத்ஸவம் ஆரம்பமாயிற்று. கோவில் செல விற்காகச் சோழ அரசர்கள் பல விளை நிலங்களை விட்டிருந்தார்கள். கோவில் காரியங்கள் அனைத் தையும் கிராமத்தை ஆண்டு வந்த கிராம சபையாரே கவனித்து வந்தார்கள். கோவிலுக்குச் சொந்தமான நகைகளும் ஏராளமாக இருந்தன. சாதாரண நாட்களில் அவை கிராம சபையார் பாதுகாப்பில் இருக்கும். உத்ஸவம் நடைபெறும்போது அவற்றைப்

பெட்டியுடன் கோவிலிலேயே வைத்திருப்பார்கள். உத்ஸவம் ஆரம்பித்தவுடன் காவலுக்காக ஊரிலுள்ள இளைஞர்களை ஏற்படுத்துவது வழக்கம். இந்தத் தொண்டைச் செய்வதற்கு 'நான் முன், நீ முன்' என்று இளைஞர்கள் வருவது வழக்கம். இந்த வருஷத்தில் நல்லண்ணன் மூன்றும் நாள் இரவு தானே காவல் செய்வதாக ஒப்புக்கொண்டான். அவன் நண்பன் கந்தசாமி தானும் அவனுடன் காவல் இருப்ப தாகக் கேட்டுக்கொண்டான்.

மூன்றும் நாள் வந்தது. நல்லண்ணன் இரவு பத்து மணியிலிருந்து இரண்டு மணி வரையில் காவலிருக்க வேண்டுமென்றும், பிறகு தான் வந்து அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டுக் காவல் செய்வ தாகவும் இப்படிச் செய்தால் இருவருக்கும் சிறிது தூங்குவதற்கு ஓய்வு கிடைக்கும் என்றும் கந்தசாமி நல்லண்ணனிடம் கூறினன். நல்லண்ணனும் இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதித்தான்.

இரவு பத்து மணி சுமாருக்கு நல்லண்ணன் நன்ருகப் போர்த்திக்கொண்டு கையில் தடியுடன் கோவில் வாசற்படியில் வந்து உட்கார்ந்துகொண்டே இருந்தான். சந்திரன் நடு வானத்துக்கு வந்துவிட் டான். மணி இரண்டுக்கு மேலிருக்கும் என்று தோன்றிற்று. கந்தசாமியைக் காணவில்லை. தூக்கத் தால் நல்லண்ணன் தலை ஆட ஆரம்பித்தது. உட் கார்ந்தபடியே நல்ல தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டான்.

மறுபடியும் அவன் கண் விழித்தபோது சூரியனது செங்கிறக் கிரணங்கள் கிழக்கே தோன்றிக் கொண்டிருந்தன. சுற்றிலும் பார்த்தான். கந்தசாமி வந்ததாகவே தோன்றவில்லை. கோவில் தர்மகர்த்தர் வந்ததும் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குப் போனன். சிறிது நேரத்திற்குப் பிறகு கோவிலில் பெரிய பரபரப்பு உண்டாயிற்று.

ஸ்வாமியின் நகைப் பெட்டியிலிருந்த சில நகைகள் காணப்படவில்லை. அவைகள் இருந்த இடத்தில் தேய்ந்துபோன ஒரு பழைய வெள்ளி மோதிரம் கிடந்தது.

கிராம சபையார் கோவிலில் கூடினார்கள். ஊர் ஜனங்களும் கோவிலுக்கு வந்து கூட்டம் கூடி விட்டார்கள். நகைப் பெட்டியிலிருந்த வெள்ளி மோதிரத்தை நல்லண்ணனின் இடது கைவிரலில் தான் பலமுறை பார்த்திருப்பதாகக் கந்தசாமி கூறினான்.

நல்லண்ணன் அழைக்கப் பெற்றான். கிராம சபைத் தலைவர் அவனிடம் மோதிரத்தைக் காட்டி, "இது யாருடையது?" என்று கேட்டார்.

"என்னுடையதுதான்" என்றான் நல்லண்ணன். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"நகைகளை எடுத்தது நீதானா?" என்று மறுபடியும் கேள்வி பிறந்தது. நல்லண்ணனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"கடவுளறியச் சொல்லுகிறேன், நான் எடுக்க வில்லை. இரண்டு மணிக்கு வருகிறேன் என்று சொன்ன கந்தசாமி வரவில்லை. பிறகு நான் தூங்கி விட்டேன். அப்போது எவனாவது வந்து எடுத் திருப்பான்" என்று நாக்குழறக் கூறினான்.

கந்தசாமி எழுந்திருந்து, "நான் இரண்டு மணிக்கு வருவதாகச் சொன்னது வாஸ்தவந்தான். ஆனால் தலைவலி அதிகமாக இருந்தது; வரமுடியவில்லை" என்றான்.

"நீ நகைகளைத் திருடவில்லை என்றால் உன் கைவிரல் மோதிரம் அங்கே எப்படி வந்தது?" என்று கிராமசபைத் தலைவர் மறுபடியும் நல்லண்ணனைக் கேட்டார்.

"எனக்குத் தெரியாது. மோதிரம் என்னுடையதுதான்; ஆனால், நான் நேற்றுக் கோவிலுக்கு வந்தபோது அது என் கையில் இல்லை" என்று நல்லண்ணன் கூறினான்.

"பின் எங்கே இருந்தது?" என்ற கேள்விக்கு நல்லண்ணன் பதில் கூறவில்லை.

நல்லண்ணனுக்குச் சட்டென்று நினைவு வந்தது. சுமார் இரண்டு மாசங்களுக்கு முன் ஒரு நாள் பார்வதியுடன் பேசிக்கொண்டிருக்கும்போது அவள் அந்த மோதிரத்தைத் தன் விரலில் கண்டு, "நன்றாயிருக்கிறது" என்று சொன்னதும், "நன்றாயிருந்தால் நீதான் எடுத்துக் கொள்ளேன்" என்று அவன் கழற்றிக்கொடுத்ததும் அவன் மனக்கண்முன் வந்தன. பார்வதியும் அவ்வாறு செய்வாளா என்று ஒரு கணம் யோசித்தான். ஆனால் அவளையும் அறியாமல் அவள் தகப்பன் செய்திருந்தாலும் இருக்கலாம் என்று தோன்றிற்று. ஒரே நிமிஷத்தில் நல்லண்ணன் மனசைத் திடம் செய்து கொண்டான். மோதிரத்தைப் பார்வதியிடம் கொடுத்திருந்ததை வெளியிடுவதைவிடக் குற்றத்தைத் தானே சுமப்பதென்று தீர்மானித்தான்.

நல்லண்ணன் மௌனமாய் நின்றதிலிருந்து, அவன் குற்றவாளியென்றே எல்லோரும் நினைத்தார்கள். அவன் வீடும், சொத்துக்களும் கிராம சபையாரால் பறிமுதல் செய்யப்பட்டன. அவன் பார்வதியின் வீட்டு வாசலில் போய் நின்றான். அப்போது உள்ளிருந்து வெளியே வந்த குப்பன் தலையை ஆட்டிக்கொண்டு, "என் மகள் திருடனைக் கட்டிக் கொள்ள மாட்டாள். நீ இங்கே இனிமேல் வராதே!" என்று கடுமையாகப் பேசினான். நல்லண்ணன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு பதில் பேசாமல் வெளியேறினான்.

மறுநாள் முதல் அவிநாசிக் கிராமத்தில் அவனை எவரும் காணவில்லை. அவன் எங்கே சென்றான் என்பதும் எவருக்கும் தெரியாது.

* * * *

நான்கு வருஷங்கள் கடந்தன. நல்லண்ணன் திரும்பி வரவில்லை.

கந்தசாமியின் குடும்பத்திலும் எதிர்பாராத கஷ்டங்கள் பல ஏற்பட்டன. ஒரு நாள் அவன் பனங்காய் வெட்டுவதற்காகப் பனை மரத்தில் ஏறியபோது கால் தவறிக் கீழே விழுந்ததில், பலத்த காயம் அடைந்தான். அத்துடன் ஜுரம் கண்டு, ஜன்னியும் பிறந்து விட்டது. சாகுந் தறுவாயில், அவனுக்குச் சற்றுப் புத்திசுவாதீனம் ஏற்பட்டது. அவன் கிராம சபையார்களுக்குச் சொல்லி அனுப்பி, தானே சிவன் கோவில் நகைகளைத் திருடியதாக ஒப்புக்கொண்டான். தனக்குப் பார்வதியைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற விருப்பமென்றும், அவள் நல்லண்ணன் மீதே காதல்கொண்டு தன்னை நிராகரித்தாளென்றும், அது முதல் நல்லண்ணனையும் பார்வதியையும் பிரித்துவைக்க நீண்ட நாட்களாகத் தனக்கு யோசனை உண்டென்றும் கூறினான். ஒரு சமயம் குப்பன் வீட்டிற்குப் போயிருந்தபோது, நல்லண்ணன் மோதிரம் மாடத்தில் வைத்திருந்ததைப் பார்த்து அதை எடுத்து வைத்துக்கொண்டதாகவும், கொஞ்ச காலத்திற்கெல்லாம் நல்லண்ணன் பிரம்மோத்ஸவத்தில் கோவில் நகைகளுக்குக் காவலிருந்தபோது, நல்லண்ணன் தூங்குகையில் கோவிலுக்குள் சென்று நகைகளைத் திருடிக்கொண்டு வேண்டுமென்றே மோதிரத்தைப் பெட்டியில் போட்டுவிட்டதாகவும் ஒப்புக்கொண்டான். "தெய்வ சொத்தைத் திருடினேன்; என் குடும்பம் உருப்படாமல் போய்விட்டது. உத்தமன்மேல் பழி சுமத்தினேன்; இப்படித் துர்மரண

மாய்ப் போகிறேனே !" என்று ஓவென்று அலறினன் கந்தசாமி.

இந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவியது. குயவன் குப்பனுக்கும் பார்வதிக்குங்கூடத் தெரிந்து விட்டது. அப்போதுதான் பார்வதிக்கு உண்மை விளங்கிற்று ; பதைபதைத்தாள். நல்லண்ணன் மோதிரத்தைத் தனக்குக் கொடுத்ததாக வெளியில் சொல்லக்கூடாது என்றே இவ்வளவு காலம் மௌனமாய்க் குற்றத்தை ஒப்புக்கொண் டிருக்கிருனென்று தெரிந்ததும் துக்கம் பொங்கி வந்தது.

குப்பனும் நல்லண்ணனின் பெருந்தன்மையைக் கண்டு வியந்தான். தானும் எல்லோருடனும் சேர்ந்து அவனைக் குற்றவாளி யென்றே அதுவரையில் நினைத்ததற்கு மனம் நொந்துபோனுன். பார்வதி அவனைச் சும்மா விடவில்லை. அவன் எங்கிருந்தாலும் கண்டு பிடித்துவிட வேண்டுமென்று அவனைத் தூண்டலானுள்.

* * * *

மாயவரத்தில் மாயூரநாதர் உத்ஸவத்திற்கு ஏராளமான கூட்டம். கடைகள் கணக்கின்றி வைத்திருக்கிருர்கள். ஒரு பானைக்கடை வாசலில் குப்பனும் பார்வதியும் நிற்கிருர்கள். பார்வதி ஒரு பானையை எடுத்து, திருப்பித் திருப்பி விரலால் தட்டினுள். பானை செய்திருக்கும் விதம் அவளுக்கு மனசில் ஒருவிதக் கிளர்ச்சியை உண்டாக்கிற்று.

பானைக் குவியல்களுக்கு நடுவில் உட்கார்ந்திருக்கும் பானைக்கடைக்காரனை உற்று நோக்கினுள். அவளை அறியாமல், "ஆ !" என்ருள்.

நல்லண்ணன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்களில் நீர் நிரம்பிற்று. தலையைக் குனிந்து கொண்டான்.

"நீங்க செய்தது நல்லா யிருக்கா?" என்று கேட்டாள் பார்வதி.

"நீ திருடனைக் கட்டிக் கொள்ளக் கூடாதென்று தான் ஓடி வந்துவிட்டேன்" என்றான் நல்லண்ணன்.

"யார் திருடன்? அதுதான் எல்லாம் தெரிந்து போய்விட்டதே!" என்று கந்தசாமி வெளியிட்ட விவரங்களைச் சொல்லி, அவன் வீடு, சொத்துக்களை யெல்லாம் திருப்பிக் கொடுக்கக் கிராம சபையார் காத்துக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தாள்; பிறகு, "எழுந்திருங்க; ஊருக்குக் கிளம்புங்க" என்றாள்.

நல்லண்ணன் பிற்காலத்தில் கணவன் என்ற முறையில் கீழ்ப்படிய வேண்டி யிருந்தவன், இப்போதே அடங்கிப் போய்ப் பார்வதி சொன்னவாறே கேட்கலானான். மறுநாள் நல்லண்ணன் அவிநாசிக் கிராமத்தில் குப்பன் வீட்டிற்கு வந்துவிட்டான்.

நல்லண்ணனும் பார்வதியும் அந்தக் கிராமத்திலேயே குடித்தனம் செய்தார்கள். அங்கே நல்லண்ணன் பானைக் கடை வைத்த பிறகு ஊரில் எல்லாரும் அவனிடமே பானை வாங்கினார்கள். ஒருகால் அவன் கையினால் செய்த பானையில் சாப்பிட்டால்கூட நாணயமும் பெருந்தன்மையும் உண்டாகும் என்று அவர்களுக்கு எண்ணமா யிருக்கலாம்.

லெச்சுமி

1

அரசலாற்றங்கரையில் ஒரு கிராமம்.

அந்தக் கிராமத்தில் ஒரு குடிசையிலிருந்து 'லொடக், லொடக்' என்று கைத்தறியின் சத்தம் வந்துகொண் டிருந்தது. தறியண்டை உட்கார்ந்து வேலை செய்துகொண் டிருந்தான் கறுப்பன். அவன் முதுகு கூனிப் போயிருந்தது. வயசு ஐம்பதுதான் ஆயிற்றென்றாலும் அவன் உடம்பில் எலும்பும் தோலுந்தான் இருந்தது.

அவன் கைமட்டும் வேலை செய்துகொண் டிருந்ததே ஒழிய அவன் மூளை இந்த வேலையில் ஈடு பட்டிருக்கவில்லை. அது வேறு விஷயத்தைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தது. இருந்தாலும் இது அவன் நெசவு வேலையை ஒன்றும் பாதிக்கவில்லை. அவன் கைகள் அவ்வளவு தேர்ச்சி பெற்றிருந்தன. பதினைந்து வயசிலிருந்து உண்டான பழக்கமல்லவா அது!

யாரோ கதவைத் திறக்கும் சத்தங் கேட்டுக் கறுப்பன் திரும்பிப் பார்த்தான். ஒரு பெண் பிள்ளை, தலையில் இரண்டு தண்ணீர்ப் பானைகளை வைத்துப் பிடித்துக்கொண்டு, தணிந்திருந்த வாசல் நிலை இடிக்குமோ என்று குனிந்துகொண்டே, உள்ளே நுழைந்தாள். இவ்வளவு நேரம் கறுப்பன் மூளை சிந்தித்துக்கொண் டிருந்தது இவளைப்பற்றித்தான்.

கறுப்பன், பேசாமல் தறியை விட்டு எழுந்து சென்று, அந்தப் பெண் தலையிலிருந்து ஒரு தண்ணீர்ப் பானையை இறக்கி ஒரு பக்கமாக வைத்தான். இன்னொன்றை அந்தப் பெண்ணே இறக்கி அதன் பக்கத்தில் வைத்தாள். அந்த மூலையில் இன்னும் இரண்டு மூன்று சோறு சமைக்கும் பானைகள், ஓர் அகப்பை, ஓர் உடைந்த அடுப்பு, ஒரு விறகுச் சுள்ளிக் கட்டு இவைகளும் இருந்தன. இவ்வளவுதான் அந்த வீட்டிலே இருந்த ஐசுவரியம் எல்லாம். இல்லை - இன்னொரு மூலையில் கிடந்த கிழிந்த பாயையும், அதன் மேலிருந்த கிழிசல் வேஷ்டியையும் புடைவையையுங்கூட இதிலே சேர்த்துக்கொள்ள வேண்டும்.

தண்ணீர்ப் பானையைக் கீழே வைத்துவிட்டு, கறுப்பன் அந்தப் பெண்ணின் எதிரில் நிமிர்ந்து நின்றான். இதிலே அவன் முதுகுக் கூனல்கூடச் சிறிது நிமிர்ந்தது.

''தண்ணி கொண்டுவர இவ்வளவு நேரமா ஆச்சு? வழியிலே நீ அந்தத் திருட்டுப் பையனைப் பாக்கல்லே?'' என்று அதட்டும் குரலில் கேட்டான்.

அந்தப் பெண் திடுக்கிட்டு ஒரு மருண்ட பார்வை பார்த்தாள். "யாரைச் சொல்லறே?" என்று கேட்டாள்.

"யாரைச் சொல்லறேனா? நான் சொல்றதென்ன? இந்த ஊரெல்லாம் யாரைப்பத்திச் சொல்லுதோ அவனைத்தான் சொல்றேன்!"

"நான் யாரையும் பாக்கல்லே, நாயனா!" என்றாள் பெண்.

''நீ பாப்பயோ பாக்க மாட்டியோ, அதோ மேலே இருந்து எரிக்கிறானே அவனுக்குத்தான் தெரியும். இந்த அம்பது வருஷத்திலே 'கறுப்பன் இப்படி' என்று ஒருத்தர் ஒரு பேச்சு என்னைச் சொன்னதில்லை. அந்தப் பேரைக் கெடுக்காதே அம்மா

என்றுதான் கேட்டுக்கறேன்!" என்று சொல்லி விட்டுக் கறுப்பன் தன் தறியண்டை போய் உட்கார்ந் தான்.

அந்தப் பெண், அடுப்பண்டை உட்கார்ந்து அதைப் பற்ற வைக்கத் தொடங்கினுள். அவள் கறுப்பனின் ஒரே மகள். பெயர் பாக்கியம். இரு பத்திரண்டு வயசு இருக்கும். அவள் பதினெட்டு வயசாக இருந்தபோது கறுப்பன் அவளை அவள் மாமனுக்குக் கட்டிக்கொடுத்தான். கல்யாணமான ஆறு மாசத்துக்கெல்லாம் அவள் புருஷன் காலராவில் இறந்தான். பாக்கியத்தைத் 'துடைகாலி' என்று சொல்லி மாமியார் வீட்டினர் பிறந்த வீட்டிற்கே விரட்டி விட்டனர். அப்புறம் அவள் தாயும் இறந்தாள்.

தகப்பனும் மகளும் சந்தோஷமாகவே காலம் தள்ளி வந்தனர். திடீரென்று அவர்கள் சந் தோஷத்தைக் கெடுக்க ஒன்று வந்து சேர்ந்தது. இது, பாக்கியம் அடுத்த கிராமத்திலிருந்த ஒருவனை ஆற்றங்கரையில் சந்தித்துப் பேசுவதும் சிரிப்பதுமாய் இருந்ததாய்க் கறுப்பன் காதில் விழுந்த வதந்திதான். கறுப்பன் இதையெல்லாம் முதலில் நம்பவில்லை. தன் மகள் கெட்ட வழிகளுக்குப் போகமாட்டாள் என்று அவன் திடமாக நம்பினுன். இருந்தாலும் அடிக்கடி ஒவ்வொருவராக இதே புகாரை அவனிடம் சொன்ன போது அவன் நம்பிக்கை குறையத் தொடங்கியது.

திடீரென்று அவன் நம்பிக்கையில் மண் விழுந்தது. ஒரு நாள் காலை, ஆற்றங்கரைக்குத் தண்ணீர் எடுக்க வந்த பெண்கள் கரையில் இரண்டு பானைகள் வைத்திருந்ததைக் கண்டார்கள். அவை கறுப்பன் மகள் பாக்கியம் வழக்கமாகக் கொண்டு வரும் பானைகள்.

பாக்கியத்தைக் காணவில்லை. ஆற்றிலே விழுந் திருப்பாளோ என்று தேடினார்கள். அகப்படவில்லை. அடுத்த கிராமத்து மருதமுத்துவுடன் எங்கோ போய் விட்டாள் என்று ஊரார் பேசிக்கொண்டதைக் கேட்டுக் கறுப்பன் மனம் உடைந்து போனான்.

2

பதினைந்து வருஷங்கள் சென்றன.

இப்போது, கறுப்பன் வீட்டிலிருந்து அந்த 'லொடக் லொடக்' சத்தம் வருகிறதில்லை. கறுப்பன் இறந்து போய்விடவில்லை. உயிரோடுதான் இருந் தான். ஆனால் இப்போது அவன் நெசவு வேலை செய்வதில்லை. அவனுக்குக் கைநடுக்கம் எடுத்து விட்டது. கண் பார்வை மங்கிவிட்டது. அதுவும் அல்லாமல் அவன் இனி யாருக்காக உழைத்துப் பணம் சேர்க்க வேண்டும்? அவன் வயிற்றுச் சாப் பாட்டுக்கு அந்த ஊர் மிராசுதார் உதவி செய்து வந்தார்.

கறுப்பனும் இப்போது அதிகமாக மாறிவிட வில்லை. தலைமட்டும் மினு மினுவென்று வழுக்கை யாய் விட்டது. முதுகு முன்னிலும் அதிகம் கூன் விழுந்திருந்தது. அவ்வளவுதான்.

ஒரு நாள் கறுப்பன், வீட்டில் உட்கார்ந்து பிய்ந்து போன தன் செருப்புக்கு ஆணி அடித்துக்கொண் டிருந்தான். அப்போது, "கொஞ்சம் சோறு போடு, தாத்தா" என்று ஒரு குரல் கேட்டது. அந்தக் குரல் கறுப்பனைத் திடுக்கிடச் செய்தது. அவன் காது களுக்கு அதிகப் பழக்கமான குரலாய் இருந்தது அது. ஆனால், அந்தக் குரலை உடையவள் போய்ப் பதினைந்து வருஷம் ஆயிற்றே!

"யார் அது?" என்றான் கறுப்பன்.

"கொஞ்சம் சோறு போடு, தாத்தா!"

கறுப்பனை, 'தாத்தா' என்று யாரும் அதுவரையில் கூப்பிட்டதில்லை. 'நாம் என்ன அவ்வளவு கிழவனாகவா ஆய்விட்டோம்!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே எழுந்து, கறுப்பன் வாசற்படியருகில் வந்து அங்கு நின்றிருந்த பெண்ணைக் கூர்ந்து கவனித்தான். அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் எதிரில் நின்றிருந்தாளே, அவள் யார்? பாக்கியமா?

அவள் பாக்கியம் அல்ல. ஆனால், இருபது வருஷங்களுக்கு முன்னால் கறுப்பன் அவளைப் பொன்னம்பலத்துக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதற்கு முன் பாக்கியம் எப்படி இருந்தாளோ அப்படியே இருந்தாள் இவள். வயசு பதினான்கு இருக்கும். கிழிசல் துணியைச் சுற்றிக்கொண்டு அரை நிர்வாணமாய் இருந்தாள்.

"நீ யார்?" என்று கறுப்பன் மறுபடியும் கேட்டான்.

"பிச்சைக்காரி" என்றாள் அவள்.

"அது தெரியும். உன் ஊர் எது?"

"தெரியாது."

"உன் அப்பன் பேர் என்ன?"

"அப்பன் இல்லை."

"செத்துப் பூட்டானா?"

கொஞ்ச நேரம் அவள் விழித்தாள். அப்புறம், "தெரியாது" என்றாள்.

"உன் அம்மா இல்லையா?"

"செத்துப் பூட்டாள்."

"அவள் பேர் தெரியுமா?"

"பாக்கியம்."

கறுப்பனுக்கு மறுபடியும் தூக்கி வாரிப் போட்டது. "உன் பேர் என்ன?" என்றான்.

"லெச்சுமி" என்று பதில் சொன்னாள். கறுப்பன் கேட்டான்: "லெச்சுமி, இந்த ஐயம்பேட்டைக்கு நீ ஏன் வந்தாய்? கெட்ட ஊராச்சே இது. இது வரையில் எங்கே இருந்தாயோ அங்கேயே இருப்பது தானே?" - இப்படிக் கேட்டபோது அவன் குரல் நடுங்கிற்று.

லக்ஷ்மி சிரித்தாள்; "எங்க அம்மா சாகிறபோது 'நீ எங்கேயாவது போய்ப் பிழைச்சுக்கோ. ஆனா ஐயம்பேட்டைக்கு மட்டும் போகாதே' என்று சொன்னாள். அப்படி இந்த ஐயம்பேட்டையிலே என்ன இருக்கு என்று பார்க்கத்தான் வந்தேன்" என்றாள்.

கறுப்பன் ஒரு பெருமூச்சு விட்டான். உள்ளே சென்று, கூரையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த ஒரு மூட்டையை அவிழ்த்தான். அதில், பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் பாக்கியம் மறைந்து போன போது அவள் வைத்துவிட்டுப் போன பழம் புடைவை ஒன்று இருந்தது. அதைக் கொண்டுபோய் லக்ஷ்மியிடம் கொடுத்து, "சோறு இப்போ இல்லை; இதைக் கட்டிக்கோ" என்றான்.

லக்ஷ்மி புடைவையைப் பிரித்துப் பார்த்தாள். பூச்சி தின்று செல்லும் அரித்து அது சல்லடைக் கண்களாய் இருந்தது. துணி மக்கிப் போயிருந்ததால் ஒரு தரம் உதறினவுடனே துண்டு துண்டாய்ப் பறந்தது.

"இதென்னத்துக்கு எனக்கு? நீயே வச்சுக்கோ" என்று சொல்லி அதை அங்கேயே போட்டுவிட்டு லக்ஷ்மி போய்விட்டாள்.

அன்று சாயங்காலம், 'லொடக் லொடக்' என்ற அந்தப் பழைய சத்தம் பல வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் கறுப்பன் வீட்டிலிருந்து வருவதைக் கேட்டுத் தெருவோடு போனவர்கள் அதிசயித்தார்கள்.

3

"உள்ளே வா, உள்ளே வா" என்று கறுப்பன் தறியண்டை உட்கார்ந்தபடியே கூப்பிட்டான். லக்ஷ்மி குதித்துக்கொண்டே உள்ளே ஓடிவந்து நின்றாள். கறுப்பன் எழுந்திருந்து அவள் கையைப் பிடித்துக்கொண்டான்.

"இதோ பார், ஒரு புடைவை நெய்கிறேன். பாதி ஆகிவிட்டது. இன்னும் பத்து நாளில் முடிந்துவிடும்" என்று சொல்லிவிட்டு, "இது யாருக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

லக்ஷ்மி, ஒன்றும் புரியாமல் தன் மலர்ந்த கண்களை விழித்துப் பார்த்தாள்.

"உனக்குத்தான் இது" என்றான் கறுப்பன்.

"பொய் சொல்லாதே, தாத்தா" என்றாள் லக்ஷ்மி.

கறுப்பன் சிரித்தான்; "இன்னும் பத்து நாள் பொறுத்துக்கோ" என்று பத்து விரலையும் காட்டினான்.

ஆனால் அந்தப் பத்து நாட்களுக்குள் கறுப்பனுக்கு ஜுரம் வந்துவிட்டது. கணுவுக்குக் கணு வலி எடுத்து எழுந்திருக்க முடியாமல் படுத்துவிட்டான். வயிற்றுக்குச் சரியான ஆகாரம் இல்லாததனாலேயே உடம்புக்கு நோவு வந்தது என்று அவனுக்குத் தெரியவில்லை.

சாயங்காலம் லக்ஷ்மி வந்தாள்; "தாத்தா, தாத்தா, புடைவை எப்படி இருக்குது?" என்று கேட்டுக்கொண்டே ஓடி வந்தாள். கறுப்பன் கீழே படுத்துக் கிடந்ததைப் பார்த்துத் திகைத்து நின்றாள்.

"காச்சல் வந்துட்டுது" என்றான் கறுப்பன்.

ஒட்டிப் போயிருந்த அவன் வயிற்றைக் கவனித்தாள் லக்ஷ்மி. "சோறு இன்னிக்கி உனக்கு யார் போட்டது?" என்று கேட்டாள்.

"சோறுமில்லே, ஒண்ணுமில்லே" என்று கறுப்பன் முனகினன்.

"நான் போய் நாலு வீட்டில் கேட்டுக் கொஞ்சம் சோறு கொண்டுவருகிறேன்" என்று சொல்லிவிட்டு, லக்ஷ்மி தன் தகரக் குவளேயைத் தூக்கிக்கொண்டு ஓடினுள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, லக்ஷ்மி சந்தடி செய்யாமல் உள்ளே நுழைவதைக் கண்டு கறுப்பன் எழுந்து உட்கார்ந்தான்.

"இந்தா, உனக்குப் பால் வாங்கி வந்தேன்" என்று லக்ஷ்மி அவனிடம் குவளேயை நீட்டினுள். கறுப்பன் ஆவலோடு அதை வாங்கிக் குடித்துவிட்டுத் திடீரென்று, "உன்னிடம் ஏது துட்டு?" என்ருன்.

"இருந்தது" என்று சொல்லிவிட்டு லக்ஷ்மி வெளியே சென்ருள்.

அவள் போன சிறிது நேரத்துக்கெல்லாம், கறுப்பன் வீட்டு வாசலில் இரைச்சல் கேட்டது. "ஐயோ, நான் செய்தது தப்புத்தான். தெரியாமல் செஞ்சுட்டேன்" என்று யாரோ அழும் சத்தமும் கேட்டது. அது லக்ஷ்மியின் குரலாக இருக்கவே, கறுப்பன் கலவரமடைந்து, சுவரில் கையை ஊன்றிக் கொண்டே நடந்து வாயிற்படி யருகில் வந்து நின்ருன்.

தெருவில் ஏழெட்டு ஸ்திரீ புருஷர்களுக்கு மத்தியில் லக்ஷ்மி அழுதுகொண்டு நின்றிருந்தாள். அவள் தலே மயிரைப் பிடித்து உலுக்கிக்கொண் டிருந்தான் ஒருவன்.

"ஏ, என்ன அது?" என்று கறுப்பன் கேட்டான்.

"இந்தச் சிறுக்கி எங்க வீட்டு மாடத்திலிருந்து ஓரணுவைத் திருடி, ரங்கப்பிள்ளே வீட்டில் பால் வாங்கிக் குடிச்சாளாம்" என்ருன் அவன்.

"போனுப் போவுது. சின்னப் பெண். விட்டு டப்பா" என்ருன் கறுப்பன். அவன் நாக்குழறிற்று.

லக்ஷ்மிக்குக் கன்னத்தில் நாலு அறை விழுந்தது, "இந்தக் கழுதைக்குப் பால் இல்லாமே அழறதா? பால்! ஒடு, கழுதை. இனி இந்த ஊர்ப் பக்கம் வந்தால் காலை முறித்துவிடுவோம்" என்று அவளை அடித்து விரட்டினுர்கள்.

4

மறுநாள் காலையில் வீட்டு வாசலில் உட்கார்ந்து காலை இளம் வெயிலில் குளிர் காய்ந்துகொண் டிருந் தான் கறுப்பன். அப்போது அடுத்த வீட்டுப் பையன் கண்ணன், வேலைக்குப் போகப் புறப்பட்டவன், "உடம்பு எப்படி யிருக்குது?" என்று கறுப்பனைப் பார்த்துக் கேட்டான்.

"காச்சல் தேவலை" என்று பதில் சொன்னுன்.

கண்ணன் சிறிது நேரம் யோசனை செய்து கொண்டு சும்மா நின்றிருந்தான். பிறகு, "அந்தப் பிச்சைக்காரி அன்று உனக்குக் கொடுத்த பாலில்தான் உன் உயிர் பிழைத்தது" என்ருன்.

கறுப்பன் திடுக்கிட்டுக் கண்ணனை விழித்துப் பார்த்தான்.

"எனக்கு எல்லாம் தெரியும், தாத்தா. அப்புறம் அந்தப் பெண் உதைபட்டதைக்கூடப் பார்த்தேன். எனக்கு மனசு ரொம்பக் கஷ்டமாய்விட்டது. பாவம், அந்தப் பெண்ணைப் பார்த்தால் ஐயோ என்று இருக்கு" என்று சொல்லிவிட்டுக் கண்ணன் போய் விட்டான்.

அவன் உருவம் மறைகிற வரையில் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுக் கறுப்பன் ஒரு பெருமூச்சு விட்டான். அந்த ஊரில் அவனுக்கு அதிகம் பிடித் திருந்தவர்களில் கண்ணன் ஒருவன்.

கறுப்பன் மனம் என்னவெல்லாமோ எண்ணியது. லக்ஷ்மியைத் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டு வளர்த்துக் கண்ணனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டால் என்ன? ஆனுல், ஊரார் என்ன சொல்வார்கள். - இவ்வளவு நாள் நல்ல பெயர் எடுத்துவிட்டு -

ஊரார் என்ன செய்வார்கள் என்பது உடனே அவனுக்குத் தெரிந்தது. கண்ணை மூடியவாறே கறுப்பன் யோசனை செய்துகொண்டு உட்கார்ந்திருந்த போது, "பெரியவரே!" என்று யாரோ கூப்பிடுவதைக் கேட்டுக் கண்ணைத் திறந்து பார்த்தான். அன்று லக்ஷ்மியை அடித்து விரட்டினவன் தன் எதிரில் நின்றிருந்ததைப் பார்த்து, "என்ன?" என்று சிறிது கோபத்துடனே கேட்டான். அந்த ஆளைக் கண்டாலே அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுக்குச் சுமார் நாற்பது வயசிருக்கும். ஊருக்குப் புதிதாக வந்தவன் அவன். பதினெட்டு வயசுப் பெண் ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு அந்த ஐயம்பேட்டைக்குக் குடித்தனம் செய்ய வந்திருந்தான். இதனுல் அவனிடம் கறுப்பனுக்கு ஏற்கனவே வெறுப்பு ஏற்பட்டிருந்தது. இப்போது அந்த வெறுப்பு அதிகமாய்விட்டது.

"அந்தப் பிச்சைக்காரப் பெண் மறுபடியும் இந்தப் பக்கம் வந்தாளா?" என்று கேட்டான் அவன்.

"அப்புறம் அவளை நான் பார்க்கவில்லை" என்று கறுப்பன் பதில் அளித்தான்.

"வராதவரையில் பிழைத்தாள். மறுபடியும் இங்கே அவளைப் பார்த்தேனுனுல் காலை முறித்துவிட மாட்டேனு? இந்த மருதமுத்துவின் வீட்டிலே வந்து திருடினுளே, என்ன நெஞ்சுத் தைரியம் அவளுக்கு!" என்று மீசையை முறுக்கிக்கொண்டு அந்த ஆள் போய்ச் சேர்ந்தான்.

கறுப்பனும் யோசனையுடன் எழுந்து வீட்டுக்குள் போய் உட்கார்ந்தான். 'மருதமுத்து, மருதமுத்து!' அந்தப் பெயர் அவன் ஏற்கனவே ஒரு தரம் கேட்டிருந்ததுதான். ஆனால் அதெல்லாம் பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் நடந்தவை.

5

அமாவாசை இருட்டு. கறுத்த மேகங்கள் வானத்தில் ஒன்று சேர்ந்து குமுறிக்கொண்டிருந்தன. "தாத்தா! தாத்தா!" என்று ஒரு மெல்லிய குரல் இருட்டிலிருந்து வந்ததைக் கேட்டுக் கறுப்பன் வெளியே வந்து, அங்கு நின்றிருந்த லக்ஷ்மியைக் கையைப் பிடித்து உள்ளே அழைத்துப் போனான்.

"நாலு நாளாய் உன்னைக் காணோமே, லக்ஷ்மி" என்றான்.

"எனக்கு இங்கே வரப் பயமாய் இருக்கிறது. இந்த ஊரிலே என்னைக் கொன்று போடுவார்களே, தாத்தா" என்றாள் லக்ஷ்மி.

"ஆமாம், ஆமாம்; நீ இனிமேல் இங்கே வர வேண்டாம். அந்தப் பாவி உன் காலை முறித்து விடுவேன்னு சொன்னான்."

கறுப்பன் கையிலிருந்த லக்ஷ்மியின் கரம் நடுங்கியது. அவள் கண்களிலிருந்து பலபலவென்று நீர் சொரிந்ததை அந்தக் கும்மிருட்டில் கறுப்பன் பார்க்கவில்லை. அவள் கையை விட்டுவிட்டுத் தடவிக்கொண்டே சென்று தான் நெய்து வைத்திருந்த புடைவையை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

லக்ஷ்மி புடைவையை வாங்கி மோந்து பார்த்தாள். புதுத் துணிகளிலிருந்து வரும் வாசனை அடித்தது. சந்தோஷத்தோடு ஒரு பெருமூச்சு விட்டாள்.

"நாளை ராத்திரி இதைக் கட்டிண்டு வந்து உனக்குக் காட்டறேன்" என்றாள்.

கறுப்பன் இருட்டிலே தன் கையைப் பலமாக ஆட்டினன்.

“வேண்டாம், வேண்டாம். நீ இனிமேல் இங்கே வரவேண்டாம். உன்னைக் கொன்று போடு வார்கள். லக்ஷ்மி, போய்விடு. யாராவது உன்னைப் பார்த்துவிடுவார்கள்; ஓடிப்போய்விடு” என்ருன்.

லக்ஷ்மி புடைவையை மார்போடு அணைத்துக் கொண்டு வெளியே ஓடி அந்தகாரத்தில் மறைந்தாள்.

கறுப்பன் படுத்துக் கொண்டான். ஒரு புது உணர்ச்சி அவன் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை யில் பரவியது. அது சந்தோஷத்தால் ஏற்பட்டதா, துக்கத்திஞல் ஏற்பட்டதா என்று சொல்ல முடியாது.

அவன் படுத்த ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் ‘சோ’ என்று மழை பிடித்துக்கொண்டது. ஓடின லக்ஷ்மி, மழைக்குப் பயந்து கறுப்பன் குடிசைக்கு மறுபடியும் ஓடி வந்தாள். உடம்பிலிருந்து ஜலம் சொட்டச் சொட்ட, “தாத்தா, தாத்தா!” என்று கூப்பிட்டாள். பதிலில்லை; கீழே உட்கார்ந்து, படுத்துக் கொண் டிருந்த கறுப்பனை அசைத்தாள். அவன் உடல் விறைத்துக்கொண்டு ஜில்லென்று இருந்தது. லக்ஷ்மிக்குத் திகிலாய்விட்டது. புடைவையை அங்கேயே போட்டுவிட்டு, அந்தக் காற்றையும் மழையையும் பொருட்படுத்தாமல் விழுந்தடித்துக் கொண்டு வெளியே ஓடினுள்.

அதற்கப்புறம் ‘லக்ஷ்மி’யை அந்த ஊரில் ஒருவரும் பார்க்கவில்லை. மழை பெய்து, அரச லாற்றில் புது வெள்ளம் போகும்போது, தண்ணீர் மொள்ளப் போகும் பெண்கள், அங்கே நெடுந் தூரத்திலிருந்து யாரோ தீனமான குரலில், “தாத்தா, தாத்தா!” என்று கூப்பிடுவதுபோல் ஒலிப்பதைக் கேட்டு அதிசயித்தார்கள்.

மரப்பாச்சி

தெருவில் ஆடு கத்துவதுபோல் ஒரு குரல் கேட்டது.

ஈஸிசேரில் சாய்ந்தபடியே தங்கமணி திரும்பிப் பார்த்தான். அவன் உடலில் மின்சாரம்போல் ஓர் உணர்ச்சி ஊடுருவிச் சென்றது. கையிலிருந்த புஸ்தகம் நழுவிக் கீழே விழுந்தது.

அவன் எதிரே வாசற்படியில், ஒரு பெண் வந்து நின்றாள். அவளுக்குச் சுமார் இருபது வயசிருக்கும் மெல்லிய கிழிந்த துணி ஒன்றை இடுப்பில் சுற்றிக்கொண்டு, அதையே மார்பின் மேலும் ஒரு சுற்று வரும்படி விட்டுக்கொண் டிருந்தாள். அவள் முகத்தில் கண்ட அழகே தங்கமணியை அப்படித் திடுக்கிடச் செய்தது. மாசற்ற பளிங்குபோல் இருந்த முகத்தில் மையிட்டது போன்றிருந்த கருவிழிகள் இரண்டும் ஜிலுஜிலு என்று ஒளிவிட்டுப் பிரகாசித்தன. கட்டுக்கடங்காம லும், பின்னியிராமலும் அவிழ்ந்து சுருள் சுருளாய்த் தொங்கிய தலைமயிரின் பொன்னிறம், அதில் எண் ணெய் பட்டுப் பலநாள் ஆகியிருக்கும் என்பதைக் காட்டியது. தேகத்தில் ஒவ்வோர் அவயவமும் தந்தத்தால் கடைசல் பிடிக்கப்பட்ட பதுமையின் உறுப்புக்களைப்போல் பொருத்தமாய் அமைந் திருந்தது. திருஷ்டி பரிகாரம்போல், ஒவ்வொரு கரத்திலும் கன்னங்கரேலென்றிருந்த ஒரு கண்ணாடி வளையலை அணிந்திருந்தாள்.

இங்கிலீஷ் ஸினிமா ஒன்றில் பார்த்த 'ஜிப்ஸி' நாட்டியக்காரியின் தோற்றம் தங்கமணிக்கு ஞாபகம் வந்தது. கண்கொட்டாமல் ஒரு நிமிஷம் அவளைப் பார்த்துவிட்டுப் பிறகு வெட்கத்துடன் தலை குனிந்தான். அடுத்த விநாடி மறுபடியும் தலையை உயர்த்தி, "என்ன ?" என்று கேட்டான்.

அவன் கேள்வி காதில் விழாததுபோல் அவள் சிரித்துக்கொண்டு நின்றாள். அந்த மோகனப் புன்னகை தங்கமணியின் அறிவைச் சிதற அடித்தது. மறுபடியும், "யார் நீ ? உனக்கு என்ன வேண்டும் ?" என்றான்.

அவள் தன் வலது கையை நீட்டி, "ஆ-ஆ-எ-ஏ—" என்று வாயினால் என்னவோ உளறினாள்.

தங்கமணிக்கு நெஞ்சு திக் என்றது; "நீ என்ன ஊமையா ? பேசத் தெரியாதா ?" என்று அவன் கேட்டதற்குப் பதிலாக அவள் தலையை ஓர் அசைப்பு அசைத்தாள்.

தங்கமணி அயர்ந்துபோய் உட்கார்ந்துவிட்டான். கடவுளின் விளையாட்டுத்தான் எவ்வளவு விபரீதமாயிருக்கிறது ! இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு ரூப சௌந்தர்யத்தைக் கொடுத்தவன், இவளை ஏன் பேசவொட்டாமல் அடித்துவிட்டான் ? வெளித் தோற்றத்தினால் பார்ப்பவரை மயக்கும் இவள் ஹ்ருதயம் எப்படிப்பட்டதோ ? அந்த ஹ்ருதயத்தில் எழும் உணர்ச்சிகளை வார்த்தைகள் மூலம் வெளிப் படுத்த முடியாமல் அல்லவா போய்விட்டது ? - இப்படி அவன் மனத்தில் எண்ணங்கள் ஓடிய போது அவன் நெஞ்சின்மேல் ஒரு பெரிய பாறாங்கல்லைத் தூக்கி வைத்ததுபோல் இருந்தது.

அந்தப் பெண் மறுபடியும் கையை நீட்டி, வாயினால் என்னவோ உளறிக் கொட்டினாள். தங்கமணி எழுந்திருந்து உள்ளே சென்று, ஓர்

இரண்டணு நாணயத்தைக் கொண்டு வந்து அவள் கையில் வைத்தான். அவள் கண்களை நம்பாதவள் போல், கையில் விழுந்த காசையும் அவன் முகத்தையும் இரண்டுதரம் மாறிமாறிப் பார்த்துவிட்டுக் களுக்கென்று ஒரு சிரிப்புச் சிரித்தாள். உடனே, 'இப்படிச் சிரித்துவிட்டோமே' என்று அவளுக்கே வெட்கம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. சிவந்து போன முகத்தை மார்பின்மேல் கவிழ்த்து மறைத்துக் கொண்டு அங்கிருந்து விடுவிடென்று நடந்து சென்ருள்.

தங்கமணி மறுபடியும் நாற்காலியில் உட்கார்ந்து புஸ்தகத்தைப் பிரித்தான். ஆனுல் படிப்பு ஓடவில்லை. அந்தச் செம்பட்டை மயிர் பறக்கும் முகமும், கருவிழிகளும் அவன் மனத்தை விட்டு அகல மறுத்தன. அவள் சிரிப்பின் ஒலி இன்னும் கணீரென்று அவன் காதில் எதிரொலித்துக்கொண் டிருந்தது.

தங்கமணி கிராமத்துக்குப் புதிதாய் வந்தவன். பட்டணத்திலேயே இருந்து படித்துப் பட்டம் பெற்ற அவன், சிறிதுகாலம் நிம்மதியாய் இருப்போம் என்று சாந்தியை நாடிக் கிராமத்துக்கு வந்தான். அவனுக்குச் சொந்தமான வீடு ஒன்று அங்கே அவ்வளவு காலம் பூட்டிக் கிடந்தது. கிராம முன்சீப் அவனுக்கு உறவினரானதால் சாப்பாட்டை அவர்கள் வீட்டில் வைத்துக்கொண்டான். பகலில் படிப்பது, மாலையில் வயல் பக்கம் உலாவச்செல்வது, இரவில் எட்டு மணிக்கெல்லாம் படுத்துத் தூங்குவது, - இப்படிச் சில நாட்கள் சென்றன. அவன் நாடிவந்த சாந்தியும் அவனுக்குக் கிட்டியது. அந்தச் சமயத்தில் தான், அன்று காலை அந்த ஊமைப்பெண் இந்திர ஜாலம் போலவும் அரபிக் கதைகளில் வரும் விசித்திர நிகழ்ச்சிகளைப் போலவும் திடும் பிரவேசமாய்த் தோன்றி மறைந்தாள்.

தங்கமணியின் மனத்திலிருந்த சாந்தியெல்லாம் பறந்தது. 'ஹோ' என்ற இரைச்சலுடன் ஒரு பெரும் புயற்காற்று அங்கே குடிபுகுந்தது. மனத்தை ஒரு நிலையில் நிற்கவொட்டாமல் கொந்தளிக்கச் செய்தது.

* * * *

மறுநாள் காலையில் வீடு கூட்டுகிற கிழவி வந்தபோது தங்கமணி அந்த ஊமைப் பெண்ணைப் பற்றி விசாரித்தான்.

"அந்த ஊமைச்சியா? இங்கேயும் வந்துட்டாளா அவ? நான் இருக்கிறபோது வந்திருந்தா காலை ஒடிச்சிருப்பேன். ஏன் வந்தா இங்கே அவ?" என்றாள் கிழவி.

தங்கமணிக்குக் கிழவியிடம் கோபம் உண்டாயிற்று. "பாவம், ஏன் அந்தப் பிச்சைக்காரியைத் திட்டுகிறாய்? அவள் உன்னை என்ன செய்தாள்? வாயில்லாதவள்!" என்றான்.

"வாயில்லாதவளா? அத்தனையும் விஷம்! இனிமே இங்கே வரவிடாதீங்க அவளை!" என்று கூறிவிட்டுக் கிழவி தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள்.

சிறிது நேரம் கழித்துத் தங்கமணி மறுபடியும் அந்தப் பெண்ணைப் பற்றிப் பேச்சை ஆரம்பித்தான்; "யார் அவள்? இந்த ஊர்தானா?" என்றான்.

"அவளா? ஆலப்பாக்கத்திலிருந்து வந்தவ அவ. நம்மக் குள்ளக்கவுண்டன் இருக்கானே, அவன் அக்கா மவ; அப்பனும் ஆத்தாளும் செத்துப்பூட்டாங்க. அநாதையாய்ப் பூட்டுதேன்னு குள்ளக் கவுண்டன் போயி கண்ணாலம் பண்ணிக்கிட்டு வந்தான், ஊமையா இருந்தாலும் இருக்கட்டுமின்னு. ஆனா ஊமைப் பெண்ணெ கட்டிண்டு யார் சாமி மாரடிப்பாங்க? என்ன சொன்னாலும் பதில் சொல்லத்

தெரியாது. கடைசியிலே குள்ளன் நம்ம ஊர் எல்லம் மாலேயும் ரெண்டாந்தாரமாகக் கட்டிக்கிட்டான்.''

"அப்புறம் இவளே அடித்து விரட்டி விட்டா ளுக்கும்?''

"ஏன் விரட்டருன்? அவளே கெடுத்துக்கிஞ. போட்டதைத் துன்னுட்டு விழுந்து கெடக்கக் கூடாது, வேலே செஞ்சிக்கிட்டு? அந்தக் களவாணிப் பய பச்சையப்பனெ இழுத்துக்கிட்டு எங்கேயோ ஓடிப்போயிட்டு ரெண்டு மாசம் கழிச்சுத் திரும்பி வந்தா. வந்தா யார் சாமி மறுபடியும் வீட்டிலே சேப்பாங்க? அதான் அடிச்சு விரட்டிட்டான். இப்ப பிச்சை எடுத்துத் திங்கிரு! யாரும் அவளே வீட்டுக் குள்ளே சேக்கமாட்டாங்களே!''

"ஐயோ பாவம்!''

"பாவம் என்ன சாமி வெச்சிருக்கு? இன்னும் இந்த ஊரைவிட்டு விரட்டாமலே இருக்காங்களே அவளே! இன்னும் யார் யாரை கெடுக்கப் போரு ளோ?''

கிழவி போன சற்று நேரத்துக்குப் பிறகு அந்த ஊமைப்பெண் அன்றும் முதல் நாளேப்போல் அங்கு வந்து நின்ருள். தங்கமணியைப் பார்த்ததும், மகிழ்ச்சி ததும்பும் முகத்துடன் தன் இரண்டு கைகளேயும் எதிரில் நீட்டி இப்படியும் அப்படியும் அசைத்தாள். வளேகள் கிலுகிலு என்று சப்திப் பதைப் பார்த்து அவன், "ஏது, வளே அடுக்கிக் கொண்டாயா என்ன?'' என்ருன்.

"ஆமாம்'' என்று சொல்வதுபோல் ஊமைப் பெண் தலேயை அசைத்தாள்.

"ஏது காசு?''

அவள் முகத்தில் மறுபடியும் வெட்கத்துடன் கூடிய புன்னகை தவழ்ந்தது; 'நீ கொடுத்தது'

என்று சொல்வதுபோல் மோவாய்க் கட்டையை அவன் பக்கம் உயர்த்தினுள்.

தங்கமணி நடுக்கத்துடன் ஓரடி பின் வாங்கி நின்ருன். தன்னை நோக்கி உயர்த்தப் பட்ட மோவாய்க் கட்டையையும், அதன்மேலிருந்த சிவந்த அதரங்களையும் பார்க்கையில் அவன் மனம் சற்றுச் சஞ்சலமடைந்தது.

'இந்த ஊரில் ஒருவரும் இவளை வீட்டில் சேர்ப்ப தில்லை. நாமோ நேருக்கு நேர் நின்றுகொண்டு இவ ளுடன் வார்த்தையாடுகிறும். பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள் ?' என்று ஒரு கணம் தோன் றியது. பிறகு, யார் என்ன வேண்டுமானுலும் நினைத்துக் கொள்ளட்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

"நான் கொடுத்த காசுக்கு, வளையல் அடுக்கிக் கொண்டு விட்டாய்! நேற்றுச் சாப்பாட்டுக்கு என்ன செய்தாய்?" என்ருன்.

அவள் கையை இப்படியும் அப்படியும் காண் பித்து என்னவோ பேசினுள். ஒன்றும் அவனுக்குப் புரியவில்லை. வேறு எந்த வீட்டிலோ சாப்பாடு வாங்கிச் சாப்பிட்டதாகக் கூறுகிருள் என்று தங்கமணி ஊகித்துக்கொண்டு, "இப்போது என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"ஒன்றும் வேண்டாம்" என்பதுபோல் அவள் கையையும் தலையையும் பலமாக ஆட்டினுள்.

"பின் எதற்காக வந்தாய் ?"

இந்தக் கேள்வி வாயிலிருந்து வெளிப்பட்டதும் தங்கமணி உதட்டைக் கடித்துக்கொண்டு, "ஏன் இப்படிக் கேட்டோம்?" என்று தன்னையே கோபித்துக்கொண்டான். அப்போது அவள் கண் களில் தோன்றிய பார்வையின் பொருள் சட்டென்று

அவனுக்கு விளங்கவில்லை. 'குழந்தை ஒன்று, தனக்குப் பிடித்த ஒரு மனிதரிடம் போகவேண்டுமென்று தாவிக்கொண்டு வருகிறது. ஆனால் அவரோ கோபத்துடன் அதன்மேல் எரிந்து விழுகிறார். அப்போது அது திடுக்கிட்டு ஒரு பார்வை பார்க்கிறது. - அப்படி இருந்தது அவள் அப்பொழுது பார்த்த பார்வை. அந்தக் கண்களின் ஆழத்திலே மறைந்து கிடந்த உண்மை என்னவாய் இருக்கும் என்று தெரியாமல் அவன் திகைப்படைந்தான்.

அவள், அவனைப் பார்ப்பதைவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டாள். தங்கமணிக்கு விஷயம் விளங்கியது. தன் எதிரில் நிற்பது ஒரு வயசு வந்த பெண்ணானாலும், அவள் ஹ்ருதயத்துக்குள் துடித்துக் கொண்டிருந்தது ஒரு குழந்தையின் உள்ளம். அந்தக் குழந்தை மனத்தைப் புண்படுத்திவிட்டது மனித சமூகம். அதன் உறவை நாடின அவளை, அது தன் அருகில் நெருங்கவொட்டாமல் விரட்டி விரட்டி அடித்தது. சகோதர மனிதர்களின் தொடர்பை விரும்பியே அவள் ஏக்கங்கொண்டு புதிய முகங்களைத் தேடி அலைந்தாள்.

தங்கமணி, "உன் பெயர் என்ன? நீ எனக்குச் சொல்லவில்லையே?" என்றான்.

அவள் தலை நிமிர்ந்தாள். அவள் முகம் இழந்துவிட்ட ஒளியை மறுபடியும் பெற்றது. ஆனால் வாயிலிருந்து வார்த்தை ஒன்றும் வெளிப்படவில்லை.

தங்கமணி பெருமூச்சுடன் உள்ளே சென்று உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்தான்: 'இவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு பிறகு விரட்டியடித்தானே ஒருவன், அவன் அதிருஷ்டத்தை என்னவென்பது?'

* * * *

மறுநாள் அவள் வரவில்லை. வருவாள் வருவாள் என்று ஆவலுடன் காத்துக்கொண் டிருந்து பார்த்த தங்கமணியின் மனம் வேதனை அடைந்தது. வாயிற் படியில் நின்று தெருவில் இருபுறமும் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ஏமாற்றம் அடைந்தான். அதற்கடுத்த நாளும் அவள் தோன்றுமற் போகவே அவன் மனத்தில் பெரிய ஏக்கம் குடிகொண்டது. அன்று பால் கொண்டுவந்த சிறுவனிடம் அவளைப் பற்றிப் பிரஸ்தாபித்ததும் அவன், "மரப்பாச்சியா?" என்று சிரித்தான்.

"மரப்பாச்சியா? அதென்ன?"

"அதான் சாமி, அவ பேரு."

"மரப்பாச்சி என்று ஒரு பேரா?"

"ஆமாங்க; என்ன சொன்னுலும் பதில் சொல் லாமே மரப்பாச்சிப் பொம்மை மாதிரி உம்முனு நின்னுண்டு இருப்பா. எல்லாரும் மரப்பாச்சின்னு தான் அவளைக் கூப்பிடறது."

"அவள் எங்கே, இப்போது கண்ணிலே படுகிறதில்லை?"

"ஏன், படாமே என்னுங்க? இங்கேதான் இருக்கா, எங்கே போரு? நேத்துக்கூட நான் பாத்தேனே, மோட்டுக் கழனிலே, அரச மரத்தடி யிலே?"

பையன் அவளைப்பற்றி உத்ஸாகத்துடன் பேசு வதைக் கண்டு தங்கமணி, "யார் அவள்?" என்று கேட்டான்.

பையன் சொன்னுன்: "அவ குள்ளக் கவுண்டரு மூத்த ஸம்சாரங்க. கவுண்டரு ரெண்டாம் பொஞ்சாதி கட்டிக்கிருரு. அவ இவளெப் போது விடிஞ்சாப் போது போனு அடி அடின்னு அடிச்சுப் பாடு படுத்தினு. அதுக்காக மரப்பாச்சி பயந்துகிட்டு

ஓடிடுறா. ஆனா அவ பாவம், எங்கே போவ? மறுபடியும் இங்கேதானே திரும்பி வரணும்! ஆனா இவங்க மறுபடி அவளெ வீட்டிலே சேக்கமாட்டேன் னுட்டாங்க. அதான் அவ பிச்சை எடுக்கறா!"

அன்று மாலை அவன் உலாவச் சென்றபோது, பையன் சொன்னதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அந்த மேட்டுக் கழனி அரச மரத்தடிப் பக்கம் சென்றான். அவன் எதிர் பார்த்தபடியே மரப்பாச்சி அங்கே காணப்பட்டாள். மரத்தடியில் உட்கார்ந்து, தான் சேகரித்த காட்டுப் புஷ்பங்களை மடியில் வைத்துக்கொண்டு ஒரு வாழை நாரினால் மாலையாகக் கட்டிக்கொண்டிருந்தாள். காற்றில் பறந்துகொண் டிருந்த கூந்தலில், நெற்றிக்குமேல் ஒரு பெரிய வெள்ளை நந்தியாவட்டைப் புஷ்பத்தைச் செருகி யிருந்தாள். தங்கமணி வந்ததும் அவள் ஆச்சரியத் துடன் சட்டென்று எழுந்தபோது, மடியிலிருந்த புஷ்பங்களும் தலையில் இருந்த நந்தியாவட்டையும் கீழே விழுந்தன.

"ஐயையோ, எதற்காக எழுந்திருந்தாய் நீ?" என்று சொல்லிக்கொண்டு தங்கமணி கீழே குனிந்து அந்த நந்தியாவட்டையைக் கையில் எடுத்தான். அதைத் தானே முன்பிருந்த இடத்தில் வைத்து விடலாமா என்று தோன்றிய ஆசையைக் கஷ்டப் பட்டு அடக்கிக்கொண்டு, புஷ்பத்தை அவள் கையில் கொடுத்து, "தலையில் வைத்துக்கொள்!" என்றான்.

அவள் வெட்கத்துடன் தலையை அசைத்துக் கொண்டு நின்றாள்.

"உன் பெயர் மரப்பாச்சியாமே?"

அவளுக்கு வெட்கம் தாங்க முடியவில்லை. இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டாள்.

"சரி, அது இருக்கட்டும். நீ ஏன் இரண்டு நாட்களாய் என் வீட்டுப் பக்கம் வருகிறதில்லை?"

மறுபடியும் அன்று அவள் பார்த்த பார்வையே அதற்குப் பதிலாகக் கிடைத்தது. 'நான் வருவதுதான் உனக்குப் பிடிக்கவில்லையே!' என்று அந்தப் பார்வை சொல்வதுபோல் இருந்தது.

"இதோ பார், மரப்பாச்சி! நீ என் வீட்டுக்கு வருவது எனக்குப் பிடிக்கவில்லை என்று நினைத்துக் கொள்ளாதே. உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. எல்லாரையும் போல் நான் உன்னிடம் குரூரமாய் நடந்து கொள்ள மாட்டேன்."

'ஒரு பட்டிக்காட்டு ஊமைப் பெண்ணிடம் நான் என்னவெல்லாம் பேசுகிறேன்?—' என்று தங்கமணி பேச்சைப் பாதியில் நிறுத்திக்கொண்டான்.

அப்போது சட்டென்று மரப்பாச்சி என்னவோ சொல்லிக்கொண்டு மேற்றிசை அடிவானத்தைத் தன் கையினால் சுட்டிக் காட்டினாள்.

மேற்கே, ஒரு கறுத்த மேகம் அடிவானத்திலிருந்து தலையை நீட்டிக்கொண் டிருந்தது. திடீர் திடீரென்று அதைப் பொத்துக்கொண்டு வரும் மின்வெட்டுத்தான் அவ்வாறு மரப்பாச்சியின் கவனத்தைக் கவர்ந்தது. அவள் உள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருந்த பெருமகிழ்ச்சி அவள் கண்கள்மூலம் அப்பொழுது ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

தங்கமணி அவள் பக்கம் திரும்பி, "மரப்பாச்சி! மழை வந்துவிட்டால் நீ என்ன பண்ணுவாய்?" என்று கேட்டான்.

அவள் ஒரு மாதிரியாக முகத்தை அசைத்துக் கொண்டு, கண்களைக் குறும்புத்தனமாக ஒருதரம் மூடித் திறந்தாள். 'ஹூம்! இந்த மழைக்கெல்லாம் நான் பயப்படுவேனா?' என்று அவள் வாயைத் திறந்து பளிச்சென்று சொல்லியிருந்தால்கூட அவள் கருத்தைத் தங்கமணி அவ்வளவு நன்றாகப் புரிந்து கொண்டிருக்கமாட்டான். அவனுக்குத் திகைப்புண்

டாயிற்று. 'இதற்குள், அவள் மனத்தில் தோன்றும் எண்ணங்களெல்லாம் அவள் வாய்விட்டுப் பேசாமல் இருக்கும்போதே நமக்கு எப்படித் தெரிகின்றன? என்ன ஆச்சரியம்?' என்று நினைத்துக்கொண்டான்.

* * * *

அன்றிரவு புயற்காற்று அடித்தது.

பளிச்சுப் பளிச்சென்று வானத்தில் கண்ணைச் சிமிட்டிக்கொண் டிருந்த நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றாய் மறைந்தன. வானமெங்கும் மை இருள் பரவியது. 'உஸ்' என்ற சப்தத்துடன் மரங்களினூடே வீசிய காற்று, சிறிது நேரத்துக்குள் ஹோ என்று கடல் அலையைப்போல் இரைந்துகொண்டு சுழன்று சுழன்று அடித்தது. கடபுடா என்ற இடியும், கண்ணைப்பறிக்கும் மின்னலும் மனத்துக்கு அச்சத்தைக் கொடுத்து வீட்டுக்குள் பதுங்கச் செய்தன. காற்றுடன் மழையும் சேர்ந்துகொண்டு பெய்யத் தொடங்கியது.

அறைக்குள் படுத்துக்கொண்டு கண்ணை மூடினான் தங்கமணி. 'உஸ்' என்று ஒரு காற்றடித்த போது ஜன்னல் வழியாய் மழைநீரின் சாரல் அறைக்குள் வீசியது. தங்கமணி சட்டென்று எழுந்திருந்து கையில் 'டார்ச்' விளக்குடன் ஜன்னலை மூடச் சென்றான். விளக்கு வெளிச்சம் ஜன்னல் வழியாய் வெளியே அடித்தபோது ஜன்னலுக்கு எதிரில் இருந்த வேப்பமரத்தடியில் ஓர் உருவம் நிற்பதைப் பார்த்தான்.

"யார் அது?" என்றான்.

பதில் இல்லை.

"மரப்பாச்சி!"

மரப்பாச்சி தன் கைகளை மார்பின்மேல் கட்டிக்கொண்டு, கண்ணைக் கூசச்செய்த அந்த வெளிச்

சத்தைப் பார்க்க முடியாமல் பெரிதும் மூடின கண்களுடன் ஜன்னல் பக்கம் நோக்கினுள்.

"ஐயையோ, மரப்பாச்சி! இந்த மழையில் நனைந்துகொண்டா வெளியில் நிற்கிருய்? உள்ளே வா! உள்ளே வா!"

தங்கமணி அறைக்குள்ளிருந்து வெளியே வந்து வாயிற் கதவைத் திறந்தான். மரப்பாச்சி ரேழிக்குள் நுழைந்தாள். அவளுடன் மழை நீரும் சர்ரென்று உள்ளே வாரி அடித்தது. பளிச்சென்று தோன்றிய மின்னல் ஒளியில் தங்கமணி, அருகில் நின்ற அவ்வுருவத்தைப் பார்த்தான். அவள் உடம்பு தெப்பமாய் நனைந்து நீர் சொட்டிக்கொண் டிருந்தது. மேலே சுற்றியிருந்த புடைவைத்துண்டு தேகத்துடன் பூசினுற்போல் ஒட்டிக்கொண் டிருந்தது. தங்கமணி விளக்கை மறுபடியும் ஏற்றி, வாயிற் கதவைத் தாழிட்டு அவளை நோக்கியபோது அவன் தேகம் ஒரு குலுங்கு குலுங்கியது.

"மரப்பாச்சி! நீ தெப்பமாய் நனைந்துவிட்டாய். ஒரு வேஷ்டி தருகிறேன்; உடுத்துக்கொள். தலையையும் துடைத்துக்கொண்டு இங்கேயே படுத்துக் கொள். ஒரு போர்வையும் தருகிறேன்" என்றுன். அவள் குளிரினுல் வெட வெட என்று கைகால்கள் நடுங்க நின்றுள்.

தங்கமணிக்குத் தூக்கம் வரவில்லை. நெருப்பின் மேல் படுத்திருப்பது போன்று இருந்தது அவனுக்கு. ரேழியிலிருந்த அந்த உருவத்தைத் தன் மனத்திலிருந்து பெயர்த்தெறிய முயன்றுன். ஆனுல் அந்த உருவமோ நிமிஷத்துக்கு நிமிஷம், இன்னும் ஆழமாக அவன் மனத்தில் வேரூன்றிப் பதிந்தது. அந்த முகம் அவன் மனக்கண்ணை விட்டு அகலவில்லை. விநாடிக்கு ஓர் அழகும், விநாடிக்கொரு சாயலும் பாவமும் பெற்று அது அவன் அறிவைக் கலங்கச் செய்தது.

ஒரு சமயம் முத்துப்போன்ற பற்களைக் காட்டி இள நகை புரியும்; ஒரு சமயம் களுக்கென்று வெட்கம் கலந்த சிரிப்புச் சிரிக்கும்; ஒரு சமயம் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு, விரல்களின் இடுக்குகள் வழியாய்த் தன் குவளைக் கண்களைமட்டும் காட்டும்.

படுத்துக்கொண் டிருந்தவன் போர்வையை உதறிவிட்டு எழுந்திருந்தான். கையில் டார்ச்சுடன் ரேழிக்கு வந்தான். அந்தக் குளிரில், பூனைக் குட்டியைப்போல் சுருட்டிக்கொண்டு அங்கே படுத்திருந்த மரப்பாச்சி வெளிச்சத்தைப் பார்த்து எழுந்து உட்கார்ந்தாள்.

"மரப்பாச்சி!" - தங்கமணியின் குரலில் ஒரு நடுக்கம் தோன்றியது.

அவள் "ஊம்—" என்ற வண்ணம் எழுந்து நின்றாள்.

"இதோ பார் மரப்பாச்சி! நான் முன்சீப் வீட்டுக்குப் போகிறேன். நீ கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொள்" என்று அவன் தாழ்ப்பாளை இழுத்தான்.

அவள் அச்சம் நிறைந்த முகத்துடன், தாழ்ப்பாளைத் திறந்த அவன் கையின் மேல் தன் கையை வைத்துவிட்டுச் சட்டென்று இழுத்துக் கொண்டாள். திறந்த வாயுடனும், மருண்ட கண்களுடனும் அவள் தன்னை விழித்துப் பார்த்தபோது, 'ஏன்? ஏன்? எங்கே போகிறாய்? இந்த மழையிலா? –' என்று திகிலுடன் கேட்கப்பட்ட கேள்விகள் - துடித்துக் கொண்டிருந்த கேள்விகள் – அந்தக் கண்களின் மூலம் தன்னை நோக்கிப் பாய்வதை அவன் உணர்ந்தான்.

"ஆமாம், மரப்பாச்சி! நான் முன்சீப் வீட்டுக்குப் போகிறேன். நீ கதவைப் போட்டுக்கொண்டு உள்ளே

போய்ச் சௌகரியமாய்ப் படுத்துக்கொண்டு தூங்கு.''

கதவைத் திறந்துகொண்டு தங்கமணி அந்தக் கும்மிருட்டில், கொட்டுகிற மழையில் வாயிற்படிகளில் கால் வைத்து இறங்கினான்.

மரப்பாச்சி ஒரு நிமிஷம் பிரமை பிடித்தவள் போல் ஸ்தம்பித்து நின்றாள். கதவைத் தாழிடுமுன் அவள் வெளியே தலையை நீட்டித் தெருவை நோக்கின போது, ஒரு மின்வெட்டுத் தோன்றித் தெருவை ஜோதி வெள்ளத்தில் மூழ்கடித்துவிட்டு மறைந்தது. தெரு வெறிச்சென்று இருந்ததைப் பார்த்தாள் மரப்பாச்சி.

சாந்தி

1

அவள் தாத்தாவான அந்தக் கிழவனின் பெயர் எனக்குத் தெரியாது. கோகுல்தாஸின் பங்களாவில் கிழவன் தோட்ட வேலை செய்துவந்தான். பங்களாவைச் சுற்றி நான்கு புறத்தில் தோட்டம். அதில் ஒரு மூலையில் கிழவனின் குடிசை. குடிசையில் கிழவனைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. அவனுக்கு ஒரு பெண் மட்டும் இருந்தாள். அவளை நாட்டுப் புறத்தில் ஒருவனுக்குக் கட்டிக்கொடுத் திருந்தார்கள். வருஷத்தில் எப்போதாவது ஒரு தடவை அவள் வந்து தகப்பனைப் பார்த்துப் போவாள். கிழவன் கிட்டத்தட்ட எழுபது பிராயத்தை எட்டிப் பார்த்து விட்டான். உடல் தளர்ந்துவிட்டது. இருபது வருஷமாய் வேலை செய்தவனாயிற்றே என்று கோகுல் தாஸ் வீட்டில் இன்னும் அந்தக் கிழவனை வைத்திருந் தார்கள்.

கிழவனின் வாழ்க்கை நிர்மானுஷ்யமான இடத்தில் இருக்கும் தடாகத்தின் தெளிந்த நீர்போல் சலனமற்றிருந்தது. காற்றடித்தால் நீர்ப்பரப்பில் அலை மோதுவதுபோல் அவன் வாழ்க்கையிலும் சலனத்தை உண்டுபண்ணும் நிகழ்ச்சி ஒன்று ஒரு சமயம் நேர்ந்தது ; அவன் பெண்ணுக்குக் குழந்தை பிறந்திருக்கிறது என்று ஒரு நாள் கடிதம் வந்ததும், சுருக்கம் விழுந்து சதை தொங்கிக்கொண் டிருந்த அவன் முகம் சந்தோஷத்தினல் மலர்ந்தது. குழி விழுந்து மங்கிப் போயிருந்த அவன் கண்களிலும் ஒரு பிரகாசம் தோன்றியது. ஆனல், இந்த மகிழ்ச்சி நீடித்

திருக்கவில்லை. அடுத்த வாரம் வந்த கடிதத்தில், அவன் மகள் ஜுரம் கண்டு இறந்து போய்விட்டாள் என்று அவன் மாப்பிள்ளை எழுதியிருந்தான். யாரோ கடிதத்தைப் படித்துச் செய்தியைத் தெரிவித்தார்கள். கிழவன் இரண்டு கைகளாலும் தலையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டான்.

மூன்று மாசங்கள் சென்றன. தன் மாப்பிள்ளை இரண்டாம் கல்யாணம் செய்துகொண்டான் என்று கேள்விப்பட்டுக் கிழவன் கிராமத்துக்குச் சென்றான். தன் பெண்ணின் குழந்தை தாயுடன் இறந்து போகாமல் உயிரோடு இருப்பதைப் பார்த்து, மாற்றாந் தாய் சரியாக வளர்க்கமாட்டாள் என்று பயந்து, தான் வளர்ப்பதாய் அதன் தகப்பனிடம் கூறிக் குழந்தையை எடுத்து வந்துவிட்டான்.

பங்களாவில் பரபரப்பு உண்டாயிற்று. கோகுல் தாஸும் குழந்தையைப் பார்க்க வந்தார்.

"ஆமாஞ் சாமி; எம் பொண்ணுடைய கொயந்தைங்க! இதும் அப்பன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிறான். இனிமே இதை யார் கவனிக்கப் போறாங்க? அதான் நான் வளக்கலாமுன்னு எடுத்துக்கினு வந்துட்டேன். எனக்குத்தான் இனிமே யார் இருக்காங்க? என் கொயந்தை எனக்கு வெச்சுட்டுப் போன ஆஸ்திங்க இது!" என்றான் கிழவன்.

குழந்தை, தரையில் விரிக்கப்பட்டிருந்த ஒரு கந்தல் துணியின்மேல் படுத்துக்கொண்டு கால்களையும் கைகளையும் மடக்கி மடக்கி உதைத்துக்கொண்டிருந்தது.

கோகுல்தாஸ் சிரித்துக் கொண்டே, "நன்றாயிருக்கிறது! இத்துனூண்டு குழந்தையை வைத்துக் கொண்டு உன்னால் காப்பாற்ற முடியுமா? இதற்குப்

பால் யார் புகட்டுவார்கள்? மருந்து யார் கொடுப்பார்கள்? யார் குளிப்பாட்டுவார்கள்? இதெல்லாம் ஒரு பெண்பிள்ளையின் வேலையாச்சே? உன்னால் முடியுமா, கிழவா? அதுவும் இந்த வயசிலே!" என்றார்.

"பால் டானிக்யம்மா போட்டிடுவா. மீதி எல்லாம் நான் பாத்துக்குவேன்" என்றான் கிழவன்.

"ஹூம்—பச்சைக் குழந்தை! இந்த மாதிரித் தாய் இல்லாத குழந்தைகள் பிழைப்பதே கஷ்டம். எவ்வளவோ ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டும். உன்னால் ஆகுமா?" என்று கோகுல்தாஸ் சந்தேகப்பட்டார்.

கிழவன், குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு இப்படியும் அப்படியும் ஆட்டிக்கொண்டே, "எல்லாம் சாமி காப்பாத்திடுவாரு, பாருங்க. ஒரு பொம்மனாட்டி மாத்திரம் பிரமாதமா என்ன செஞ்சுடப் போறா?" என்றான்.

கோகுல்தாஸ் தலையைச் சொறிந்துகொண்டு, "குழந்தைக்கு என்ன பேரு?" என்றார்.

கிழவன் கண்ணை மூடிக்கொண்டு யோசித்துவிட்டு, "என்ன பேரோ, தெரியலீங்களே! அதும் அப்பனைக் கேட்க மறந்துட்டேன், சாமி" என்றான்.

கோகுல்தாஸுக்கு என்ன தோன்றியதோ என்னவோ! வெகு காலத்துக்கு முன் இறந்துபோன தம் பெண்ணின் ஞாபகம் வந்ததுபோல் இருக்கிறது; "சாந்தி என்று கூப்பிடு" என்றார்.

கிழவன் சிரித்துக்கொண்டு, "சாந்தி!" என்றான்.

அதுவே குழந்தையின் பெயராய்விட்டது.

2

சாந்தி வளரத் தொடங்கினாள். முகம் பார்த்துச் சிரித்தாள். கிழவனுக்குச் சந்தோஷம் தாங்கமுடிய

வில்லை. 'ளப ளப' என்று நாக்கினால் சப்தம் செய்து கொண்டு தன் முகத்தை அவள் முகத்தருகில் கொண்டு போவான். சாந்தி, "ஹி—ஹி" என்று சிரித்துக் கொண்டு தளிர்போன்ற தன் கரத்தை நீட்டி அவன் மூக்கைப் பிடித்துக்கொள்வாள். கிழவன் பொக்கை வாயைத் திறந்து தானும் நகைப்பான்.

சாந்திக்குத் தவழத் தெரிந்ததும் கிழவன் பாடு பெரிய தொல்லையாய் விட்டது. மார்பினால் நகர்ந்து கொண்டே அவள், போகக்கூடாத இடங்களுக் கெல்லாம் போய்ச் செய்யக்கூடாத காரியங்களெல் லாம் செய்யத் தொடங்குவாள். திடீரென்று அடுப்பங்கரைக்கு வந்து அடுப்பிலிருந்த விறகைப் பிடித்து இழுப்பாள். மூலையில் அடுக்கியிருந்த பானைகளிடம் போய் அவைகளைத் தட்டிவிட்டு உடைத்துவிடுவாள்.

ஒரு நாள் இரவு கிழவன் விளக்கேற்றி வைத்து விட்டுக் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிக்கொண் டிருந்தான். சாந்தி அவன் மடியிலிருந்து இறங்கித் தவழ்ந்துகொண்டே விளக்கண்டையில் சென்றாள். விளக்கின் பக்கத்தில் போய், இரண்டு முழங்கால் களையும் வலது உள்ளங்கையையும் பூமியில் ஊன்றிக் கொண்டு இடது கையை உயர்த்தி, காற்றில் ஆடிக் கொண்டே சுடர்விட்டு எரிந்த விளக்கின் திரியைப் பிடிக்க முயன்றாள். கையை விளக்கருகில் கொண்டு போவதற்குள் கீழே ஊன்றியிருந்த வலது கை வலித் தது. இடது கையைக் கீழே ஊன்றி வலதுகையை உயர்த்தி விளக்கருகில் கொண்டு போனாள். அதற்குள் இடது கை வலித்தது. இப்படி நாலுதரம் முயன்ற பின் கடைசியில் சுடரைப் பிடிக்க முடியாமல் ஏமாந்து கோபமடைந்து தரையின்மேல் மார்பைப் பொத்தென்று போட்டுக்கொண்டு விழுந்து அழத் தொடங்கினாள். சந்தடி செய்யாமல் பக்கத்தில்

வந்து உட்கார்ந்துகொண்டு விளக்கிலே எங்கே கையை வைத்துவிடப் போகிறாளோ என்று கவனித்துக்கொண் டிருந்த கிழவன், அவளை வாரி எடுத்துத் தோள்மேல் போட்டுக்கொண்டு, "விளக்கு வேணுமா நோக்கு, என் ராசாத்தி!" என்று கொஞ்சி விளையாடித் தேற்றினான்.

சாந்தி, கிழவனைத் தவிர வேறு ஒருவரிடமும் போகாள். அவளைத் தோள்மேல் போட்டுக் கொண்டு தோட்டம் முழுவதும் அவன் சுற்றி அலைவான். அதுவரையில் கிழவன் உள்ள இடமே தெரியாமலிருந்த அந்தத் தோட்டத்தில், சாந்தி வந்த பிறகு கிழவனின் குரல் எங்கும் கேட்டது. பங்களாவில் வேலை செய்த முனியம்மா ஒவ்வொரு சமயம் அவனிடம் வந்து கைகளைத் தட்டித் தட்டி, "வா வா" என்று கையை நீட்டிக் குழந்தையை அழைப்பாள். சாந்தி ஒரு நிமிஷம் ஸ்வாரஸ்யத்துடன் அவள் செய்யும் வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு, தன்னை வரும்படி அழைக்கிறாள் என்று தெரிந்துகொண்டதும் தலையை அசைத்துவிட்டுக் கிழவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவன் தோள் பட்டையில் தன் முகத்தைப் புதைத்துக்கொள்வாள். பிடித்து இழுத்தால் கால்கள் விண்விண் என்று உதைக்கும்; அழுகை கிளம்பிவிடும்.

"அடி ராக்ஷஸி!" என்று முணுமுணுப்பாள் முனியம்மா. கிழவன் சிரிப்பான். ஆனால் மனத்திற்குள், குழந்தையை அவள் ராக்ஷஸி என்று வைதாளே என்று கோபம் கொள்வான்.

சாந்திக்கு நடக்கத் தெரிந்ததும் கிழவனுக்கு ஒரு நிமிஷமும் ஓய்வு கொடுக்காமல் ஆட்டிவைத்தாள். கிழவன் குடிசையினுள் வேலையாக இருக்கையில், தட்டுத்தடுமாறி நடந்துகொண்டு குடிசையை விட்டு வெளிப்பட்டுத் தோட்டத்துக்குள் புகுந்துவிடுவாள்.

அவளைக் குடிசையில் காணுவிட்டால் கிழவன் மனம் திடுக்கிடும். தோட்டத்தில் எப்போதும் மாடுகள் மேய்ந்துகொண் டிருக்கும். குழந்தையை மாடு முட்டிவிட்டால் என்ன செய்வது? மாடுகளைத் தவிர வேறு அபாயங்களும் தோட்டத்தில் இருந்தன. ஏற்றம் போட்டிருந்த கிணறு சமீபத்தில்தான் இருந்தது. அது தவிர, மருதாணிச் செடியின்மேல் அன்று ஒரு பாம்பைப் பார்த்ததாக முனியம்மா கூறினுள். அந்தப் பயம் வேறு; "சாந்தி! சாந்தி!" என்று கூப்பிட்டுக்கொண்டு கிழவன் தோட்டத்தில் ஓடுவான். சாந்திக்கு ஓர் அபாயமும் நேர்ந்திராது. மர நிழலில் உட்கார்ந்துகொண்டு தண்ணீர் ஓடும் வாய்க்காலிலிருந்து மண்ணை எடுத்து வாயில்போட்டு ஸ்வாரஸ்யத்துடன் மென்றுகொண் டிருப்பாள் அவள்.

3

ஒரு நாள் கிழவனுக்குச் சந்தோஷம் தலைகால் தெரியாமல் அடித்துவிட்டது. "ஐயையோ! என்னுடி, இந்தக் கிழம் இப்படிக் கலாட்டா பண்ணுது?" என்ருள் முனியம்மா.

கிழவன் சாந்தியைத் தூக்கிக்கொண்டு அவர்கள் இருந்த இடத்துக்கு வந்தான். "ஏ முனியம்மா! சாந்தியைப் பாத்தியா? அவளுக்குப் பேசக்கூட வந் திருச்சு!"

"பேச வந்திருச்சா! அதிசயந்தான்! எங்கே? என்ன பேசறு?—பேசடீ பார்க்கலாம், ராக்ஷஸி!"

"தா, இதோ பாரு. ராக்ஷஸின்னு சொல்றியா?— சாந்தி! தாத்தா சொல்லு" என்று கிழவன் சாந்தி யைக் கீழே இறக்கினுன்.

சாந்தி அவர்கள் பேச்சைக் கவனியாமல் கீழே குனிந்து மண்ணாங்கட்டியைப் பொறுக்க ஆரம்

பித்தாள். கிழவன் அவளைத் தூக்கி நிற்கவைத்துப் பிடித்துக்கொண்டே, "சாந்தி! தாத்தான்னு கூப்பிடு" என்றான்.

சாந்தி சுற்றிலும் நின்றுகொண்டிருந்தவர் முகங்களை நோக்கினாள். தான் பேசப் போவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் என்று உணர்ந்து கொண்டாள்.

"தத்...தத்...தா...!" என்றாள்.

எல்லோரும் 'ஹோ' என்று சிரித்தார்கள். கிழவன் பெருமையுடன் குழந்தையை வாரி அணைத்துக்கொண்டு, எங்கே திருஷ்டி பட்டுவிடுமோ என்ற பயத்துடன் குடிசைக்குள் போய்விட்டான்.

"ஐயோ அதிசயமே! இந்தக் கிழவனுக்கு என்ன பைத்தியமா?" என்றாள் முனியம்மா.

ஒரு நாள் முனியம்மாவுடன் அவள் ஐந்து வயசுப் பிள்ளை வந்திருந்தான். அவன் சாந்தியைப் பார்த்ததும், "ஹோஹோ, அம்மணக்கட்டை!" என்று சிரித்தான். கிழவனுக்கு ரோஷம் வந்துவிட்டது. அன்றைக்கே கடைக்குப் போய், தயாராய்த் தைத்து வைத்திருந்த பச்சை நிறமான 'கவுன்' ஒன்று சாந்தியின் அளவுக்கு ஏற்றதாய்ப் பார்த்து வாங்கி வந்து அவளுக்குப் போட்டுவிட்டான்.

பச்சை நிறம் சாந்திக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. தாயைப்போல் அவள் சிவப்பாக இருந்த படியால் அவள் இயற்கையழகை அந்தப் பச்சைக் 'கவுன்' நன்றாக எடுத்துக் காட்டியது. உருண்டையான முகத்தைச் சுற்றித் தலைமயிர் சுருள் சுருளாகத் தொங்க, புதிதாக அணிந்துகொண்ட உடையைக் கைகளால் இழுத்து விட்டுக்கொண்டு, சாந்தி தன் மழலைச்சொற்களில், "தா—த்—தா" என்று இரண்டு தரக்களிலும் ஓர் அழுத்து அழுத்திக் கூறினாள்.

கிழவன் ஸ்வர்க்கத்துக்கே போய்விட்டான். அவள் கன்னங்களில் கை வைத்து விரல்களைத் தன் தலையில் வைத்து நெறித்துத் திருஷ்டி கழித்தபின் சாந்தியைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு பங்களாவுக்கு வந்தான்.

"என்ன கிழவா? பேத்தி எப்படி இருக்கா?" என்று கேட்டான் கோகுல்தாஸின் பிள்ளை நாராயண்தாஸ்.

"நல்லாத்தான் சாமி இருக்கா, உங்க புண்ணியத்துலே. இன்னிக்கித்தான் சட்டை வாங்கிப் போட்டேன், சாமி!"

நாராயண்தாஸ் சிரித்துக்கொண்டே சாந்தியின் கன்னத்தை நெருடிவிட்டான். சாந்தி ஒரு சிரிப்புச் சிரித்தாள். நாராயண்தாஸுக்கு அவளிடம் ஒரு விதமான அன்பு ஏற்பட்டிருந்தது. அந்தமாதிரியான கீழ்ச்சாதிக் குடும்பங்களில் அவ்வளவு அழகான குழந்தையை அவன் அதுவரையில் பார்த்ததில்லை.

"கவுன் புதுசா வாங்கினியா, கிழவா?"

"ஆமாஞ் சாமி."

"இப்படிப் போட்டிருக்கயே! திருப்பின்னு போடணும்? பொத்தான் முதுகுப் பக்கம் வரணுமே, தாத்தா?"

கிழவன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்; "அப்படியாங்க? தெரியாதுங்க எனக்கு—"

"என்ன விலைக்கு வாங்கினே கவுன்?" என்றான் நாராயண்தாஸ்.

"எட்டரையணா குடுத்தேனுங்க."

"என்னத்துக்கு இதுக்கு எட்டரையணா? துணி சாயம் போயிடும் போலே இருக்கே?"

கிழவன் குடிசைக்கு வந்ததும், "எட்டரையணா குடுக்கப்படாதா இதுக்கு? தையல்கூலியே நாலணா

வாங்கிடுவானே? நாலணுப்பொருதா இந்தத் துணி?" என்று முணுமுணுத்துக்கொண்டே கவுனைக் கழற்றி நாராயண்தாஸ் சொன்னபடி திருப்பிப் போட்டான்.

4

சாந்திக்கு ஐந்து வயசு நிரம்பியது. ஒரு நாள் காலை. இரவெல்லாம் பெய்த மழை அப்போது தான் ஓய்ந்திருந்தது. மப்பும் மந்தாரமுமாக இருந்த அடிவானத்தைப் பிய்த்துக்கொண்டு கிளம்புவது போல் சூரியன் தன் ஒளிக்கதிர்களை வட்டமான ஆகாய வெளியில் வாரி இறைத்துக்கொண் டிருந் தான். கோகுல்தாஸ் தோட்டத்து மரங்களின் இலைகள் மழையில் நனைந்து சூரிய ஒளியில் ஜிலு ஜிலுவென்று பிரகாசித்தன. தரையில் எங்கே பார்த் தாலும் தண்ணீர் தேங்கியிருந்தது. நனைந்திருந்த புல் தரைகளும், சிலு சிலுவென்று வீசிய காற்றும், மழை பெய்து ஓய்ந்த அமைதியும் சேர்ந்து மனத்துக்கு ஓர் உத்ஸாகத்தை அளித்தன.

கிழவன் குடிசையை விட்டு வெளியே வந்தான். சாந்தி இன்னும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள். கிழவன் பல் தேய்த்துவிட்டுக் குடிசைக்குள் நுழையப் போன சமயத்தில், "மாமா!" என்று யாரோ கூப் பிடுவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். சாந்தியின் தகப்பன் எதிரில் வந்து நிற்பதைக் கண்டு, "என்ன, வடிவேலுவா? வா வா, என்ன விசேஷம்?" என்று உள்ளே அழைத்துச் சென்றான்.

"கொழந்தை எங்கே? நல்லாருக்குதா?" என்று கேட்டான் வடிவேலு. அவன் குழந்தையைக் கிழவ னிடம் கொடுத்த பிறகு இதுவரையில் மறுபடியும் வந்து பார்க்கவேயில்லை.

"அதோ பார், படுத்திருக்கு" என்றான் கிழவன்.

வடிவேலு தூங்கிக்கொண் டிருந்த சாந்தியைப் பார்த்துவிட்டு, "இதுவா? என்ன இவ்வளவு வளந் திடுச்சே?" என்றான் ஆச்சரியத்துடன்.

கிழவன் கோபத்துடன், "அஞ்சு வயசாகலே? அஞ்சு வருசம் கழிச்சு இப்பத்தான் வறயாக்கும், கொயந்தையைப் பாக்க நீ?" என்றான்.

"அதான் என் சம்சாரம் சொல்லிச்சு, ஒன் கொயந்தை பெரிசா வளந்திருக்குமே; போய்ப் பாரேன்னு. நான் இதுக்குள்ளே எப்படி வளந்து இருக்கும்னு நெனச்சேன்—அவ சொன்னது சரிதான்!"

கிழவன் வாயைத் திறவாமல் அவன் வார்த்தை களைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"என்ன பேரு வெச்சிருக்கே அதுக்கு?"

"சாந்தீன்னு!"

"என்ன?"

"சாந்தி!"

"சாந்தியா? அதென்ன பேரு அது? வாயிலியே நொழயல்லியே. நல்ல பேரா வெக்கப் படாது? கறுப்பாயின்னுதான் நாங்க வெச்சோம். அப்படித் தான் இனிமே நாங்க கூப்பிடப் போறோம்."

கிழவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது; "நீங்களா?—"

"அ ஆம்—என் சம்சாரம் கர்ப்பமா இருக்கா. கூட மாட வேலே செய்ய யாரும் இல்லாமே கஷ்டப் படறா. 'உன் பொண்ணே அழைச்சுக்கிட்டு வாயேன்'னு சொல்லி யனுப்பினா."

கிழவனுக்குத் தலே சுற்றியது; "அதெல்லாம் முடியாதப்பா. சாந்தியை நான் யார் கிட்டேயும் அனுப்ப மாட்டேன்" என்றான்.

வடிவேலு கோபத்துடன், "நல்லாருக்கு நியாயம்? என் பொண் எனக்குச் சொந்தமில்லாமே ஒனக்கு

என்ன வந்தது? எத்தனை நாள்தான் நீயே வெச்சுக்கிட்டிருப்பே? அதுக்கு வேலையெல்லாம் சொல்லிக் கொடுத்துக் கட்டிக் கொடுக்கவாணும்?'' என்ருன்.

''அதுக்கு வேலை ஒண்ணும் செய்யத் தெரியாதே!''

''தெரியாப் போனு சொல்லித் தரது; வய சாகலே?''

கிழவன் பரிதாபமாகத் தலையை அசைத்து, ''நான் அவளை அனுப்பமாட்டேன்'' என்ருன்.

''சும்மாக் கிட வாயை மூடிண்டு! நீ பேசறே!''

இந்த இரைச்சலில் சாந்தி விழித்துக்கொண்டாள். எழுந்து உட்கார்ந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தபோது எதிரில் ஒரு புது மனிதன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு கிழவனிடம் ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவன் பின்னுல் நின்ருள்.

''சாந்தி!''

''தாத்தா!''

''இது யார் தெரியுமா?

''ஹுகும்.''

''உங்க அப்பா.''

''அப்பாவா? அப்பான்னு?''

''அப்பான்னு—ஹும்—நாயனு!''

''ஏ, இங்கே வா'' என்று கூப்பிட்டான் வடிவேலு.

சாந்தி அவனை முறைத்துப் பார்த்துவிட்டுத் தலையைப் பலமாக ஆட்டி, ''ஹு—ஹும்'' என்ருள்.

''போ அம்மாஅப்பா கிட்டே!'' என்ருன் கிழவன்.

''வான்னு தலையை ஆட்டறியா?'' என்று வடிவேலு எழுந்து வந்து அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

குழந்தையின் உடல் நடுங்கியது. கண்கள் திகிலுடன் மிரள மிரள விழித்தன. கிழவனை ஒரு கெஞ்சும்

பார்வை பார்த்து, "தாத்தா" என்றாள். கண்களி லிருந்து மளமளவென்று நீர் பெருகியது.

கிழவனின் கண்களிலும் நீர் துளித்தது; "விட்டு டப்பா அவளை. பாவம்! பயப்படுது கொயந்தை; விட்டுடு. அவ என்னை விட்டு யார்கிட்டேயும் போக மாட்டா. எனக்குந்தான் வயசாயிட்டுது. இன்னும் எத்தனை நாள் இருக்கப் போறேன்? நான் இருக்கிற வரையிலும் எங்கிட்டியே இருக்கட்டும். அப்புறம் அப்பனுச்சு பொண்ணுச்சு. நான் இருந்தா பார்க்கப் போறேன்?—" என்றான்.

"இதென்னடி வெக்கக்கேடு?" என்றாள் அங்கு வந்த முனியம்மா; "ஏ கிழவா, பைத்தியமா ஒனக்கு? எத்தனை நாள்தான் நீயே வெச்சுக்கிட்டிருப்பே பொண்ணை, அப்பங்காரனிடம் அனுப்பாமே?" என்று மேலும் கூறினாள்.

கிழவன் பேச முடியாமல் உட்கார்ந்து விட்டான்; தனக்குப் பரிந்து பேசுவார் ஒருவரும் இல்லை. தான் ஒரு கட்சி, உலகம் தனக்கு எதிர்க் கட்சி.

5

காற்றில் இலைகள் அசையும் ஓசை 'ஹோ'என்று அழுகுரலைப்போல் கிழவன் காதில் ஒலித்தது. விசித்து விசித்து அழுதுகொண்டே சாந்தி தகப்பனுடன் சென்றாள்.

கிழவன் குடிசை வாசலுக்கு வந்து கூரையைக் கையால் பிடித்துக்கொண்டு நின்றான். மரங் களினூடே நுழைந்து பிரகாசித்த சூரிய வெளிச்சம் அவன் தேகத்தின்மேல் வரி வரியாக விழுந்து தோல் ஒட்டிப் போயிருந்த உடலை ஒருவினோதக் காட்சியாகச் செய்தது. கூன் விழுந்திருந்த முதுகில் முதுகெலும்பு சதையைப் பிய்த்துக்கொண்டு வந்து விடுவதுபோல் தூக்கிக்கொண் டிருந்தது. தூரத்தில் நாராயண்

தாஸின் குழந்தைகள் சிரித்து விளையாடிக்கொண் டிருந்தன. உலகமே தன்னைப் பார்த்துச் சிரிப்பதாக நினைத்தான் கிழவன்.

பொழுது சென்றது. மகிழ மரத்தடியில் போய்க் கிழவன் உட்கார்ந்தான். மரத்தடியில் கொட்டி யிருந்த மணலைப் பார்த்ததும் சாந்தி அதிலே வீடு கட்டி விளையாடும் காட்சி கண்ணெதிரில் தோன்றியது. அங்கிருந்து எழுந்து கிணற்றங்கரைக்குப் போனான். அங்கும் சாந்தியின் ஞாபகம் விடவில்லை. 'கிணற் றருகில் போகக் கூடாது' என்று அவன் உத்தரவிட் டிருந்ததால் சாந்தி தூரத்தில் நின்றுகொண்டு கற்களைப் பொறுக்கிக் கிணற்றில் எறிவாள். கல் உள்ளே விழும்போது 'குபுக்' என்று சப்தம் உண்டாகும். தலையைச் சாய்த்துக்கொண்டு அதைக் கூர்ந்து கவனிப்பாள்.

கிழவன், முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு உடல் குலுங்க அழுதான். விரல் இடுக்குகள் வழி யாய்க் கண்ணீர் தரையில் விழுந்தது. திடீரென்று, "தாத்தா !" என்று யாரோ கூப்பிடுவதுபோல் பிரமை உண்டாயிற்று. சாந்தியின் குரல் ! கிழவன் பாய்ந்து எழுந்திருந்து குடிசையை நோக்கி ஓட முயன்றான். தரைக்குமேல் தூக்கிக்கொண் டிருந்த மரத்தின் வேர் தடுக்கிக் கீழே விழுந்தான். விழுமுன், "சாந்தி !—" என்று ஒருமுறை கத்தினான்.

சாந்தியின் பெயர் தோட்டமெங்கும் எதிரொ லித்தது. "சாந்தி !"

கண்ணில்லாக் காதல்

1

வாய்க்காலில் சல சலவென்று தண்ணீர் பாய்ந்து ஓடிக்கொண் டிருந்தது. தண்ணீர்க் கரையில் கூட்டம் கூடியிருந்த தவளைகள் காலடிச் சப்தம் கேட்டு வளைகளில் பதுங்கின. கிருஷ்ணன் தண்ணீரில் இறங்கிக் கைகால் கழுவிக்கொண்டு கரை ஏறினான்.

உச்சி வானத்திலிருந்து சூரியன், 'இந்தப் பிரபஞ்சமே என்னுடையதுதான்' என்று சொல்லிச் சிரிப்பவன்போல் தன் அக்கினி ஜ்வாலைகளை வீசிக் கொண்டிருந்தான். வாய்க்காலின் இரு பக்கங்களிலும் இருந்த வயல்வெளிகளில் பச்சைப் பசேல் என்று வளர்ந்திருந்த நெற்பயிர் காற்றில் அசைந்தாடி ஓர் இனிய ஓசையை எழுப்பிக்கொண் டிருந்தது. அடுத்தாற்போல் மேய்ந்துகொண் டிருந்த மாட்டு மந்தையிலிருந்து எப்போதாவது, "அம்மா!" என்று சப்தம் கேட்கும்.

கிருஷ்ணன் ஒரு மரத்தடிக்குச் சென்று, மரத்தின் மொட்டையான கிளையொன்றில் தொங்கிக்கொண் டிருந்த சோற்று மூட்டையை எடுத்து அவிழ்த்தான். பாதி சாப்பிட்டுக்கொண் டிருக்கையில் அவனுக்குத் திடீரென்று என்னவோ ஞாபகம் வந்தது. எழுந்திருந்து மரத்தில் இருந்த ஒரு வங்கில் கையை விட்டு ஒரு சிறு பொட்டலத்தை எடுத்தான். அதைப் பிரித்து உள்ளே இருந்த எலுமிச்சங்காய் ஊறுகாயைப் பார்த்ததும் அவன் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. அவன் மனம் வள்ளிநாயகியைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தது.

வள்ளிநாயகி, அந்த ஊர்ப் பண்ணையாரின் மகள். அவர்கள் வீட்டு மாடுகளைத்தான் கிருஷ்ணன் மேய்த்துக்கொண் டிருந்தான். பண்ணையார் போன வருஷந்தான் காலஞ் சென்றார். அவர் மனைவியும் நோயாளி. ஏழெட்டு வருஷங்களாகவே அவள் முடக்கு வாதம் வந்து நடமாட்டம் இல்லாமல் படுத்த படுக்கையாய் இருந்தாள். 'இந்த அம்மாள் போயிருக்கக் கூடாதா? திடமாய் இருந்த பண்ணை ஐயா ஏன் இப்படித் திடீரென்று சாகவேண்டும்? அவர் நன்றாக இருக்கும்போதே அம்மா போய்ச் சேர்ந்திருந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்? இருந்தும் பிரயோஜனமில்லியே!—'' என்று கிருஷ்ணன் நினைத்தான். அந்த எலுமிச்சங்காய் ஊறுகாய் தேவாமிர்தம்போல் அவனுக்கு ருசித்தது. நாக்கைச் சப்புக் கொட்டிச சாப்பிட்டான். அவன் அன்று காலையில் பல பல என்று விடியும் நேரத்தில் பாலைக் கறந்துவிட்டு மாடுகளை அவிழ்த்து மேய்ப்பதற்காக ஓட்டிக் கொண்டிருந்த பொழுது வள்ளிநாயகி, "கிருஷ்ணு! கிருஷ்ணு!" என்று கூப்பிட்டாள். "ஏன் வள்ளியம்மா?" என்று கேட்டுக்கொண்டே கிருஷ்ணன் எதிரில் சென்று நின்றான்.

வள்ளிநாயகி கையை நீட்டி அவன் கையில் ஒரு காகிதப் பொட்டலத்தை வைத்தாள்; "சாப்பிடும் போது திறந்து பாரு" என்றாள். 'இவள் மனசுதான் எப்பேர்ப்பட்ட மனசு! இவ்வளவு நல்ல மனசையும் சொத்தையும் சுதந்தரத்தையும் நிலபுலன்களையும் கொடுத்து விட்டு, பாவம், பகவான், இவளுக்குக் கண்களை மட்டும் ஏன் பொட்டையாக்கி விட்டான்? அந்தச் சாமி தலையிலே இடி விழ!'

இப்படி அவன் யோசித்துக்கொண் டிருந்த போது அவன் தலையில் லொட் என்று ஒரு சிறு கல் வந்து விழுந்தது. கிருஷ்ணன் திரும்பிப் பார்த்தான்.

சற்றுத் தூரத்தில் ஒரு பெண் தலையில் ஒரு சோற்று மூட்டையுடன் அவன் பக்கம் பாராமல் வேகமாய் நடந்து போய்க்கொண் டிருந்தாள்.

"ஏ தொரையம்மா !" என்று கிருஷ்ணன் கூப்பிட்டான். அந்தப் பெண் அவன் குரல் காதில் விழாதவள்போல் நடந்தாள்.

"ஏ தொரையம்மா !...ஏ...அம்மா !"

அந்தப் பெண் நின்றாள்.

"ஏன் ; என்னத்துக்குக் கூப்பிடறே ?"

"என் தலையில் கல்லைப் போட்டது யாரு ?"

"யார் போட்டாங்களோ ? அவங்கதான் போட்டிருப்பாங்க."

"அது தெரியாதா எனக்கு ? இங்கே வா சொல்றேன்."

"என்னத்துக்கு ?"

"வாயேன்..."

"சரிதான் ; எனக்கு வேலை கிடக்கு. நீ சாப்பிட்டு உட்காந்துக்கிட்டு இருக்கே. நான் போவணும். எங்க அப்பா பசியா இருப்பாரு" என்று சொல்லி அவனைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டுத் துரையம்மாள் நடந்தாள்.

துரையம்மாள் நல்ல பெண். குழந்தைப் பருவத்திலிருந்து கிருஷ்ணனுக்குத் தெரியும். அவளைத்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று அவனுக்கு ஆசை.

"தொரையம்மாளா ? அது அடங்காப் பிடாரி ஆச்சே !" என்பாள் அவன் தாய். தகப்பனுக்கு அவள் செல்லக் குழந்தை யாதலால் வீட்டிலே ஒருவருக்கும் அடங்காள். ஆனால், கிருஷ்ணனைக் கண்டால் அவள் பொல்லாத்தனமெல்லாம் அடங்கி விடும். இப்போது மட்டும் வரவரக் கிருஷ்ண

ணிடம் அவள் நடத்தை ஒரு தினுசாக மாறி வந்தது. அவள் இப்போது அவனுடைய கண்ணி லேயே படுகிறதில்லை. பட்டாலும் ஏதாவது சாக்குச் சொல்லிக்கொண்டு ஓடிவிடுவாள். இதெல்லாம் கிருஷ்ணனுக்குப் புரியவில்லை. அந்த வயசிலே பெண்கள் அப்படித்தான் இருப்பார்கள் என்பது அவனுக்குத் தெரியாது. 'நம்மைக் கண்டால் பிடிக் காமற் போய்விட்டதா என்ன? என்ன காரணமாய் இருக்கலாம்? எப்போ கட்டிக் கொடுக்கறேன்னு மாமாவைக் கேக்க வேண்டியதுதான்' என்று நினைத்துக்கொண்டான்.

2

மேற்கே கண்ணுக்கெட்டின தூரம் வரையில் வயல் வெளிகள்; குளுகுளு என்று கண்ணைக் கவரும் பச்சை நிறம். அவற்றின் கோடியில், அடிவானம் பூமியை முத்தமிட்டுக்கொண் டிருந்த இடத்திலே சூரியன் முழுகி மறைந்துகொண் டிருந்தான். மாடு களின் கழுத்திற் கட்டியிருந்த மணிகள் சப்தித்தன. கிருஷ்ணன் மாடுகளை ஓட்டிக்கொண்டு ஊருக்குத் திரும்பினான்.

பண்ணையார் வீட்டில், மாட்டுத் தொழுவத் துக்குப் பக்கத்தில் வள்ளிநாயகி நின்றிருந்தாள். மாடு களின் சப்தம் கேட்டு ஒதுங்கி நின்றாள். கண் ணில்லாதவர்களுக்குக் கடவுள், மற்றப் புலன்களில் அதிகமான சக்தியை அளித்திருக்கிறார். பிறப்பி லிருந்து பார்வை இல்லாவிட்டாலும், வள்ளிக்கு வீடு முழுவதும் தாராளமாய்ப் பழகும் வழக்கம் உண்டு. எங்கெங்கே என்ன இருக்கிறது, எங்கெங்கே அடி வைக்கவேண்டும், எந்த எந்தப் பக்கம் திரும்ப வேண்டும், எங்கே படிகள் இருக்கின்றன என்பவை யெல்லாம் அவளுக்கு நன்றாய்த் தெரியும். மனிதர்கள் அரவம் கேட்டால், காலடிச் சப்தத்திலிருந்து

வருகிறது யார் என்று அறிந்து கொள்வாள். மாடு களுக்குப் பின்னால் வந்த கிருஷ்ணன் சமீபித்ததும், "கிருஷ்ணா !" என்று கூப்பிட்டாள்.

மாடுகளைத் தும்பில் பிணைத்துக்கொண்டே, "ஏன் வள்ளியம்மா ?" என்றான் கிருஷ்ணன்.

"ஊறுகாய் எப்படி இருந்தது ?" என்று கேட் பதற்கு அவள் நாக்குத் துடித்தது. ஆனால் வெட்க மாய் இருந்ததால் ஆசையை அடக்கிக்கொண்டு, "வாய்க்காலில் இன்னும் தண்ணீர் ஓடுகிறதா ?" என்று கேட்டாள்.

"ஆமாம் அம்மா ; இன்னும் முழங்காமுட்டுத் தண்ணீர் ஓடிக்கிட்டுத்தான் இருக்கு."

வள்ளிநாயகி உலகத்தைப்பற்றி அறிந்திருந்த விஷயமெல்லாம் அவளுக்குக் கிருஷ்ணன் சொல்லித் தெரிந்ததுதான். அவன் சிறு வயசிலிருந்தே அவர்கள் வீட்டில் மாடு மேய்ந்துக்கொண்டு வளர்ந்தவன். வள்ளி குழந்தையாய் இருந்தபோது எப்பொழுது பார்த்தாலும் அவன்தான் அவளைத் தூக்கிக்கொண்டு திரிவான். அவளுக்கு நடக்கத் தெரிந்த பிறகு கையைப் பிடித்துப் பல இடங்களுக்கு அழைத்துக் கொண்டு போவான்.

அவள் பார்வையற்றவள் என்பது அடிக்கடி அவனுக்கு மறந்துபோய் விடும். திடீரென்று, "வள்ளியம்மா ! இதோ பாத்தியா, இந்தச் செடி எவ்வளவு பூத்திருக்கு !" என்பான். இல்லாவிட்டால், "இதோ பார் கிளியை !" என்பான்.

வள்ளி, குரல் வந்த திசையைப் பிடித்துக் கொண்டு தன் முகத்தை நிமிர்த்தி அவன் முகத்தைப் பார்ப்பாள். "பூவா ? அது எப்படி இருக்கும், கிருஷ்ணா ?" என்பாள்.

பாவம், கிருஷ்ணனைக் கடவுள் நாவன்மையுடைய ஒரு கவியாகப் பிறப்பித்திருந்தால் எவ்வளவு நன்றாய்

இருந்திருக்கும்! அவனே படிப்பு வாசனையே இல்லாத பட்டிக்காட்டுச் சிறுவன். புஷ்பங்களையும் கனிகளையும் அவன் எவ்வாறு வர்ணித்து வள்ளிக்கு உணர்த்துவான்? மனோகரமான மாலை நேரத்திலே தோட்டத்தினுள் நுழைந்தால் பலவிதமான பட்சிகள் இன்னிசை பாடிக்கொண் டிருக்கும். வள்ளி நாயகியின் காதுகள் அந்த இன்னிசையைப் பருகும். ஆனால், அந்தப் பட்சிகளின் அழகையும், அவை கொஞ்சிக் குலாவி விளையாடும் ஒய்யாரத்தையும் சொற்களின் மூலம் சித்திரங்களாய்த் தீட்டி, அவள் மனக் கண்களைப் பிரமிக்கச் செய்யும் வித்தையைக் கிருஷ்ணன் அறியமாட்டான். மலருக்கு மலர் ஓடி விளையாடும் பட்டாம் பூச்சியின் சிறகிலுள்ள வர்ண விசித்திரங்களையே விவரிக்கத் தெரியாத அவனுக்கு, உதய சூரியனின் அழகையும், சூரியாஸ்தமனத்தின் ஜோதியையும், பூர்ண சந்திரனின் எழிலையும் வர்ணிக்க எவ்வாறு முடியும்? ஆகையால், "கிளி எப்படி இருக்கும்?", "நட்சத்திரம் எப்படிப் பிரகாசிக்கும்?", "வானவில் என்றால் என்ன?" என்றெல்லாம் வள்ளி நாயகி கேட்கும்போது கொல்லென்று கிருஷ்ணன் சிரிப்பான். பிறகு தன்னால் முடிந்தவரையில் அவள் கேள்விக்குப் பதில் சொல்ல முயல்வான். மாடுகள் மேய்க்கும் வயற்காட்டைப் பற்றியும், நடுவில் ஓடும் வாய்க்காலைப் பற்றியும் அவன் சொல்லித்தான் வள்ளி நாயகி அறிவாள்.

"வாய்க்காலில் இன்னும் தண்ணீர் ஓடுகிறது" என்று சொல்லிவிட்டுக் கிருஷ்ணன், "ஊறுகாய் கொடுத்தயே; ரொம்ப நல்லா இருந்ததம்மா" என்றான்.

வள்ளி ஒருகணம் பேசாமல் நின்றாள். பிறகு, "உங்கம்மா சோறு கட்டிக் கொடுக்கறாளே, உனக்கு வெறுஞ் சோத்தையா கொடுக்கறா, ஊறுகாய்கூட

இல்லாமே? வெறுஞ் சோத்தை எப்படித்தான் திங்கறது?" என்றாள்.

"என்ன அம்மா பண்ணறது? அம்மாவுக்கு வயசாயிடுத்து. ஒண்ணும் பண்ண முடியலே."

"அது வாஸ்தவந்தான். பாவம், கிழவி எத்தனை நாளைக்குத்தான் உழைப்பாள்?"

"அதுக்குத்தாம்மா பாக்கறேன், சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கலாமுன்னு!"

வள்ளிநாயகியின் ஹ்ருதயத்தில் திக் என்றது. ஒரு விநாடி அதன் ஓட்டமே நின்றுவிட்டதுபோல் இருந்தது.

"கல்யாணமா! உனக்கா கல்யாணம்? யாரைப் பண்ணிக்கப் போறே?" என்றாள்.

"முத்தையா பிள்ளை இருக்காருல்ல, அவர் பொண்ணு தொரையம்மா இருக்குல்ல—"

அவனை மேலே பேசவிடாமல் வள்ளிநாயகி திடுக்கென்று, "மாடுகளுக்குத் தண்ணி காட்டினியா? வைக்கோலை எடுத்துப் போடு. லக்ஷ்மியை நேத்து மாதிரி ஈரத்திலே கட்டாதே" என்றாள்.

3

கிருஷ்ணன் தன் வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். கறு கறு என்று இருள் கவிந்து உலகத்தை மூடிக்கொண்டது. வானத்திலே மேலண்டைக் கோடியில் பளிச்சென்று ஒரு நட்சத்திரம் தோன்றிக் கண்ணைச் சிமிட்ட ஆரம்பித்தது. 'எல்லாருக்கும் முந்தி நான் உதித்து விட்டேன்' என்று அது பெருமை அடித்துக் கொள்வதுபோல் காணப்பட்டது.

வள்ளிநாயகி மறுபடியும் வீட்டுக்குள்ளிருந்து மாட்டுத் தொழுவத்தை நோக்கி வந்தாள். பகலும்

இரவும் அவளுக்கு ஒன்றுதான். வெளிச்சமாக இருந்தாலும், இருட்டா யிருந்தாலும் அவள் கண்களுக்கு மட்டும் உலகம் எப்போதும் அந்த காரத்தில் ஆழ்ந்ததாகவே இருந்தது. அன்றிரவு அவள் பார்வை மட்டுமின்றி அவள் ஹ்ருதயமும் இருளுக்கு இருப்பிடமாகிவிட்டது.

'கிருஷ்ணனுக்குக் கல்யாணம்; கிருஷ்ணனுக்குக் கல்யாணம்' என்று ஓயாமல் அவள் மனம் முணு முணுத்துக்கொண்டே இருந்தது. பிரபஞ்சத்திலே அவள் மனசைப் பாசத்தினுல் அதிகமாகப் பிணைத் திருந்த பொருள் கிருஷ்ணன்தான். மற்றவர்கள் கிருஷ்ணனைத் தங்கள் கண்களினுல் மட்டுமே பார்த்து அறிந்திருந்தார்கள்.

வள்ளியோ அவனைத் தன் ஹ்ருதயத்தினுலேயே பார்த்து அறிந்தவள். தகப்பனுரிடமும் தாயிடமும் அவளுக்கு அதிகத் தொடர்பு இல்லை. அவள் தகப் பனுர் தமக்குப் பிள்ளைக் குழந்தை ஒன்று பிறக்க வில்லையே என்று ஏமாற்ற மடைந்து எதிலும் அதிக மாக மனசைச் செலுத்தாமல் தம் காலத்தை முடித்துக் கொண்டார். தாய்க்கோ பெண் பிறவிக் குருடாய் இருக்கிறதே என்று குறை. அதனுல் தாயும் மகளும் ஒருவரை ஒருவர் சரியாக அறிந்து கொள்ளக் கூடவில்லை. அந்த மாட்டுக்காரப் பயல் கிருஷ்ணன் ஒருவன்தான் அந்தக் குருட்டுப் பெண் ணுக்கு ஓர் ஊன்றுகோல்போல் வாழ்க்கையில் உதவினுன். அவன் தனக்கே சொந்தமானவன் என்று அவள் மனமும் அவனிடம் ஏகபோக உரிமை கொண்டாடும் நிலையை அடைந்திருந்தது. 'கிருஷ்ணன் ஒரு நாள் கல்யாணம் செய்துகொள்வான், வேருெருத் திக்குச் சொந்தமாய் விடுவான்' என்ற எண்ணம் அது வரையில் அவள் மனத்தில் தோன்றினதே இல்லை.

அந்த உண்மை அன்று அவளுக்கு வெளி யானதும் உலகத்தைப்பற்றி அவள் மனத்தில் ஏற்

பட்டிருந்த தோற்றமே முழுவதும் மாறிப் போய் விட்டது. அவளைப் பொறுத்தவரையில் என்றுமே உதித்திராத சூரியன் அன்று திடீரென்று அஸ்த மித்துவிட்டான்.

கிருஷ்ணனுக்கு இரண்டாவதாக அவள் மனசில் இடம் பெற்றிருந்தது லக்ஷ்மி என்ற பசு மாடுதான். தொழுவத்துக்குள் சென்று லக்ஷ்மியின் அருகில் உட்கார்ந்தாள் வள்ளி. அந்த வாயில்லாப் பிராணி தன் கண்ணில்லா எஜமானியின் உணர்ச்சி களை அறிந்து கொண்டதுபோல் கழுத்தை நீட்டி அவள் கையை நக்கியது. 'லக்ஷ்மி, லக்ஷ்மி' என்று முணுமுணுத்துக்கொண்டு வள்ளி அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். அவள் கண்களில் நீர் துளித் தது. கிருஷ்ணனுடன் தான் விளையாடின விளையாட் டுக்களும், பொழுதைப் போக்கின விதங்களும் ஞாப கத்துக்கு வந்தன.

மாடுகளைக் குளிப்பாட்டுவதற்காக அவளையும் அழைத்துக்கொண்டு கிருஷ்ணன் தோட்டத்துக்குப் பின்னால் ஓடிக்கொண்டிருந்த ஆற்றுக்குப் போவான். வள்ளியை ஆற்றங்கரையில் ஒரு மரத்தின் வேரின் மேல் உட்கார வைத்துவிட்டு ஆற்றில் இறங்குவான். 'ஹை, ஹை' என்று மாடுகளைத் தண்ணீரில் விரட்டு வான். 'டப டப' என்று தண்ணீரைக் கைகளால் தட்டுவான்; நாலுபக்கமும் வாரி இறைப்பான். மாட்டின் முதுகின்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு, "ஆண்டிப்பண்டாரம் உனை வேண்டிக்கொண் டேனே" என்று சந்தோஷமாய்ப் பாடிக்கொண்டு சவாரி செய்வான். வாயைத் திறவாமல், அவன் உட்கார வைத்த இடத்தில் இருந்துகொண்டு இந்த வேடிக்கைகளையெல்லாம் சிரித்த முகத்துடன் தன் காதுகளினாலேயே கவனிப்பாள் வள்ளி.

பொங்கல் வந்துவிட்டால் கொம்மாளந்தான். மாலையில் மாடுகளை அலங்கரித்து வண்டியில் பூட்டிக்

குழந்தையோடு குழந்தையாய் வள்ளிநாயகியையும் தூக்கி வண்டியில் உட்காரவைத்துக் கிருஷ்ணன் வண்டியைத் தெருக்களில் கனவேகமாய் ஓட்டுவான். வண்டிச் சக்கரத்தில் சாட்டைக் கம்பைக் கொடுத்துக் கடகட என்று சப்தம் செய்வான். குழந்தைகள் சந்தோஷ மிகுதியால் 'ஹோ' என்று இரைவார்கள். வள்ளிநாயகி பயந்துபோய்க் கிருஷ்ணன் தோள்பட்டையைக் கட்டிக்கொள்வாள்.

இப்படிக் குழந்தைப் பருவத்தில் நடந்த சம்பவங்கள் ஒவ்வொன்ருய் நினைவுக்கு வரவர வள்ளி நாயகியின் துக்கம் அதிகமாயிற்று ; "வள்ளி!" என்று உள்ளே தாய் கூப்பிடும் குரல் கேட்டதும் கையுங் களவுமாய்ப் பிடிபட்ட திருடனைப்போல் திடுக்கிட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டு உள்ளே சென்ருள்.

4

பனங்குடிக் கிராமத்தில் கிருஷ்ணனை அறியாதவர்கள் இல்லை. ஆகையால் கிருஷ்ணனுக்குக் கல்யாணம் என்ருல் சொல்லவேண்டுமோ! ஒருவர் பாக்கியில்லாமல் அனைவரும் கல்யாணத்திற்கு வந்திருந்தார்கள்.

இரவு பத்து மணிக்குப் பூர்ண சந்திரன் தன் மோகன நிலவை அள்ளிப் பொழிந்துகொண் டிருந்த நேரத்தில், கல்யாண ஊர்வலம் புறப்பட்டது.

தங்கள் தெருக்கோடியில் மேளச்சத்தம் கேட்டதுமே வள்ளிநாயகி தன் வீட்டில் ஜன்னல் எதிரில் வந்து தன் குருட்டுக் கண்களால் தெருவைப் பார்ப்பதுபோல் நின்ருள். அவள் மனத்தில் இவ்வளவு நாட்களாய் அலை மோதிக்கொண் டிருந்த கொந்தளிப்பெல்லாம் அடங்கிப்போய் அதற்குப் பதில் ஒரு தெய்விகமான அமைதி குடிகொண் டிருந்தது.

கிருஷ்ணனுக்கு அந்த வருஷம் கல்யாணம் நடப்பதே அவள் முயற்சியினால்தான் சாத்திய மாயிற்று. ஒரு நாள் அவள் அவனைப் பார்த்து, "கல் யாணம் எப்போது கிருஷ்ணா?" என்று கேட்ட போது, அவன் வருத்தத்துடன், "இந்த வருஷம் இல்லையம்மா" என்றான்.

"இந்த வருஷம் இல்லையா? அதென்ன?"

"ஆமாம் அம்மா. கல்யாணம்னா சும்மா ஆயிடுமா அம்மா? பணம் வேண்டாமா? எங்கிட்டே பணம் ஏது? சிறுகச் சிறுகச் சேர்த்து அடுத்த வருஷம் பண்ணிக்கலாமின்னு இருக்கேன். இல்லாவிட்டால் இந்த வருஷமே ஆகிற கல்யாணந்தான்."

திடீரென்று வள்ளிநாயகியின் மனம் சந்தோஷத் தால் பூரித்தது. கிருஷ்ணனுக்கு இந்த வருஷம் கல்யாணம் இல்லை! இன்னும் ஒரு வருஷத்துக்கு அவன் துரையம்மாளுக்குச் சொந்தமாக மாட்டான்!

அடுத்த விநாடியே வள்ளிநாயகி துக்கித்தாள். தான் சந்தோஷப்பட்டதற்காகத் தன்னையே கடிந்து கொண்டாள்.

'பாவம்! கிருஷ்ணன் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று எவ்வளவு ஆவலாக இருந்தான்! எவ்வளவு சந்தோஷத்துடன் அதை எதிர்பார்த் தான்! இந்த வருஷம் கல்யாணம் இல்லை என்று சொன்னபோது அவன் குரலில் எவ்வளவு துக்கம் தொனித்தது! அவன் வருத்தத்தைப் பார்த்து, தான் சந்தோஷப்படுவதா?'

இப்படி அவள் நினைத்துக்கொண் டிருக்கையில் கிருஷ்ணன் கேட்டான்:

"என் கல்யாணம் கிடக்கட்டும், வள்ளியம்மா; உனக்கு இந்த வருஷம் கல்யாணமாமே?"

"சீ, விளையாடாதே" என்றாள் வள்ளி கோபத்தோடு.

"விளையாட்டு அல்ல, அம்மா; நிசமாய்த்தான் கேட்கிறேன். அம்மாவும் கணக்கப் பிள்ளை ஐயாவும் பேசிக்கிட்டிருந்தாங்க; காதிலே விழுந்திச்சு."

"பைத்தியமா உனக்கு?"

"இல்லே, நிசம்மாத்தானம்மா."

வள்ளி ஒன்றும் புரியாமல் கோபத்துடன் உள்ளே சென்றாள். படுத்துக்கொண்டிருந்த தாய் எதிரில் போய் நின்று, "எனக்கா கல்யாணம்?" என்று வினவினாள்.

"ஆமாம்; உட்கார். சொல்லுகிறேன்."

"மாப்பிள்ளை யார்?"

"எல்லாம் உன் மாமன்தான். மூணு வருஷத்துக்கு முந்தியே அவனுக்கு உன்னைக் கொடுக்கணும்னு பேச்சு நடந்தது. அவன் இஷ்டப்படாமல் வேறு இடத்தில் பண்ணிக்கொண்டான். மூணு வருஷம் ஆகியும் குழந்தை பிறக்கவில்லை. அதனால் உன்னை இரண்டாந்தாரமாகப் பண்ணிக்கொள்ள இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறான்."

"எனக்குக் கல்யாணம் வேண்டாம், அம்மா."

"சே, அசடு! பெண்ணாப் பிறந்தால் கல்யாணம் ஆகாமல் இருக்க முடியுமா? மாமன் இல்லாவிட்டால் உன்னை வேறு யார் பண்ணிப்பார்கள்? நம் வம்சம் இத்துடன் அழிந்தல்லவா போய்விடும்? நம் நிலபுலன்களெல்லாம் என்ன ஆகிறது?"

வள்ளிநாயகி பெருமூச்செறிந்தாள். மாமனுக்குக் குழந்தை வேண்டும்; தாய்க்கோ பணம் பிரதானம்; தன்னை விரும்புவார் ஒருவரும் இல்லை.

"சரி அம்மா; வேறொரு விஷயம் சொல்ல வந்தேன்."

"என்ன ?"

"கிருஷ்ணனும் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிருனும். ஆனுல், பணம் இல்லாததால் தடையாய் இருக்கிறதாம்."

"சரி, அதற்கென்ன ? நம் கிருஷ்ணனுக்குத்தான கல்யாணத்துக்குப் பணம் இல்லாமல் போயிட்டுது ? கொடுத்தால் போகிறது. கணக்கப் பிள்ளை ஐயா இப்பத்தான் பணம் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போனுர்."

"சரி, அப்படியானுல் இப்பவே கொடுத்துவிடு" என்று வள்ளிநாயகி, "கிருஷ்ணு !" என்று கூப்பிட்டாள்.

கிருஷ்ணனுக்குத் தன் காதுகளையும் கண்களையும் நம்ப முடியவில்லை. அடக்க முடியாத மகிழ்ச்சியுடன் பணத்தை வாங்கிக்கொண்டு, "வள்ளியம்மா, நீயே என் குலதெய்வம் !" என்று அவள் காலில் விழுந்து நமஸ்கரித்தான்.

5

மேளச்சத்தம் வரவர அருகில் நெருங்கிவந்தது. நாகஸ்வரக்காரன் சங்கராபரண ராகத்தை அலசிப் பிழிந்துகொண் டிருந்தான். அவர்கள் வீட்டெதிரில் வந்தபோது காந்த விளக்குகளின் வெளிச்சம் பளிச் சென்று ஜன்னல் வழியாய்ப் பிரவேசித்து வள்ளியின் முகத்திலும் பின்னுல் இருந்த சுவரின் மேலும் துள்ளித் துள்ளி விளையாடியது. வள்ளியின் கால்கள் அயர்ந்தன. ஜன்னல் கம்பிகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு பதுமைபோல் நின்ருள்.

கல்யாணக் கூட்டம் அந்த வீதியைக் கடந்து சென்றது. வள்ளிநாயகியின் உடலில் உயிர் வந்தது. குங்குமச் சிமிழை எடுத்து நெற்றிக்கு இட்டுக்

கொண்டாள். பூங்கொத்தை எடுத்துக் கூந்தலில் செருகிக்கொண்டாள். கொல்லைப்புறம் சென்று மாட்டுத் தொழுவத்தை அடைந்து, லக்ஷ்மியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அதன் நெற்றியில் முத்த மிட்டாள். பிறகு தோட்டத்தைத் தாண்டித் தட்டுத் தடுமாறிக்கொண்டு வெளியே வந்தாள்.

எதிரில் அரசலாறு பரிசுத்தமான ஞானிகளின் இதயம் போல் தண்ணீர் தெளிந்து காணப்பட்டது. காற்றடித்து நீர்ப்பரப்பிலே அலைமோதும்போது, ஆகாயத்தில் பிரகாசித்துக்கொண் டிருந்த பூர்ண சந்திரனின் உருவம் லக்ஷக்கணக்கான வைரங்களை வாரி இறைத்ததுபோல் தண்ணீரிலே பிரதிபலித்தது.

வள்ளிநாயகி சற்று நேரம் பிரமை பிடித்தவள் போல் நின்றாள். மறுநிமிஷம் 'குடுக்' என்று சப்தம் கேட்டது. தண்ணீரில் குமிழ்கள் தோன்றி 'டுப்' பென்று வெடித்தன.

வெகு தூரத்திலிருந்து, அந்த நாகஸ்வரக்காரன் ஸஹானா ராகத்தை ஆலாபனம் செய்யும் ஓசை காற்றிலே தவழ்ந்து வந்தது.

'கோட்டை கொத்தளம் மீதில்'

1

செங்கற்பட்டு ஸ்டேஷனிலிருந்து காஞ்சீபுரம் வழியில் போகும் ரெயில் வண்டி பகல் பதினொரு மணிக்கு ரெட்டிப்பாளையம் ஸ்டேஷனில் நின்றது. இரண்டு பிரயாணிகள் இறங்கினார்கள். ஒருவரும் ஏறவில்லை. இரண்டு நிமிஷம் மேலும் கீழும் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு, 'கார்ட்' ஊதலை ஊதி, கொடி காண்பித்தார். மேலே போக இஷ்டமில்லாததுபோல் வண்டி முனகிக்கொண்டே அசைந்து கொடுத்துவிட்டுப் பிறகு ஏக ஆர்ப்பாட்டத்துடன் நகரத் தொடங்கியது.

அதுவரையில், ஸ்டேஷனுக்கு எதிர்ப்புறத்தில் மரங்கள் அடர்ந்து இருந்த தோப்பில் ஒரு மரத்தின் மறைவில் நின்றுகொண் டிருந்த துலுக்காணம் திடீரென்று தன் மறைவிடத்திலிருந்து பாய்ந்து ஓடிப் போய் ரெயிலில் ஏறிக்கொண்டான்.

'டக்'கென்று கதவு திறக்கும் சப்தம் கேட்டுப் பிரயாணிகள் சிலர் திரும்பிப் பார்த்தார்கள். திரும்பிப் பாராமல் வேறு ஞாபகமாய் இருந்தவர்களும் 'படீர் படீர்' என்று சப்தம் வந்ததைக் கேட்டதும் திரும்பிப் பார்க்கவேண்டியதாயிற்று. வண்டியின் கோடியில் நின்றுகொண்டு, மேலே போட்டுக்கொண் டிருந்த அழுக்கேறின பனியனைத் தூக்கி மடித்துவிட்டுக் கொண்டு துலுக்காணம் வயிற்றில் படீர் படீரென்று அடித்துக்கொண் டிருந்தான்.

அருவருப்புடன் முகத்தைச் சுளித்துக்கொண்டு எல்லோரும் வேறு பக்கம் பார்வையைத் திருப்பினார்கள். குழந்தைகள் மட்டும் ஸ்வாரஸ்யத்துடன் இந்த வேடிக்கையைக் கவனித்தன.

துலுக்காணம் வயிற்றிலே அடித்துக் கொள்வதை நிறுத்திவிட்டு, "மகம்மதியர் மதத்தில், மாணிக்கமாய்ப் பிறந்த, மௌலானா மகம்மதாலியே—" என்று பாடத் தொடங்கினான்.

'ஜிகுஜிகு' என்று சப்தம் போட்டுக்கொண்டு ரெயில் வண்டி ஓடியது. பாடிக்கொண் டிருந்தவன் மெதுவாய் ஒவ்வொருவரிடமாய் வந்துநின்று கையை நீட்டிப் பிச்சை கேட்டான். அவன் இடது கரத்தில் மணிக்கட்டே இல்லைபோல் தோன்றிற்று. கை மடிந்து ஐந்து விரல்களும் தொள தொளவென்று தொங்கிக்கொண் டிருந்தன. தனக்குக் கை ஊனம் என்பதைக் காண்பிப்பதற்காகவே அந்தக் கையைத் தூக்கி முன்னால் நீட்டிக்கொண் டிருந்தான். இரண்டு தம்படிகள் அவன் கையில் விழுந்தன. அநேகர் வேறு பக்கம் பார்த்துக்கொண்டே தலையை ஆட்டிப் போகச் சொன்னார்கள்.

அடுத்த ஸ்டேஷன் பிளாட்பாரத்துக்குள் வண்டி நுழைந்தது. வண்டி அங்கே நிற்பதற்குள் படாரென்று கதவைத் திறந்துகொண்டு 'கார்ட்' உள்ளே ஓடிவந்தார். அவரைப் பார்த்ததும் துலுக்காணம் விடுவிடென்று வண்டியின் இன்னொரு கோடிக்கு ஓடிக் கதவைத் திறந்துகொண்டு வெளியே குதித்தான். ஸ்டேஷனுக்கு எதிர்ப்பக்கத்தில் அவன் குதித்தபடியால் அவனைத் தடுப்பவர்கள் அங்கே யாரும் இல்லை. கீழே குதித்தவன் சிறிது தூரம் ஓடிப் போய், தூரத்தில் நின்றுகொண்டு திரும்பிப் பார்த்தான். 'கார்ட்' கையைப் பலமாக ஆட்டிவிட்டு, மறு

படியும் வந்த வழியே வெளியே சென்றுகொடி காண்பித்தார்.

மறுபடியும் ரெயில் புறப்பட்டபோது வண்டியில் இருந்தவர்கள் பிச்சைக்காரன் என்ன செய்யப் போகிருன் என்று வெளியே தலையை நீட்டிக் கொண்டு பார்த்தார்கள். கடைசி வண்டி பிளாட்பாரத்தைத் தாண்டிப் போகிற சமயத்தில் துலுக்காணம் மறுபடியும் விடுவிடென்று ஓடிவந்து எழும்பிக் குதித்து வண்டியில் தொற்றிக்கொண்டான். பார்த்துக் கொண் டிருந்தவர்கள் சிரித்தார்கள். 'கார்டி'ன் முகத்தில் மட்டும் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

அடுத்த ஸ்டேஷனில் வண்டி நிற்கும் வரையில் துலுக்காணம் காத்துக்கொண் டிருக்கவில்லை. பொத்தென்று அவன் குதித்த சமயத்தில் 'கார்டு'ம் கீழே குதித்து அவனைத் துரத்தினர். அப்போது வேருெரு வண்டியிலிருந்த பிச்சைக்காரப் பெண் ஒருத்தியை விரட்டிக்கொண்டு ஒரு போலீஸ்காரனும் ஓடி வந்தான். எதிரே இருந்த இரும்புக் கிராதியில் நுழைந்து தப்பித்துக் கொள்வதற்கு அகலமான இடைவெளி ஏதாவது இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டே இரண்டு பிச்சைக்காரர்களும் ஓடினர்கள்.

முதலில் துலுக்காணம் அப்படி ஒரு வழி கண்டு பிடித்துக்கொண்டு வெளியே ஓடிப்போய், தூரத்தில் நின்று திரும்பிப் பார்த்தான். பின்னல் ஓடிவந்த பெண்ணின்மேல் போலீஸ்காரன் ஒரு கல்லை வீசி எறிவதையும், அவள் உடம்பை வளைத்துக் கொடுத்து கல்லடியிலிருந்து தப்பிக் கால் இடறிக் கீழே விழுந்து மறுபடியும் எழுந்து ஓடுவதையும் பார்த்தபோது அவனல் சிரிப்பை அடக்க முடியவில்லை.

இதற்குள் ரெயில் கிளம்பிவிட்டது. அந்தப் பெண்ணும் போலீஸ்காரன் கையில் பிடிபடாமல் தப்பித்துக்கொண்டு துலுக்காணம் இருந்த

இடத்துக்கு வந்தாள். கிட்டே நெருங்கியதும் அவளைப் பார்த்துவிட்டுத் துலுக்காணம் ஆச்சரியத்துடன், "நீ சின்னப் பொண்ணு இல்லையா?" என்று கேட்டான்.

அந்தப் பெண்ணும் ஆச்சரியத்துடன், "ஆமாம்" என்று சொல்லிவிட்டு, "ஓ, நீயா?" என்றாள். அவள் கண்களிலே ஒரு மலர்ச்சி தோன்றியது. மாசக் கணக்காய்க் குளிக்காமல் அழுக்கேறியிருந்த முகத்தில், இரு கண்களும் திடீரென்று சந்தோஷத்தினால் ஒளிவிட்டுப் பிரகாசித்தன.

"ஆமாம். அவ எங்கே உங்க ஆத்தா?" என்று கேட்டான் துலுக்காணம்.

"செத்துப் போச்சு."

ஒன்றும் சொல்லாமல் துலுக்காணம் ஒரு மரத்தின் வேரின்மேல் உட்கார்ந்தபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். 'எல்லோரும் ஒரு நாள் சாக வேண்டியதுதானே?' என்று நினைத்துத்தான் அவன் பேசாமல் இருந்தானோ என்னவோ, தெரியவில்லை. கடைசியில் கோபத்தோடு, "உங்க அம்மா எனக்கு எட்டணாத் தரணும். எங்கிட்டேயிருந்து திருடிக்கிட்டு ஓடிப் போனா. அதனால்தான் செத்தாள்!" என்றான்.

சின்னப் பெண் இதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. தரையைப் பார்த்துக்கொண்டு நின்றாள். "எவ்வளவு துட்டு இன்னிக்குச் சம்பாரிச்சே?" என்று துலுக்காணம் கேட்டதும் அவளுக்கு அழுகையே வந்துவிட்டது. "முக்காலணாக் கெடச்சுது. ஓடிவரபோது தடுக்கி விழுந்தேன்; அதுவும் எங்கேயோ விளுந்துட்டுது" என்றாள்.

துலுக்காணம் விழுந்து விழுந்து சிரித்தான். சம்பாதித்த காசை வைத்துக் கொள்ளத் தெரியவில்லையே என்று நினைத்தபோது அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

“நான் அந்தக் ‘கார்டு’க்குத் தண்ணி காமிச்சேனே, பாத்தியா? என்னைப் பிடிக்க அவன் தாத்தா வரணுமே!” என்றான்.

பிறகு, “என்ன பாட்டுப் பாடுவே நீ?” என்று அவன் கேட்டபோது சின்னப் பெண், “பாரத மாதா பாட்டு” என்றாள்.

“வாரே வா!” என்று துடைமேல் பளீர் பளீரென்று அடித்துக்கொண்டான் துலுக்காணம்.

2

பாரதமாதா என்றால் என்ன என்பது துலுக்காணத்துக்குத் தெரியாது. துலுக்காணம் என்ற பெயரைப்பற்றி எனக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவுதான் அவனுக்கும் பாரதமாதாவைப் பற்றித் தெரியும். அதை யெல்லாம் தெரிந்துகொள்ளும் சக்தியை அவன் தாய்தந்தையர் அவனுக்கு அளிக்கவில்லை. ஏன்? - தகப்பன் என்று ஒரு ஜீவன் இருக்கிறது என்பதையே துலுக்காணம் உணர்ந்தவனல்ல. அதைப்பற்றி அவன் கவலைப்படவும் இல்லை. அறிவு தெரிந்தது முதல் தன் தாயைத்தான் அவன் அறிந்திருந்தான். அவனுக்கு நடக்கத் தெரியாத போது அவள் அவனைத் தன் புடைவைத் தலைப்பில் போட்டுத் தூக்கித் தன் கழுத்தோடு முடிந்துகொண்டு அப்படியே எங்கும் சென்று பிச்சை எடுத்தாள். அவன் நடக்கத் தொடங்கிய பிறகு, இடது கையை மடித்துக் காண்பித்து ஊனமான கைபோல் அதை வைத்துக்கொள்ள அவனுக்குச் சொல்லிக் கொடுத்தவளும் அவள்தான். இந்த வித்தையைத் துலுக்காணம் விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டான். நாளடைவில் அந்தக் கையை உபயோகிக்கும் விதமே அவனுக்கு மறந்து போய்விட்டது. உண்மையிலேயே ஊனமான கைபோலவே அது

தொள தொள என்று ஒடிந்து விழுவதுபோல் எப்பொழுதும் தொங்கிக்கொண் டிருந்தது. ஒரே கையுடன் துலுக்காணம் ஓடுகிற ரெயிலில் எழும்பிக் குதித்துத் தொற்றிக் கொள்ளுவான்; இடுப்புத் துணியையும் ஒரே கையால் வரிந்து கட்டிக்கொள் வான்.

அவனுக்கு ஏழெட்டு வயசு நடந்துகொண் டிருந்தபோது அவன் தாய் செத்துப் போனாள். இதனால் ஒன்றும் அவனுக்கு முழுகிப்போகவில்லை. அவளுக்குப் பதில் வேறொரு தாய் உடனே கிடைத்து விட்டாள். அவள்தான் சின்னப் பெண் ணின் தாய். இந்த 'நொண்டி'ப் பையன் தன் பிழைப்புக்கு அதிக உதவியாக இருப்பான் என்று தெரிந்து கொண்டு அவள் அவனைத் தன்னோடு வைத்துக் கொண்டாள். அவள்தான் அவனுக்கு வயிற்றில் ஓங்கி அடித்துத் தாளம் போடவும் கற்றுக் கொடுத்தவள். அவள் பாடும்போது துலுக்காணம் மொண்டிக் கையை நீட்டிக்கொண்டு மற்றொரு கையால் வயிற்றிலே அடித்துக்கொள்வான். அப் பொழுது சின்னப் பெண்ணுக்கு ஐந்து வயசு இருக்கும். மூக்கிலிருந்து சளி ஒழுக, இடுப்பில் கன்னங்கறேலென்று ஒரு கந்தலைக் கட்டிக்கொண்டு இவர்கள் பின்னாலேயே அவள் ஓடுவாள். இப்படி நான்கைந்து வருஷங்களை அவர்களுடன் கழித்தான்.

துலுக்காணத்துக்கு வயசு பன்னிரண்டாயிற்று. தைமாதம் பிறக்கப்போகிறது; பொங்கல் பண்டிகை வரப்போகிறது. அந்த வருஷம் அவனுக்கு ஒரு விபரீதமான எண்ணம் தோன்றியது. பொங்கலுக்கு எல்லாரையும்போல் தானும் ஒரு புதுத்துணி வாங்கிக் கொள்ளவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. உடனே இரண்டாம் பேருக்குத் தெரியாமல் பிச்சைக் காசில் கால் காலணவாய்ச் சுங்கம் பிடித்துச் சேர்த்து

வைக்கத் தொடங்கினான். இப்படி, கிட்டத்தட்ட அரை ரூபாய் சேர்ந்தது. அவன் இடுப்பிலிருந்த பண முடிச்சும் சிறிது சிறிதாய்ப் பெரிதாகிக்கொண்டே வந்தது.

ஆனால், பணமோ காசோ எதுவும் அதது போய்ச் சேரவேண்டிய இடத்திலேதானே போய்ச் சேருகிறது? ஒரு நாள் துலுக்காணம் தூங்கி எழுந்து இடுப்பைத் தடவிப் பார்த்தபோது பணமுடிப்பைக் காணவில்லை! அதனுடன் சின்னப் பெண்ணும் அவள் தாயுங்கூட எங்கேயோ மாயமாய் மறைந்து விட்டார்கள்.

இதை நினைத்து இப்பொழுது துலுக்காணம் தன் மனத்துக்குள் சிரித்துக்கொண்டான். அவன் இடுப்பில், முன்பு அவன் பணத்தை முடித்துப் போட்டு வைத்திருந்த இடத்தில், இப்போது, அவன் தின்று மீதி வைத்திருந்த வெள்ளரிக்காய்த் துண்டு ஒன்று இருந்தது. அதை எடுத்து, "இந்தா" என்று சின்னப் பெண்ணிடம் கொடுத்தான். அவள் ஆவலுடன் வாங்கித் தின்றாள்.

இருவரும் அங்கிருந்து நடந்தார்கள். துலுக்காணம் உத்ஸாகத்துடன் பாடிக்கொண்டே போனான். 'கோட்டை கொத்தளம் மீதில் ஏறிக் கூசாமல் குதிப்பேன்!—' இந்தப் பாட்டு நெடுநாளைக்கு முன் அவன் ஒரு தெருக்கூத்திலே கேட்டது. அது அப்படியே, அவன் மனத்திலே பதிந்துவிட்டது. சந்தோஷமாக இருக்கும்போதெல்லாம் அவனையும் அறியாமல் இந்தப் பாட்டை அவன் மனம் முணுமுணுக்கும்.

அன்றையிலிருந்து துலுக்காணத்தையாவது சின்னப் பெண்ணையாவது ஒருவரும் தனியாய்ப் பார்க்கவில்லை. இருவரும் ஜோடியாகவே எங்கும் செல்லத் தொடங்கினார்கள்.

3

ஐந்து வருஷங்கள் சென்றன.

பிச்சைக்காரர் உலகத்தில், ஒரு வருஷத்தில் பெரும் பகுதி ஒரு விநாடியைப்போல் போய்விடும். மழைக்காலமும் குளிர்காலமும் வந்துவிட்டால்தான் ஒரு யுகம் போவதுபோல் இருக்கும்.

அந்த வருஷம் மழை மிகவும் கடுமையாக இருந்தது. தீபாவளிக்கு இன்னும் பத்துத் தினங்களே இருந்தன. தீபாவளிக்காக மூட்டம் போட்டுக் கொண்டு மழை நான்கு நாட்களாய்ச் சேர்ந்தாற் போல் ஓயாமல் கொட்டிக்கொண்டே இருந்தது. வானம் கண் திறக்கவே யில்லை.

இந்த மழையில் பிச்சைக்காரர்கள் எங்கே போய்ப் பிச்சை எடுப்பார்கள்? பிச்சை எடுப்பதற்குத் தான் தெருக்களிலே ஜனநடமாட்டம் ஏது?

மழையில் நனைந்ததனால் சின்னப் பெண் காய்ச்ச லுடன் 'போர்ட் ஸ்டேஷன்' பிளாட்பாரத்தில் ஓர் ஓரத்தில் ஒண்டிக்கொண்டு படுத்திருந்தாள். கால் களைக் கட்டினபடியே பக்கத்தில் உட்கார்ந்திருந்தான் துலுக்காணம். இன்னும் ஏழெட்டுப் பிச்சைக்காரர் கள் அங்கங்கே உட்கார்ந்திருந்தார்கள். ஒரு கிழவன் தலையைச் சொறிந்துகொண்டே 'வளவள' என்று தன் உடன்பிறந்தவளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். அவள் பெரிய இடத்திலே சம்பந்தப்பட்டிருந்தாள் என்று தெரிந்தது. அதாவது கல்கத்தாவிலே ஒரு பிச்சைக்காரனோடு சேர்ந்து வாழ்ந்து வந்தாளாம்!

சின்னப் பெண்ணும் துலுக்காணமும் மூன்று நாட்களாய்ப் பட்டினி. துலுக்காணத்துக்குத் தலை கிறு கிறென்று சுற்றியது. படுத்துக்கொள்ளலாம் என்றால் தூக்கம் வரவில்லை. குளிரினால் உடம்பு வெடவெட என்று உதறல் எடுத்தது. இவ்வளவு போதாதென்று

ஜுரம் வேறு வந்திருக்கிறதே; பாவம்! சின்னப் பெண்ணுக்கு எவ்வளவு கஷ்டமாய் இருக்கும் என்பதை நினைத்தபோது அவன் மனம் மிகவும் வேதனை அடைந்தது.

“சின்னப் பொண்ணு! சின்னப் பொண்ணு!” என்று கூப்பிட்டான்.

“உம்—” என்று அவள் முனகினாள்.

“எங்கேயாவது போய் ஒரு காலணாவாவது சம்பா திச்சு ஒரு இட்டிலி வாங்கிட்டு வரேன். இங்கேயே இரு” என்று சொல்லிவிட்டு அவன் எழுந்திருந்தான்.

மழை சிறிதும் ஓயவில்லை. பகல் மூன்று மணி தான் என்றாலும் வானம் இருட்டிக்கொண் டிருந்தது. ஓர் இடியாவது மின்னலாவது இல்லாமல் சோ என்று மழை பிடிவாதத்துடன் கொட்டிக்கொண் டிருந்தது.

துலுக்காணம் எழுந்து நின்று எங்கே போகலாம் என்று யோசித்தான். அப்பொழுது பத்தடி தூரத்தில் பெஞ்சியில் படுத்துக்கொண் டிருந்த ஒருவர் சட்டைப் பையின்மேல் அவன் பார்வை விழுந்தது. அந்தப் பையிலிருந்து ஒரு ‘மணிபர்ஸ்’ நீட்டிக்கொண் டிருந்ததை அவன் கண்கள் கவனித்தன.

‘அடேயப்பா துலுக்காணம்! திருடுவது பாவ மடா!’

ஆனால் விதி யாரை விட்டது? துலுக்காணம் எட்டு மாசம் கடுங்காவல் தண்டனை அடைந்தான்.

4

பின்னும் நான்கு வருஷங்கள் ஆயின. இப் போது துலுக்காணத்தைப் பார்த்தால் அடை யாளமே தெரியாது. விடு விடென்று மெல்லிசாக இருந்த சரீரம் பெருத்து ஊதிப்போய்விட்டது. கை

கால்கள் குறைந்து அழுகிச் சொட்டிக்கொண் டிருந்தன. உடம்பெல்லாம் சிரங்கும் சொறியுமாக இருந்தன. கண் பார்வையும் மங்கித் தட்டுத் தடுமாறி நடந்துகொண் டிருந்தான்.

எட்டு மாசச் சிறைவாசத்தைத் துலுக்காணம் எட்டு யுகங்களாகத்தான் கழித்தான். சின்னப் பெண்ணை விட்டுப் பிரிந்த பிறகுதான் அவளிடம் தனக்கு ஏற்பட்டிருந்த அன்பின் ஆழத்தை அவன் உணர்ந்தான். மூன்று நாள் பட்டினியாய், காய்ச்சலோடு கிடந்தவளிடமிருந்து தன்னைப் பிரித்து விட்டார்களே என்று நினைத்து நினைத்துக் கண்ணீர் விடுவான். தவிர, சின்னப் பெண் கர்ப்பமாய் இருக்கிறாள் என்ற சந்தேகமும் அப்போது அவனுக்கு இருந்தது.

சிறையிலிருந்து அவன் வெளியே வந்து பட்டணம் எங்கும் தேடியும் சின்னப் பெண்ணைக் காணவில்லை. அவள் எங்கே போனாள் என்ற விவரம் தெரிவிப்பவர்களும் ஒருவரும் இல்லை. சரி, அவள் செத்துத்தான் போய்விட்டாள் என்று துலுக்காணம் தீர்மானித்துக்கொண்டான். ஒரு வியாதிக்கார ஸ்திரீயுடன் சேர்ந்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்ததில் அவனுக்கும் வியாதி வந்துவிட்டது. சிறிது சிறிதாக அது அவனை உயிரோடு தின்றது. உடலும் உள்ளமும் ஒருங்கே மழுங்கிக் குறைந்து கொண்டே வந்தன.

ஒரு நாள் மூன்று மணிவரையில் ஒரு தம்படி கூட அவனுக்குக் கிடைக்கவில்லை. ஒருவரும் அவனைக் கிட்டே அணுகவிடவில்லை. 'போ போ' என்று அருவருப்போடு விரட்டினார்கள். முதல் நாள் காலையில் அரை வயிற்றுக்குச் சாப்பிட்டதோடு சரி. அப்புறம் பசிக்கும்போதெல்லாம் தண்ணீரைக் குடித்து வயிற்றை நிரப்பிக்கொண் டிருந்தான்.

சைஞ பஜார் பஸ் ஸ்டாண்டிலிருந்து நொண்டி நொண்டி நடந்து பூக்கடை பஸ் ஸ்டாண்டுக்கு வந்து களைப்புடன் சுவரில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்தான். வாயைத் திறந்து கேட்கவும் சீவன் இல்லாமல், போகிறவர் வருகிறவர்களை எல்லாம் பார்த்து வயிற்றைக் காண்பித்துக் கையை நீட்டினுன். ஒருவரும் அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை.

ஒரு பஸ் வந்து நின்றது. உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு, "ஐயா! ஒரு பைசா குடுங்க சாமி!" என்று துலுக்காணம் அடிவயிற்றிலிருந்து ஒரு சப்தம் போட்டான். பஸ்ஸில் இருந்த ஒரு வயோதிகர் சட்டைப் பையிலிருந்து காலணுக் காசை எடுப்பதை அவன் கண்கள் பார்த்தன. அவன் உடம்பிலே எப்படித்தான் சக்தி வந்ததோ தெரியவில்லை. சட்டென்று எழுந்திருந்து கையை நீட்டிக்கொண்டு பஸ் அருகில் சென்றுன். அப்பொழுது எங்கிருந்தோ ஒரு பிச்சைக்காரி இடுப்பில் ஒரு குழந்தையுடன் ஓடிவந்து, அவனை ஓர் இடி இடித்துக்கொண்டு கிழவர்முன் போய்க் கையை நீட்டி அந்தக் காசை வாங்கிக்கொண்டாள். துலுக்காணம் போய் நின்றபோது கிழவர், "போடா போ, எத்தனை பேருக்குப் போடுவது?" என்றுர். பஸ் நகர்ந்தது.

துலுக்காணம் அந்தப் பிச்சைக்காரியைப் பார்த்தான். அவளும் அவன் பக்கம் அலக்ஷ்யமாகப் பார்த்துவிட்டு வந்த வழியே சென்றுள். அப்படியே பேய் பிடித்தவன்போல் நின்றுன் துலுக்காணம். அந்தப் பிச்சைக்காரி சின்னப் பெண்தான்; வேறு யாரும் இல்லை. ஆனல், அவள் துலுக்காணத்தை அடையாளம் கண்டுகொள்ளவில்லை.

அவனையும் மீறிக் கால்கள் அவள் சென்ற வழியே அவனை இழுத்துச் சென்றன. அதிக தூரம் நடக்க முடியாமல் வழியில் ஒரு மரத்தடியில் பொத்

தென்று விழுந்தான். அவனையும் அறியாமல் அவன் மனம், 'கோட்டை கொத்தளம் மீதில்—' என்று முணுமுணுத்தது.

உண்மைதான்; இதோ அவன் கண் எதிரே வானையளாவி நிற்கும் கோட்டை ஒன்று தெரிகிறது. துலுக்காணம் விடுவிடென்று அதன்மேல் ஏறி அதன் உச்சியில் நிற்கிறான். கீழே குனிந்து பார்த்தால் கிடு கிடு பாதாளம். கண் இருள்கிறது; தலை சுற்றுகிறது. ஆனால், அவன் சிறிதும் அஞ்சவில்லை. ஒரு தாவு தாவி அங்கிருந்து கீழே குதிக்கிறான். லக்ஷக்கணக்கான பறவைகள் 'கிருகிரு' என்று சப்த ஜாலங்களை எழுப்பு கின்றன. ஆயிரக் கணக்கான வண்டுகள் காதிலே ஓய்யென்று ரீங்கார மிடுகின்றன. ஊ என்று அண்ட சராசரங்களும் பிரலாபிக்கின்றன.

அதனுடன் அவன் ஆத்மா சாந்தி அடைந்தது.

ஆற்றங் கரையில்

1

நான்கு வருஷங்களுக்குப் பிறகு அன்றுதான் மறுபடியும் கந்தப்பன் தன் சொந்த ஊருக்குத் திரும்பி வந்தான்.

அன்று சுக்கிலபக்ஷத்துச் சதுர்த்தசி. நிர்மலமான வானவெளியில், சௌந்தர்ய தேவதை மோகனப் புன்னகை புரிவதுபோல் சந்திரிகை பிரகாசித்துக் கொண்டிருந்தது. பாலாற்றில் புது வெள்ளம் போகிற காலம். நிலவொளியில் பால், ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடுவதுபோல் புது நீர் நுரைத்துக் கொண்டு இரண்டு கரைகளையும் தொட்டுக்கொண்டு சென்றது.

அந்தச் சந்திரிகையிரவில் மணலூர்க் கரையிலிருந்து சிறு படகு ஒன்று எதிர்க்கரையை நோக்கிப் புறப்பட்டது. கிராமத்து இளைஞர்கள் கந்தப்பனை எதிர்கொண்டு வரவேற்று அழைத்து வருவதற்காகத் தான் இப்படிப் படகில் புறப்பட்டார்கள். படகு, தோகை விரித்தாடும் மயிலைப்போல் பூக்களினால் அழகாக நிர்மாணித்து அலங்கரித்திருந்தது. படகு கிளம்பியதும், இரவின் நிச்சப்தத்தில், படகில் இருந்த நாகஸ்வரக்காரன் மோகன ராகத்தை ஆலாபனம் செய்து வாசிக்கத் தொடங்கினான். நதியைச் சுற்றிலும் நெடுந் தூரத்துக்கு அந்த இன்னிசையும், மல்லிகை மலரின் நறுமணமும் காற்றிலே தவழ்ந்து சென்றன.

கந்தப்பன் தன் வீட்டை விட்டுச் சென்று நான்கு வருஷங்கள் ஆயின. வரதப்ப நாயக்கர் எந்த வேளையில் தம் கிராமத்தில் அம்மன் கோவில் கட்டத் தொடங்கினரோ தெரியவில்லை. கோவில் இன்று வரையில் முற்றுப்பெறுமல் நிற்பதுடன், அதே வருஷம் அவர் பிள்ளைகள் இருவரும் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடிப் போனர்கள். இளையவனை கந்தப்பன், தகப்பனர் எவ்வளவு தடுத்தும் கேளாமல் பல்லவ சைனியத்தில் போய்ச் சேர்ந்துவிட்டான். அவன் போன சிறிது காலத்திற்குள் மூத்தவனும் சென்ற இடம் தெரியாமல் மாயமாய் மறைந்தான்.

காஞ்சிக்குச் சென்ற கந்தப்பன் நான்கு வருஷத்தில் சக்கரவர்த்தியிடம் பல பரிசுகள் பெற்றுத் தலைநகரில் பெரிய மனிதனுகிவிட்டான் என்று அறிந்தபோது மணலூர்வாசிகள் அடைந்த பெருமைக்கும் சந்தோஷத்துக்கும் அளவில்லை. கந்தப்பன் ஊருக்குத் திரும்பி வருகிருன் என்ருல் அவர்கள் குதூகலத்தைச் சொல்லவேண்டுமோ?

நதியின் எதிர்க்கரையில், கரையை ஒட்டியபடி நெடுந் தூரத்துக்கு ஒரே முந்திரிக் காடு. அதற்குப் பின்னல் அடுக்கடுக்கான மலைத்தொடர், முந்திரித் தோப்பின் மேல் எட்டிப் பார்க்கும் மேகக்கூட்டம் போல் லேசாகத் தெரிந்தது. ஆற்றிலே படகு பாதி தூரம் வந்துகொண் டிருந்தபோது எதிர்க்கரையில் முந்திரிக்காட்டுக்குள் வளைந்து வளைந்து சென்ற ஓர் ஒற்றையடிப் பாதையின்மேல் கந்தப்பன் குதிரை மேல் அமர்ந்தவனுய் ஆற்றங் கரையை நோக்கிப் போய்க்கொண் டிருந்தான். அவன் சென்ற வழியில் நிலா வெளிச்சம் அதிகமாய் இராமல் அடர்த்தியான மரங்களின் நிழல் விழுந்து இருட்டாய் இருந்ததால், குதிரை ஒவ்வொரு சமயம் பாதையை விட்டு விலகி, வழி தெரியாமல் தடுமாறிப் பிறகு சமாளித்துக்

கொண்டு சென்றது. இப்படி ஒரு சமயம் முன்னே போக வழி இல்லாமல் ஓர் அடர்ந்த புதரின் எதிரில் குதிரை போய் நின்றபோது, கந்தப்பன், "சீச்சீ!" என்று முணுமுணுத்துக்கொண்டு குதிரையைத் திருப்ப முயன்றான்.

அப்போது யாரோ இடியிடி என்று பயங்கரமாய் இரைந்து சிரித்தார்கள். தன் தலைக்கு மேல் மரத்தில் இலைகள் சலசல என்று சப்திப்பதைக் கேட்டுக் கந்தப்பன் திடுக்கிட்டு மேலே பார்த்தான்.

மரத்தின் உச்சியில் பெரிய கிளையொன்று நாமம் போட்டதுபோல் இரண்டாய்ப் பிரிந்திருந்தது. அதன் நடுவில் திடகாத்திரமான தேகத்தில் ஓர் ஒட்டுச் சல்லடம் மட்டும் அணிந்துகொண்டு, சடை போட்ட பரட்டைத் தலையுடன் ரோமம் அடர்ந்த முகத்தோடு நின்றிருந்தது ஓர் உருவம். மங்கின நிலா வெளிச்சத்திலும், அந்த மனிதன் கையில் குறி பார்த்து அம்பு பூட்டிய வில்லொன்றை வைத்துக்கொண்டிருந்ததைப் பார்த்தான் கந்தப்பன்.

கந்தப்பன் வாயைத் திறந்து பேசுவதற்குள் அந்த உருவம் கர்ணகடோரமான குரலில், "அப்பனே! அந்தக் குதிரை எனக்கு வேண்டியதாய் இருக்கிறது. நீ பேசாமல் கீழே இறங்கி நடந்து போய்விடு" என்றது.

கந்தப்பன் இடையில் உடைவாள் இருந்தது. ஆனால், பிரம்மாண்டமான அந்த வில்லைப் பார்த்தபோது அவனுக்குப் பதில் பேசத் தைரியம் உண்டாகவில்லை. ஆகையால் பேசாமல் கீழே இறங்கினான். அடுத்த விநாடி, மரத்தின் மேலிருந்த உருவம் அப்படியே குபீலென்று குதிரையின் முதுகில் குதித்து உட்கார்ந்து ஒரு தட்டுத் தட்டிவிட்டதும் குதிரை பறந்தது.

படகில் காத்திருந்த இளைஞர்கள், கந்தப்பன், தான் காஞ்சியிலிருந்து கால் நடையாகவே வந்ததாகத் தெரிவித்ததைக் கேட்டு ஆச்சரியமடைந்தார்கள்.

படகு மறுபடியும் மணலூர்க்கரையை நோக்கிப் புறப்பட்டபோது, நாகஸ்வர ஓசையைப் பிளந்து கொண்டு முந்திரிக் காட்டிலிருந்து, "மழையை நம்பி நதி இருக்க ஏலேலோ, ஏலோ!" என்று யாரோ பாடும் சப்தம் கேட்டுக் கந்தப்பன், "அது என்ன?" என்று விசாரித்தான்.

"ஓகோ, காட்டையா பாடுகிறான்" என்றார்கள்.

"அது யார் காட்டையா?"

"அவன் யாரோ காட்டுமிராண்டி; காட்டிலே திரிகிறவன். பைத்தியக்காரன் போல் இருக்கிறது. எங்கிருந்தோ புதிதாய் இந்தப் பக்கம் வந்திருக்கிறான். அரண்மனையைச் சேர்ந்த ஒற்றன் என்றும், என்னவோ வேவு பார்க்க இப்படி வந்திருக்கிறான் என்றும் சிலர் சந்தேகப் படுகிறார்கள். 'இல்லை, பல்லவ சைனியத்திற்கு ஆள் பிடிப்பதற்காகத்தான் பைத்தியக்கார வேஷத்தோடு வந்திருக்கிறான்' என்றார்கள் சிலர். அவனுக்குக் 'காட்டையா' என்று பெயர் வைத்திருக்கிறோம். இதோ மறுபடியும் பாடுகிறானே!" என்றார்கள்.

கந்தப்பன் மனத்துக்குள் சிரித்துக்கொண்டான்.

2

பாலாற்று வெள்ளம் நீண்ட நாட்கள் நீடித்திருக்கவில்லை. இப்போது நதிக்கரைச்குச் சென்று பார்த்தால் முன்பு பார்த்த ஆறுதானா இது என்று தோன்றும்படி இருந்தது. கரை புரண்டு ஓடிய அந்தப் பால்வெள்ளம் இப்போது எங்கே? அதற்குப் பதில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில்

சர்க்கரை போன்ற வெண்மணல் எங்கே பார்த்தாலும் மண்டிக் கிடந்தது. குடி நீருக்காக நடு ஆற்றில் நீண்ட வாய்க்கால் ஒன்று வெட்டியிருந்தார்கள். அதில் மட்டும் இளநீர் போன்ற தெளிந்த நீர் ஊற்றுக் கசிந்து ஓடிக்கொண் டிருந்தது.

அன்று மாலையில், அந்த வாய்க்காலின் கரையி லிருந்து மனத்தை மயக்கும் இனிமையான குழலோசை கேட்டது. நீர் ஊற்றின் மேலிருந்த மணற்றிட்டில் சாய்ந்துகொண்டு கந்தப்பன் குழல் ஊதிக்கொண் டிருந்தான். அவன் வாய் குழல் ஊதுவதில் ஈடுபட் டிருந்தபோதிலும் அவன் மனத்தில் வேறு எண் ணங்கள் ஓடிக்கொண் டிருந்தன.

எதிர்க்கரையில், அந்த மலைத் தொடருக்குப் பின்னல் அஸ்தமனமாகும் சூரியனின் உருவம் செக்கச் செவேலென்று வண்டிச் சக்கரத்தவ்வளவு பெரிதாய்த் தெரிந்தது. வேணுகானத்தை நிறுத்தி விட்டுக் கந்தப்பன் ஒரு நிமிஷம் மெய்ம்மறந்து இந்த அற்புதக் காட்சியைக் கவனித்தான்.

இப்படி அவன் உட்கார்ந்திருக்கையில், அவன் ஊதிய குழலினும் இனிய குரலில் பாடிக்கொண்டு, வாய்க்காலின் எதிர்க்கரையிலிருந்த மணல்மேட்டுக்கு மேல் ஒரு பெண்ணுருவம் இடுப்பில் குடத்துடன் தோன்றியது.

"கண்ணம்மா!" என்று கூப்பிட்டான் கந்தப்பன்.

அந்த நடு ஆற்றில் தான் தனியாக இல்லை என்பதை அப்பொழுதுதான் அந்தப் பெண் உணர்ந் தாள்போல் இருக்கிறது. அவன் குரலைக் கேட்டதும் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இடுப்பிலிருந்த குடம் பிடியிலிருந்து நழுவிக் கீழே விழுந்து மணற் சரிவில் உருண்டுகொண்டே போய்த் தண்ணீரில் விழுந்தது.

கந்தப்பன் சிரித்தான். அப்பொழுது கண்ணம்மாவின் முகத்திலும் நாணத்துடன் கூடிய புன்முறுவல் தோன்றியது. "நீங்கள் இங்கே இருப்பதைப் பார்க்கவில்லை. சத்தம் கேட்டதும் பயந்து போனேன்" என்று சொல்லிக்கொண்டே மணற் சரிவில் இறங்கிக் குடத்தில் தண்ணீர் மொண்டு கொண்டாள்.

இரண்டு கைகளினாலும் அவள் தண்ணீரை லேசாக ஒதுக்கிவிட்டுக் குடத்தில் தண்ணீர் மொள்ளும் அழகைப் பார்த்துக்கொண் டிருந்த கந்தப்பன் திடீரென்று, "ஆமாம், நீ இந்தப் பக்கம் எங்கே போய்விட்டு வருகிறாய், கண்ணம்மா?" என்று வினவினான்.

கண்ணம்மா தலையை நிமிராமல் கடைக்கண்ணாலேயே அவன் முகத்தைப் பார்த்துவிட்டு, "வெறுமனே கொஞ்ச தூரம் மணலிலே நடந்து போனேன்" என்று சொல்லிவிட்டு வாய்க்காலைக் கடந்து வந்து இடிப்பில் குடத்துடன் ஊரை நோக்கி நடந்தாள். அப்பொழுது கந்தப்பன் சொன்னான்: "இனிமேல் அந்தப் பக்கம் போகாதே, கண்ணம்மா. அந்த முந்திரிக் காட்டிலே ஒரு பைத்தியக்காரன் இருக்கிறான். அவன் உன்னைப் பிடித்துக்கொண்டு போயே போய்விடுவான்!"

3

இப்படிச் சொல்லிவிட்டு மறுபடியும் கந்தப்பன் குழல் ஊதத் தொடங்கினான். இன்னும் அவன் மனத்தில் பல விதமான எண்ணங்கள் ஒவ்வொன்றாய் எழுந்தன. கண்ணம்மாவின் அழகிய உருவம் அவனைப் பிரமிக்கச் செய்துவிட்டது. கந்தப்பனும் கண்ணம்மாவும் கர்ப்பவாஸத்தில் இருக்கையிலேயே அவர்கள் இருவருக்கும் சேர்த்துப் பெரியவர்கள் முடிபோட்

டிருந்தார்கள்; "எனக்குப் பிள்ளை பிறந்து, உனக்குப் பிறப்பது பெண்ணாய் இருந்தால் இரண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணிவிடுவது" என்று அவர்கள் பெற்றோர்கள் அப்போதே தீர்மானித்து விட்டதால் கண்ணம்மா கந்தப்பனுக்கு முறைப் பெண்ணாய்ப் போய்விட்டாள். கந்தப்பன் தமையன் நாகப்பன் காணமற் போனதற்கும் இதுவே காரணம் என்று சிலர் பேசிக்கொண் டிருந்தது கந்தப்பன் காதிலும் விழுந்திருந்தது. நாகப்பன் கண்ணம்மாவை மணந்து கொள்ள விரும்பியதாகவும், பெரியவர்கள் இணங்க மாட்டார்கள் என்று கண்டு, தான் போய்விடுவது நல்லது என்றே போய்விட்டதாயும் சொல்லிக் கொண்டார்கள்.

கந்தப்பன் மனம் வேதனை அடைந்தது. 'ஹூம்; கண்ணம்மா எவ்வளவு அழகாய் இருக்கிறாள்! பாவம்! அண்ணா கொடுத்து வைக்கவில்லை. எங்கே போயிருப்பான் அவன்? செத்துத்தான் போய் விட்டானோ? எங்கேயாவது போய்ப் பிராணனை விட்டுவிட்டானோ?' என்று அவன் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

4

விரைவிலேயே கந்தப்பனின் கல்யாணத்திற்கு முகூர்த்தம் வைத்துவிட்டார்கள்.

நாளைப் பொழுது விடிந்தால் கல்யாணம். இன்று மாப்பிள்ளை கோவிலில் ஸ்வாமிதரிசனம் செய்துகொண்டு பட்டணப் பிரவேசம் செய்யப் போகிறான்.

அப்பொழுதுதான் உதயமான பிறைச் சந்திரனை மேகங்கள் மறைத்திருந்தன. சிலுசிலு என்ற காற்றுடன் மழையும் சேர்ந்து பன்னீர் தெளிப்பதுபோல் சிறு தூறலாய்த் தூறிக்கொண் டிருந்தது.

கல்யாண வீட்டுவாசலில் போட்டிருந்த பந்தலில் காஞ்சி நகரிலிருந்து வந்திருந்த நாகஸ்வரக்காரன் ஒரு மணி நேரமாய்த் தோடி ராகத்தை ஆலாபனம் செய்துகொண்டிருந்தான். ஊர்வலத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் தயாராகிவிட்டன. மழைத் தூறல் நிற்கவேண்டியதுதான் தாமதம்.

வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த கந்தப்பன் ஏதோ காரியமாய்ப் போவதுபோல் கொல்லைப்புறம் சென்று குதிரைத் தொழுவத்தை அடைந்தான். அங்கே இருட்டில் சேணம் பூட்டிய வெள்ளைக் குதிரை ஒன்று ஊர்வலத்துக்குத் தயாராய்க் காத்துக்கொண்டிருந்தது. கந்தப்பன் சந்தடி செய்யாமல் குதிரையை அவிழ்த்து, அதன்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு கொல்லைப் பக்கமாகவே மரங்களின் இடையிலிருந்த ஒற்றையடிப்பாதையின்மேல் மெதுவாகச் சென்றான். இருநூறு கஜதூரம் சென்றபின், குளத்தங்கரையில் இருந்த மாமரத்தடியில் இருட்டுடன் இருட்டாய் ஓர் உருவம் நின்றிருந்தது தெரிந்தது. கந்தப்பன் குதிரையை நிறுத்தி, அந்த உருவத்தையும் கை கொடுத்துத் தூக்கி ஏற்றிக்கொண்டு குதிரையை வேகமாய்த் தட்டிவிட்டான். குதிரை ஆற்றங்கரையை அடைந்து, பாலாற்றின் மணற்பரப்பைக் கடந்து முந்திரிக்காட்டுக்குள் புகுந்தது.

சிலுசிலு என்று அடித்த மழைக் காற்றுடன் கம்மென்று முந்திரிப் பழத்தின் வாசனை வீசிக்கொண்டிருந்த அந்த இருட்டில் ஆயிரக்கணக்கான மின்மினிப் பூச்சிகள் மரங்களைச் சுற்றிக் கண்ணுமூச்சி ஆடுவதுபோல் வட்டமிட்டுக்கொண்டிருந்த காட்சியைக் கண்டு கந்தப்பன் மெய்ம்மறந்து குதிரையை நிறுத்தினான். அப்பொழுது திடீரென்று, "மழையை நம்பி நதியிருக்க ஏலேலோ ஏலோ—" என்ற பாட்டு ராகத்தோடு கண்ணம்மாவின் இனிமையான குரலில் பாடப்படுவது கேட்டது.

அந்தக் குரலின் எதிரொலி ஆற்றின் மறுகரையி லிருந்து கிளம்பி ஓய்வதற்குள் சலசல என்று இலைச் சருகுகளின்மேல் சப்தம் செய்துகொண்டு, காட்டையா குதிரையின்மேல் அமர்ந்தவனாய் அவர் கள் எதிரில் பிரசன்னமானான்.

கந்தப்பன் உடனே, "அண்ணா !" என்று கூப்பிட் டான்.

ஒரு நிமிஷம் பதில் ஒன்றும் வரவில்லை. யாரோ பெருமூச்செறியும் சப்தம் மட்டும் கேட்டது.

"கந்தப்பா ! நாளைக்கு உனக்குக் கல்யாண மல்லவா ? நீ ஏன் இங்கே வந்தாய் ? உன்னோடு குதிரைமேல் இருப்பது யார் ?"

"கண்ணம்மாவை அழைத்து வந்திருக்கிறேன், அண்ணா. இந்தா, ஏற்றுக் கொள்" என்றான் கந்தப்பன்.

நாகப்பன் இடியிடி யென்று சிரித்தான். "பைத்தியக்காரா ! நீ எப்பொழுது வரப்போகிறாய் என்று அவள் உனக்காகத் தவங்கிடந்தாள். அவளை நீ இங்கே எதற்காக அழைத்து வந்தாய் ?" என்றான்.

"அதிருக்கட்டும் அண்ணா. நீ ஏன் வீட்டை விட்டு வந்து இப்படிக் காட்டு மிராண்டியாய்க் காலம் கழித்துக்கொண் டிருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். அதனாலேயே அழைத்து வந்தேன். நான் மறுபடியும் காஞ்சி நகர் போகிறேன், அண்ணா" என்றான் கந்தப்பன்.

நாகப்பனின் வில்லிலிருந்து ஒரு பயங்கரச் சப்தம் எழுந்தது; "கந்தப்பா ! திரும்பி ஊருக்குப் போய் அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறாயா ? அல்லது உங்கள் கண்ணெதிரில் இந்த அம்புக்கு நானே இரையாகட்டுமா ?" என்று அவன் கர்ஜித் தான்.

கந்தப்பன் பதில் பேசாமல் குதிரையை மறுபடியும் வந்த வழியே திருப்பினுன்.

குதிரை ஆற்றைக் கடக்கையில் முந்திரிக்காட்டிலிருந்து காட்டையா தன் வழக்கமான பாட்டைப் பாடும் சப்தம் கேட்டது. அதற்குப் பிறகு அவன் குரலை ஒருவரும் கேட்கவில்லை. காட்டையா, தான் வந்த விதமே மறுபடியும் அந்தப் பிரதேசத்திலிருந்து மாயமாய் மறைந்து போனுன்.

நடன சிங்காரி

அன்றொரு நாள் ஹோட்டலில் காப்பி சாப் பிட்டுக்கொண் டிருக்கையில், "ஊர்வசியைப் பார்த்து விட்டு வரலாம், வருகிருயா?" என்று கேட்டான் என் நண்பன் ரகு.

"ஊர்வசியா ? அது யார், ஊர்வசியும் மேனகையும் ?" என்று நான் கேட்டேன்.

ரகு புன்சிரிப்புடன், "அதோ பாரப்பா உன் தலை மேல்" என்ருன்.

பின் பக்கம் திரும்பி நிமிர்ந்து பார்த்தேன். பின்னுல் இருந்த சுவரின்மேல் நாலடி உயரமுள்ள படமொன்று மாட்டியிருந்தது. நாட்டியம் ஆடும் தோற்றத்திலிருந்த ஒரு நங்கையின் படம் அது. நான் ஆச்சரியத்துடன் அதை விழித்துப் பார்த்ததைக் கண்டு, "என்ன, படத்தைப் பார்க்கும்போதே மூர்ச்சையாய் விடுவாய்போல் இருக்கிறதே !" என்ருன் ரகு.

"யார் அவள் ?"

"அடே, கிணற்றுத் தவளையே ! 'கந்தர்வா ஊர்வசி' என்ற நாட்டிய ஜோடியைப் பற்றி நீ கேள்விப்பட்டதே இல்லையா ? அவர்கள் பெயர் தேசம் முழுவதும் பிரபலமாய் இருக்கிறதே ! ஜுபிடர் தியேட்டரில் ஒரு வாரமாய் அவர்கள் நடனம் நடந்துகொண் டிருக்கிறது. அதைத்தான் பார்த்துவிட்டு வரலாம் என்று கூப்பிட்டேன்" என்ருன்.

"சரி, வருகிறேன். இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறதே ! அதற்குள் எனக்குத் தெரிந்த நாட்டியக்காரி ஒருத்தியின் கதையைச் சொல்லுகிறேன், கேட்கிருயா ? நிஜமாய் நடந்த கதை" என்று

சொல்லி, அவன் சம்மதத்துக்குக் காத்திராமல் கதையை ஆரம்பித்தேன்.

1

நான் காலேஜில் படித்துக்கொண் டிருந்த போது சங்கர் என்பவன் எனக்கு மிகவும் நெருங்கிய நண்பனாக இருந்தான். அவன் பணக்காரன் ; தாய் தகப்பனாருக்கு ஒரே பிள்ளை. ஆகையால் அவன், ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேர்ச்சி பெற்றுக் கலெக்டர் வேலை பார்க்கவேண்டு மென்று சீமைக்குச் சென்றான். ஆனால் அங்கே இரண்டு தடவை போயும், ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேர்ச்சி பெறாதபடியால், பாரிஸ்டர் பரீட்சை கொடுத்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்பினான்.

ஒரு நாள் காலை வேளையில், சங்கர் தன் பங்களாத் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகையில் ஒரு விசேஷ சம்பவம் நடந்தது. மரங்களில் உட்கார்ந்து நானாவிதமான பட்சிகள் பாடிக்கொண்டிருந்தன. அந்தப் பட்சிகளின் பாட்டுக்குச் சுருதி போடுவதுபோல் அற்புதமான ஓசை ஒன்று திடீரென்று மெதுவாகக் கேட்கத் தொடங்கியது.

அது எதனுடைய ஓசை, எங்கிருந்து வருகிறது என்று அவன் நாலு பக்கமும் பார்த்தான். அவன் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே ஒரு மரத்தின் கிளையிலிருந்து 'திடும்' என்று அவன் தோளின்மேல் குதித்து உட்கார்ந்தது, கன்னங் கறேல் என்றிருந்த ஒரு குரங்குக் குட்டி. சங்கர் பயந்துபோய்த் தோள் பட்டையிலிருந்து அந்தக் குரங்கை உதறித் தள்ளினான். அப்போது, "சீ, ராமா! இங்கே வா, போக்கிரி!" என்று ஒரு குரல் கேட்டது. குரங்கு மறுபடியும் மரத்தின்மேல் ஏறிக்கொண்டது.

சங்கர் நிமிர்ந்து பார்த்தான். அந்த மகிழ மரத்தின் மேல் இரண்டாகப் பிரிந்திருந்த ஒரு கிளையில் கால்

களைத் தொங்கப் போட்டுக்கொண்டு சாய்ந்து உட்கார்ந்திருந்தாள் ஒரு பெண். தலைப்பின்னலை எடுத்து மார்பின்மேல் போட்டுக்கொண்டு, அதன் அடியில் ஒரு 'ரிப்பனை' வைத்து முடிந்துகொண் டிருந்தாள் அவள். ஒரு பாட்டின் அடியை இசைத்துக்கொண் டிருந்தது அவள் வாய்.

சங்கர் அப்படியே பிரமித்துப் போய், அந்தப் பெண்ணின் அழகிய வதனத்திலிருந்து பார்வையை எடுக்கமுடியாமல் நின்றான். அந்த மோஹன உருவம் ஒரு நிமிஷம் சங்கரைக் கனவு லோகத்துக்கு விரட்டி அடித்தது. 'அழகுத் தெய்வமே இப்படிக் கொலு வீற்றிருக்கிறதோ' என்று அவன் பிரமை அடைந்தான்.

பிரமை நீங்கியதும், "நீ யார், அம்மா?" என்று கேட்டான்.

அவன் தன்னைப் பார்த்துவிட்டதை அறிந்ததும் அந்தப் பெண்ணின் முகம் வெட்கத்தினால் சிவந்தது. தன்னுடன் அவன் பேசத் தொடங்கினதும், தலையைக் குனிந்துகொண்டு மரக்கிளையிலிருந்து கீழே குதித்தாள். முன்னாலிருந்த பின்னலை எடுத்துப் பின்னால் வீசினாள். தோட்டத்தின் ஒரு கோடியைக் கையினால் சுட்டிக் காண்பித்து, "நாங்கள் அந்த வீட்டுக்குக் குடித்தனம் வந்திருக்கிறோம்" என்றாள்.

"இந்தக் குரங்கு யாருடையது?"

"எங்களுடையதுதான். அது ஒண்ணும் பண்ணாது; ரொம்பச் சாது. மனுஷாளைக் கண்டால் அப்படித்தான் கிட்டே வந்து விளையாடும்" என்று கூறிவிட்டு, "ராமா, வா!" என்றாள். அந்தக் கருங் குரங்கு மரத்திலிருந்து தாவி அவள் தோள் பட்டையில் வந்து அமர்ந்தது. அதன் கன்னத்தில் விளையாட்டாக ஒரு தட்டுத் தட்டிவிட்டு, அவள் சங்கரைப் பார்த்துப் பெருமையும் வெட்கமும் கலந்த சிரிப்பு

ஒன்றைச் சிரித்துவிட்டு, அங்கிருந்து போகத் தொடங்கினாள். அப்பொழுது சங்கர் தைரியமாக ஒரு கேள்வியைக் கேட்டான்.

"உன் பெயர் என்ன என்று சொல்லவில்லையே!"

அவள் சட்டென்று நின்று அவனை ஒரு தரம் ஏற இறங்க நோக்கினாள்.

"சிங்காரி."

சிங்காரி! என்ன வேடிக்கையான பெயர்!

பங்களாவை நோக்கிப் போகும் பொழுது சங்கரின் மனம், அந்தக் காலத்தில் பிரபலமாய் அடிபட்ட ஒரு பாட்டைப் பாடிக்கொண் டிருந்தது :—

ஜகத்தை மயக்க வந்த
முகத்தைப் படைத்திட்ட
சிங்காரி! ஒய்யாரி!

2

சங்கர் நேராகத் தன் தாயிடம் சென்றான். "ஏன் அம்மா, அந்த வெளிப் பங்களாவில் யாரோ குடித்தனம் வந்திருக்கிறார்களே, அவர்கள் யார்?" என்று கேட்டான்.

"அது யாரோ, எனக்குத் தெரியாதப்பா. எல்லாம் இந்தக் குமாஸ்தா கிருஷ்ணப் பிள்ளையின் வேலை. அந்த மனிதனை முன்னாலேயே நான் பார்த்து இருந்தால் அவர்களை வீட்டுக்குள்ளேயே நுழைய விட்டிருக்க மாட்டேன்" என்றாள் அவன் தாய்.

சங்கர் மாடியில் தன் அறைக்குள் சென்று யோசனையில் ஆழ்ந்தவனாய் உட்கார்ந்தான். திடீரென்று வெளியே மரத்தடியில் சல சல என்று சப்தம் கேட்கவே ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தான். கீழே, மரத்தடியில் நின்றுகொண்டு ஒரு மனிதன் உண்டி வில்லால் பறவைகளை அடித்துக் கொண் டிருப்பதைக் கண்டான். அந்த மனிதனின் உருவம் பார்ப்பதற்கு விநோதமாய் இருந்தது. அவன்

உயரம் நாலரை அடிக்கு மேல் இராது. ஆனல் நல்ல பருமன். முதுகின் மேல் ஒரு மூட்டையை வைத்துக் கட்டினதுபோல் கூனல் விழுந்திருந்தது. அவ்வாறே மார்பும் முன் பக்கம் திரண்டு பருத்திருந்தது. கிழடு தட்டியிருந்த அவன் முகத்தில் பயங்கரமான பெரிய மீசை.

"பொன்னு! பொன்னு!" என்று சங்கர் கூப்பிட்டதும், வீட்டு வேலைக்காரன் வந்தான்.

"அது யார்?"

"அவனு? அவன்தானுங்க, அந்தத் தோட்ட வீட்டுக்கு வந்திருக்கான்."

"யார் அவன்?"

"நவாப் மைதானத்திலே 'சர்க்கஸ் கம்பெனி' வந்திருக்கு பாருங்க; அந்தக் கம்பெனியைச் சேர்ந்தவனும்" என்றான்.

அன்று சாயங்காலம், சிங்காரியைப் பார்க்க வேண்டுமென்று அவன் மனசில் ஏற்பட்ட அடக்க முடியாத ஆவல், அவனை அந்த வீட்டுக்கு இழுத்துச் சென்றது. அவனைக் கண்டதும் சிங்காரி ஒரு பெஞ்சியை எடுத்துப் போட்டு, "உட்காருங்கள்" என்றாள்.

"இந்த வீடு இவ்வளவு நாளாய்ப் பூட்டிக் கிடந்தது. உங்களுக்கு விடுவதற்குமுன் சுத்தம் செய்து வெள்ளை யடித்திருக்கிறார்களா என்று பார்க்க வந்தேன்" என்று சங்கர் புளுகினான்.

"நான்தான் இரண்டு நாளாய் ஒட்டடை அடித்துப் பெருக்கிச் சுத்தம் பண்ணினேன்."

"வீட்டில் வேறு யாரும் இல்லைபோல் இருக்கிறதே?"

"யார் இருக்கிறார்கள்? நானும் எங்க அப்பாவுந் தான் இங்கே. அவரும் இப்போது எங்கேயோ போயிருக்கிறார்."

சங்கர் மனசிலிருந்த பாரம் சற்றுக் குறைந்து, "உன் அப்பாவா அவர்?" என்று வினவினான்.

"அப்பா என்றால், சொந்த அப்பா இல்லை. நான் குழந்தையா யிருந்தபோதே என் அப்பா அம்மா இருவரும் இறந்துபோய் விட்டார்கள். இவர்தான் என்னை எடுத்து வளர்த்தார். எனக்கு வேறு பந்துக்கள் இல்லை."

சங்கர் மனசில் பாரம் இன்னும் குறைந்தது; "உன் அப்பா சர்க்கஸ் கம்பெனியைச் சேர்ந்தவ ராமே?"

"ஆமாம்; நான் கூடத்தான் சர்க்கஸிலே 'ஆக்ட்' பண்ணுகிறேன். அப்பாவைப் பார்த்தால் குள்ளமாய் என்னவோபோல் இருக்கிறார் என்று நினைக்காதீர்கள்! அவர் எவ்வளவு அற்புதமான வித்தைகள் எல்லாம் செய்வார், தெரியுமா? நீங்கள் ஒரு நாள் சர்க்கஸுக்கு வந்து பாருங்களேன்" என்றாள்.

3

சங்கர் அன்றிரவு சர்க்கஸ் பார்ப்பதற்குச் சென்றான்.

பாதி ஆட்டம் ஆயிற்று. பாண்டு வாத்தியக் காரர்கள் மெதுவாக ஓர் 'இங்கிலீஷ் நோட்' வாசிக்க ஆரம்பித்தார்கள். ஒரு நடனமாது அரங்கத்துக்கு ஓடிவந்து நடனம் செய்யத் தொடங்கினாள். மேல் நாட்டு நாட்டியக்காரிகளைப் போல் அவள் உடை அணிந்துகொண் டிருந்தாள். அவள் செய்த நாட்டியமும் மேல்நாட்டு ரகத்தைச் சேர்ந்ததாகத் தான் இருந்தது. அவள் யாரோ சட்டைக்காரி என்று நினைத்து சங்கர் அருவருப்புடன் பெருமூச்சு விட்டான். அடுத்த கணம் அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவள் முகத்தைப் பார்த்ததும் அவள்தான் சிங்காரி என்று கண்டுகொண்டான்.

உடனே கோபமும் ஆத்திரமும் பொங்கிக்கொண்டு வந்தன. சிங்காரியை இந்தமாதிரியான உடையில், இப்படிப்பட்ட நாட்டியம் செய்வதற்கா விட வேண்டும்?

நாட்டியம் முடிந்ததும், சிங்காரி தலை குனிந்து வணங்கிவிட்டு ஓடி மறைந்தாள். ஜனங்கள் நீண்ட நேரம் கரகோஷம் செய்தார்கள்.

அரைமணி நேரம் கழித்து மறுபடியும் சிங்காரி அரங்கத்தில் தோன்றினாள். இந்தத் தடவை அவளுடன் அந்தக் குள்ளனும் வந்தான். இப்பொழுதும் சிங்காரி கவுன்தான் அணிந்திருந்தாள். அந்தக் குள்ளன் கையில் ஒன்றரை அடி நீளமுள்ள பெரிய கத்திகள் சுமார் இருபது காணப்பட்டன. ஒவ்வொரு கத்தியின் பிடியிலும் துணி சுற்றப்பட்டிருந்தது. பிடிகளை மண்ணெண்ணெயில் தோய்த்து அவற்றில் நெருப்பைக் கொளுத்தினான் அவன். அதற்குள், நான்கு பேர் ஊஞ்சல் பலகைபோல் நீளமாய் இருந்த ஒரு பலகையைத் தூக்கிக்கொண்டு வந்து அரங்கத்தின் நடுவில் செங்குத்தாய் நிற்க வைத்தார்கள்.

அதன் எதிரில், அதனுடன் ஒட்டினாற்போல் சிங்காரி நின்றுகொண்டாள். அவளைப் பார்த்தபடி, இருபதடி தூரத்தில் எரியும் கத்திகளைப் பிடித்து நின்றான் குள்ளன். ஒரு பெண் அவன் கண்களைத் துணியால் இறுகக் கட்டினாள். உடனே, "ஒன்!" என்று சிங்காரி கத்தினாள்.

குள்ளன் ஒரு கத்தியை அதன் கூர்மையான நுனியைப் பிடித்துத் தன் தோள்பட்டைக்கு மேல் ஓங்கி வீசி எறிந்தான். அந்தக் கத்தி விர்ரென்று நெருப்பைக் கக்கிக்கொண்டே பறந்து சென்று சிங்காரியின் வலது முழங்காலுக்கு அருகில், இரண்டு

அங்குல தூரத்தில், பலகையில் பொத்துக்கொண்டு நின்றது.

அப்புறம் "டு !" என்ற கத்தல்; இடது முழங் காலுக்கு அருகில் வேறொரு கத்தி ! இப்படி இரண்டு மூன்று நிமிஷத்துக்குள் அந்தப் பெண்ணின் உடலைச் சுற்றித் திகு திகு என்று ஜ்வாலை விட்டு எரியும் கத்திகளாலேயே இழைத்து விட்டான் அந்தக் குள்ளன்.

இந்தக் காட்சியைக் கண்டதும் சங்கரின் உடல் குபீலென்று வியர்த்தது. ஆனால் சிங்காரி சிறிதும் பயப்பட்டதாகத் தெரியவில்லை. கண்ணைக்கூடக் கொட்டாமல், புன்னகை தவழும் முகத்துடன் தந்தத் தினல் செய்த சிலைபோல் நின்றாள். அந்தக் காட்சி முடிந்ததும், சர்க்கஸ் பார்த்தது போதுமென்று சங்கர் எழுந்திருந்து வெளியே சென்றான்.

"நல்ல பிழைப்பு இது ! நித்தியகண்டம் பூர்ணாயுசு என்றிருக்கும் இந்த வாழ்க்கையிலிருந்து கூடிய சீக்கிரம் இவளை நாம் விடுவிக்க வேண்டும்" என்று அவன் மனம் திடமான தீர்மானத்துக்கு வந்திருந்தது.

4

மறுநாள் காலையில் குள்ளன் தன் வீட்டில் ஒரு பிடிலை வைத்துக்கொண்டு பாடிக்கொண் டிருந்தான். சிங்காரி, தோட்டத்தில் மரத்தடியில் தன் குரங்குடன் விளையாடிக்கொண் டிருந்தாள். அப்போது சங்கர் அவள் பின்னால் வந்து நின்றதை அவள் கவனிக்க வில்லை.

குரங்கைப் பார்த்து, "ராமா ! உன் பெயர் நன்றாகவே இல்லை. இனிமேல் உன்னைச் சங்கர் என்று தான் கூப்பிடப் போகிறேன். என்ன சொல்லு கிறாய் ?" என்று கேட்டாள்.

"ஆஹா, அப்படியே செய்யலாம்! அதற்கு என்னைப் பொறுத்தவரையில் ஒரு விதமான ஆட்சேபமும் இல்லை" என்ருன் சங்கர்.

சிங்காரி திடுக்கிட்டுப் போனுள். கலவரத்தி ஞலும் வெட்கத்தினுலும் அவள் உடல் குலுங்கிற்று.

"எப்படி நீங்கள் சத்தம் செய்யாமல் வந்தீர்கள்? உங்கள் காதில் விழவேண்டுமென்று நான் அதைச் சொல்லவில்லையே! நீங்கள் அதைக் கேட்டது சரியா?"

"தப்புத்தான்; ஆனுல் நீ என் காதில் விழக் கூடாத வார்த்தையைப் பேசப் போகிருய் என்று தெரிந்திருந்தால் நான் காதைக் கெட்டியாய் மூடிக் கொண்டிருப்பேனே!"

"நீங்கள் நேற்றுச் சர்க்கஸுக்கு வந்திருந் தீர்களே!"

"ஆமாம்."

"ஆனுல் பாதியில் எழுந்து போய்விட்டீர்கள். ஏன், உங்களுக்குப் பிடிக்கவில்லையா?"

சங்கர் பெருமூச்செறிந்தான்.

"ஆமாம் சிங்காரி, அந்தச் சர்க்கஸ் ஒன்றும் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை!"

"நீங்கள் சீக்கிரமே போய்விட்டீர்கள். நல்ல காட்சிகள் எல்லாம் அப்புறந்தான் நடந்தன. மிருகங்களெல்லாம் நேற்று ரொம்ப மூர்க்கமாய் இருந்தன. என்ன அதட்டியும் 'லியோ' வாயைத் திறக்கவே மாட்டேன் என்று விட்டது."

"அது யார், லியோ?"

"லியோதான் எங்கள் சிங்கங்கள் எல்லாவற் றிலும் பெரியது. அதன் வாயில்தான் நான் தலையை விடுவேன்."

சங்கர் நடுக்கத்துடன் உதட்டைக் கடித்தான். "சிங்காரி! இந்த மாதிரி யெல்லாம் நீ ஆபத்தான விளையாட்டுக்களைச் செய்யலாமா? உனக்கு உன் உயிர்மேல் ஆசை யில்லையா?"

சிங்காரி கல கலவென்று மணியோசை போன்ற குரலில் நகைத்தாள்.

"ஐயோ, எங்கள் பிழைப்பே அதுதானே?"

"நீ விளையாட்டாய்ப் பேசுகிறாய். சர்க்கஸில் நீ சேர்ந்திருப்பதே எனக்குப் பிடிக்கவில்லை. வேண்டாம்; இந்த வாழ்க்கையை விட்டுவிடு. விட்டுவிட்டு......?"

"விட்டுவிட்டு......?"

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள், சிங்காரி!"

சிங்காரி ஒரு கணம் திகைத்து நின்றாள். பிறகு, "அதெப்படி முடியும்? உங்கள் அந்தஸ்து என்ன, எங்கள் நிலைமை என்ன? நான் உங்கள் ஜாதியைச் சேர்ந்தவள்கூட அல்லவே?" என்றாள்.

"அதனால் என்ன? நான் ஜாதி வித்தியாசம் பார்க்கிறவனல்ல. என் பெற்றோர்களும் பார்க்க மாட்டார்கள்."

"ஆனாலும் என் அப்பா சம்மதிக்கமாட்டார்."

"ஏன்?"

"அவர் குணம் ஒரு தினுசு. நமக்குச் சமமான வர்களுடனும், நம்மைச் சேர்ந்தவர்களுடனுமே சம்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்று அவர் சொல்லுவார். எனக்கு நாட்டியம் தெரியும்; கத்தி வித்தை தெரியும். கம்பிமேல் நடப்பேன்; மிருகங்களுடன் பழகுவேன். இதெல்லாம் தெரிந்தவனுக்குத் தான் என்னைக் கல்யாணம் செய்து கொடுப்பார்."

"அப்பா சம்மதிக்க மாட்டார் என்றுதானே யோசிக்கிறாய்? நான் அவரைக் கேட்டுப் பார்க்

கிறேன். அவர் சரி என்று விட்டால் அப்புறம் உனக்குச் சம்மதந்தானே?"

சிங்காரி சம்மதித்தாள். ஆனால், அவள் சம்மதித்து என்ன பிரயோசனம்? சிங்காரிக்குத் தெரியும் வித்தைகளை யெல்லாம் அறிந்த ஒருவனுக்குத்தான் அவளைக் கல்யாணம் செய்து கொடுக்க முடியும் என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டான் குள்ளன்.

"சிறிது காலம் அந்த ஊரில் இருந்த பிறகு சர்க்கஸ் கம்பெனி வேறு ஊருக்குப் போய்விட்டது. அத்துடன் சங்கரும் வீட்டை விட்டுக் கிளம்பிப்போய் விட்டான். சிங்காரி எந்த எந்த ஊருக்குப் போனாளோ அந்த ஊருக்கெல்லாம் அவனும் போய்க்கொண்டிருந்தான் என்று கேள்விப்பட்டேன். இது நடந்து ஐந்து வருஷங்கள் ஆகின்றன. அதற்கு அப்புறம் நான் என் நண்பன் ஊருக்குப் போகவில்லை; அவனைப் பார்க்கவும் இல்லை. சிங்காரியையும் அப்பொழுது சர்க்கஸில் இரண்டு தடவை பார்த்ததுதான். அப்புறம் இன்றுதான் அவள் முகத்தை மறுபடியும் பார்த்தேன்—"

"இன்று? எங்கே?"

நான் என் பின்னால் சுவரில் மாட்டியிருந்த படத்தைக் காட்டினேன். "இவள்தான் நான் ஐந்து வருஷத்துக்கு முன் பார்த்த நாட்டியக்காரி சிங்காரி. இப்பொழுது வளர்ந்திருக்கிறாள். அதிக அழகும் பெற்றிருக்கிறாள். அதனுடன் ஊர்வசி என்று பெயரையும் மாற்றி வைத்துக்கொண்டிருக்கிறாள் போல் இருக்கிறது......"

"சிங்காரி இவள்தானா? என்ன ஆச்சரியம்! அப்படியென்றால் உன் நண்பன் என்ன ஆனான்? இவள் தன்னுடைய நாட்டிய சகாவான கந்தர்வாவை

அல்லவா கல்யாணம் செய்துகொண் டிருக்கிருள் ?"
என்ருன் ரகு.

*　　*　　*　　*

நாங்கள் ஜூபிடர் தியேட்டருக்குள் போய் உட்கார்ந்தோம். நாட்டியக் கச்சேரி ஆரம்பமாயிற்று. முதலில் மன்மதன் – ரதி நடனம்; அடுத்தாற்போல் ராதா – கிருஷ்ண நடனம். இப்படி, தேவேந்திர சபைபோல் நிர்மாணிக்கப்பட் டிருந்த மேடைமேல் கண்களுக்கும் காதுகளுக்கும் ஹ்ருதயத்துக்கும் ஒருங்கே விருந்தளிப்பதுபோல் அற்புதமான நடனக் காட்சி நடந்தது.

அந்த நடனத்தின் செளந்தர்யத்தை நான் என்ன வென்று விவரிப்பேன்! கலைத் தெய்வத்தின் பிரதி நிதிகள் என்று அவர்களை ரஸிகர்கள் போற்றுவதில் நான் ஆச்சரியப்படவில்லை. பாதியில், என்னையும் அறியாமல், "அட பாவி! இவன் எப்பொழுது இந்தத் தெய்விகக் கலையை அப்பியாசம் பண்ணிக் கொண்டான்! இப்படிப் பிரமிக்கத் தக்க விதமாய் நாட்டியமாடும் சாமர்த்தியம் இவனுக்கு எங்கிருந்து வந்தது?" என்று வாய் விட்டுக் கூறினேன்.

"யாரைச் சொல்லுகிருய்?" என்ருன் ரகு.

"இந்தக் 'கந்தர்வா'வைத்தான் சொல்லுகிறேன். மனிதன் தன் பெயரை மாற்றிக் கொள்வது கஷ்டமான காரியம் அல்ல. சங்கர் என்ற பெயர் பிடிக்காவிட்டால் 'கந்தர்வா' என்ருே இன்னொரு கின்னரன் என்ருே சுலபமாக மாற்றிக்கொண்டு விடலாம். ஆனல், அதனுடன் தன் வாழ்க்கையை இப்படி அடியோடு மாற்றிக்கொள்வது எப்படிச் சாத்தியமாயிற்று?" என்றேன்.

இதோ திரை மறுபடியும் மேலே போகிறது! சிங்காரியும் சங்கரும் மறுபடியும் மேடைமேல் தோன்றுகிருர்கள்.

அப்பாவிகள்

ரெயில்வண்டி 'கூ!—' என்று கத்திவிட்டது. அது உடனே புறப்பட்டுக்கூட இருக்கும். ஆனால் கார்டுக்கும் ஸ்டேஷன் மாஸ்டருக்கும் ஸ்வாரஸ்யமான சம்பாஷணை ஒன்று நடந்துகொண்டிருந்ததால் இரண்டு நிமிஷம் தாமதமாயிற்று.

"தெரியும், தெரியும்! வாலை ஒட்ட அறுத்து விடுகிறேன்!" என்று சொல்லிக்கொண்டே 'கார்டு' ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்குள்ளிருந்து வெளியே வந்து கொடி காண்பித்தார். இரண்டு பேருக்கும் என்னவோ சண்டை நடக்கிறது என்று நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு, வண்டியிலிருந்து வெளியே தலையை நீட்டிப் பார்த்தவர்கள் 'கார்ட்'டின் கையில் ஒரு சின்னக் குச்சு நாய்க்குட்டி இருந்ததைப் பார்த்து ஏமாந்துபோய்த் தலையை உள்ளே இழுத்துக் கொண்டார்கள்.

அதே சமயத்தில், "நாசமாய்ப் போக!" என்று அந்த ரெயில் வண்டியைச் சபித்தவாறே வைத்தா, டிக்கட்டை வாங்கிக்கொண்டு, "ஓடு! ஓடு!" என்று சாமான் தூக்கி வந்தவனைத் துரிதப்படுத்திக் கொண்டே ஓடி வந்தான். தினம் ஒன்பதே கால் மணிக்கு வரும் எட்டு மணி வண்டி இன்று ஒன்பது அடித்துப் பத்து நிமிஷத்துக்கே வந்து விட்டதால்தான் அவனுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது.

கூலிக்காரன், ஜன்னல் வழியாய்ப் பெட்டியையும் படுக்கையையும் ஒரு வண்டிக்குள் போட்டுவிட்டு,

"சாமி! ஏறுங்க, ஏறுங்க!" என்று கத்தின சமயத்தில் வண்டி புறப்பட்டுவிட்டது. வைத்தா ஓடுகிற ரெயிலில் தொற்றிக்கொண்டான். ஆனால் இந்தக் கதவு ஏன் திறக்கமாட்டேன் என்கிறது? வண்டிக்குள் ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருக்கும் வாண்டுப்பயல் ஏன் இப்படிச் சிரிப்பை அடக்க முடியாமல் அவஸ்தைப்படுகிறான்?

வைத்தா கதவைப் பலமாகப் பிடித்து ஆட்டின போது உள்ளேயிருந்து உச்சிக் குடுமியுடன் கூடிய ஒரு தலை வெளியே வந்து அவனை முறைத்துப் பார்த்தது. "ஏன், ஓய்! இங்கே இடம் எங்கே இருக்கிறது என்று உள்ளே வரப் பார்க்கிறீர்?" என்று கேட்டது.

"இந்தக் கதவு பூட்டியிருக்கிறதா என்ன? இதைக் கொஞ்சம் திறந்துவிடுமே" என்றான் வைத்தா.

"சாவி இங்கே யாரிடம் இருக்கிறது?" என்று கையை விரித்துவிட்டு அந்த மனிதர், "சிலு சிலு என்று காற்றடிக்கிறதே! மழைத்தூறல் போடுகிறதா என்ன, பாருமே" என்றார்.

'மழை பெய்கிறதா' என்று வைத்தா கையை நீட்டிப் பார்க்கவில்லை. கோபத்தோடு, "இந்தக் கதவை யார் பூட்டினார்கள்?" என்றுதான் கேட்டான்.

அப்போது, "அதுவே பூட்டிண்டுடுத்து, மாமா" என்று சொல்லிவிட்டு வாண்டுப் பயல் தன் காலடியில் கிடந்த வைத்தாவின் சாமான்களைப் பார்த்துச் சிரித்தான். இதைக் கேட்டதும், அந்தப் பெஞ்சியின் மற்றொரு கோடியில் உட்கார்ந்திருந்த பதினைந்து வயசுப் பெண்ணுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. 'கிக்—கிக்—கிக்' என்று திணறிக்கொண்டு அவள், ஜன்னலுக்கு வெளியே முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

வைத்தா அவளை எரித்து விடுவதுபோல் ஒரு பார்வை பார்த்துவிட்டு, 'உம்' மென்று ஒரு மூச்சுப் பிடித்துத் தன் சாமான் போன வழியே தானும் ஜன்னல் வழியாய் உள்ளே குதித்தான்.

எட்டே பேர் உட்காரக்கூடிய அந்தச் சின்ன வண்டியில் இருந்தவர்கள் அத்தனை பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்போல் தோன்றியது. உச்சிக் குடுமிக்காரரும், அந்த வாண்டுப் பயலும் இந்தப் பக்கம் ஜன்னலருகில் எதிர் எதிராக உட்கார்ந்திருந்தார்கள். வாண்டுப் பயல் உட்கார்ந் திருந்த பெஞ்சியின் மற்றொரு பக்கத்தில் நாற்பது வயசு ஸ்திரீ ஒருத்தியும், அவள் பக்கத்தில், எதையோ நினைத்து நினைத்து இன்னும் சிரித்துக் கொண்டே இருந்த அந்தப் பதினைந்து வயசுப் பெண்ணும் இருந்தனர். இவர்களுக்கு நடுவில் ஓர் உருவம் தலையிலிருந்து கால்வரையில் பச்சைக் கம் பளியால் போர்த்திக்கொண்டு படுத்திருந்தது. எதிரி லிருந்த பெஞ்சியில் உச்சிக் குடுமிக்காரர் படுக்கையை நீளமாக விரித்துப் போட்டுக்கொண்டு அதன்மேல் காலைச் சப்பளங் கூட்டிக்கொண்டு கம்பீரமாய் அமர்ந்திருந்தார். இன்னொரு கோடியில், பல்லுப்போன கிழவர் ஒருவர், அது வரையில் நடந்தது ஒன்றுமே தமக்குத் தெரியாதவர்போல், என்னவோ மந்திரத்தை வாய்க்குள் முணுமுணுத்தபடி உட்கார்ந்திருந்தார்.

வைத்தா, ஒவ்வொருவர் முகத்தையும் இரண்டு நிமிஷம் பார்த்துவிட்டுக் கடைசியில் படுத்திருந்த உருவத்தின் காலைத் தொட்டு, "ஸார், காலைக் கொஞ்சம் மடக்கிக் கொள்கிறீர்களா? உட்கார்ந்து கொள்கிறேன்" என்றான்.

'ஸார்' பச்சைக் கம்பளியை விலக்கிக்கொண்டு அவனை உற்றுப் பார்த்தார். அந்த உருவம் தலை

நரைத்த ஒரு பாட்டியம்மாளாக இருந்ததைக் கண்டதும் வைத்தா திடுக்கிட்டுப் போனான்.

"இந்த வண்டியில் இடம் இல்லை என்று சொன்னேனே இல்லையோ?" என்று ஆறுதல் வார்த்தை சொன்னார் உச்சிக் குடுமிக்காரர்.

ஜன்னல் அருகில் உட்கார்ந்திருந்த பெண்ணுக்கு மறுபடியும், 'கிக்—கிக்—கிக்' என்று சிரிப்பு கேவிக் கொண்டே போயிற்று.

வைத்தா அவளைத் 'திரு திரு' என்று இன்னொரு பார்வை பார்த்துவிட்டுப் படுக்கையில் காலியாக இருந்த இடத்தில் உட்கார்ந்துகொண்டான்.

"ஸார், பையன் படுத்துக் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் படுக்கை போட்டிருக்கிறேன்" என்றார் அந்த மனிதர்.

"பேஷாய்ப் படுத்துக்கொள்ளட்டுமே; நான் அந்த இடத்தில் உட்கார்ந்துகொள்ளுகிறேன்."

"வேண்டாம்பா; நான் இங்கேயே உக்காந் துண்டு வேடிக்கை பார்க்கிறேன்" என்றான் வாண்டுப் பயல்.

தகப்பனார் பல்லைக் கடித்துக்கொண்டு எதிரே உட்கார்ந்திருந்த தம் மனைவியைக் 'கடு கடு' என்று பார்த்தார். 'இந்த மாதிரி அசட்டுக் குழந்தை நமக் கென்று வந்து பிறந்திருக்கிறதே!' என்ற அர்த்தம் அதில் தொனித்தது.

"நீர் எதுவரையில் போகிறீர்?" என்றார் மறுபடியும் வைத்தா பக்கம் திரும்பி. சேலம் என்றதும் அவர் முகம் இன்னும் கறுத்தது. வைத்தா, "யமலோகம் வரையில் போகிறேன்" என்று சொல்லி யிருந் தால்கூட, சந்தோஷமாக அவனை வழியனுப்பிவிட் டிருப்பார் போல் தோன்றியது.

"சேலமா? சேலத்திலே யார் வீடு?"

"யார் வீடும் இல்லே. பத்து நாள் லீவில் போகிறேன். எங்கேயாவது ஹோட்டலில் இருந்து கொண்டு மேட்டூர் முதலிய இடங்களைப் பார்க்கலாம் என்று உத்தேசம்."

இது பெரிய புளுகுதான். வைத்தாவும் தன்னுடைய சொந்தக் கல்யாணத்துக்குத்தான் புறப்பட்டுப் போய்க்கொண் டிருந்தான். ஆனால், அந்த மனிதரிடம் ஏற்பட்டிருந்த கோபத்தில், அவரிடம் ஏன் உண்மையைச் சொல்லவேண்டும் என்று தோன்றியதால் ஏதோ வாய்க்கு வந்ததைச் சொல்லி வைத்தான்.

"நாங்களும் சேலத்துக்குத்தான் போகிறோம்" என்று சொல்லிவிட்டு அந்த மனிதர் தலையை ஆட்டிக் கொண்டே சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தார். " 'நீங்கள் சேலத்துக்குப் போகவில்லை. பொய் சொல்கிறீர்கள்' என்று யாராவது சொல்லட்டும், அவர்களை என்ன பண்ணுகிறேன் பார்!" என்று ஒவ்வொருவரையும் பார்த்து அவர் பயமுறுத்துவதுபோல் இருந்தது.

இந்தச் சமயத்தில் வாண்டுப் பயல் தூங்கி விழவே, வைத்தாவும் அவனும் இடம் மாற்றிக் கொண்டார்கள். இதில் உச்சிக் குடுமிக்காரர் கோபம் பாதி தணிந்தது.

"ஏன் ஸார்? இன்றைப் பேபர் பார்த்தீர்களோ? என்ன போட்டிருக்கான்?" என்று கேட்டார்.

"என்ன இருக்கு? எங்கே பார்த்தாலும் இப்போது நம்பளவனுக்குத்தான் ஜயமாம்."

"ஆமாமாம்!—அதைக் கேட்கவில்லை நான். என்னவோ வால் நட்சத்திரம் வரப் போகிறது என்று

போட்டிருந்ததே; அதைப்பற்றி இன்னும் ஏதாவது வந்திருக்கோ என்கிறேன்."

"உம்—ஒன்றும் காணும். வாலாவது நட்சத்திரமாவது!"

"என்ன ஓய், இப்படிச் சொல்கிறீர்? உலகமே தலை கீழாய்ப் போகப் போகிறதாம். ஒரு படி பால் வாங்கினால் இரண்டரைப்படி இருக்குமாம்! எட்டுப் பேர் உட்காரக்கூடிய இந்த வண்டியில் எண்பது பேர் உட்காரலாமாம்! அப்போது நீர்கூட எழும்பிக் குதிக்காமல் தாராளமாய் வந்து உட்காரலாங் காணும்!" என்றார்.

அவர் சிரித்துக்கொண்டே இதைச் சொன்னதால் வைத்தாவுக்கும் சிரிப்பு வந்தது. "ஆமாம்; ஒரு படி பால் வாங்கினால் இப்பவேதான் இரண்டரைப் படி தண்ணீர் இருக்கிறதே!" என்றான்.

அந்தப் பொல்லாத மனிதர் இந்த ஹாஸ்யத்தைக் கேட்டு, "ஓஹோ—ஹோ!" என்று இரைந்து சிரித்தார். உச்சிக் குடுமியைத் தட்டி முடிந்துகொண்டு, "அதெல்லாம் சரிதான் ஐயா! வாய் கூசாமல் நாலாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கொடு என்று கேட்கிறார்களே, அவர்களிடம் ஆயிரம் ரூபாயைக் கொடுத்தால் அது நாலாயிரமாக ஆகிவிடுமா என்று யாரும் சொல்லவில்லையே. அதைச் சொல்ல வேண்டாமா?" என்று கேட்டார்.

வைத்தா திடுக்கிட்டுப் போனான். ஆனால் சமாளித்துக்கொண்டு, "வரதக்ஷிணையா? எவ்வளவு? நாலாயிரமா? அடேயப்பா!" என்றான்.

"பயந்துபோய் விடாதேயும். நான் பொய் சொல்லவில்லை; வாஸ்தவமாகத்தான் சொல்லுகிறேன். ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் லக்ஷக்கணக்கில் மடிந்துகொண் டிருக்கிறார்கள். வீடுகளும் பட்டணங்களும் இடிந்து எரிந்து சாம்பலாய்ப் போய்க்கொண்

டிருக்கின்றன. ஆனால், இங்கே இந்த யுத்தகாலத்தில் கூட, 'என் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறாயா?' என்று கேட்டால், 'நாலாயிரம் வைக்கிறாயா?' என்கிறார்களே. இதற்கு என்னத்தைச் சொல்கிறது?"

"அக்கிரமம்!" என்றான் வைத்தா. ஆனால் அவன் இதை வெறுமனே 'உள உளாக் காட்டி'க்காகத்தான் சொல்லி வைத்தான். அவனுக்கும் ஆயிரக் கணக்கில் வரதக்ஷிணை சம்பந்திகளிடம் வாங்கப் போவதாகத் தான் அவன் தகப்பனார் எழுதியிருந்தார். அதனால் தான், பெண்ணைக்கூடப் போய்ப் பார்க்காமல் அவன் கல்யாணத்துக்குச் சம்மதித்துவிட்டான். ஆனால், இதை யெல்லாம் சொல்லிக்கொண்டு அந்தப் பொல்லாத மனிதரிடம் யாராவது சண்டைக்குப் போவார்களா என்ன?

நள்ளிரவில் ரெயில் எங்கேயோ ஒரு சின்ன ஸ்டேஷனில் நின்றது. உச்சிக்குடுமிக்காரர் அவசர அவசரமாகப் பெட்டியைத் திறந்து அதிலிருந்து 'தர்மாஸ் பிளாஸ்'கை எடுத்தார். பிறகு வைத்தா பக்கம் பார்த்தார். வைத்தா உட்கார்ந்தபடியே கண்ணை மூடிக்கொண்டு தூங்க முயன்று கொண் டிருந்தபோதிலும் அரைக் கண்ணால் அவரைக் கவனித்துக்கொண்டுதான் இருந்தான். இடுப்பில் கைவிட்டு அவர் ஒரு ரெயில் சாவியை எடுத்துப் பூட்டியிருந்த கதவைத் திறந்துகொண்டு 'குடு குடு' என்று கீழே இறங்கி ஓடினதைப் பார்த்ததும் அவனுக்கு வயிற்றைப் பற்றிக்கொண்டு எரிந்தது.

வெளியே போனவர் ரெயில் நகரும் போது ஓடிவந்து மறுபடியும் உட்கார்ந்துகொண்டார். 'தர்மாஸ் பிளாஸ்'கில் வாங்கிவந்த காப்பியில் கொஞ்சம்

தம்ளரில் ஊற்றி, சிரித்துக்கொண்டே முதலில் வைத்தாவிடம் நீட்டினூர்.

“காப்பியா? எனக்கென்னத்துக்கு? வேண்டாம் ஸார், இத்தனை நாழிக்குமேலே” என்றான் அவன்.

“பரவாயில்லேங் காணும்! காப்பிக்கு வேளை உண்டா என்ன? சாப்பிடும்; சங்கோசப்படாதேயும்!” என்று அவனிடம் கொடுத்துவிட்டுத் தாமும் சாப்பிட்டார். காப்பி வயிற்றில் போனதும் இன்னும் கொஞ்சம் குஷி கிளம்பிவிட்டது. எதிர்க் கோடியில் உட்கார்ந்திருந்த பெண்ணைக் காண்பித்து, “நம்ப மூத்தபெண். அவளுக்குத்தான் நாளன்னிக்கிப் பொழுது விடிந்தால் கல்யாணம்” என்றார்.

வைத்தா திரும்பி அந்தக் குறும்புக்காரப் பெண்ணைக் கவனித்தான். ஜன்னலில் தலை வைத்துச் சாய்ந்துகொண்டு அரைத் தூக்கமாய் இருந்தாள் அவள். ‘எந்த அப்பாவி இவளைக் கட்டிக்கொண்டு குடித்தனம் பண்ணப் போகிறானோ; பாவம்! நம்மைப் போல் சரியான ஆசாமியாய் வாய்த்து, இவளுடைய துஷ்டத்தனத்துக்கு இவளைப் பாக்கு வெட்டியில் வைத்து நறுக்குவதுபோல் நறுக்க வேண்டும்!’ என்று நினைத்துக்கொண்டான்.

வெளிக்குச் சிரித்துக்கொண்டே அவன், “நாளன்னிக்குக் கல்யாணம் என்கிறீர்; இன்றைக்கு எங்கேயோ பிரயாணம் போய்க்கொண் டிருக்கிறீர்களே?” என்றதும், “ஏன் ஐயா; சேலத்தில்தான் கல்யாணம் நடக்கிறது; அங்கே என் மாமனார் வீடு இருக்கிறது. பெரிய வீடு. சௌகரியமான இடம். அங்கே அவருக்கு நல்ல ஹோதா. ரிடயர்ட் ஜில்லா முன்சீப் சாம்பசிவ சாஸ்திரி என்று கேள்விப்பட் டிருப்பீரே—” என்று ஆரம்பித்தார்.

அன்று ரெயில் ஏறியபின் மூன்றாவது தடவையாக வைத்தாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அசடு

வழியும் முகத்துடன் அவன், "நீங்கள் மகாலிங்க ஐயரா ?—நான்தான் ஜகந்நாத ஐயர் பிள்ளை வைத்திய நாதன். இன்று சாயங்காலந்தான் எனக்கு ஆபீஸில் லீவ் 'ஸாங்ஷன்' ஆயிற்று. அதனால்தான் நான் மட்டும் இந்த ரெயிலில் வருகிறேன். மற்றவர்கள் எல்லாரும் முன்பே எக்ஸ்பிரஸில் போய்விட்டார்கள்" என்றான்.

அந்தப் பொல்லாத பேர்வழியும் திடுக்கிட்டுத் தான் போனார். ஆனால், உடனேயே சமாளித்துக் கொண்டு, "என்ன மாப்பிள்ளை ! இப்படித்தானா பொய் சொல்லி எங்களை ஏமாற்றுகிறது ?" என்று கேட்டார் கோபத்தோடு.

கோடியில் சிவனே என்று உட்கார்ந்திருந்த கிழவருக்கு அப்போதுதான் உயிர் வந்தது. பொக்கை வாயை இரண்டு தரம் மென்றுவிட்டு, "யாரு ? மாப்பிள்ளையா ? ஏண்டாப்பா, இங்கே பக்கத்திலே வா, பார்ப்போம்" என்று கூப்பிட்டார் அவர்.

வைத்தாவுக்கும் அதுதான் சௌகரியம் என்று பட்டது. கிழவர் அவனைப் பார்ப்பதற்கு அல்ல ; அவன் அந்தக் குறும்புக்காரப் பெண்ணைச் சரியாய்ப் பார்ப்பதற்குத்தான் !

உடனே போய்ப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

